கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கந்தபுராண வெண்பா.

குமரகோட்டச் சுப்பிரமணிய சுவாமி

திருவருட்டிறத்தால்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை யாதீனத்துச் சீஷரும்

மெ- ஆதீனத்து மஹாவித்துவான்

ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் மாணாக்கரும்

தில்லைவிடங்கன் பிரபலித்துவான்

மாரிமுத்துப்பிள்ளையவர்கள் புத்திரபிரபௌத்திரருமாகிய

தி. கு. வேலுசாமிப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

காஞ்சிபுரம்

ஸ்ரீமான் சரவணப்பெருமாள் முதலியாரவர்கள்

(பர்மாவில் சப்டிவிஷனல் ஆபிஸர்.)

பேருதவியைக்கொண்டு

மெ- தலாசிரியரவர்களால்

சென்னை - புரசை,

ராமநிலய விவேகாநந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1918-பிரமாதீசஷு இடபரவி

சிவமயம்.

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்துலிதத்துவாணுபம

இத்தாலாசிரியருடன் கல்விபயின்றவருமாகிய

ஸ்ரீலஸ்ரீ பழனிக்குமாரசுவாமித்தம்பிரானவர்கள்

சிறப்புப்பாயிரம்.

அறசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மாமேவு கயிலாய பரம்பரையா வடுதுறைமா வாதீனத்திற் [பப்
ரமேவுவிறல்வெண்பாப்புலியெனும்பேரளித்தவொருபரிசிற்கேற்
பூமேவுசெருட்கந்தபுராணமதை வெண்பாவிற்பொருள்குன்றுமே
யேமேவுபலயமுமினிதுதரன்கியற்றினனவன்யாரென்னில். (க)

அருந்தில்லை விடங்கனமர்தருசுப்பராயவே ளளித்தமைந்தன்
பெருந்தில்லையம்பலத்துளாடியடிமனத்திருத்தும்பெருமையாளன்
மருந்துநிகராம்வேலுசாமியெனுமாமத்தோன்வாரிக்கொப்பாய்ப்
பொருந்துதமிழுணர்ந்தவனென்னகக்கணிலு முகக்கணிலும்பொலி
[வான் மன்னே. (உ)

மேடி ஆதீனத்துஞான கடாராசர்பூசை
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளியற்றியருளிய
அாங்கேற்றற் சிறப்பு.

நிலமார் குருசுப்பிரமணியஞானகுருவா லிருவகையாங்
குலமார் தீக்கைபெற்றதவகுரிசில்தில்லைவிடங்கனெனுந்
தலமார் சுப்பராயவே டந்தனயன் தமிழ்க்கல்விப்
பலமார் தூறைசையாதீன வித்துவானென்றேபகரும். (க)

திங்கள் போலுங் கல்வியினுற் றிகழ்மீனாட்சி சுந்தரனும்
புங்கமாரும் பெருஞ்சீர்த்திப்புலவன்றன்பாலேகற்றோன்
சங்கையறவே சொற்பொருள்சொல்தகையார்வே லுச்சாமியெனுங்
கங்கைகுலத்தோன்கந்தன்றன்கழற்கேயன்பு மிகவுடையோன். (உ)

வேறு

சீர்தருபதினெண்சதத்திருபதின்மேற்றிகழுமொன்பானைச்செ
மேர்தரு சாலிவாகனசகாப்தமியைபிலவற்கவற்சரத்திற் [ப்பு
சார்தரு மிடபமிதுதவார்ச் சசம்கல்லுத்திரமொன்பா
னூர்தரு தேதிசேர்தருகின்ற வணிதிகழ் சுபதினமதனில். (ஊ)

வேறு

கீர்தமார்பொழில்சூழ்கச்சிக்கலின்மிகு குமரகோட்டத்
தெய்தையாங்குமரன்மூன்னரியற்புலவோர்களாக
வந்தவருனங்களிக்கமாபிரசங்கஞ்செய்து
கந்தபுராணவெண்பாக்கவியரங்கேற்றினனே. (எ)

மூகவுரை.

நேரிசையாசிரியப்பா.

மணிநிரைவாரி நிவளை யுலகத்—தணிநிரைகாவிரி யனப்
பில்வளந்தருஉஞ்—சோணாடெனுஞ்சீ ரீண்டதனி — னூதமாத்தி
ரைபுடைப் பூதமாத்தலமந்—தில்லையம்பதிக்குத் திகழுஞ்சானத்—
தெல்லையில்வனங்கூர் தில்லைவிடங்க—னெனுமூ னூரி லினிதமர்
வேளாண்—குலத்தினன்மேழிக் கொடியினன்றிருவரு — ணலத்தி
னன்வெற்பி னங்கைகாணிய—புன்னகமுனியொடு பன்னகமுனி
தொழ—வாடகமன்றி னுடகம்புரிபுஞ்—சிற்பரசிவன்மேற் பற்பல
வகைக்கவி—மாரிமுத்தெனப்பொழி மாரிமுத்தேந்தல் — மேலாம்
புலியூர் வெண்பாமுதலிய—நூலாதியாகவி னுண்ணறிவானன்—செய்
தவப்பேரூர் தெய்வங்கள்பெருமா — னென்னபிதான னியனூல்
கற்கும்—பன்னிருவயதிற் பன்னருமுமையவண்—மாலையெனுமொ
ரு நூலியற்றிப் — பின்னரும்பற்பல னன்னூனவின்றே —
னன்னவன் றனயனு மையாசாமிவே—ளருங்கலைவல்லோ னருடரு
குமாரன்—பராவுமுன்னவர்போற் கிராமாதிகாரஞ் — செலுத்திவந்
தோனலத்தின்மிக்கோன்—விற்பனனுய சுப்பராயமால்—செய்தவத்
திறத்தி னெய்தருஞ்சிறப்பிற்—பொன்புதன்வாக்கதி பன்கேந்திரத்
துறத் — தருமகருமத் திருவருமொருவராய்ப் — பதினெஞ்றினட்
பின் வதிதரக்கற்புடைச்—சுந்தரயின்வயின் வந்துதித்தனன்சேய்—
படையுட்சிறந்த தடையடுத்தெவர்க்கும்—பொதுவாயுனபெய ரது
சற்குச்சிறப்பா — யுற்றுநண்ணுமம் வைத்ததெளிவாய்ப் —பூமி
புகழ்வேலு சாமியெனவிளங்க—வளருமைந்தாண்டிற் கிளரும்பள்
ளிக்கு—வைத்திடவாசான் கைத்தலமேகையை—யுற்றுணர்ந்திவன்
மூனூர் பெற்றபேர்பெறுவனென் — றினிதுகற்பிக்க வெழுதவும்
படிக்கவும்—நனிபயின் றனன்பிதா நவில்கல்வியாதி—விருத்தியாக
வருத்தியோடு—வேற்காவடிகட்குப் பாற்காவடிகொடு—தைப்பூசந்
தொறு மெய்ப்பூசைசெய்வித்து—நிகழ்தருநாளிற் றிகழ்தசவேலி—
யவிர்நிலமுடைமையால் விவசாயத்தொழி—றிறமையினேழாண் டுற
டத்திவருகையில்—வாணுனெல்லாம் வீணுளாகச்—சென்றன வினிப்
பொற் குன்றனமன் றற்—கிந்தப்பிறவியிற் சந்ததமிழின்—மூந்தை
யோர்போ லெந்தையார்க்குப்—பாமாலைகட்டிப் பரசியலின்றேனும்—
பூமாலைகட்டிப் புனைவிப்போமெனு—நந்தவனம்வைப்பா னுட் கொ
ளீஇப்பூஞ்செடி—யந்தவனமாதி யருமவிதைபதிகொடி—நாடுங்கா
லை யாடும்பெம்மான்—றண்ணருட்டிறத்தாற் சென்னையம்பதிக்குக்—
கூலவில்துரைத்தனக் கலையதுபயில்வான் — தந்தைபனுப்பினன்
றயங்கம்மொழியொடு — பைந்தமிழ்நூலும் பயின்றுவந்தன—னிரு
நிறதூலி லிம்மையொன்றினையே—தருநிறதூலத் தணந்தமும்

மையு—நல்குதமிழ்தூ னைசை இயல்வயிற் — றெல்குதீமென்ஞச்
சித்தைசெய்போழ்து—நீடுமொளிகை சிசை யாடுகேதனங்கள்—சித்
தியோடி முத்தியும்பெறலாம்—வாவடுதுறையீரா மற்றிலென்குறி
காட்—டாவடுதுறையொன் றகத்திற்றோற்றவல்—வயினடைக்கருங
கலே பயிலலாமென்ஞ—வண்ணறுபுவங்கு ணண்ணுகவுகோடி—சித்
தர்வதிதரு மத்தகாடனாவு—மடர்ந்தகிளையொடு படர்த்தவோராதின்-
றென்பாலிலிங்கு மொன்பான்மணிகொண்—டியற்றித்திகழ்மடா
லயத்திலமர்ந்தருள் — கின்முத்திரையுடன் புன்முறுவல்காட்டுங்—
குருநமச்சிவாய குரவன்கழல்பணிங் — தப்பரன்வழிவரு சுப்பிர
ணிய-தேசிகன்றொழீஇப் பேசிடக்குறைகளே—யன்னவனருள்
கூர்ந் தின்னரும்பலதல—மான்மியமுரைத்துள மேன்மையும்புகழு
மண் — வாஞட்சிகொண்டிலா மீஞட்சிகந்தரப் — பாவலன்றன்பா
லாவலிற் கலேபயின்—மாணவருடன்கூட்ட மாணுறவன்ஞ—னிலக்
கியதூல்களு மிலக்கணதூல்களு—மையந்திரிபறத் செய்யமேற்
கோளொடு—போதித்தவருளா ளாதித்தனெழுமுன—மாசானுவப்
பப் பூசாவிதிப்படி—கால்வகைப்புட்பமு மேல்வகைகொணர்ந்த—ஞல்
குவழிபாடு மல்குநீர்மையா—லாகவிலிவன்னேயிற் பேசுவல்லபமு—
மற்றமுக்கவிகளுஞ் சொற்றிடுதிறமையும்— பெற்றிருக்கின்றமை
யுற்றணர்ந்தாவோன்—சித்திதருகிகையின் முத்திநிலைகாட்டி—
விடைதந்தனுப்ப விடைதரகனேயர்வாழ்—திருக்கினர்நகரும் நிருக்
குகாட்புலீயூ—ரற்பகமேவிய கற்பகவிநாயகர்—மூம்மணிக்கோவை
யுஞ் செம்மணிச்சபையி—லமர்தருபெருமா னமர்தரு நிரோட்டக—
யமகவந்தாதியு மமைசிலதூல்களு—மியற்றியரங்கேற்றிப் பயனுற்றி
ருக்கையி— லிமசேதபரியந்தந் தமதிசைநிறுவிய—கசிப்பதியா
பச்சையப்பமால்—கல்விச்சாலேயின் மல்குசெந்தமிழ்தூல்—சொல்
விக்கும்படி சூழ்சருசபையார்—நியமிக்கவத்தொழி னையமுறகடாத்
தி—யந்தகரத்தின் மன்னியமர்போது—கந்தவேட்கு கந்தவன்புடை
யோய் — புலவர்க்குவெண்பாப் புலியெனவான்றோர் — சொலுவர்
நிற்கதுதான்சுலவமாயிருக்கையாற்-றிருவருட்டிறத்தி னிருவரியற
றிய—சந்தவின்றமிழ்க் கந்தபுராணம்—பெருக்கமாகவுஞ் சுருக்க
மாகவு-மிருக்குமாண்பா லிருவர்தநூற்கு—நடுத்தரமாக நனிவெண்
பாவிற்—படுத்துவமுறவே பாடித்தருகென—முருகன்புடையிற்
பெருகன்புடையர்—மல்கார்வத்தின் பல்கால்வினவச்—செப்பருஞ்
சிறப்பி னப்புராணதூல்—செயற்கரிதெனினும் புயற்சிருபாநிதி—
குமரகோட்டத் தமர்குருபரன்றான்—நித்தியநியமமாய்ப் பத்தியொ
டுசென்று—வழிபடுதகவிற் பொழிதருகருணையாற்—செய்துவரு
கையி லுய்தருவான்முன் — பண்டரும்புகழ்த்திருத் தொண்டர்
புராண—மாக்கவியாகச் சேக்கிழார்செய்கையில்—திவளுமாக்காதை
யெவளவாயிற்றென—வினவுமணுகுலத் தனபாயனெனவே—யே
டாதியினவின் மாடாதிபர்சீர்—தருகுமரகோட்டத் தருமகருத்தரா

மேவுறுவாம் தேவதேசிகரும்— பண்பார்புராண வெண்பாவெது
வரை — யாயிற்றென்றடிக்கடி கேயுற்றவினவத் — திரிபியமகஞ்
சிலேடைமடக்குக்—கரிசில்சித்திரம் சுற்பனேயலங்காரஞ் — சொன்
னயம்பொருணயம் தொடைநயநடைநய — முன்னயமெல்லா
முயங்கிக்கிளர்தரப் — பொருவில்கந்த புராணவெண்பாவென் —
றெருபெயர்வீளங்க வுரைத்தனன்பின்னர் — நன்னுட்குறித்துப்
பன்னுட்டிலுமுள—பாவலாதமக்கும் காவலர்தமக்கும் — பிரபலமா
ண பிடிபுகளுரைக்கும்—புத்திமான்களுக்கும் பத்திமான்களுக்கு—திரு
முகம்பிரசித்தி வருமுகமேகாக்க — வந்தவாதமகரு வகதுபசரி, தி—
கலங்கினர்தனமேனி யலமகளிழை சாளரிர்வெண்—சதகமுதலிய மாக
லவாதகி—மார்கவிபோலொளி கூரவோர்சரும் — வித்தகவடிவ
மாம் புதுகமதியைப்—பூனிலபுரிதற்பாற றுலர்புனைந்து—கிவி
கையில்வைத்துக கவிகைகிபுரட்க — கவிபிரட்டக கவின்கொடி.
யாதி—தின்னவவிரதிருடி கின்னருதத்—கணிகையர்கடிப்ப வணி
மதில்சுலவுங் — திருகாவலமா டருகையிற்சுசித் — தெருவில்
வீவள்சிவிகையிற் றிருவிழாகேசலமா—வெழுந்தருள்காட்சி செழுந்
தமிழ்நூல — யெதிர்கொண்டழைக்கு முதிர்சருகருளை—
யீசெனவாவரு மோதிட முன்பினிதியாரிராச வீதியாய்ப்பாந்து—
குயமிகூட்டத்துட் குமரன்வீற்றிருப்ப — கன்கொளிரேட்டினே
முன்கொலுவைத்து—மூலசாரணஞ்ய் முன்னருஞ்சிருட்டிசெய்—
கோலமாவெழுந்தருள் குழகன்றனகுக—றிறப்பொடுபூசனே யுறப்
பெரிதாற்றியே—யெயப்பருகுசசி யப்பனிவநாமத்—தருசகர்கொ
ளார்கது திருப்புராணத்தே—சன்னிதானத்தின் முன்னவிர்பீட
மிம—லிலரிதுமவத்தருளு கனிசருமன்பிற் — கந்தனேயுளத்திற்
சிந்தனேசெய்து—சுராசுருருமரிருவரு கவிலுந்— தூக்கினேயுற்று
சோக்குறவர்சதித்—தருவனாரு னந்தகவாமிகணமு—னன்றவர்கற்
றவ ருற்றவர்மற்றவர் — செவிப்புலமதுகரங் கவிப்பிரசதத்தன்—
றெவிட் டாதெனிபுண் டுவப்புறாண்ணய — மெய்துபிரசகஞ் செய்
தருகேற்றிக்—கயிலாயபரம்பரை யெயிலாவடுதுறை — யாதினமர
பி லோதபதிதினழாம்—பட்டமேயிய சிட்டராகிய—வாசில்சிர்ப்
பெருந்தகை யம்பலவாண-தேசிகர் மெய்கண்ட தேவர் சந்தானம்—
ஞானதீட மானகாஞ்சி—புரமடம்ஞானப் பிரகாசதேசிக—ரளித்திடு
வரிசையுங் களிப்புறப்பெற்று—மாண்டகுருகுழொடி மஞ்சுலுபூ—
ரான்டகையருளு மடைக்தனனன்றே.

இப்பா வியற்றினவர் யாரெனின் மா. கி. சோ.
அப்பாவுப் பின்னே யவர்

எழுசீர்க்கழி நேடிலடி யாசிரிய விருத்தம்.

பூரணிமைத்தன் புகலருங்கந்தபுராணவெண்பாவையச்சிட்டுத்
தாரணியெங்குந் தயங்கிடப் புரிந்து சண்முக னருட்கிலக்கானன்
காரணிமதில்சூழ்கச்சியம்பதியான் கங்கைதன்குலத்துவந்துற்றோன்
ரூரணிதிண்டோட்சரவணப்பெருமாள்சகமெலாம்புகழ்தனபதியே.

காண்ட வகாரதி.

காண்டம்.			பக்கம்.
அசுரகாண்டம்	...	...	ககக
உற்பத்திகாண்டம்	...	...	சஎ
தக்ஷகாண்டம்	...	...	நிகஉ
தேவகாண்டம்	...	...	நிஎநி
மகேந்திரகாண்டம்	...	...	உகநி
யுத்தகாண்டம்	...	...	கசக

படல வகாரதி.

படலம்.	பக்கம்.	படலம்.	பக்கம்
அகத்தியப்படலம்	உநச	ஜராணியன் யுத்தப்படலம்	கூகூ
அக்கினிமுகாசுரன் வதைப்படலம்	சஎநி	ஜராண்டாசுரன் மண் புத்தப்படலம்	நகூநி
அசமுகிசோகப் படலம்	ஊஎ	இலவகைவீழ்படலம்	ஊஅ
அசமுகிகர்காண்படலம்	ஊசக	உபதேசப்படலம்	நிகஉ
அசமுகிபுலம்புபடலம்	எக	உமைகயிலேக்குபடலம்	நிசஅ
அசமுகிப்படலம்	உஎக	உமைதவம்புரிபடலம்	நிநி
அசுரர்தோற்றுபடலம்	சஅ	உமைவருபடலம்	கூக
அசுரர்மாசப்படலம்	ஆசக	உருத்திரர்சேள்விப்படல	உஉக
அசுரேந்திரனமேத்தி ரஞ்செல்படலம	கஅக	எதாகெள்படலம்	உகங
அடிமுடிதேடுபடலம்	கூஉ	எமகூடப்படலம்	கூகூ
அண்டமோசகப்படலம்	உ ஊஉ	சடல்பாய்படலம்	உஎச
அதிவீரன்வதைப்படலம்	உ ச	கடவுள்வாழ்த்துபடலம்	க
அமராங்கைபுகுபடலம்	ஆ ஆ	கணங்கள்செல்படலம்	எக
அயனேசகிறைநீக்குபடலம்	கசச	கந்தவிரதப்படலம்	கூகநி
அயனேசகிறைபுரிபடலம்	கசக	கந்தவெற்புறுபடலம்	நிஉநி
அயிராணிசோகப்படலம்	உநிச	கயமுகனுற்பத்திப்படலம்	நிஅக
அரசுசெய்படலம்	உஉநி	கயமுகன்வதைப்படலம்	உகநி
அவைபுகுபடலம்	கூ அ	காசிபனுபதேசப்படலம்	கஎ
அவையடக்கப்படலம்	சு	காசிபன்புலம்புறுபடலம்	கசநி
அனந்தன்சாபநீங்குபடல	சஎக	காமதகனப்படலம்	சூ
ஆற்றுப்படலம்	எ	காவலாளர்வதைப்படலம்	கக
ஆந்திரபுரிப்படலம்	நிஉசு	காலிரீங்குபடலம்	உசக
இந்திரனருச்சனைப்படலம்	உநி	காளிந்திப்படலம்	நிசக
இந்திரன்கயிலைசெல்பட	உகூ	கிரவஞ்சப்படலம்	உகூ
இந்திரன்கார்த்தறைபட	உகூ	குமாரபுரிப்படலம்	சஎக
இந்திரன்மீட்சிப்படலம்	உகூக	சகத்திராவாகுகள்வதைப்	கஉக
இந்திராணிமுதலேப்பட	உகூக	சதமுகன்வதைப்படலம்	கூசு
இரணியன்புலம்புறுபட	நிசக	சந்திரசாபப்படலம்	நிசஅ

படலம்.	பக்கம்.
சயந்தன்கனதுரண்பட	ந ०ங
சயந்தன்புலம்புறு படலம்	ந ००
சரவணப்படலம	ஈள
சாலேசெய்படலம்	நிநிங
சிங்கமுகாசுரன்வதைப்	ஞங அ
சுக்கிரனுபதேசப்படலம்	ஏஙஙங
சூரம்புகுபடலம்	கநிநி
சூரபன்மன்வதைப்படலம்	சஙநி
சூரன்கர்புரிபடலம்	நஙக
சூரனமைச்சியற்படலம்	நஙஉ
சூரனரசிருக்கைப்படலம்	உசுசு
சூரன்றண்டஞ்செய்பட	உளச
தகரோறுபடலம்	ஙஙங
தக்கன்கயிலைசெல்படலம்	நிநிநி
தக்கன்சிவபூசைசெய்பட	சுநஙா
தக்கன்மகப்பெறுபடலம்	நிநஎ
தக்கன்றவஞ்செய்படலம்	நிங நி
தடுசிப்படலம்	நிசுஉ
தடுசியுத்தரப்படலம்	நிசுஎ
தருமகோபன்வதைப்பட	சஉஉ
தவங்காண்படலம்	எ०
தாரகன்வதைப்படலம்	கஉ நி.
தானப்படலம்	சு०சு
திக்குவிசயப்படலம்	உஙநி
திருக்கல்யாணப்படலம்	ஆஉ
திருக்குற்றாலப்படலம்	உசஅ
திருக்கைலாசப்படலம	சள
திருச்செந்திப்படலம்	கநிஅ
திருநகர்ப்படலம்	உநி
திருநாட்டுப்படலம்	கஉ
திருப்பரங்குன்றுசேர்பட	நி०நி
திருமணப்படலம்	நிநிஉ
திருவவதாரப்படலம்	ஆங
திருவிளையாட்டுப்படலம்	க००
தினைவள்ளிபடலம்	சுசா
தெய்வயானையம்மை திருமணப்படலம்	நி०எ
தேவசிரிப்படலம்	கஙஎ
தேவரைசேவல்கொள்பட	உஉஎ
தேவர்கள்போற்றுபடலம்	நி००
தேவர்புலம்புறுபடலம்	உநிஉ
நகரழிபடலம்	நஙகங
நகர்செய்படலம்	உஉஉ
நகர்புகுபடலம்	உகஎ
நகர்புகுபடலம்	நஙசு
படையெழுபடலம்	கஉக

படலம்.	பக்கம்.
பட்டாபிஷேகப்படலம்	உஉசா
பாயிரப்படலம்	நகு
பார்ப்திப்படலம்	சங
பானுகோபன்வதைப்பட	சஉசு
பிரமயாகப்படலம்	நிநிஎ
புதல்வரைப்பெறுபடலம்	உஉசு
மகாகாளர்வருபடலம்	உசுநி
மகாசாத்தாப்படலம்	உநிநி
மகேந்திரஞ்செல்படலம்	உஙநஉ
மணம்பேசுபடலம்	எசா
மாயைசீங்குபடலம்	கஙo
மாயைப்படலம்	கசுக
மாயையுபதேசப்படலம்	கஅஅ
மார்க்கண்டேயப்படலம்	களக
மீட்சிப்படலம்	நிo உ
மூதண்டபானுகோபன் யுத்தப்படலம்	நுசஅ
மூவாயிரர்வதைப்படலம்	சாகஎ
மூன்றாட்பானுகோபன் யுத்தப்படலம்	நி.அசு
மேருப்படலம்	நிநி
மோனசீங்குபடலம்	எஉ
யாகசங்காரப்படலம்	சுகஎ
யாளிமுகன்வதைப்பட	நஉள
வச்சிரவாகுவதைப்பட	நி.உ.டி
வரம்பெறுபடலம்	கசுஎ
வரவுகேள்விப்படலம்	நுசநி
வரைபுனைபடலம்	எசு
வழிநடைப்படலம்	கசநி
வள்ளியம்மைதிரு மணப்படலம்	சுசநி
விடைபெறுபடலம்	ஙகஎ
வீணைகுடியேற்றுபடலம்	நிஉநி
வீரதசிரிப்படலம்	உநிசு
வீரத்தம்பிலம்புகுபடலம்	உசo
வில்வலன்வாதாவிப்பட	உநிங
வில்வலன்வாதாவி வதைப்படலம்	உசக
வீரசிங்கன்வதைப்படலம்	உஅஅ
வீரபத்திரப்படலம்	சுஙநி
வீரவாகுகந்தமாதனஞ் செல்படலம்	உஅநி
வீரவாகுசயந்தனைத் தேற்றுபடலம்	நி०நி
வீரவாகுமீட்சிப்படலம்	நி உசு
வென்விப்படலம்	சo அ

ஆ படலம் கசக-க்குத் திருவெண்பா-நிசுசுநி.

முதற்பக்கம் முதற்பாட்டு சக்கரம்-மலை, சக்கு அரம் மாது (உ) மா வண்டு,வடி-வினைத்தொகை, கன்-ஈதன், ஆர்தல்-உண்ணல், அடிகள்-சுவாமிகள், (ங) போதத்தை உதிப்பார்.

மேடி கடவுள் வாழ்த்து (க) மலையான்-அணியான்,

(உ) பரிவந்தனை (ஙு) படராசன்மம் கலப்பு ஆம் (சு) கோல்காட்டம்-அம்புவிழி, மேல்வைப்பார்—தேவர். (டு) மூதிஷ்ரை-மூன்றுதிரை. (ணு) சரம்-பாணம் (எ) மூடுகு அன்பு (அ) பத்திரை-காளி.

(க) திருப்பு அரம்குன்றதான் (கo) வினைக்கு அஞ்சிர் அலை வுஅய, (கக) அம் கதிர் உவா இனன்-சந்திரசூரியர் (கஉ) திரு ஏர் அகம், (கங) நேர்குன்று தொல் தான்தலை, (கச) சோ-மதில், (கடு), குருகு-இரவுஞ்சம், மரம்-மா, கோட்டம்-கோணல், (கசு) சரியார்-வலையலை யணிந்தவர்.

(கஎ) ஸ்ந்திஆம், (கஙு) சங்கு அரி முத்து அமிழ்து அந்தம். (உo) சம் பந்தர். அத்ததரு-கற்பகத்தரு. (உக) ஓதம் கடன் எஞ்சேல் (உஉ) சந்து ஏக போக்கினர் (உங) திருக்குஓவு ஜ.

(உசு) மரு படி கம் மன்னு, (உஅ) அமா பதி என் தேத்து அமர். (உகு) நெஞ்சு ஆக்கு அரன், (ஙo) மாசு இகல்காயன்

(ஙக) புகழும் பல வாணர், (ஙஉ) மெச்சும்தர ஆசானும் (க) உகந்த புராண (சு) வெள்ளை-வெண்பா, விருத்தம்-வியர்த்தம் (சு) சுகம்-இளி.

(க) கார்முகம்தன் அம்பு எய்யும், கார்முகந்து உன் அம்பெய்யும், (கஉ) எழும் புகை எழும்புகை, (கங) பால் யாறு.

(கஅ) கந்திவரை-இடபம், கந்திமலை, நாட்டுஉளர், நாடுஉளர், அம்-அழகு, சலம், மன் அகம், மன் நகம், (கக) கமலை ஆக்கு அமலை மார்பு ஆர்பு, கந்திகிரி அந்திகிரி (உo) கலைமான்-சரசுவதி, கம் தலை, சலம், மால் உந்தி-திருமாலினுடைய வந்தி, பெரியநீர்ச்சுழி (உக) ஆகு இவரும், மோது அகம், சோடி-தந்தம், (உஉ) வேல் ஆல் மா, கரை-சொல், (உங) கந்தி-ஒவன், சேய் ஆறு, சேயாறு, (உச) ஆல்கந்தசே ஆரம்

மோதி (டுடு) கம் மண்தலம். புவம்-நிலம், (உஎ) கந்திமரபு-கைலாயபரம்பரை, அந்தநிலை முடிவு அம்சிலிக்க, (உஅ) எண்குஅண் ஆன், கடல்மன், தீவினை - அக்கினிகாரியம்,

(உசு) வாம் குதிரை, மதகுஇரிய, வை-வைக்கோல், வேல்-மரம், மருவலர்-பகைவர், (ஙக) வே-மூங்கில், ஊந-துடை முத்து அலை (ஙஉ) ஐம்பால்-ஐந்திணைகள்.

கக (ஙங) ஐந்திணைப்பொருள்-ஐந்து இணைப்பொருள் (ஙச) முலை-முல்லை, பயம்-பால், தலம், (ஙசு) மயன்-மயம், (சஙி) கங்கு ஐ கா, வரி.

கஉ (உ) காஞ்சில் நகர், (ங) பெண்ணை-நதி, வைலை-காளத்தி, உருமு என்தொண்டை, (ச) குணத்தோர்-குணத்லதயுடை பார், நீர்மலை கஅ திருப்பதியுனொன்று, தண்டி அகன்மா வே-மூங்கில், (சு) தனித்து உண்நீரன், (எ) கங்கு-வரம்பு, காவரி உளவையை ஐயை, கோட்டம்-நிலப்பிரிவு

கங (கo) சேண் பன் ஐயர், (கச) திருக்கு அழுக்கு உன்றன்

கச (கஅ) வான் எய்தல், (கக) ஆம்பல்—யானை, ஆம் பல்,

கஞி (உசு) வேழம், மூங்கில், கோடு-கொம்பு, கிரி-பன்றி, அரு வி-அறுத்த நினைத்தான், (உஎ) சே-இடபம், (உக) ஆர்தல்-

கசு உண்ணல், (ஙஞி) மனப்புலி-மனமாகியபுலி, புலன்-அறிவு' (ஙஅ) வேள்-மன்மதன், அறுமுகவன், (சo) மரை-முதற் குறை,

கஎ (சசு) கோபாலன்-கண்ணுதலோன், (சஎ) இன்புல்காரம், இன்பு உன் ஆர, உன் முதனிலைத் தொழிற்பெயர்,

கஅ (ஞிஉ) ஐந்து ஆம், (சுo) நடு இடை,

ககூ (சுக) கரு மையில் வென் அக்கரம், (சுசு) களை-கன்னை, (சுகூ) புகா-வெள்ளி, கவிஞன்-புதன்; கலி-சனி, வெண்கு திர்-சந்திரன், செங்கதிர்-சூரியன், சேய்-செவ்வாய்,

உo (எo) பசுநீர்மை-பசுத்தன்மை, ஆவிவடிவு-விரைகெல் (எஉ) வை-வைக்கோல், (எங) வைவேல்தாக்கும், சொல்-கெல்,

உக (எச) மூலம்-கிழங்கு,

உஉ (சுக) கருவான்மி ஊரும்-மி குறுக்கல்விகாரம், (சுஉ) அத்தி-என்பு, மயிலை-ஒருவகைமீன்.

உஎ (கஅ) ஒரு கொம்பு ஆர் அத்தி-விநாயகர், வேய்ஙை-முரு கன், சம்பு-சிவன், (உo) பை-பாம்பின்படம், (உஎ) கால்-காற்று, வரம்பு-எல்லை, தேன் அரம் பை, (உங) வடி—தழும்பு

உஅ (ங0) பலகண் இயைந்து, சசி-சந்திரன், இந்திராணி,

உக (ஙக) பயம்-பலன், சலம் அச்சம், (சஎ) ஞிநூல்-இழை யை யொத்த இடை, அனந்தன்-நிருமால், சேடன், அனம்-அன்னம்.

க.ற (சசு) எல்லை-சூரியன், (சஅ) கன்று-வனையல், (இ0) கோடி-கறை, கோடி-முன்னிலை, னேமுற்று, (இக) சுவர்க்கம் தனம், மத்தியம்-இடை, பாதாலம்-பாதஇடம்,

க.க (நிக) கால்-காம்பு, கன்னீர். கிறை-இடம், (இக) அபூபம்-பலகாரம், மருக்து-அமிர்தம்.

க.உ (சுஉ) மாழா மை-மயங்கிமேகம், (சுஙி) நில்-விருப்பம், செல்-மேகம், (சுசு) காண்நான் தனவு,

க.ங (எக) ஆகமன்நூல், (எஉ) வடி-மாம்பிஞ்சு (எஙி) சூர்த்தம்-கைவேல், சதி-தாளவரிசை, (எச) மூளரி-தாமரை, தீ, தரு மன்று-தரும்அன்று.

க.ஙி (சுசு) நரையாளனுள்ளான் வெள்ளைநிறத்தையுடைய இடபத்தையுடையசிவன், கொக்கு-மாமரம், குயில்-உமை,

க.சு (சுஎ) கலைமான்-சரசுவதி, (சுஅ) மின்-இலக்குமி, (சுஙு) நிகிரி-மலை, அத்தி கிரி-யானை, வராகம், வையம்-தேர், (இ0) ஊளம் ஆம் கனி, வடு-பிஞ்சு, (இ0க) ஆண் மகன்-அரிகரபுத்திரன், (இ0ச) புலவன்-வித்வான், மாமன்-சிபதி,

க.அ (சுகசு) திருக்குஆம் அகோட்டம் (சுகஅ) காயா-மரம், (சுகசு) அயம் ஆவான்-கற்கியவதார மெடுப்பவன்.

சா0 (எ) சாகை-கிளை, மரன் அயல், ஒது இனர், (அ) மூனி-வில், வரை-மலை, சோதிபூவை-மரங்கள், (க) பயோதரம்-மேகம், தனம், (கப) மஞ்சு-மேகம்,

சாஎ (க) திருக்குஅயில், (உ) மாது இருக்கை, (ங) ஒருக்கு அயில் ஆயன், (ச) வெள்ளிய சலம்,

சாஅ (அ) அங்கம் மலை, மலைக்கும் பெயரெச்சம்,

சாசு (தஎ) வந்து-காற்று.

சாசு (நிஎ) கல் நல் மலை, அரி-பாம்பு, மால்-மயக்கம்.

சாங (நி) சாடி உடைபேரிய-குடப்பறை, உடுக்கை,

சாசு (தஇ) மருவு ஈரஆகு உவந்தான், (சசு) நல்லஉணர்வுஆன் தவம் (சஎ) நாமகேந்திரம், (சஅ) கேசத்து அனை, (உ0) சூர் அரா சதத்து அலை, (உக) பாரம் ஆர்த்து ஆண்ட (உஉ) பார் ஆம் தகனன், (உங) சூரது ஈரல் காமம்.

கசஙி (ங) சூது ஆரம்கண்டு ஆம். (ச) மர நிகரம்,

கசசு (நிங) திருபதம் கண்டான், (சு, அதம்-பிலம், குருவேம்கடம் (அ) உருவால் ஆகு ஆடும், (க) மண்ணு னனசர்கண்டு ஆர், (சக) கண்டான்-ஆச்னைகன், (சஉ) பெண் ஐ இடம்,

கசஎ (கச) வலை-மூங்கில், (கடு) தாமரை, கடப்பந்தாமரை, தாம்
அரை, (கசு) தேசம்பல, தேசுஅம்பலம், கரன்வற்ரூன் நத்
தன், (கஎ) போத நிருந்தார், போதத்து இருந்தார். (கஅ)
கானம் கடப்பம் என்ரூர் கடப்பம் தண்மைப்பன்மைவினை
முற்று. மருந்து இல்லை என்றே, என்தேம், (கசு) என்
தேத்தர் அங்கு ஓன் இயல்,

கசஅ (உஉ) தாய்-தாவி, அஞ்சம் கிரிதாம் அன்று, அங்கு அண்
டான், (உங) கிற்கணம்-ஞானுகாயம் (உச) நீதுஆதி
நீத்து அதீதத்து இதத்தது எது அதே தாதா, நீதத்து அத்
தத்தா, திதித்து ஒத்து ஒதுஆதி, நேம்தொத்தாது ஆத்தி
நே, தத்து உதநிதுதை நேத்து ஒத்தநாதாநிதிர்த்து, தத்து-
விபத்து (உரி) மற்ரும் ஆய்வு, மருந்து எய்வார் (உஎ) வன
பவ இலை விளி,

கசக (உஅ) நிகளம் நீர், அச மச அவி அதிப, (உக) மால்-காற்று,
(உ0) காமன்-இந்திரன், மன்மதன், வளி வன்னி-நி.

கசங (க) உருக்கு அரச்சு ஓட்டம்,

கசஞ (கஎ) வா தாவி வாது ஆவி.

கசட (கஅ) கா-கற்பகத்தரு, காக்கை-காத்தல்,

கசண (உ அ) கர்த்து-தூண், காம்பு-மூங்கில்,

கத (க) சூர் இயல், மஞ்சு உரர்

கதங (க) உருகுஅரக்கு ஒட்டம் ஆம்,

கதஙி (க) அரகோட்டு அத்த-சேடகிரியிலுள்ளவை,

கதட (க) ஒழுகு அர கோன்-இராகுகேதுகள்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கந்தபுராண வெண்பா.

விநாயகர் காப்பு.

நேரிசை வெண்பா.

பூமேவு கந்த புராணத் திருக்கதைவெண்
பாமேவு வண்ணம் பணிகுவா—மாமேவு
சக்கரமா தங்கத் தனிமுதலீன் மாவிகட
சக்கரமா தங்கச சரண். (அ)

சுப்பிரமணியர் காப்பு.

சேவலுகன் மாமயிலுஞ் செங்கையிலொள் வேலுமல்க
மாவகிர்க்கண் மாதரிரு மாடுமுறக்—காவலரின்
மாவடிக ளாருமன வண்காஞ்சி மாவடிவாழ்
மாவடிக ளாருமன மன்று. (ஆ)

நாற்பயன்.

கந்தமலர் மன்முற் கடவுளாக ளேத்தகன்கு
கந்தசுரர் காவலனைக் காய்ந்தவைவேற்—கந்தனருள்
போதத் துதிப்பார் புவனங் கடந்துபர
போதத துதிப்பார் பொலிந்து. (இ)

வாழ்த்து.

மன்னுகமா வேள்வி வழங்குகவொள் வான்சுரந்து
தன்னுகசெங் கோன்முறையே துன்னற்க—புன்னெறிகள்
சூழ்கசைவ சித்தாந்தத் தூயநெறி யெங்ஞான்றும்
வாழ்கவுல கெல்லா மகிழ்ந்து. (ஈ)

கடவுள் வாழ்த்து

சிவபெருமான்

திருவளிக்குங கல்வித திறனளிக்குந் தன்னே
ருருவளிக்கு முள்ளமே யுண்ணுய்—மருவளிக்கும்
வெள்ளி மலையான் விமலையான் கேதகையை
யெள்ளி மலையா னினிது. (உ)

அநாதிதொட் டென்னைவிடா வாணவமாம் பேய்க்குத்
தனுதிறல் குன்றவிடை தந்தேன்—பிஞகியாஞ்
சிற்பரசி வந்தனையே சித்தியுற வாக்குசிரத்
திற்பரசி வந்தனையே செய்து. (உ)

அம்மாதா லந்தழைப்ப வண்டேர் மகிழ்பூப்ப
அம்மா துளங்கனிய யாடரசாம்—அம்மான்
நடராசன் மங்கலப்பா நன்கேத்தி னெஞ்சே
படராசன் மங்கலப்பாம் பார். (ஊ)

சிவசத்தி

பங்கமல மூற்றுமற்றுப் பல்வகைய வான்மாக்கள்
அங்கமல மூற்றுமற்றின் பாரவே—செங்கமலங்
கோணூட்ட மேல்வைப்பார் கோநாடத் தாணுடுங்
கோணூட்ட மேல்வைப்பார்க் கூறு. (எ)

தட்சணை மூர்த்தி.

பன்னியலோர் கூறும் பசுவியலும் பாசமென
மன்னியலு மற்றெளிரு மாபதியாங்—தன்னியலுஞ்
சின்முத் திரையாற் றெரிசித்தருள்வா ணுணவமுன்
னுன்முத் திரையா ருயிர்க்கு. (ஏ)

விநாயகர்.

வஞ்சக் கவடொடித்து வன்பாச மைந்தறுத்து
நெஞ்சக் குவடேறி நிற்குமொன்னு—ரஞ்சச்
துரக்குஞ் சரமா நெருழுமிறைசே யைந்து
கரக்குஞ் சரமா களித்து. (ஐ)

வைரவக் கடவுள்

ஆடன் மருவுவுண ராருயிர்கொள் செங்கதிர்வேல்
வேடன் கதைதவில வித்தையன்பு—சேடன்
மூடுகன் புடையாரின் முந்தநல்கு நெஞ்சே
வடுகன் புடையார் மகிழ்ந்து. (ஒ)

வீரபத்திரக் கடவுள்

என்றன் துதியேற் றெனையுஞ் சினமென்னுங்
குன்றிலிவ ராமலருள் கூர்வதூஉ—மன்றி
விருப்பத் திரையுள்ளும் வீழாமற் காப்பான்
திருப்பத் திரையுள்ளுந் தே. (ஓ)

சுப்பிரமணியக் கடவுள்.

உரைக்கலா முள்ளமே யோரைம் புலனே
யரைக்கணமத் தன்சே யடித்தா—மரைக்கண்
திருப்பரங் குன்றத்தான் றேசுறுவேற் கந்தன்
திருப்பரங் குன்றத்தான் சீர். (க)

தொல்வினையின் பந்தத் தொடரறுப்பா னெண்ணுவீர்
கல்வினையே செய்வீர் கலந்தருவான்—வல்வினைக்கஞ்
சீரிலை வாயமருந் தேதிகருஞ் செவ்வேளாஞ்
சீரிலை வாயமருந் தே. (கo)

அங்கமுறு செண்மத் தலைவுறுவெங் நோயனைத்து
மங்கருணன் முன்னிமம்போ லாருமே—யங்க
திருவாவி னன்குடியாச் சேர்முகத்தர் சேயாந்
திருவாவி னன்குடியாற் செப்பு. (கக)

சிந்திக்கத் தித்திக்குந் தீயவினைக் கோர்மருந்தாம்
வந்திக்க முத்திநல்கும் வாய்ந்தசுழி—யுந்தித்
திருவே ரகமேவுந் தேருலாம் வெள்ளல்
திருவே ரகமேவுந் தேன். (கஉ)

என்மனமாங் கல்லி லினிதுறைத லற்புதமோ
தென்மலையான் றேசிகனற் செங்கமல—மென்மலர்சேர்
குன்றுதொ றாடலுமுன் கோலமனங் தேடரன்சேப்
குன்றுதொ றாடலுமுன் கோ. (கங)

காமனென்று சோமனென்றுங் காமனென்றுஞ் சோமனென்
பூமனென்றும் பூரியரைப் போற்றுகெஞ்சே—நாமன் [றும்
பழமுதிர் சோலையனைப் பண்டுவலம் வந்த
பழமுதிர் சோலையனைப் பாடு. (கச)

தென்னே நிசைவிருத்தத் தாற்சொலமுன் னின்றமைபோ
லென்னே நிசைவெண்பா விற்கருள்வான்—முன்னே
குருகுமசக் கோட்டக் கொடுமனசே ராப்பண்
குருகுமசக் கோட்டக் குகன். (கஙி)

தெய்வயானை வள்ளியம்மை

என்னன் புடைமொழிகட் கின்னருள்செய் வார்கடம்பார்
மன்னன் புடையமரு மங்கையராம்—வன்னகில்சேர்
வார்க்குஞ் சரியாரும் வள்ளியெனுங் காந்தளங்கை
யார்க்குஞ் சரியாரு மாங்கு. (கசு)

திருநந்திதேவர்.

சிந்தியா நெஞ்சே சிவனயன்மா லாதியரைப்
பந்தியா யுய்த்துப் பகிர்வித்தே—யந்தி
வருணந் தியங்கத்தன் மன்கயிலை காக்குந்
தெருணந்தி யங்கத்தன் தேர். (கள)

நவவீரர்கள.

மன்வாகு கேசரி மாகேந் திரன்மாகே
சன்புரிந்த ரன்ராக்க தன்மார்த்தாண்—டன்னந
தகன்தீரன் வீரந் தலைக்கொளிவர் நாயே
னகன்தீரஞ் செய்வா ரமர்ந்து. (கஅ)

ஆசிரியரகத்தியனர்

சங்கரியைச் சங்கரனுத் தாபித்தே தான் சற்குருவாஞ்
சங்கரிசேய் தன்கதைக்குட் சார்ந்தருளுஞ்—சங்கரிநேர்
முத்தமிழ் தந்த முனியலைவீழ் பன்மொழிசேர்
முத்தமிழ் தந்த முனி. (கக)

திருஞானசம்பந்த மூர்த்திநாயனர்.

பிருந்தையென்பி லேபுரண்டு பேதுறுமா ணண
வருந்தைய லென்பினைப்பெண் ணுக்கும்—பெருந்தகையாஞ்
சம்பந்த ரத்த சரண்சனன மாவெயிற்குச்
சம்பந்த ரச்த தரு. (உ0)

திருநாவுக்கரசு நாயனர்.

அணையாழிக் கிட்டிலங்கைக் கண்ணரியுட் கக்கற்
புணையாக் கடல்கடந்தான் பூந்தா—டுணையாஞ்சீர்
ஓதக் கடனெஞ்சே லோதிக் கடபிறப்பாம்
ஓதக் கடனெஞ்சே யோர்ந்து. (உக)

சுந்தரமூர்த்தி நாயனர்.

மிலயமா நெஞ்சம் வலிகாந்த மாம்வண்ண
மலயமா வீற்றிருப்பா ரஞ்ஞான்று—மாலயனுஞ்
சந்தேகப் போக்கினர் தாமருள நின்றவரைச்
சந்தேகப் போக்கினர் தாம். (உஉ)

மாணிக்கவாசக சுவாமிகள்.

வரையா மறைவாய் மலரயன்மாற் கண்ணுன்
வரையா மறைவாய் மலர்ந்தோன்—வரையத்
திருக்கோவை யாரென் றெருணூலைக் கூறுந்
திருக்கோவை யாரென் றிரு. (உங)

தண்டபாணி சுவாமிகள்.

அரக்கனைக்கொல் பாவ மகலவருச் சித்த
கரக்கமலன் கண்டேக் கறுப்ப—விரக்கமிலாத்
தந்தை யிருந்தா டடிந்தாண்ருள் சார்ந்தவென்
றிந்தை யிருந்தாள் சிறந்து. (2 ச)

அறுபத்துமூவர்.

கயற்கணுமை காந்தன் களிக்க வுலகிற்
செயற்கரிய செய்தவன்ருள் சேர்ந்த—பெயற்கருணை
யொன்பா னெழுவ ரொளிர்தா ணினைக்கினவ
ரன்பா னெழுவ ரகத்து. (2 ஙா)

சரசுவதி.

இவளவென் றில்ருகன்சீ ரேய்ந்திசைவெண் பாவிற்
றிவளவருள் செய்வளிதழ் செய்ய—பவள
மருப்படிக மண்ஞ வளாளக நீல
முருப்படிக மண்ஞ ளுகந்து. (2 ஙூ)

மற்றையடியார்.

கண்டிகையும் வெண்ணீறுங் கண்ணீரு மாகமுற
ணண்டிகையு மேத்து மிறைவருக்குப்—பண்டிகையாத்
தேவார மாதியைந்துந் தேர்ந்தோதித் தொண்டினுக்கு
மாவாரந் தாடலேமே லாம். (2 ஙா)

சந்தானகுரவர்.

சீராரு மெய்கண்ட தேவ னருணந்தி
தாராரர் மறைஞான சம்பந்த—னேரா
ருமாபதியென் றேத்தமர வோங்குவர்தாள் சார்வே
ணமாபதியென் றேத்தமர வாங்கு. (2 அ)

பஞ்சாக்கரதேசிகர்.

நியம முறத்துதிக்க நித்தியமே நல்கு
மயமதுறக் கொள்காந்த மாத்தன்—வயமுறவெ
னெஞ்சாக் கரனு நெடுமா வடுதுறைவாழ்
பஞ்சாக் கரஞர் பதம். (2ங)

தேசிகாகுரு.

நஞ்சக் கரத்தாலக் கஞ்ச னெழுத்தழித்தே
யஞ்சக் கரத்தா லகவிருணீத்—தஞ்சலென்ரூன்
மாசிக ஞயன் மனச்சுப் பிரமணிய
தேசிக ஞய சிவன். (2ம)

இதுமதி.

குருநமச்சிவாய குரவன் மாபில்
வருசுப் பிரமணிய மன்னு—மொருவன்
திகழும் பலவாண தேசிகன்ரு ளன்றிப்
புகழும் பலவாணர்ப் போற்று. (ங ச)

வித்தியா குரு

சின்னய வாரியனற் சின்னசா மிக்குரவ
னென்னைய ராமிவரோ டெத்தலமும்—பொன்னெனமச்
சுந்தரவா சானுந் துணையிலருண் மீளுட்சி
சுந்தரவா சானுந துணை. (ங உ)

அவையடக்கம்

வெண்பாவி னுனடக்கு மேன்மையது மூகைகண்—
பண்பார் கனவிளக்கும் பான்மையதே—விண்பாரு
கந்த புராண கருணை கவியில்வேள்
கந்த புராணக் கதை. (ச)

பெருக்கமா நூற்கும் பெருந்தகையோர் கூற்றுரு
சுருக்கமா நூற்குருடித் தோன்ற—வுருக்கமா
வெண்பாவால் வேள்சீர் விளம்புகென்ரூர் விததகன்ப-
ணண்பாவார் நல்லோர் நயந்து . (உ)

அன்னவர்தஞ் சொன்மறுத்தற் கஞ்சியிது சொல்லலுற்றே
னுன்னுகவி நாயகனு மோர்புலவ—னென்ன
வழுத்தவரு மாண்பான் மதியிலன்சொன் னூலில்
வழுத்தவறு வையான் மகிழ்ந்து. (ங)

வுள்ளறிவிற் கேற்பவொண்பா வோங்குபுல வோர்கவின்ரூர்
வெள்ளறிவிற் கேற்பவெண்பா வேட்கறைந்தேன்—றெள்ளறிஞர்
வெள்ளையிதென் ரூனும் விருத்தமெனர் மூற்பாவாக்
கொள்ளையினிற் கொள்வார் குறித்து. (சு)

ஐயனருள் பெற்றகச்சி யப்பசிவா சாரியர்தஞ்
செய்யனூன் மாட்சி தெரிதரவே—தய்யவன்னு
சொண்பாத தாமரையை யுள்ளத் தடத்திருத்தி
வெண்பாவி னூற்கலுற்றேன் வேட்டு. (ஙு)

புதிதாக வொன்றும் புகல்கிலன்வேள் காதை
துதிதாக மேற்கொண்டு சொற்றேன்—மதிவல்லீர்
சொன்னதுசொன் னலுஞ் சுகமொழியைத் தள்ளுவரோ
வன்னதுபோ லென்னுரையு மாம். (சு)

இந்தமாக் காதை யெயிற்கச் சியிலிருந்து
கந்தவே ளின்னருளாற் கட்டுரைத்தேன்—சந்ததமுஞ்
சாற்றிபோ ரெண்ணுஞ் சகாத்தமோ ராயிரத்தீண்
ணூற்றிருபான் மூன்றி னுனித்து. (எ

சிறப்புப்பாயிரம்.

கண்பாவா யார்க்கமையுங் கந்தவேண் மாக்கதையை
வெண்பாவா றூறி விளக்கிஞ—னண்பாருண்
றில்லே விடங்கன்வாழ் சீர்வேலு சாமிமிக்கா
னெல்லியினூ லாய்ந்தோ னினிது. (அ)

ஆ திருவெண்பா சு சு

ஆற்றுப்படலம்.

அருண்மொழித் தேவாகச்சி யப்பர்சிவ ஞானத்
தெருண்முளிவ ராகி சிறந்தோ—பொருண்மாட்சி
சீதாற்றநனி போற்றுபுகழ்ச தொண்டைநாட் டெண்டகைமை
சாற்றநகை யெற்கே தரும் (க)

கோட்டிற் கணியாங் குலவு மணிச்சிகர
மாட்டிற் கணியா மபிநயஞ்சீர்—நாட்டியனற்
பாட்டிற் கணியாம் பளிலவணி யாங்கதுபோ
னூட்டிற் கணியா நதி. (உ)

கங்கையருக் கொண்டேகிக் கார்த்திரைநீர் மேய்ந்துவளை
மங்கையருக் கொண்டு வந்த மாமுகில்கள்— செங்கையான்
கோடீர மேய்ப்பமின்னிக் கூரருள்போ னந்திவரைக்
கோடீர மேற்பொழிந்த கூர்ந்து (ங)

எழிலிவ்வை தோறு மிவர்ந்திறங்குந் தோற்ற
மெழிலியையும் வானவர்கோ னீர்ந்த—வழிகின்று
தம்மின் வளர்ந்திறகிற் ருவிப் பறப்பதற்கே
யம்ம முயல்வதொக்கு மாங்கு. (ச)

அன்னதனைக் கண்டுபொரு ளுகிச் சதக்கிருது
கொன்னுதிய வச்சிரவாள் கொண்டரிய—மன்னசலம்
வாய்விட் டரற்றல்போல் வான்குமுறுந் தெவ்வர்முன்
றேய்வும் றிருக்கினுண்டோ சீங்கு. (ஞ)

முன்னஞ் சிறகரிந்த மொய்கலிரங் கொள்குறும்பை
யின்னஞ் சிவதப்பமென லிந்திரன்சீர்— மன்னவே
கார்முகந்துன் னம்பெய்யுங் காட்சியிற்கன் மேற்கடனீர்
கார்முகந்துன் னம்பெய்யுங் காண். (சு)

வானவர்கோ னெய்த வழிநின் றெழுகுண்ண
மானு மெழிற்செம் மணிமிளிர்த—லேனலுயர்
சாரலகந் தோறுந் தயங்கிந் திரகோபம்
வாரா வெழுந்தொழுகு மாண்பு. (எ)

வீரையாஞ் சாலியிலார் மேக வுறையிற்பெய்
தாரையா மீட்டியுறத் தான்வீசித்—தீரமொடு
வாடையா மீளி வரப்போ யொளித்ததே
கோடையாம் வெய்யோன் கொதிப்பு. (அ)

வானவின்மா மஞ்சில் வயங்கி மறைகாட்சி
வானமரர் வாழ்த்துநந்தி வானவருக்—கானதிரு
மஞ்சனநீ ராட்ட மணிவா சிகைகளேந்தே
யஞ்சலமன் வைத்ததொக்கு மாங்கு. (கூ)

கிருத்தியைந்து சாண்டக் கடவுள் கனமாந்
திருத்தியின்மூ நீர்முகந்து தூய்தாய்த்—திருத்தியநீ
ராட்டுவது மானுமுகி லங்கிரியைத் தகவிரு
கோட்டுநந்தி யாகக் குறித்து. (கஅ)

ஓங்கருஞ்சீர் நந்தியெனு மும்பற் கணிகோட்டிற்
றூங்கருவி வெள்ளத் தினிகார்க்கு—மாங்கதன்கட்
சாந்தினல் வேங்கைத் தருமலர்கள் வாய்ந்துநிற்றல்
பூந்தொடைய லொக்கும் பொலிந்து. (கக)

தூநற் கிரியிறைக்காந் தூபமொடு தீபமொக்குந்
தானக் குறிச்சிதொறுஞ் சந்தகிலின்—வானம்
விளர்க்க வெழும்புகையில் வில்லினர்செந் தீயை
வளர்க்க வெழும்புகையின் மாண்பு. (கஉ)

மைதவழ மஞ்ஞைபெயர் வண்மையவான் மால்வரையிற்
செய்தவத்தோன் றன்சுரபி தீர்த்தமாய்ப்—பெய்தவந்தப்
பாலியா றென்னப் படர்தலிஞ லாங்கதன்பேர்
பாலியா றென்பர் பரிந்து (கங)

ஐந்திணையா மன்னைமா ராங்காங் களித்தபொரு
ளுந்துதிரைக் கையா னுகந்தகொடு—சிந்துவெணுந்
தன்பதியு ளோகையுறத் தந்து கலந்ததே
வண்பதிநீர்ப் பாலி மகிழ்ந்து. (கச)

மேதிகழை யுண்சாறும் வெம்முக் கனித்தேனு
மோதுமுல்லைப் பாறையிர்கெய் யோடுகொடு—மோதிஜூரப்
பாலி கடன்மடுப்பப் பண்ணியிதென் வாரிபுனை
ஞாலமயிர்ப் பாஞற்று நன்கு. (கடு)

வரையிற் றவழ்ந்துவந்து மாமூல்லை யாயி
நரையிற் நருபா னுகர்ந்து—மருதத்
துறையிற் படிந்தாடித் தூயநீர்ப் பாலி
யிறையிற் புணரு மினிது. (கசு)

மூல்லை குறிஞ்சியென முன்னவே நன்மருத
முல்லையென மன்ன முடைநெய்தல்—சொல்லரிய
தண்மருத் வைப்பாச் சமைத்ததே சித்தரென
நண்பொருளாற் பாலி நதி. (கஎ)

நந்திவரை மேற்ரேன்றி நாட்டினர்க்கங் காட்சிதர
வந்தின் னலமளித்து மன்னகஞ்சே—ரந்திறலாற்
றுங்கமுறு பாலி துதிதருக பாலியாஞ்
சங்கரனே மானுந் தகைத்து. (கஅ)

ஆங்கமலை யும்வனமு மார்புறலா னந்திகிரி
தாங்குகையான் மீனுமை தாமுருக்கொண்—டோங்குதலா
லெண்ணற்கு நேரா விரும்பாலி காயாம்பூ
வண்ணற்கு நேரா வரும். (கக)

செய்யகலை மான்றழுவித் திக்குதொறுங் கந்திகழத்
தய்யவன மூர்ந்துவந்து தோன்றுதலாற்—பையணைக்கண்
மாலுந்தி மேலிவரு மாட்சியிஞற் காட்சியயன்
போலுந் திரையார் புனல். (உ0)

தாயமலை யாகிவருந் தன்மையினுன் மோதகத்தை
மேயதன்கைக் கொண்டு விளங்குதலா—ஞயவெண்
கோடுமுறித் தேமாவைக் குத்திச்சாய்த் தைங்கரனே
ரோடுபுனற் பாலி யுறும். (உக)

வரையி லிருந்துவந்து மாமயின்மேற் கொண்டு
விரைவினில்வே லான்மாவை வீட்டிக்—கரையிருபான்
மாதங்க மான்றருநல் வல்லிதழீஇ வேணிகரு
நாதங்கொள் பாலி நதி. (உஉ)

நந்தியிட மன்னிவந்து நன்துறுசே யாறுபெற்று
நிந்தையில்பேர் பாலியெனு நீர்மையொடு—சந்ததிலைப்
பாரா நிருகரையும் பாற்றி வருநீத்த
நாரா யணியையொக்கு நன்கு. (உங)

ஆரமணி சிங்கனிகொண் டானந்தக் கண்ணீர்தான்
வாரமலர் சிந்தி வழிபடுவான்—நீரமுறத்
தேவார மோதிச் சிவார்ச்சனைசெய் மெய்யன்ப
ராவாரை சேரு மறல். (உச)

காயரித்தோல் போர்த்துங் கமண்டலங்கைக் கொண்டுமன்னைத்
தாய புலநெறிபோ யாரிபதிபாற்—றோய்ந்து
மல்லொழுக்கின் மேவா வறமா முனிவரர்த
நல்லொழுக்கின் மேவு நதி. (உஞ)

தாயா யுலகளிக்குந் தன்னோடு வேகவதி
சேயா நிருபாலுஞ் சேர்ந்திறைகைத்—தீயாரு
முத்தலேவ லொக்கு முனிவன் சுரபியரு
ணத்தலேநீர்ப் பாலி நதி. (உசு)

நந்தி மரபுவந்து நற்பொருளை லாமோதி
யந்தநிலை காட்டிநில மஞ்சலிக்கச்—சந்ததமு
மேவுறலாற் பாலி விழையா வடுதுறைவாழ்
தாவில் குருவையொக்குந் தான். (உஎ)

எண்கணு னெற்றிவந்தெண் ணில்கலையு மோதுதலா
ணண்கடன்மன் னுண்மகிழ நன்கியற்றி—மண்புகழத்
தீவினையு மாற்றித் திவளவர லாணித்த
மேவந் தணர்ச்சிவணு மே. (உஅ)

வொங்குதிரை வையமதகிரிய மள்ளரார்த்
தாங்குறுவை வேல்விடுத் தஞ்சிறைசெய்—தாங்கண்
மருவலரை வாட்டி வருகையால் வாரி
பொருவரையர் தம்மைப் பொரும். (உக)

சந்தகிலின் மென்குறடு தந்தமணி யாதிகொண்
டந்தலேமேற் சூங்கி யவனிதொறு—முந்தி
வருகையால் வைசியரை மாளுமே பாலிப்
பொருகையார் வெள்ளப் புனல். (ஙஎ)

வேதன்கால் வந்தூரு மேன்முத் தலையார்க்கும்
போதநற்கூ டோர்வளத்தாற் பூப்பிக்கு—மேதி
னருணத்தார் கூல மவிர்பாலி நாலாம்
வருணத்தா ரென்ன வரும். (ஙசு)

மொய்ம்பா ரிருகையு மொய்வளையெய் தாரம்பூண்
டைம்பான் மலர்வேய்ந் தவிர்மணியும்—பைம்பொன்னு
மான்மதமுங் கொண்டு வரலான் மணமகளைப்
போன்மருவு நீத்தப் புனல். (ஙஉ)

வன்பா நிருகோடு வாய்ந்தைந் திணைப்பொருள்
டன்பாற் படவே தரணியில்வந்—தன்பான்
மருவண்டர் போற்று மகிமையினு னேரும்
பொருவண்டர் சூழும் புனல். (நடந)

ஓங்கான் முலையின்க ணுற்றதுணர்ந் தேமாக்க
ளாங்காங் கணைதந் தரும்பயத்தைத்—தாங்கான்
முதலமடுப் பூன்மறித்து முந்தவிடு நீராற்
கதமினரை யொக்குநதி காண். (நடச)

ஆலும்வெண் சங்குகள மாயசுழி யுந்திவரால்
காலுன் குமிழி கதிர்த்தமுலை—சேலொளிர்கட்
பாலியாம் பாவைதொண்டைப் பார்மகட்கு நற்றுயாய்ப்
பாலியா நிற்கும் பயம். (நடநி)

ஓதும் வரைகடந்தே யோரைம் புலன்வழியே
காதலுற வோடிக் கலங்கிப்பின்—மாதர்பொன்
மண்மய னீத்த மனம்போற் றெளிந்ததே
மண்மய னீத்த மறைத்து. (நடசு)

சேயாறு பொன்முகரி சீர்நந் தினியாதி
பாயாறு நீர்பெருகிப் பாயுமால்—தூயோர்
மனனுடு தொண்டை வளனுடு முற்றும்
புனனுடு போனற் புனல். (நடள)

பாலியா நற்றுய் பதியிடத்திற் றேய்ந்தபயம்
பாலியா நின்ற பருவத்திற்—சீலமணற்
குன்றுதன மாகக் குலவுமள்ளர் சேயாக
ந்ன்றுதொட நல்குமபா னீர். (நடஅ)

கொள்ளுநருக் கிந்தார் குறைவுவந்த காலத்து
முள்ள துதவு முயர்குணத்த—வள்ளல்போற்
காலினீர் வேண்டிக் களமர் தொடக்குறிப்பிற
பாலிநீர் நல்கும் பரிந்து. (நடசு)

வறிஞர்க்கு மல்குபொருள் வாய்க்கினவர் தக்க
நெறியுய்க்கு மாறுபோ னீத்தஞ்—செறியமள்ள
ரோடைகுள னேரி யுறத்தேக்கிச் செய்யகநீர்
சேடையுறப் பாய்ச்சுவார் தேர்ந்து. (சம)

கங்கை யுயர்விழியக் காவே ரியுமடங்கப்
பொங்குதிரைப் பாலி புறப்பட்டுப்—பங்கயமே
பல்கு பலகாலிற் பாய்ந்தெங்கும் பல்வளனு
நல்குநீர் மைத்துதொண்டை நாடு. (சக)

ஆற்றுப்படலம் முற்றும் பெற்றது.

திருநாட்டுப் படலம்.

திருமான் முதலமரர் தேவிமா ரோடு
மருமா மலர்தூய் வழிபட்—டொருமாத்
தனிமுதலேச் சார்ந்தனையான் றண்ணருள்பெற் றன்பி
னனியமர்நீர் மைத்தெதொண்டை நாடு. (க)

எம்மையா ளீசனெமீ ரேழுலகு மின்றருளு
மம்மையர் சார்ச்சித் தருள்பெறுஉஞ்—செம்மையார்
காஞ்சி நகராசாள் காவலன்போல் வீற்றிருப்ப
நாஞ்சினகர் சூழ்வதொண்டை நாடு. (உ)

பெண்ணையொரு பால்வைத்தும் பேர்பெறுநற் கையுற்றுங்
கண்ணுருமென் றெண்டைமான் கையமர்ந்து—மண்ணுலகிற்
பொன்னுடு செஞ்சடையான் போன்றதே சான்றோர்வாழ்
நன்னுடு சீர்த்தொண்டை நாடு. (ங)

ஆழிகுணக் தோர்கைதந்து மார்நீர் மலையுற்றுங்
காழிசைமன் றண்டகன்மாக் கையடைந்தும்—வீழிவாய்
வேதனேசே ராந்துணைதோள் வீக்கணமர் மாக்கமல
காதனேசே ராந்தொண்டை நாடு. (ச)

தேர்ந்தமறை யோர்நால்வாய்த் தேத்தவிர்ந்து மாழிநில
மோர்ந்துதனித் துணைஊ ஞர்ந்திவந்து—மார்ந்தசெழும்
பூமன் னிருக்கையுற்றும் பேதனேசே ராம்புலவர்
நாமன் றிருத்தொண்டை நாடு. (ஞ)

செங்காப்போ தார்பெருந் தேவனூர் சேக்கிழார்
செங்காப் புலவர்கச்சி யப்பனவன்—முன்னுகப்
பன்னு வலர்பலர்வாழ் பண்பாற் சிறந்தன்றே
நன்னுடு சீர்த்தொண்டை நாடு. (ட)

கங்கை புடைத்துவருங் காவேரி நன்குடைத்து
தங்கமுள வையை தொழுந்தகைத்து—பொங்குதிரைப்
பாலாறு பாயும் பயனுடைத்தே கோட்டமோர்
காலா துடையதொண்டை நாடு. (எ)

வடபாற் பணியசல மன்குணபால் வாரி
குடபாற் பவளக் குவடு—தடமாருந்
தென்பாற் பிணிதி திகழெல்லை யாய்க்கொளுமே
கன்பாலி சூழ்தொண்டை நாடு. (அ)

பேய்க்கரும்பே தித்திக்கப் பெற்றருள்வெண் காடரருள்
வாய்க்கரும்பே றுற்றதிந்த வையகத்திற்—காய்க்கரும்பே
யின்றியுடைத் தாருபல னீப்பெனவுள் ளன்பினர்செய்
நன்றி யுடைத்துதொண்டை நாடு. (௬)

ஆண்பனையைப் பெண்பனைய தாகமறைத் தேயுலகின்
மாண்பனையின் பால்கமழ வாய்மலர்ந்த—சேல்நயனர்
தாமேவு மோத்தூர்த் தலமுடைத்து பாவலர்த
நாமேவு நற்றொண்டை நாடு. (௭௦)

தெள்ளிடையன் வாட்டழும்புந் தென்னவன்மாற் றொண்டழும்புங்
கொள்ளியழுன் ஞற்று கொடியநா—டெள்ளி
முகிற்றகர மைக்குழலாண் முன்னேன் மகிழ
நகிற்றழும்பு வைத்ததந்த நாடு. (௬௬)

சேர வளநாடுந் தீம்புனலு டோடுவையை
நீர வளநாடு நேராகா—தாரமே
தொண்டைநா டந்தகைவாற் றுண்டீர நன்னுட்டைத்
தொண்டைநா டென்பர் துதித்து. (௬உ)

பளினன்மாற் பேரறி பஃறலமும் போற்றித்
தளவணிமால் சூழ்கிடக்குந் தொண்டை—வளநாடு
சான்றோ ருடைத்தென் றகையுணர்ந்தே தாங்குமரா
வுன்றோய் முடியி லுலகு. (௬ங)

நிலமார் திருத்தொண்டை நாட்டிற் கணியாந்
தலமார் கயிலே தணிகை—மலமா
திருக்கழுக் குன்றற் றெரிசிக்கிற் றீர்க்குந்
திருக்கழுக் குன்றஞ் சிறந்து. (௬ச)

பாரே யுயிர்வளர்க்கும் பாய சலத்தோடு
காரே யசலமுற்றுங் காரணத்தாற்—பேரேய்ந்
திடுநா டிரண்டினியல் பேற்றிடலான் மேவா
நடுநா டெனப்படுமந் நாடு. (௬ஞ)

செருப்பரீர்த் தெவருந் தியங்கநடு நாட்டார்
நெருப்பார் மலைவெம்மை நீங்க—விருப்பாரு
நீர்மலையும் பெற்றதென்ரு னீடுதொண்டை நாடுபெறூஉஞ்
சீர்மலையா தார்நவில்வார் தேர்ந்து. (௭சு)

வேழ முகம்படா மேவாநா டெண்சோற்றுச்
சோழவள நாடுமித்தந் தோன்றுநா—டாழவுட்கி
யான்ற வரையே யகப்பொருளாக் கொண்டியர்ந்தெஞ்
ஞான்றுநகை காட்டுமந்த நாடு. (௭எ)

வானெய்தன் மேவும் வரையி னிரையின்மீ
பானெய்தன் வாசம் பரிமளிக்கும்—கானில்வே
டானெய்த ணூர்பூஞ் சரங்கொய்யும் வண்பணையிற்
காணெய்த லுறுநெய்தற் கண். (கஅ)

ஆம்பல் படரு மணிவஞ்ரயி லாய்கியர்வா
யாம்பல் லவாவுமுல்கே யார்வனத்திற்—றேம்பிலிற்று,
மாம்பல் படரு மலிர்செறுவி னெய்தலின்க
ணும்புல் வளஞ்சுரக்கு மாங்கு. (கக)

வாலிதாந் தொண்டை வளநாட்டி லேரிதொறுஞ்
சாலிதா மோங்கச் சலநிறைதல்—பாலிதான்
செய்யென்னுஞ் சேயருந்தத் தீம்பால் சிலகலத்திற்
பெய்துவைத்தன் மானும் பெரிது. (உ ஈ)

பன்னே ரியல்பனைத்தும் பல்குந் திருநாட்டிற்
றுன்னேரி யுஞ்செற்றவுஞ் சூழ்காட்சி—மன்னேயா
மாயிரங்கண் பெற்றவற்கொப் பாக மருத்தங்கை
யாயிரங்கண் பெற்றதொக்கு மாங்கு. (உக)

வரையின் வளனும் வனத்தின் வளனுந்
திரையின் வளனுஞ் செழுநீர்க்—கரையின்
வளனு மெடுத்துரைக்க வாயு நினைக்க
வுளனு மெவர்தா முளர். (உஉ)

பழையனூர் நீலி பழிக்குவே ளாள
ரெழுபதின்ம ராலங்காட் டீசர்—கழனிகைந்தே
தீப்புகுந்தா ரென்னிற் றிருத்தொண்டை நாட்டருமை
காப்புகழ்ந்தா சொல்வார் கயந்து. (உங)

குறிஞ்சி.

அன்னை பிறப்பிடமு மத்த னிருப்பிடமு
மின்னை யளித்தோர் விருப்பிடமு—மென்ன
வுறிஞ்சிக்கண் மாவுண் டுகந்தினிசை பாடுங்
குறிஞ்சிக்கண் மேவுங் குகன். (உச)

வள்ளிபசுங் கன்குழியின் மன்மணியை வன்னியென
வுள்ளி பொதுங்கு முளியமதைத்—துள்ளிநனை
பண்ட வுடல்பதறிப்ப வோடி யுயர்தினையின்
குண்டமெனச் சாருங் குரங்கு. (உ ரு)

ஆங்கமருந் திண்வேழ மாயிரங்கண் பெற்றெளிரும்
வேங்கையது தங்கோடு மேவுங்கோ—டோங்குங்
கிரிபெயர்ந் தோடுங் கிளரருவி நிற்கு
மரியவளஞ் சொல்வ தரிது. (உசு)

வேங்கையெதி ரிற்சே விளங்குங் கிளையுந்தே
யோங்கரிமுன் ஞும்ப லுராய்நிற்குங்—தீங்கின்றி
வேடர் குழவியும்பாய் வெய்ய புலிப்பறழு
மாட லுருற்று மவண். (உஎ)

ஆங்கவரை கும்பமதிற் றூங்கருவி யாங்கடத்திற்
பொங்குவெள்ளைத் தானைதொங்கல் போலுமே—யங்கெரிதீ
குண்டமொக்கும் பாங்கார் குறவர்மகளு செய்கின்ற
மொண்டவரை நேர்வ ருகந்து. (உஅ)

வாக்குமன்பொன் கல்லெழுழ வாரங் கொடுவெறிந்து
மோக்கவிருப் பொன்றினையே முன்னுதல்போன்—மாக்குறவ
ராரத் தினைநிதியை யாய்ந்தெதிர்ந்து சாலின்க
ணூரத் தினைவிளைப்பா ராங்கு. (உகூ)

அங்கணிதண் மேவிமணி யாங்கல் கவண்வைத்துக்
கொங்கண் குயந்துளங்கக் கூர்கினைத்திற்—பைங்கிளிகள்
வன்சொற் கொடுகடிந்து மற்றவைபோய் மீளுமன்னு
ரின்சொற் பயில்வா னினிது. (நo)

ஒள்வா ணகையார்புள் ளோச்சுதொறும் பேச்சுணர்ந்தே
யுள்வா ரெனத்தெளிவுற் றெழுண்கவண்கைக்—கொள்வார்
லிரல்கொ ளுகிர்போன் மிளிர்நாசி யின்வாய்க்
குரல்கவர்ந்து போம்பைங் குருகு. (நக)

அருவி முழவதிர வஞ்சுகம்பண் பாடக்
குருமஞ்ஞை யாடல் குனிப்பக்—கருமுகில்வி
தானமா மேவு தணிகை வரைகுகற்குத்
தானமா மேவுந் தகைத்து. (நஉ)

உளவன் றிறலெயின சோரைக் திணையார்
களவன்றி யாற்றூர் களவங்—களவில்
கொடுவன்றி வேட்டத்திற் கூர்ங்கோடு தைத்த
வடுவன்றி யாற்றூர் வடு. (நஙு)

செறிவேட்டஞ் செய்துந் தினையே விளைத்தும்
வெறியாட் டயர்களத்தில் வேலன்—குறிகேட்டுந்
தூநீர்ச் சுனைதோய்ந்துஞ் தோகையரந் தோள்சேர்ந்தும்
போநீ ளெயினர்க்குப் போது. (நச)

மன்புலியின் ரோலார் மயக்க மனப்புலியைப்
புன்பொறியு ளோக்கிப் புலன்போக்காத்—தன்மையினன்
மாச்சிரம வேடாவ்ர் மாதவராம் வாழ்குடிலு
மாச்சிரமம் போன்ரெளிரு மாங்கு. (நடுடு)

விற்றிறத்தில் வல்ல வீரியனேயும் பேடியா
மற்றிறத்திற் கண்ணினேயு மாலாகக்—கைத்திறத்தில்
வீழினேயு மோர்மடைய ஞகச்செய் வேடுவர்வாழ்
காமர்குறிச்சிபல காண். (நசு)

தேனுந் தினைமாவுந் தீங்கனியும் வான்கிழங்குங்
காணுந் தலர்த்தொடையுங் கைக்கொடுபோய்க்—கானவர்கள்
வான்ரேய் குடிமி வரைதோறு மாடலய
சான்ரோன் றனக்களிப்பா ராங்கு. (நஎ)

ஒருவே டனைக்காய்ந் தொருவே டனைக்கண்
டொருவேட னெச்சி லுகந்தோ—ரொருவேடன்
வேடமுற்ரு னென்னில் விளம்பும் விறலினரார்
வேடர் குலச்சீர் வியந்து. (நஅ)

மூல்லை.

மருக னிளாஞனவன் வான்றுணேயா மேவி
யருகி லமர்வமென்ரே வாயர்—தருமகளிர்
நேயமுற வோதையிர்பா னெய்விழைந்தோ முல்லையின்கண்
மாயன் வதிவான் மகிழ்ந்து. (கூக)

தேனுமணி வான்தருவாற் றீம்பா லமிர்தமரை
மானுனரி தெய்வதமா மன்னுறலா—னூனமரும்
வேற்கடைக்க ணையமின்னர் மேவுறலால் வண்புறவம்
பாற்கடலென் றெண்ணப் படும். (சம)

மனேயின் மணக்கு மடிபா றயிர்நெய்
கனேயின் மணக்கு நறும்பூ—வினேவி
லதரின் மணக்கு மலிர்தருகத் தூரி
புதரின் மணக்கும் புழுகு. (சக)

அடைகாட்டும் வில்வ மலர்காட்டு மெய்காய்
சடைகாட்டுங் கொன்றைத் தருமால்—விடைகாட்டுந்
தேவையொக்கு மாங்கதனேச் சோகிற்கும் பூவைவிழி
யேவையொக்கு மீசையொக்கு மே. (சஉ)

ஆழிவா யின்னமுத மன்றமரர்க் கீந்தபிரான்
ஏழிவா யின்னமுதந் தான்விழைந்து—வீழிவா
யாயமின்னூர் தாங்கட் டடியுடனேற் றங்கவளை
மேயதிரு வண்ணவர்சீர் மேல். (கஅ)

குருந்தடியிற் கோமான் குருவடிவங் கொண்டு
திருந்தடியர் மூப்பொருளுந் தேர்வா—னிருந்தவர்போ
றந்நிலையு மன்பசுபா சந்நிலையுங் காட்டிநிற்ப
ரென்னிலவர்க் குண்டோ வியேை. (கக)

கண்ணகன்மா ஞாலமெலாங் காக்குந் தனிக்கடவுள்
கண்ணனெனப் பேர்வாய்ந்து கன்றுடனுக்—கண்ணன்மை
மேவவண்டர் தங்குலத்தின் மேயதனு லக்குலப்பேர்
தேவரெலாம் பூண்டார் தெரிந்து. (கஙி)

மாயப் பசுக்கடிந்தான் மால்விடையி லேறிவந்து
நேயப் பசுமுன்னர் நின்றளித்தான்—றாய
கொடியிடைப்பெண் கொண்கனுங் கோபாலன் மேவு
கடிகொணகர் முல்லையுறுங் கான். (கசு)

நேசமுற்றே யோடாம னிற்கும் பசுக்களேவன்
பாசநீத் தொண்சிற் பரவெளியில்—வாசமுறச்
சேர்த்தின்புன் ஞரல்குஞ் சிற்றிடைய ஞலவனஞ்
சீர்த்தொளிரு முல்லைத் திணை. (கஎ)

எந்தைபிரா னேறு மிடபத் தினத்தாலு
மைந்தபொரு ளன்னந் களிப்பதாலு—நந்தமர
ராரிடர்தங் கூறங்கத் தார்வதாலு மாநிரைசேர்
சீரிடமா முல்லைத் திணை. (கஅ)

துங்கநீர்க் கான்யாற்றிற் ரோய்வார் தொடைபுனைவா
ரங்கநோ வாம லடிவிடையைச்—சிங்க
மனையார் தழுவ வவரையிடைச் சிங்க
மனையார் தழுவிமகிழ் வார். (கசு)

இடையற்ப மாத ரிளந்தயிர்சங் கார்ப்பக்
கடைமுழக்கு மண்டார் கவின்கொள்—விடைகள்
பிணியார்ப்பும் வன்கோட்டுப் பெற்றங் களங்கொண்
மணியார்ப்பு மாரு வனம். (஫0)

ஆடகமஞ் சூர மவரைமுற்கங் காணமிதை
மாட மிறுங்கெண் வரகைவகா—னீடு
தரையிற் ரினர்ந்து தலந்தோறு மேவி
வரையிற் கிடக்கு மலிந்து. (஫க)

மருதம்.

இங்குமுழத் தியெய்தா திருநிலத்தி லெய்துமென்றே
சங்கம் பதுமஞ்சிந் தாமணிமு—னங்கங்
கருதத் துறைவான் கயங்காட்ட வேந்தன்
மருதத் துறைவான் மகிழ்ந்து. (நிஉ)

ஓருபா லுழுவா ரொருபால் விதைப்பா
ரொருபா னடுவா ருழுநர்—மருவி
யொருபா லறுப்பா ரொருபா லடிப்பா
ரொருபர் ளளப்பா ருகந்து. (நிங)

கார்பூட்டு வார்போற் கடாவி னெழிற்களத்தில்
வார்பூட்டு வார்நுகத்தை வைத்திணைத்துச்—சீர்பூட்டு
மேர்பூட்டு வாருழுந ரேழ்பரியைச் செங்கதிரோன்
றேர்பூட்டு மூன்னர்த் தெளிந்து. (நிச)

வடபா லிருந்துதென்பான் மல்கிடவே சோர்சால்
குடபா லிருந்து குணபா—னடவவளாக்
கோலித் துகைப்பார் குளப்படிய காராவை
யாலித் துகைப்பா ரவர். (நிஞ)

எழுதருநா ரும்புலத்தி லேர்பலசா லோச்சி
யுழுதுபரம் பாற்றியொண்ணீ ருய்த்துப்—பழுதுவரா
திந்திரதெய் வம்போற்றி யீசானமாதிசையின்
முந்திவித்து வார்நென் முளை. (நிசு)

மற்றைநா ணீர்கவிழ்த்து வாலங் குரம்வெள்ளி
விற்றிகழுங் கம்பியென மேவிடவே—பெற்றவிளங்
கான்முளைக்குப் பாலருத்துங் காரிகைபோற் றிண்களமர்
பான்முளைக்குப் பாய்ச்சுவர்நீர் பார்த்து. (நிஎ)

அள்ளலுறு வித்தனைத்து மங்குரித்து மேனெக்கி
வெள்ளிநிறந் தீர்ந்துபுதன் மேனியா—வொள்ளியமா
நீல மணிக்கொழுந்து நேர வளருமே
ஞால மகிழ்ச்சிகொள நன்கு. (நிஅ)

நாறு பறித்துமள்ளர் நன்முடிக ளாயமைத்துக்
கூறுபட யாத்துக் கொடுபோய்வண்—சேறுபடு
செய்யிற் பரப்பவே சேற்க ணுழத்தியர்தங்
கையிற் பதிப்பார் களித்து. (நிக)

நடுவா ரிசைமள்ளர் நாறு பரப்ப
நடுவா ரிசைப்பண் ணைலங்கேட்—டடுவா
குழுநர்க் குகைப்புரப்பு மோவவே போமேர்க்
கொழுநற் கடாமகிழ்வு கொண்டு. (சுஎ)

கதிப்பார் கழனிக் கருஞ்சேற்றி ஞற்றின்
பதிப்பார் தருகாட்சி பாங்கின்—விதிப்பார்
கருமையினில் வெள்ளக் கரம்விசும்பின் மீஞ
மிருமையுமே யேய்க்கு மினிது. (சுக)

அம்மான் மகளு மயலான் மகளீமணஞ்
செய்மாண் புரன்மனையுட் சேர்ந்துழிமுன்—னுய்மாண்பி
னுட்டகவும் வெள்கலும்போ லுற்ற பசுமைவெண்மை
நட்டமுன்பின் ஞஞ்சேற்றி ஞறு (சுஉ)

இருநிறத்த மாத ரியலும் பயில
வொருதிறத்த வாயினபோ லோங்கி—வருதிறத்த
பைங்கூழ் தினைவளைத்த பண்டுளபுன் முற்களைக
ளங்கூழ் வினையி னடுத்து. (சுங)

மள்ளர்கள் ளுண்மயக்கான் மாதர்தம் மெய்நோக்கிக்
கள்ளமரை மொட்டாதி கட்டனதாங்—கொள்ளையினும்
மேல்வளைந்த வென்கொலென வெம்மூலமுன் பற்றுவார்
கோல்வளையார் நாணுட் கொள. (சுச)

கள்ளுண் கடைசியர்கைக் கல்லையினுட் டம்வதனம்
விள்ளவென்னே டுண்பவரார் வேந்தென்ன—மள்ளனவ
னன்னதற்றென் போனின் னருகிருந்து பார்ப்பவனு
ரன்னமே யென்ரு னடுத்து. (சுநி)

செங்கமலங் கைகாட்டச் சேதாம்பல் வாய்காட்டப்
பைங்குவளை கண்காட்டப் பண்ணையிற்பெண்—ணங்கங்
களையன்றி வேறு களேதேரு மள்ளர்
களையுண்டு தீர்வார் களை. (சுசு)

கண்ணீர்மை கண்டு கயல்புரளக் கால்வண்ண
நண்ணீர்மை கண்டுவரா னன்குலவப்—பெண்ணீர்மை
குன்ரு வுழத்தியர்தாங் கூர்களையை வேர்களையா
நின்ரூர் திகைத்தார் நினைந்து. (சுஎ)

யானே மறைய விரதமெனக் கூழ்முதல்கொண்
டேனே யுலகமு மின்புறவே—தானேமள்ள
ரீட்டியென மேல்போ யெழிற்கலின மாவதனங்
காட்டியவே செந்நெற் கதிர். (சுஅ)

பொன்னிறமார் செந்நெல் புகர்நிறமுற் றங்கவிஞன்
றன்னிறமாய் நின்று தயங்குகலி—மன்னிறமாய்
வேய்போற் கிளைத்துழுசூல் வெண்கதிராய்ச் செங்கதிராய்ச்
சேய்போற் கிடந்த செயில். (சுகூ)

உற்றசிரி யையாதி யோதிடுநாற் பாதமரீஇப்
பற்றற் றலர்போற் பசுநீர்மை—யற்றுமுன்
ஞதி வடிவடைந்த வுங்குரங்கூழ் சூல்கதிராய்
மீதிவர்ந்து கிழ்சாய் வீளவு. (எ0)

வயங்கொள் களமர் வரிசையினின் றங்கைக்
குயங்கொண் டறுத்தவரிக் கூறு—தயங்கிடயாத்
தொன்றிற் பொலிசுமைக ளொண்சிரம்வைத் தண்களத்திற்
குன்றிற் குவிப்பார் கொணர்ந்து. (எக)

அடியடியென் பார்சில்லோ ராங்கடிப்பான் குட்டைப்
பிடிபிடியென் பார்சிலவர் பின்வை—கடிகடியென்
ரூர்வினவில் வார்சிலரிவ் வார்ப்பார் களமுழவர்
போர்செய் களமே பொருரும். (எஉ)

தம்மினத்து ளொன்றூர் தருமனுயிர் மெய்பிரித்தாங்
கம்ம பிணையலி லார்பகடு—வெம்மனத்தர்
வெல்வைவே ருக்கும் லியன்களனோர் போர்க்களத்திற்
சொல்வைவே ருக்குக் துகைத்து. (எங)

ஆற்றல்சான் மள்ள ரவிர்களத்திற் பொங்கழியைக்
காற்றெதிரில் வாரிக் கலகலெனச்—தூற்றவங்ஙன்
மெய்மையோர் சொல்லின் விளங்கப் பதரகன்ற
பொய்மையோர் சொல்லிற் புலர்ந்து. (ஏச)

தூநெல் லளந்து தொகைப்படுத்தி யாரூக்கிக்
கோனிறைக்கொன் நீந்துமற்றக் கூறுய—மாநெல்லைத்
திண்டிறல்கொண் மள்ளர் சிலம்பெனவே வீதிதொறும்
பண்டியிற்கொண் டெய்ப்பர் பரிந்து. (எஙி)

நீஞ்சா றடுபுகைதான் சேணுக்கிப் பின்ரெடர்வாய்ப்
போஞ்சாலங் கண்டுமுகில் பூதலமு—மாஞ்சாலக்
கார்பெறுமோ வென்னுக் கறங்கியதன் கட்டாரை
நீர்பொழியு மங்க ணிலத்து. (எசு)

சரியையுற்றி யேகிரியை சார்ந்ததன்பின் யோக
மரீஇ யுயர்ஞான மல்கும்—பெரியவராம்
வாகாய் வளர்கண்ணன் மன்னமுற்றிச் சாரூகிப்
பாகாய்ச் சருக்கரையாம் பண்பு. (எஎ)

உட்புறமா றுற்ற வுயர்சாக் கியரையொக்கு
மூட்புறமார் காய்தூங்கன் முன்சினன்பா—னட்புறவாம்
வம்புறுவெங் குண்டர் வழிக்குருவை யொக்குமும்பற்
கொம்புறமும் வாழைக் குலை. (எஅ)

ஓங்குமஞ்ச ளிஞ்சி யுலோபரெனத் தம்பொருள்சீழ்ப்
பாங்குவைத்தல் கண்டுமள்ளர் பன்னவர்க்குத்—தீங்கிழைத்தே
யுள்ளமூ லப்பொருளே யொண்கருவி கொண்டுதோட்டுக்
கள்ளரெனக் கொள்வார் களித்து. (எக)

மஞ்சளுயர் வாழை மணிக்கமுகு தாழையிவ்வி
விஞ்சவொன்றை யொன்றுதொட விண்ணுறுத்த—லஞ்சரியை
முன்னுன்கு பாத முறைபயின்றெண் ணற்பதஞ்சே
ரந்நால் வரையொக்கு மாம். (அ0)

நெய்தல்.

மரியன் முருகனிவர் வார்கணேவேன் மேல்விடுத்தார்
நேயமவ ரோடுசெயே னோர்குணதிக்—காயமன்சார்
பெய்தனன்றென் றெண்ணி யிருநீர்க் கிழவனட்பி
னெய்தலின்கண் வாழ்வா னிதம். (அக)

பாயநுளே மாதர் படுமீ னுணக்கொலியு
மேயபல்புள் ளோச்சும் வியலுலியுஞ்—சேயவலை
யீர்க்கு மொலியு மிருமகரம் போழொலியு
மார்க்குமலே யார்ப்படக்கு மாங்கு. (அஉ)

வானந் துறுகலியும் வண்மீ னுகள்கலியு
மீனங் கவர்கலியும் வெவ்வலுஞ—ரானகுல
மூர்கலியுஞ் சார்முகினீ ருண்கலியு மோர்ந்தறிஞ
ராக்கலியென் பார்கடலே யாங்கு. (அங)

கொடியாற் றருவாற் கொழுஞ்செங் கழையாஞ்
செடியாற் சுவைநல்கு தேத்தைக்—கடியார்ம
ணெய்துமோர் வித்தின்றி யேற்றசுவை யொன்றளித்தே
நெய்த னகைக்கு நெடிது. (அச)

வெண்ணு னிலத்தினர்கு மின்றியமை யாததா
யுண்ணு நுசுவையு ளொப்பிலதாய்—மண்ணு
லுரைபோ மும்மணரமை யுப்பொளிரும் வெள்ளி
வரைபோ லளமா வரைப்பு (அடு)

ஓதமுடை நாற்ற முணக்குமீன் றுன்னுற்றம்
போத விரண்டுடே போயொடுகக்—கேதகைபொன்
பெய்த முடிப்பிற் பிறங்குபுன்னை யோடுகரு
நெய்தன் மணக்கு நெடிது. (அசு)

தீகைவுறுஞண் மாதர் தழுவுநகை செய்ய
முகைவிடுரீவினியன் முன்னி—நகைதரல்போன்
மேக்குமே கத்தவிரு மின்னலைத்தான் காண்டோறும்
பூக்குமே கைதைநறும் பூ. (அள)

பத்திவலியிற் படுவோன் வலைஞனைச்
சத்தி வலைச்சி தினைமணப்பா—னத்தியின்கண்
மன்னுவலை வீசியே வான்மீன் படுக்கினன்ஞர்
துன்னுதொழிற் குண்டோ துகள். (அஅ)

இச்சகந்தி யானித் திறைஞ்சும் வியாசமுனி
மச்சகந்தி தன்வயிற்றில் வந்துதித்தின்—வச்சகந்தி
நேர்கந் தரத்தியர்தோ ணேய முறும்பரதர்
சீர்கழறற் பாலதோ தேர்ந்து. (அக)

இருளுறுமுந் நீரி லெறிவலைஞர் நாண
மருளுறுமொண் பாவின் மறைநற்—பொருணிலைகண்
டோர்ந்து கவரு முரவினர்போன் மீனிலையைத்
தேர்ந்து கவருஞ் சிரல். (கo)

மஞ்சு மறைகுமிள மாமதிய மோவுயிர்ப்பிற்
றுஞ்சுபுள்ளோ வென்னமலர்த் தூயமடல்—விஞ்சக்
கருவான்மி யூருங் கவின்கைதை யாருந்
திருவான்மி யூருநெய்தற் றேம். (கக)

பத்தியிலை ரன்பர் பரசமறைச் சேபுரையா
லத்தியிற்பல் பூமலர்ந்த வற்புதமாந்—தத்தி
வருமயிலை யாதி வளருதிப் பாங்கார்
திருமயிலை நெய்தற் றிணை. (கஉ)

சாருமறையவனைச் சங்கிலியி லார்த்திரவோ
ராரும் பரவையிற்றள ளாத்தலைற்றி—யூருங்
கருநெய்தன் மாதர்தங் கண்போன் மலர்கா
மருநெய்த லாயதோர் வைப்பு. (கங)

பாலை.

நாணிலமாத் தேவரொடு கட்புறீ இ யாங்காங்குத்
தானிலவ வன்னர் தரப்பெற்ற—வேனிலத்தின்
மின்கோ லொடுவின் மிளிர்வாள் கொடுதூர்க்கை
தன்கோல் செலுத்துந் தனித்து. (கச)

மேனிலத்தி னுமம் விளம்பிடப்பெற் றூர்பொருளான்
மாநிலத்தி னுள்ளே மருவுவது—கானிலத்திற்
றோயாக் கடவுளருந் துன்னரிது வெப்பினெடு
பாயாக் கிடக்கும் பரல். (கூங)

அலகைரத நீர்ப்பரவை யாமொட்ட கம்பேர்ங்
கலமுகைப்போ னேட்டுமீ காம—னிலவுறவே
தூர திருட்டித் துவக்குடையார்க் கேதோற்று
நீரதுயர் பாலை நிலம் (கூசு)

தாமலதோ ராதரவு தானில்லான் வாழ்பவர்க்குக்
காமர் நிழலுங் கனியுநல்க—வாமலகம்
பாகமைத்தா னன்னூர் பாலுறுத்தா மேகடப்பான்
கோங்கமைத்தான் பஞ்சு குறித்து. (கூவ)

ஈந்திலையின் வேய்ந்த விருங்குடிலர் செந்நாயர்
காதுசினத்தர் கடுமொழிய —ரேந்துதனக்
கொற்றவையே தெய்வமெனக் கொள்வர் நெறியலத்துப்
பெற்றவையே யுண்பர் பெரிது. (கூஅ)

தீங்கரும்பைச் செங்கையிற்கொள் சித்தசநூ றோர்ததவரி
ஞங்கரும்பைத் தேன்விரையார்க் தன்பினளி—கோங்கரும்பை
யண்டுபு கிண்டி யகமலர்வித் தொள்ளிதழ்த்தே
னுண்டு களிக்கு முகந்து. (கூக)

மகையாதக கொங்கையையே மானுமதற் கோர்குறையுண்
டங்கதனை யானிறைய வாற்றுவலென்—றங்கணைக்
சோ ரு முகைமேற் சுடிகொளுரதே ரவமிசத்
தூங்கலிசை பாடுஞ் சுரும்பு. (கஎ)

பதநிமையா லாங்குள்ளோர் பைந்துகிலாற் சித்திரித்து
முத்திசைத்த மேற்கட்டி முன்னிலங்க—கொற்றி
யிருப்பை யலங்கரித்த தென்னலா நீர்மைத்
திருப்பை யலர்ந்த வியல்பு (கஎக)

ஓள்ளியசெம் பொன்காட்டு மோங்குமெழிற் கோங்கரும்பு
வெள்ளியது காட்டுமெலர் வீழுருங்கை—வள்ளியசெவ
விதுருமங் காட்டு மிளிர்பாட லங்காட்டு
முத்து மதூக முகை. (கஎட)

ஆயகனி வுட்புறம்பொன் னுந்தகையோ தன்மைகெல்லித்
தூயகனி காட்டுந்துகளுடையார்—நேயமது
காய்பெரிதாய் மேலுட் கனிந்துகனி வில்லிலவ
மாய்தருநீர் மைகாட்டு மாங்கு. (கஎஉ)

திணைமயக்கம்.

வணமயிங்க வேங்கையின்மேன் மௌவல் படர்ந்து
மணமயங்கப் பூத்திர்பூ வாய்த்தங்—கணமயங்க
வன்புலியின் வெம்பறழும் வான்புடையார் மான்பறழு
மின்பி னுறங்கு மினிது. (கஅச)

அந்தா மரையினின் மார்வனத்தார் வாரணமுஞ்
செந்தா மரையிற் றிகழனமுங்—கொந்தார்
குருந்து மருதமுமாய்க் கூடி நிழற்க
ணிருந்துவிளை யாடு மினிது. (கஅடி)

வேய்முத்த மென்கழையின் வெண்மணிவெற் பார்மருத
வாய்மன் றெமியர்கள் வைத்தவண்டற்—கேய்தரம
தூகமௌவல் புன்னைமுகை சூழ்நிலத்துப் பேதையர்முத்
தாகவைத்தங் காடுவா ரார்த்த. (கஅசு)

மென்கமுகம் பாளை விரிதரக்கொக் கென்னவெளீ இ
மின்கயல்வா விக்கழியின் வீழவதின்—மன்காண்ட
மஞ்சமிரி யப்பயமுற் றூர்த்தேகி யந்தடதிற்
கஞ்சமிசை யாருங் களித்து. (கஅள)

தேன்கொண் டெயினச் சிறுமியர்க்கான் பாலளிப்பார்
கான்கொ ளிடைச்சியரங் கண்வாவி—தான்கொண்ட
மீன்கொண் டுழத்தியர்க்கு வேலைபடு மீனளிப்பர்
கான்கொ ணுளைச்சியரங் கண். (கஅஅ)

இன்னவணம் பல்வளனு மேய்ந்துசிறப் புற்றோங்கு
நன்னெழிற் றொண்டைவள நாட்டின்க—ணுன்னரிய
வுத்தமமா நற்குடியு மோங்கியரு மெஞ்ஞான்றுந்
தத்தெறி சாருந் தக (கஅக)

சிவதலமெண் ணூன்குவிண்டு தேமிரண்டோ டைந்தான்
கவிர்தருசீர்க் கோட்டாரு லாறு—நிவரமே
பூறுமஃ தாக வகன்கொடொண்டை நாடுபெற்ற
பேறு மிகவும் பெரிது. (கஅ)

வேத முழக்கும் விழாவின் பெருமுழக்கு
மோது மணமுழக்கு மும்பருற—மீதிவர்ந்து
நீடெங்கும் பூகமுமே நேர்ந்துசெலுஞ் சீர்த்தொண்டை
நாடெங்கு மேவுமே நன்கு. (கஅக)

திருநாட்டுபடலம் முற்றுப்பெற்றது.

ஆ திருவெண்பா கஅகூ.

திருநகரப் படலம்.

பூவினிலம் போருகமும் பொன்னினிற்சாம் பூதமுக
தேவினிலே சிற்பானுஞ் செய்யுளில்வெண்—பாவுஞ்
சிகரத்தின் மேருவும்போற் சீர்த்தகே யேழ்மா
நகரத்திற் காஞ்சி நகர். (க)

மூத்தேவர் மூச்சத்தி மூச்சுடர்மா நற்றவர்மான்
மெய்த்தேவ ரித்தகையோர் வித்தகன்பால்—வைத்தேயன்
மீபான்று மூளத்தோ டுவந்து வழிபடுசீர்
நன்முளது காஞ்சி நகர். (உ)

புகழுமன்பர்க் கன்றிப் புனைதருபொன் மாடந்
திகழுமணி நீறுடைத்து தேம்பா—யகழி
பயமுடைத்து ஞாயினிலே பத்தியுடைத் தோவ
நயமுடைத்து காஞ்சி நகர். (ங)

பத்திநெறி வேதநெறி பன்ஞ கமநெறிநற்
சித்திநெறி காணரிய சிற்பரமா—முத்திநெறி
காட்டுவது மூவுலகுங் காமுறுசீ ரெண்டிசையு
நாட்டுவது காஞ்சி நகர். (ச)

வானகர்சீர் தூக்கியத்த மாநகரா மாகநிதிக்
கோனகர்நே ராதுநட்புக் கொள்ளுவயன்—மானகர்கள்
வந்து வணங்க வயங்குவது சீர்த்தியென்று
நந்தலிலாக் காஞ்சி நகர் (ஞ)

எல்லா நகரு மிவர்ந்துவட பாலுறத்தீஞ்
சொல்லார் முனிவனெனச் சூழ்ந்துதென்பா—னில்லாமன்
றுன்னகரா மேழுட் டெலங்கிப் புதுமைசெயு
நன்னகராங் காஞ்சி நகர். (ட)

அலகில்,புகழ்பெற் றகிலநகர்க் கெல்லாந்
திலக மெனவே திகழ்வ—தலகிலெங்கு
மல்குபொருட் கோர்வைப்பாய் மன்னி யுயர்கதியு
நல்குவது காஞ்சி நகர். (ண)

ஏகம்ப மத்திகிரி யேண்முனேயாச் சத்திநகர்
மாகம்பன் கச்சிலே மன்றண்கா—யோகவெஃகா
பூகமணி கண்டீசம் பொன்னின் மணிக்கட்டா
நாகலில்லாங் காஞ்சி நகர். (ஈ)

திரைகடலே வாவி திகழ்கிலமே செந்தா
மரைபலதே யழ்மே மலிதோ—ரைதருசீர்த்
தண்டகநா டேபொருட்டுத் தண்காஞ்சி யேயத்தன
னெண்டகவார் மாவா ழ்பிடம். (கூ)

கீச்சூர்கா ளத்தி கழுக்குன்றம் வல்லமூலே
மெச்சாலங் காடகடு வின்மயிலே மெய்ச்சாயல்
பாசூர்தோ னொற்றிநள்ளே காம்பாங்கண் பன்னுதொண்டைத்
தேசூர்செவ் வாய்மான் றிறம். (கo)

ஏகாம் பரமணிப்பை யோர்தருகச் சாலைகளம்
வாகாம் வரதபிரான் மந்திரம்வால்—யோகா
மணியவிர்பொற் பஃறளிகள் வாங்குருவ மாகப்
பணியரசாங் கச்சிப் பதி. (கக)

பத்திமிகு கச்சிப் பதியை யெவருமே
முத்திநக ரென்ன மொழிவரது—சத்தியமா
வைகுந்த மோர்புறமு மன்கயிலே யோர்புறமும்
வைகுந் தருங்கரியாய் வாய்ந்து. (கஉ)

அளகா புரியோ டமரா வதிநே
ருளகா மருநகர்க்கென் றேதிற்—பளகாமேல்
சொன்னகரம் வந்து தொழுதலாற் கச்சியெனு
மன்நகர்க்கொப் பன்நகரே யாம். (கங)

நற்றவர்சூழ் கச்சி நகரமா நங்கைக்குப்
பொற்றை மணிச்சிகரி பொன்முடியாஞ்—சுற்றுமதி
றங்கக் கவயமாந் தண்டா மரைக்கிடங்கு
தூங்கத் துகிலாந் துதைந்து. (கச)

மகவா னகரம் வணங்க நெடுமாட
மிகவா னிவந்து மிளிருந்—தகவா
னெழுநகருட் சீர்த்தி யெழுநகரீ தென்றூல்
வீழுநகர மெங்குளது வேறு. (கஞ)

மாமுருக்கம் வில்வ மதைமுதற்கு நீழறந்து
தாமிருக்குந் தன்மை தனையுணராப்—பூமருக்கா
மற்றவற்றின் பெற்றிபெற மாநகரைச் சூழ்ந்தமர்ந்து
நற்றவத்தி னிற்பதொக்கு நன்கு. (கசு)

காமர் பொடிதுலங்கக் கண்ணீர் துளிப்பவே
மாமென் றளிரா மயிர்பொடிப் ப்—பூமன்கா
வொன்றுசம்பு வுட்டயங்க வுன்னம் பரநோக்கி
நின்றுதவ மாற்று நெடிது. (கஎ)

ஒருகொம்பா ரத்தி யொருகோடி மான
மிருகொம்பார் வேல்கையெண் ணில்ல—தருகொம்பார்
சம்புபல கோடி தயங்கும் வழிபடவே
யம்பொழில்சூழ் கச்சி யகம். (கஅ)

தின்னிலமா வேந்தன் றனிநகர மந்தரத்தின்
மன்னுதலா லோர்கால் வருமிடரென்—றன்னதனை
யங்கிலேயி னீங்கா தலர்தலையிற் ரூங்குவபோ
றென்னமர மோங்குஞ் செறிந்து. (கக)

பைங்காக வல்லி பழமல்கு கந்தியின்மேற்
பைங்காக மென்னப் படர்தோற்ற—மைங்காகக்
காரிகையைக் காணக் கவின்றருகா ளாஞ்சியைப்பூ
நாரிகையி னீட்டலொக்கு நன்கு. (உ0)

தேவரம்பை மேவுதலாற் றென்காலி ளுதலாற்
காவரம்பை மேவிக் கனிதாலாற்—பூவரம்பை
ஆங்கதுகேட் டுள்ளுணர்வா னண்டரின்ன னெய்தீர்வா
னோங்கிவனே யுய்த்திட்டார் யோகுசெய்போ—தீங்கரனூர்
வந்தாலும் விட்டிடேன் மாரனிறப் பெய்துவான்
வந்தாற் றடேலென்றான் மன். (சடு)

ஆதலின்வேள் வந்த தருளதே யாணையெனக்
காத லுறவுணர்ந்து காலம்பார்த்—தோதமா
ரீண்டுதுயர் நீங்கச்செய் யீசன்முன் னீயேகல்
வேண்டுமோ வென்றான் விரைந்து. (சசு)

ஈறு வரினு மிறையோன்முன் யானடையு
மாறு தெரிவித் தருளுகென—வேறுமுக
மேயபிரா னன்னவனே மேலவாய் தன்னெறியே
போயடைதி யென்றான் புரிந்த. (சஎ)

அன்ன னடிதாழ்ந் தருள்விடைகொண் டங்கசவேள்
மின்ன நடங்குமிடை மெல்லியலோ—டுன்ன
வருந்தவிடங் கண்டத் தறிகுறியா வைத்தோ
னிருந்தவிடங் கண்டனன்வே ளேய்ந்து. (சஅ)

புங்கவர்தம் போதனையாற் போர்புரிவான் போற்றுதிறற்
சிங்கமதன் மேற்செல் சிறுநரிபோ—லங்கசவே
னீறுபூத் தோங்கு நெருப்பனைய தேவையுற்ற
னூறுபூத் தோவ வுயிர். (சக)

கண்டங் கரியவனைக் கண்டளவில் வல்லேறு
கண்ட களிறென்னக் கால்சாய்ந்து—கண்டனிலீர்
வார வுடல்பனிப்ப வாய்வெரீஇ வில்லெறிஇ
மாரவேள் வீழ்ந்தான் மருண்டு. (நிஐ)

அருகிருந்த தேவி யவனை யெடுத்து
முருகிருந்த நீரான் முகத்திற்—குருகிருந்த
மலையிற் றெளிப்பக் களைக்கண் டெழுபவன்போற்
பையவெழுந்தான் பனித்து. (நிக)

பொங்கரவம் பூண்ட புனிதற் பொருதியென்றே
பங்கயன்மா லாதியராம் பண்ணவர்க—டங்களுறு
தீங்ககல விங்கனுய்த்தார் தீவினையேற் கீறுவந்த
தீங்கதனுக் கையமிலை. (இஉ)

வெண்டருசி ரேய்ந்த விறையோ னிருந்தகில
கண்டளவி லாவி கழனிலையேன்—கொண்ட
கருப்புவில்லா மூவர் கருதபுரஞ் செற்ற
பொருப்புவில்லான் றன்னைப் பொரும். (இக)

வன்பார் மருத்தின்முன் மன்றீப நிற்பதுண்டோ
தன்பா மதிபோற் றுயர்தேவ—ரன்பா
மனத்தமர்வான் முன்னுய்த்தார் மாதேவ னேக்கா
மணற்றழலில் வீவனென்ரு னங்கு. (இச)

இனையபல வெண்ணியெழுந்தே ரிரதி
தனையக லாதுசெல்சீ ரற்றும்—புனித
னெருசார்போய் வெம்போ ருஞற்றுவகை தேர்ந்தான்
வருசார்பு முன்னு மதன். (நிநி)

துங்க மலரோன் சுடர்வைச் சிரமேந்தும்
புங்கவர்கோ னுதி புலவரெலா—மங்கசமே
ளாரிருந்தார் மன்னே டமர்வீரத்தல் காணியலோர்
சாரிருந்தார் போற்றெடுத்தத் தாம். (நிசு)

கன்னற் சிலைகுனியாக் காமாரி நாணேற்ரு
மன்னற் கொழுங்கண் மலர்மாலம்—பின்னிற்
திரிபுரத்தை வென்ற சிவனு மவன்மேல்
விரிபுறத்தி லெய்தனன்வெவ் வேள். (நிள)

விட்டமலர்க் கோலரன்மேல் வேகமாய்ப் போயுடலிற்
பட்டளவிற் றீவண்ணன் பாலமுறுங்—கட்டழலி
லங்குமதன் மெய்பொடியா யாயதே மேயதுசீர்
பொங்கு வரையிற் புகை. (நிஅ)

பானிறங்கொண் மாயோன் பயோதநியி லார்கடிவா
னீனிறங்கொண் டாங்கு நெடுங்கயிலை—தனமர்பூங்
கோலமதன் மாயக் கொதித்தெழுந்த தீப்புகையா
னீவமலை யாயதே நேர்ந்து. (நிக)

அங்கசவே ளாக மனல்படவங் கைலைக்கண்
பொங்குபுகை தீவிடம்போற் போர்த்திடமால்—பங்கயன்முற்
நேவரயர் வெய்தநந்தி சித்தசன்பா டாயினனென்
நேவருமே வச்சொல்வா னீ தை. (சுo)

உன்னுணர்வின் மிக்கீ ருமக்கித்சொல் வேனிஷறயோன்
றுன்னுதற்கட் டீமதனைச் சுட்டதன்று—முன்னவனை
யெய்வனென வன்னு னியைதுணிவிற் கூறிவந்த
செய்கையே சுட்டவம்மா சேர்ந்து. (சுக)

ஆண்டகையா மெங்கோனை யங்காரி தன்கணவன்
மாண்ட வியுனடி வயிறலைத்து—வேண்ட
மருவாளி யானை மழுவாளி சேர்த்து
தருவா னருளினென்ரு ருன். (சுஉ)

திருநக்கி தேவரின்ன செப்பவன்னூர் கேளாப்
பொருவி லருணெக்கிப் போற்றி—மருவினர்காண்
சொல்லா ணமுணரான் ரொன்மைநிலே போழிருந்தா
னெல்லாரு மேத்த வினிது. (சுஉ)

போது மலர்தூய்ப் பொடியாம் வாற்கிரங்கி
மாது வயிறலைத்து வன்சுழல்கான்—மோதக்
கொழுகொம் பொடிபூங் கொடிபோல் விழுந்தே
யழுகின் றனள்புலம்பி யாங்கு. (சுச)

என்னபவஞ் செய்தனளே வின்னலெவர்க் காற்றினளே
முன்னவிலே தான்சூழ்ந்து மூண்ட துவோ—வின்னபரி
சென்றறியே னெண்கணவா வென்செய்கே னின்னெடியான்
பொன்றிலனே யன்றிலனம் போல். (சுடி)

புன்முறுவல் கொண்முகமும் பொன்மலேகர் திண்புயமு
முன்மணியா ரந்தயலு மொண்மார்பு—மண்முதல்வ
னென்றுனு தேற்றெறிந்த வேர்வடிவு மென்கணவா
வென்றுகான் காண்பே னினி. (சுஎ)

ஐயம்பாற் புண்பட் டழுங்கயன்முற் றேவரெலாம்
பொய்யன்பு காட்டிப் புரவலநின்—செய்யகழை
வில்லாமற் கொன்றூர் விளம்பிறைபா லேவிநினைக்
கொல்லாமற் கொன்றூர் குறித்து. (சுஏ)

ஐங்கணைகட் காற்றூ தலமந் தயர்ந்தழலும்
பங்கயன்மால் வான்கோ பதிமூதலாம்—புங்கவர்போ
லுண்ணினவர்க் கின்ப முவந்தளிக்கு மீசனேயு
மெண்ணினவா ரிக்குவில்லோ யிங்கு. (சுஅ)

தீபத்தில் வீழ்பதங்கந் தீந்ததுபோற் செங்கழையாஞ்
சாபத்தி லெவ்கைய சாயகங்கோத்—தாபத்தான்
யின்கணவா விட்டவான் மேல்விடுத்தே நீரூனு
யென்கணவா வென்செய்சேன் யான். (சுக)

செந்தழலி னீரூந் திருமகனின் போலாது
கொந்தழலில் வீழ்பூங் கொடிபோன்று—வெந்தயர
மார்பின்றே னுர்பின்றே னந்தோநின் பால்வந்து
சேர்பின்றே னென்றினைந்தா டீர்து. (எ0)

காமதகனப் படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா நிஅநி.

மோன நீங்கு படலம்.

இவ்வா றிராதி யிரங்கவெங்கோ னெண்ணியோகத்
தவ்வா றணமதனீ ரூனதுகண்—டெவ்வா
றினித்துயர்மா னீங்குவதென் றேங்கியயர் வுற்றார்
தனித்துயர்மா லாதியும்பர் தாம். (க)

மையார் மணிமிடற்றோன் மாதை மணந்தருள்வா
னேயூர் பகழியனை யங்குலிட்டோ—மெய்யா
வவன்மடிந்தான் முன்போ லான்யோ கிருந்தா
னெவன்புரிவோ மென்றுழல்வா ரிங்கு. (உ)

வெத்திரதா னந்தி விலக்குமுன்றி னின்றறைந்
தோத்திரத்தாற் றீர்க்குமிறை தன்பெனவெண்—ணைத்திரத்தான்
முன்னுனை காஞ்சோன் முதற்றேவ ரெல்லாந்தா
யன்னுனை யேத்துவா ராங்கு. (ங)

வண்டோட் டிதழியணி மார்பவடி யார்துயரங்
கண்டோட்டு மின்பக் கருணைவைப்ப—வெண்டோட்டுக
காதரா வீந்துவொடு காதரா வேணிக்கங்
காதரா காவாய் களிதது. (ச)

அடியில் விழுமதியை யஞ்சலெனக் கங்கை
முடியி லணிகருணை மூர்த்தி—படியினீனைத்
தஞ்சமெனச் சார்ந்தோர் தனயருக்குத தாதையன்றி
யஞ்சவகை யுண்டோ வுரை. (ஞ)

எல்லா மறிந்து மிறைபு மறியாள்போல்
வல்லாணீ மோன வடிவுற்றால்—வில்லாரும்
புரவார் வில்லிற் புரம்பொடித்த புண்ணியனே
யாதரவா செங்கட் கறை (ட)

கொத்தவரு நஞ்சங் குடித்தெம் மூயிரைக்
கதிதவரு வண்ணமன்று காத்தோய்—விதித்தவரு
வன்மாவைக் கொன்றுள் வகைபோ லிகற்சூர
பன்மாவைக் கொன்றுள் பரிந்து. (ண)

என்றயன்மா லாதி யிமையோ ரழலாசகி
ரென்றமனங் கண்ணீ ருகத்துதிப்ப—வன்றிறலார்
தந்தியுரி போர்த்தோன் றயைகூர்ந் தகத்தின்க
ணந்திதனே யெண்ணினனன்று (அ)

தேனேறு நிதழியணருட் செந்தா மரைவணங்கி
யானேர் மூகத்தா னணுக்கணிற்ப—வானேரை
நம்முன் கொணர்தியென் றனந்தியடி தாழ்ந்தன்ரு
னம்முன் கடையணைந்தா னுங்கு. (கூ)

அங்க ணடைந்த வருணந்தி தேவன்முழ்
செங்கண்மா லாதியீர் தீர்ந்தகின்ன —னுங்கணன்பா
லம்மினீர் வேணி யரன்ரு னழைக்கின்ரான்
வம்மினீ ரென்ரான் மகிழ்ந்து. (கo)

ஆன்னவுரை கேட்டளவி ல்லானந் முற்றயின்மான்
முன்னமா ரெல்லா முனிவன்றன —சந்திதியிற்
பந்தியினங் கைகூப்பிப் பண்பிணுற வங்கவரை
நந்தியங்கோன் கொண்டெய்தா னன்கு. (ஙக)

கண்டங் கரியவனைக கண்டளவிற் பேரன்பு
கொண்டங் கரியவன்முற் கோதலத்தோர்—பண்டகு
கினிய துதிக ளெடுத்துரைத்தா ருள்ளங்
கனிய வரனு கனிந்து. (கஉ)

வணங்கு மிமையோரை மாதேவ னீஞக்கி
யுணங்குநெஞ்சீர் நும்விருப்பு முற்ற —வணங்குமென்னென்
ரரருளிற் கேட்பவெஞ்சு ராற்றுமிடர் கின்னையன்றி
யாரருளிற் றீர்ப்பா ரெமக்கு. (ஙங)

ஆயகொடுஞ் சூரன்ற னுயிரை நீக்கவொரு
சேயருள்வான் மன்னிமயஞ் சேர்ந்துகின்ரே --டோயும்
வணப்புரிவி னேற்கு மடவரலே மேவி
மணம்புரிதல் வேண்டு மகிழ்ந்து. (கச)

என்றமரர் கூறி யிறைஞ்சமின்ன நும்பொருட்டு
மன்றலயர்ந் தும்வருத்த மாய்ததருள்வ—னன்றிங்
கினியா வருமே யினிதேகு கென்ரான்
றனியா மலேவில்லி தான். (கடு)

பொங்கரவம் பூண்டோன் புகலவிது சாழ்ந்திறைஞ்சிச்
செங்கரவம் போருகக்கட் சீ மானும் —பங்கயஞ்சூ
சாருவின்க ணுற்ரருக தாம மெனத் தாழருவி
மேருவின்க ணுறுரூர் விழைந்து. (கசு)

அஞ்ஞான் றிராதிபணிந் தங்கசன்மேற் குற்றமுண்டோ
மைஞ்ஞான்ற கண்டத்து மாதேவா —வுய்ஞ்ஞான்
றளித்தருள்வான் றண்புணர்ப்பா லாலியிழந் தாலே
யளித்தருள்வா யென்ரு ளழுது. (கஎ)

இமயத் திறைபெற்ற வேந்திழையை யச்சச்
சமயத்தில் வந்தமணஞ் செய்யு— மமயத்தி
னின்கேள் வனேயு நினக்களிப்போம் போதியென்ரு
னின்கே ளிலாத விறை. (கஅ)

அணங்கிற் சிறந்தாகி யன்பிற் பரனே
வணங்கிலிடை பெற்றுமணிபின் —வணங்கிளரும்
பொன்னு நிமயப் பொருப்பின்கட் சென்றரனே
யுன்னு விருந்தா ளுள்த்து. (கசு)

பயமென் மொழியாள்பனிவரையின் மேவ
வயர்வுற் றழுங்கு மமரர் —துயரம்
தணப்பவுமட் கார்புரம்வெல் சம்புவுமை மாதை
மணப்பவுமட் கொண்டான் மகிழ்ந்து. (டூ0)

அங்கண் சனகன்முன் னந்தணரை நோக்கிநீர்
தங்கமுறு மோனநிலை சொல்வரையன் —றிங்கியாங்
காட்டியவா வந்நிலையிற் காட்சியுற நின்மினென்றான்
கோட்டியவிற் குன்றுடைய கோ. (உக)

அந்நால் வருமரனே யன்பிற் றுதித்தலுமே
மின்னுல் சடைமுடியோன் மேவுகிட்டை —தன்னுளீர்
மேற்றிகழு மெம்பதமே மேவுவீ ரென்றருளிற்
சாற்றியுப்த்தா னன்னவரைத் தான். (உஉ)

மோன நீங்கு படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா சுOo.

தவநிகாண் படலம்.

முனிவரரங் கேகுதலு மூவா முதல்வன்
பனிவரையி னேற்கும் பரையின் —றனியன்புங்
காதலுமே யார்க்குமுறக் காட்டிடுவான் சோதனையிற்
போதலுமேற் கொண்டான் புரிந்து. (க)

தூவருடைய னஞ்சையன் றூநீற்று மெய்ய
னவிர்தூலன் குண்டிகைசே ரத்தன் —கவிகையனீள்
கோலன் மறைமுதியோர் கோலங் கொடுபோனுன்
சீலனுமை நோற்குஞ் சிலம்பு. (உ)

தாய்தவஞ்செய் சாலே தனர்கடையிற் சாரவுண்ணுன்
வேய்புரைதோட் காவனல்லார் மேவருமிவ் —வாயுமுதியீர்
வந்தீ ரென்னென்னூர் மாதவ நாடிவந்தே
நந்தவா வேரடென்று னண்கு. (டு)

அதுகேட் டினிதென் றணங்கினிடஞ் சில்லோர்
மூதுமறையோன் றன்மை மொழிய—வீதுழுகத்தா
லொன்றமுதி யோராயி னுய்க்குநிரிங் கென்னவுய்த்தார்
துன்றமுதி னல்லார் தொழுது. (ச)

எய்துமிவ ரெந்தைக் கினியா ரென்வன்பின்
மைதிகழ்சேற் கண்ணி வணங்கவந்த—வைநிகர்க்கு
மெய்த்துணைவ் யாய விசையதவி சிட்டாணைற்
றெய்த்துணைவில் லீசைநின்று ளேய்தது. (ஞ)

அங்கமர்ந்தார் வதுதோ டயனின் றவட்பாரா
வங்மெலி வெய்த வருந்தவநீ—யக்கட்
புலனுதி யொன்றப் புரிவதெசற் கென்ரு
னிலனுதி யாலெனு னினைந்த. (ரு)

ஆதியந்த மில்லா னறையமலை மான்விசையை
மாதின் முகநோக்கி மற்றவற்குக்—கோதில்
விடைதருக வென்ன விழியா னவின்ரு
ளிடையிலவள் சொல்வா ளெடுத்து. (எ)

இன்பா ருயிர்க்கருளு மீசன் மணம்புரிந்து
மன்பா லிருத்தினன்கொள் வானெனவே—வன்டாற்
றகைசெய் தவமிழைத்தாள் சங்கரிதா னென்ரு
ணகைசெய் தருள்வா னயந்து. (அ)

திவடுளவ ளுடையவுந் தேடரிய பெம்மா
னிவடவத்திற் கெய்திடினு மெய்து—மவனுவப்பின்
மன்னவுளே மேவி வரையுமோ மாதறியா
தின்னதவஞ் செய்திட்டா ளிங்கு. (கூ)

இன்னலுற நோற்கு மிவட்கித் துணையரும்பெ
றென்ன கிடைத்த லெளிதாமோ—ரன்ன
ருடல்வருந்த நோற்றெ னுமைக்கித் தவந்தான்
விடல்கடனென் ரூன்மறையோர் வேந்து. (கo)

இன்னமொழி கேட்டலுமே யெம்பிராற் கன்பரிவ
ரென்னவிருந் தேனறியே னென்றயர்வுற்—ரன்னகத்திற்
சீற்றமுள நாணீக்கிச் சிந்தை பொரு துசில
மாற்றமொழி கின்றனள்கன் மாது. (கக)

அழிவிலனென் வேட்கைக் கருளிலனே லின்னங்
கழியவரு கோன்பிழைத் தக்காய—மழிவதன்றி
யித்தவம்வி டேனு னினோமுதமை யானவின்ரு
யித்தனே நீயென்ரு ள் பெண். (கஉ)

அண்ட மனைத்து மளித்தா ளவைசொலமைக்
கண்ட மறைத்தோன் கருத்துளொன் றுகொண்டதன்மேன்
மாதுநீ வெஃகும் வரனிலமை யாய்ந்திலை
யோதுகின்றேன் கேட்டியென்ரு னுற்று. (கந)

ஆடைபுன்ரே லூணஞ் சணிடியன் புகைபரியோர்
மாடுண் கலமோடு ஹாஷ்சிர மாடுமிடங்
காடுபடை பூதங் கமழ்சாந்த நீறுநீ
நாடு கடவுளுக்கா நன்கு. (கஊ)

தாய்தனதை கேளுருவஞ் சார்குணமி லன்னவனுக்
கேய்வளமுண் டின்ன வெவையுமே—தூய்மையுற
நின்னவாக் கொள்ளவோ நீடிதவ மாற்றினைகொன்
மன்னன் மகளே மகிழ்ந்து. (கஎ)

புரமெரித்தோ னின்ன புகலவனை கேட்டுக்
கரமலராற் காதுபொதிக் கண்ணு—மரனு
மோதி யிரங்கி யுறினங்கொண் டீடியுழந்தாள்
கோதில் வரைப்பூ கொடி. (கஏ)

மன்னந் தணகேட்டி மாதேவன் றன்னிடத்திற்
றன்னமுமன் டன்மனத்திற் சார்ந்ததிலை—மன்னுபுதர்
வேடனீள் புட்கவர்வான் மேவுமியல் போலுமே
வேடநீ கொண்ட விதம். (கஐ)

அன்பின்றித் தக்க னரனை யிழித்துகின்போல்
வன்பி னுரைத்ததுவு மற்றவன்பின்—றுன்பினனி
மாய்ந்ததுவுங் கேட்டிலையோ மாதே வனைபிகழ்ந்தா
யாயந்ததிலை யோமறைக ளாண்டு. (கஒ)

எல்லா மறைபு மியம்பியும்மச் சார்புநில்லார்
பொல்லா வொழுக்கமே பூண்டமலை—வில்லான்
றனையிகழ்ந்து மூன்மறையோர் தாம்பெற்ற சாப
நினையுமயக் காதோநேர் நின்று. (கஓ)

பறைமுறையே வேடமுற்று மாபதியை நிந்தித்
தறைபவருண் டோவுலகி லந்தோ—வறைநிலைப்போ
நீய ரவணர் திறத்து மிலையென்ரு
யோகத் தார்பைத் தொடி. (உ ஏ)

மின்புரையும் வேணி விமலனீ நிந்தித்த
வன்புரையெல் லாநோக்கின் மன்னுயிர்க்க—ணுண்புடைமை
பூண்டகையிற் கொண்ட புகழ்ச்சியே யன்றிமுக்க
ணுண்டகையின் மாண்பறிவா ரார். (உக)

வேதன் முதலா விளம்பிமையோ ரேத்தவெல்லாம்
போதவளித் தாளிறைமை பூண்டருளு—நாதன்ரு
னிச்சைவெறுப் பின்றி யியல்கருணை செய்திறங்காண்
கொச்சையவா நீயிகழ்ந்த கூற்று. (உஉ)

இன்னமறை யாதிசொலு மித்தகையான் ரோர்தெளிவார்
மன்னிறையை'யெள்ளுநின்பால் வாதிக்கிற்—பின்னகமாம்
பொய்ப்படிவத் தோடும் புறத்துளீ போதியென்ரண்
மைப்படியுங் கண்ணுள் வலிந்து. (உங)

அங்கனைசொற் கேளா வணங்கையிங் குன்றிறத்திற்
பொங்கருளிற் போந்தவெனப் போதியென்ரு—யிங்கு
வரைந்திடற்கொவ் வாத மறைச்சடங்கி னின்னை
வரைந்திடற்கா மென்ரான் வரன். (உச)

மறைமுதல்வன் வாய்மலர்ந்த வாசகத்தைக் கேளா
விறைவிசெலி பொத்தியர் வெய்தி—நிறைதயரின்
றீங்கின் முதியன் செலான்செல்வன் யானெனவோர்
பாங்கி னடைந்தாள் பரை. (உஞ)

சென்றிடுமா வெற்பினகை செய்கையுணர்ந் தெம்பெருமான்
ரூன்றிடுமார் வத்தொடும்பர் சூழவெள்ளிக்—குன்றமதே
போன்றிலகு செங்கட் பொருமால் விடையின்மேற்
ரோன்றியருள் வானமையென் ரோட்டு. (உசு)

தூரியவன்விண் மீத்தோன்றத் தோகைகண் டுண்ணடுங்கி
நேயமொடு போற்றி நிமலன்றன்—மாயை
யறியே னினையிகழ்ந்தே னையபுல னில்லாச்
சிறியேன் பொறுத்தியென்ரு டோர்ந்து. (உஎ)

நன்னலநங் காய்கே ணமதிடத்தன் பின்முனநீ
சொன்னவெலா மீண்டுத் துதியெமக்கா—மந்நவையுந்
தய்யவா நோன்பாற் றயரூறே ஞாமணஞ்
செய்ய வருதுமென்ரான் றே. (உஅ)

இங்கத்தன் கூறிமறைந் தேகுதலு முண்மகிழ்ச்சி
பொங்கத்தன் மன்னையுமை போற்றியங்கண்—டங்குநிலை
மல்வற் புறுதோண் மிருவுபனி மால்வரையின்
செல்வற் குரைத்தார் சிலர். (உக)

வள்ளலெங்கோ மானங்கு வந்தருளிச் செய்கையுணர்ந்
துள்ளவுயர் வெல்லா மொழிந்திமவான்—கள்ளமரை
யன்னகர மாதிமையை யார்வமுறப் பல்வளங்கூர்
தன்னகரங் கொண்டேய்த்தான் முன். (கூ)

தவங்காண் பீடலம் முற்றும்.

ஆதிருவெண்பா கூகூ

மணம்பேசு படலம்.

பொன்னசல மாது புரிதவங்கண் டெம்பெருமா
னின்னருள்செய் தங்கயிலைக் கேகியபி—னுன்னமதின்
முன்னிளை னேழ்மா முனிவரையு மன்னவர்தா
மன்னிளை ரச்சமொடு வந்து. (க)

ஆதி பகவ னடிதாழ்ந் தெழுமுனிவர்
போதி லயன்மால் புரந்தான்முன்—ஞேதிமையோ
சேவலிடு மென்றென் றெதிர்நோக்க நின்னையெம்மைத்
தேவ நினைந்தையற்றேர்ந் தீது. (உ)

இருடிகள்பல் லாறேத்தி யெம்மையுன்ன லென்கொ
லிருடியங்குங் கண்ட வியம்பி—யருடியென
வம்முனிவர் சொற்கேட் டறைகின்ரு னன்புடையார்
தம்முனிவர் சேவுகைக்குஞ் சம்பு. (ங)

இமவா னிடமேகி யேயெமக்கிவ் வைக
றமவான் குழலியுமை தன்னை—யமர்வதுவை
யம்மி னுதவுவா னன்பின் வினவிவல்லே
வம்மினென்ரு னம்முன் மகிழ்ந்து. (ச)

நிராதனுரை கேளா நலதெனவே தாழ்ந்தேகிப்
போத முனிவோர் பொருப்பிமய—மீதிறைமு
ணண்ணவன்ரு னில்லோ டடைவினெதிர் கொண்டிறைஞ்சி
யெண்ணமுற வர்ச்சித்தா னேய்ந்து. (ஞ)

ஒப்பருநற் தாளீண் டுறையயிம யம்மேருச்
செப்பருமா வெற்பினுமே சீர்த்ததன்றே—வெற்பமிகத்
தன்பாவ முற்றுந் தொலைந்தனவே மாதவத்தி
னென்பானீர் வந்தென்கொ லின்று. (ட)

அதுகேட் டிறைவ வகிலநல்கு மாதை
வதுவைபுரி வானினைந்து மத்த—விதுமுடியா
னுன்னே ரமைப்பதற்கே யுய்த்தா னெமையென்னூர்
பொன்னெடாப் பென்பார் புரிந்த. (எ)

நின்னியமங் கொண்மூனிவீர் நாடு முயிர்க்குயிராய்
மன்னிறைவ ஞர்க்கு மனமுறையிற்—கன்னி
யுமையணங்கு தன்னே யுவந்தளிப்பே னென்ரு
னிமைய வரைமே விறை. (அ)

மேனையோர் வார்த்தைசொல்வண் மேனுள் விதியின்சேய்
தானையோர் மாதைநல்கித் தந்தனன்பி—னேனையோர்
தாநகைக்க வன்னுன் றலைதுமித்தா னென்பரது
மேனகைக்க வுள்ளஞ்சு மே. (கூ)

என்றமொழி கேளா வெழுமுனிவ ரீர்வளெஞ்
சொன்றமொழி வாரிறையோ னுற்றசெய—னன்றுநீ
தேர்ந்திலையாற் றக்கனிகழ் தீவினையாற் சென்னிகொண்டான்
பேர்ந்திலையால் வேறு பிழை. (கo)

அன்பர்க் கருள்வதூஉ மன்பின்றித் தீயசெயும்
வன்பர்க்குத் தண்டம் வழங்குவதூஉ—மன்செய்கை
முந்தை விதியின் முறைபிறழான் வேறுநீ
நிந்தைசெயே லென்ரூர் தெளிந்து. (கக)

மூனிவோர் மொழிகேட்டு முன்னிமவான் வாய்மை
யெனலோடு மேனைமன மேங்கிச்—சினவிடையோன்
செய்கையுண ராதுரைத்தேன் றேவர் பொறுக்கவென்ரூள்
கைகுவித்து நெஞ்சங் கனிந்து. (கஉ)

தாழ்ந்தின்ன மேனைசொலத் தாபதர்க ளன்னவள்பா
லாழ்ந்தவன்பி னேடே யருன்செயவிண்—போழ்ந்தமலை
காவலன்மின் மாற்றங் கருதன்மின் றேவைமண
மேவுவரச் சொன்மினென்ரூன் வேட்டு. (கங)

கனமகிழ்வி னரிமயக் காவலன்சொற் கேளா
மனமகிழ்வி னேடெழுவர் வாழ்த்தி—யனகமுமு
மங்கையிலை மேவி யவன்ரு டொழுதிறையை
யிங்கிதுகே ளென்ரு னினிது. (கச)

மணவினையின் மன்னிசைவு மாற்றமுரை செய்யத்
தணவிலருள் செய்து தனியெண்—குணவிறையோன்
பொன்னுர் சடைமுனிவிர் போகுதிர்நீ ரென்னத்தாழ்ந்
தன்னுர் பதஞ்சென்று ராங்கு. (கடு)

மணஞ் பேசுபடலம் முற்றும்.

ஆ திருவெண்பா சுநிஉ

வரைபுனை படலம்.

கன்னியுமை மாதுதவங் கண்டிறைவ னின்னேயா
மன்னி மணத்துமென்ற மாற்றமொடு—ந்ன்னியம
விண்முநிவர்க் கொண்டுவிஞ்ய் விட்டதூதும் வேந்துநினைந்
தண்மகிழ்வு கொண்டா னுகந்து. (க)

ஆருயிரெல் லாங்கலந்த வத்தருக்குத் தன்மகளே
வாரமணஞ் செய்திறத்தின் மாண்புமதித்—தேரமரர்
கம்பியனே யுன்னவன்னுன் கைதொழுது செய்பணியா
தம்மகவில் கென்று ணேர்ந்து. (உ)

என்னேயா ளத்தருக்கி யான்றவத்தாற் பெற்றவன்னே
தன்னேயளிப் பேனித் தனிவரைக்கண்—முன்னேக்
கடிநகர மெல்லாங் கவின்சிறப்ப நன்னூற்
படிபுனேதி யென்றுன் பரிந்து. (ங)

மன்னனுரை கேளா மகிழ்ந்தெண்டி தேவதசசன்
பொன்னகரம் பொற்பிற் புகர்கர—மென்னவற்றுக்
காண்போர் நவிலக் கவின்குடிகொண் டோங்குகவே
மாண்போர் நகர்புனேவான் வாய்ந்து. (சு)

வானிலகொள் கோபுரமு மன்றமொடு சூளிகையு
மானிலசெய் தேர்ந்முற்று மண்டபமு—மானபல
ஞடுமலர்ப் பந்தரவை யுன்னு வணந்தோறு
மீடுபெறச் செய்தான் பெரிது. (ரு)

கதலிகைநீள் கேதனங்கள் காவணமேற் நந்து
னிதமணிசெய் கம்பலமாங் கிட்டம்—புதமன்
னிரைத்தோயில் வாழைகந்தி நீன்குலையி ஞட்டி
விரைத்தோ ரணம்புனேந்தான் விண். (சு)

பொன்னகர மேயவரும் புட்பகவி மானத்தோன்
றன்னகர மேயவருந் தாங்கணுறி—னிங்நகர
மன்னகர மென்ன வழுத்தவனைந் தானிமவா
னன்னகரந் தன்னை நயந்து. (எ)

ஓரயுத யோசனையி லொண்புரிசை செய்ததனுட்
கூரெழில்கொள் கோயில் குயிற்றிமலர்—நீர
காரகான் குடையான் கயிலை யெனக்கோ
புரகான் கமைத்தான் புரிந்து. (அ)

அன்னதனுப் பண்வதுவை யாற்றுமணிச் சாலையொன்று
பொன்னதனுன் மேவப் புரிந்ததன்க—ணன்னதுஞ்சந்
தாதி விரைநீ ரணைநீவிப் பன்மலர்தூ
யாதனமிட் டானமரர்க் காங்கு. (கூ)

போதிலய ஞணப் புகரி னவமணியில்
வேதிகைவெவ் வேறு விதித்தனன்பின்—கோதிலெழிற்
கண்ணடிகளாதி கனின்கொள்வ தூக்கினுன்
விண்ணவர்கண் கொள்ள விருந்து. (கo)

மாஞர் முனிவர் மருவுந் திருவன்ன
ரூனை ருருவி னுஞற்றியே—தேனைர்பூந்
தார்கவரி யேர்வீணை சாங்கிப் பணிசெய்வார்
நேர்தரவே வைத்தா னிரைத்து. (கக)

அமரவேற் கண்கை யபிநயங்கள் காட்ட
வமரமட வாரினமைத் தன்ஞ—ரமரவே
தண்ணுமைமுன் னற்கருவி சாக்கவெண்ணிப் பாவையர்க்குங்
கண்ணுவகை கண்டான் களித்து. (கஉ)

பரிகா தகமன்னம் பஞ்சவன்னக் கிள்ளை
பரிசார் களிமுதல பல்ல—பரிசாப்
பணியின் றிறகுகாண் பவர்கண் கவர
மணியின் வினைந்தான் மயன். (கங)

அரியிங் திரஞதி யார்க்கு மரிதா
யரியிங் திரநீலத் தாரு—மரியணையான்
றேவ மிலாவெம் மிறைவ னிறைலியொடு
மேவ விதித்தான் வியந்து. (கச)

மன்ருண்டம் வேதி வகைமண் டலம்வகுத்துப்
பன்பண்டம் வேள்விசெய் பாற்படுத்தி—யுன்கடவு
ளெண்மங் கலமு மிருத்தியெண்ணின் மண்டபங்கண்
மண்மணியிற் கண்டான் மருங்கு. (கஞ)

காவி மலருங் கயமுற் பலவோ
மாவியலார் பூம்பொய்கை வாவியொடு—மேவு
மாகதமின் னூர்பளிங்கு வைரமணிப் பொன்னூல்
வசமன் றடம்வருத்தான் மன். (கசு)

கற்பகஞ்சந் தாரங் கதலிகந்தி மாவருக்கை
பொற்பமரும் புன்னேமுதற் பொன்மணியா—லற்பினமைத்
தன்னவைக ணற்பலன்க ளங்குத் தரச்செய்தான்
மின்னவைமுன் னிற்கு மயன். (கள)

இவ்வீண மெண்ணிலவே யெண்ணருஞ்சீர் கண்ணுமய
னவ்வண்ண லுங்கண் டதிசயிப்பச்—செவ்விதினு
ஞன்னி யமைத்தவெலா மொவ்வொன்றுங் கண்டுவந்தான்
மன்னிமய மால்வரையின் மன். (கஅ)

செந்திருமால் பங்கயன்முற் றேவர் தொருதியகல்
பந்த முனிவோர் பருதியொடு—முந்துமவர்
மாதரையு மாது மணங்காணப் போந்திடவே
தூதரையங் கங்குமுய்த்தான் சூழ்ந்து. (கக)

ஒற்றருரை கேளா வுவணத்தோ ஞதியும்பர்
கற்றவரெல் லாங்கயிலே நாயகற்சூழ்—வுற்றுக்
கருதுமென்சூர் சூடுமந்தக் கண்ணுதலோ ணேடு
வருதுமென்று ருள்ள மகிழ்ந்து. (உ ஏ)

கொற்றவைமுன் ஞசக் குழீஇயமா காளிகளுஞ்
சுற்று மெழுநதியுஞ் தொல்லிமய—முற்றுமையை
மன்னினூர் மாஉணி மன்னுசசி யாமுனிவர்
பன்னியரும் வந்தார் பரிந்து. (உக)

மலைமகண்மெய் நோன்பின் வருமெலிவு தோற்றூ
தலைமகளு மாரணனூ லாய்ந்த—கலைமகளும்
பாதாதி கேசமுற்றும் பல்பணிகள் பூட்டிமுன்போ
லோதாதி யைமறைத்தா ருற்று. (உஉ)

சூழ்தருமா மேருமுதற் சுற்றமுமேழ் மாக்கடலும்
வீழ்தருபைக் காசுரக வேந்தருமா—காழ்மதத்தி
மாதிரத்த யானைகளும் மன்பிறவும் வந்தனவே
யாதரத்தி னேடே யவண். (உக)

இக்காலை தன்னி லிமவிரியான் கோமானுந்
தக்கார்க ளாய தமரோடு—மிக்கான
வெள்ளிவரைமேவ வியனகத்தி கொண்டெய்ப்ப
வொள்ளியன்சூ டாழ்த்தரைப்பா ஞெண்ணு. (உச)

வீருகணித நூலோர் வகுத்தமூகூர்த் தஞ்சீர்
தருபங் குனியிற் றனியுத்—தராகாளிற்
கோட்டிடமே வந்தென் குலமகளே யண்ணனீ
வேட்டிடவே வேண்டுமென்றான் வேந்து. (உடு)

அருளுருவ னேக்கி யரசையின்னே யாங்கர்
மருகணங்கள் சூழ வரைமேல்—வருதுமனம்
போதிநீ யென்றலொடும் பொற்ரு ளிணைபோற்றி
யோதிமயஞ் சென்ரு னுவந்து. (உசு)

வரைபுனை படலம் முற்றும்.

ஆ திருவெண்பா சுவை அ.

கணங்கள்செல் படலம்.

அன்னபோ தங்கயிலை யத்தனந்தி யண்ணலேக்கூய்
நன்னர் மணக்கோல நாடவே—யுன்னு
முருத்திரர்கண் மாலயன்மு னும்பர்த் தருதி
யருத்தியுட னென்றிசைத்தா னங்கு. (க)

தின்பின் பிலாளீது சொல்லநந்தி தேவனன்னு
ரன்பின் மணத்தெய்த வங்குனிஞ—னுன்பினிதோர்ந்
தாய்ந்தார் மணஞ்செ யருள்போற்றிப் பத்திமிகழ்
வாய்ந்தார் கயிலைபடர் வார். (உ)

ஆடியறீக் கட்பாலத் தையான னன்முதலாஞ்
சாடியல்பிற் றேர்ந்த சகத்திரமாங்—கோடி
யுருத்திரிமா சூலத்த ரோடொளிர்கா லாக்னி
யுருத்திரனுங் குற்ரு னுவந்து (ங)

கொழுவடனை சூறை குலையவுயிர் வர்க்க
முழுதஞ் சுழல வுயிர்ப்போ—னெழுபத்
திருகோடி பாரிடங்க ணீண்டிடக்கூர் மாண்ட
னருகோடி வந்தா னவண். (சு)

பாதலத்து வாழ்பவர்கட் பாலர் பெரியர்பல்
கோதினிறத் தார்சோடி கோடிய—சேதமிலார்
நாட வருத்திரரா நற்கணத்தோர் கூட்டமோ
டாடகே சன்வந்தா னங்கு. (ஙு)

பன்னுந் தொகைநூறு பத்தா யிரகோடி
யென்னுமெற்ற் சாரதர்க ளீண்டியயன்—முன்னுபல
பத்திரானு மஞ்சப் புடிசரப மாம்வீர
பத்திரனங் குற்ரூன் பரிந்து. (சு)

ஓர்தருமா வண்டமெலாமோர்கொடியிற் பக்தெனக்கொள்
கூர்திண் குறட்படைகள் கோடிதூ—ரூர்தாமெய்ச்
செய்யன் கரியஞெடு கோர்த்தளித்த செண்டுறுகை
யைய னடைந்தா னவண். (எ)

சாலமலர் மன்றியங்கத் தந்தையரு ளாலவன்றன்
பாலமதிற் ரேன்றிப் பகரரிய—வாலறிவு
பண்பி னுணர்த்தும் பதிஞெ ருருத்திரர்க
ளொண்பிறகுக லுற்ரு ருகத்து (ஆ)

வன்பி னுருத்திரரா மாகணமல் லாதேனை
மன்புவனங் கண்டங்ரு மன்னிமன்பா—லன்புரம்வைத்
திட்ட வுருத்திரர்க ளேற்றகெறி சேர்புதிதி
யட்டகமூ தல்வருற்ரு ரங்கு. (அ)

மண்ணூறு வாரிமூற்று மன்றுகளி னுற்றூர்க்கு
மெண்ணூறு கோடி யெனுங்கணங்கள்—விண்ணூறு
தீர்த்த முடிவைத்துத் திகழ்பவர்முன் னுகவட்ட
மூர்த்திகளங் குற்ரூர் முனம் (கஎ)

இகனூறு செய்தீரே டெண்மணிகொண் மெய்பர்
புகனூறு கோடியாம் பூதத்—தொகையோடு
விண்டோ தானும மேவித் துதித்தெதுழ்கொள்
குண்டோ தரன்படர்ந்தான் குன்ற. (கக)

ஓரவெண்ணி லண்ட முயிர்த்தொகையெல் லாமழித்துச்
சீரமுன்போ லாக்குந் திறலுள்ள—சாரதர்கள்
கொன்னன்ரு நூற்றிரண்டு கோடியர்சம் மோடுகண்ட
கன்னன் பிஞகிவந்தான் காண். (கஉ)

ஆட்சிபெறு மானனக்க ளாயிரமீ ராயிரங்கைக்
காட்சிபெறுஞ் செய்ய கவின்மேனி—நீட்சியினர்
பானுகம்ப ஞூற்றைம் பதுகோடி யோர்சூழப்
பானுகம்பன் சென்றனனப் பால். (கங)

நீத்தம் புகழ்மதித்தே தற்போதங் கொள்கடவு
ளத்தகே சந்தலேயோ டாயுதமும்—பற்றியே
பங்கமில்சீர் மன்கணங்கள் பல்கோடி யோர்மேவச்
சங்குகன்னன் வந்தனனேர் சார். (கச)

காளகண்டன் றண்டி கரன்லிச் சுவமாலி
நீளமர்செய் தீரமுள நீலனுமே—யாளிமொய்ம்பின்
வாலையடு சேகரத்த வன்பூத ராயகடற்
ரூலையொடு சார்ந்தனரோர் சார்

கார்நிறங்கொள் காலனையே காய்ந்நீடுமா சாரதர்கள்
கூர்தூற்று மூப்பது கோடியோர்—சார்தரவே
தற்பரன்ரு ளேத்துமீ சான னெழிற்கயிலே
வெற்பகத்தில் வந்தான் விழைந்து. (கசு)

பேரிலையன் மாண்மகவான் புங்கவர்தி சாபால
ரோதிரவி யாலோன்மீ ளெஞ்சுகோளேழ்—மாதர்கள்
மாவசுக்கள் வேறுள்ளார் மாமுனிவர் விஞ்சையர்க
ளேவருமங் குற்ரு ரினிது. (கள)

தூயமறை யாகமங்கள் சொல்லரிய மந்திரங்கண்
மேயபல பூதங்கண் மேவுலக—மாயங்கர்
காலமொடு மேனைக் கரைபொருளல் லாங்கடவுட்
கோலமெய்தி வந்தனவக் குன்று. (கஅ)

இத்திறத்திற் கைலையின்கண் யாவரும்யா வும்வந்த
வத்திறத்தை நோக்கு மருணந்தி—முத்திறத்தார்
தம்மு னிறைஞ்சியன்னர் தன்மைசொல வன்னவரை
நம்முன் கொணர்கென்ரு னன்கு. (கக)

நந்திகடை வாயடைந்து நண்ணு முருத்திரர்மா
லிந்திரன்வா ளோர்முனிவ ரேவரையு—மந்தி
நிறத்தா னரியணையி னேராந் திருமு
னுறத்தான் விடுத்தா னுகந்து. (உ ரு)

அன்னர் நெருங்குற் றரியணைமேல் வீறரிருக்கு
மொன்னர் புரம்வெல் லொருவனைக்கண்—டினைஞ்
தொடர்ந்தவன்பி னீண்டித் துதிகளெடுத் தோதி
யடர்ந்தணுகி ஞரிமையா ரங்கு. (உக)

மேவு முருத்திரரை மேவரிய பல்கணத்தைத்
தேவர் முனிவரரைத் தேர்ந்தினரென்—ஞவிசையா
நன்றேய் விரற்சுட்டி நாயகர்க்குக் காட்டியே
நின்றேத்தி னனந்தி நேர். (உஉ)

கூரணலி னுமத்தோன் கூர்மாண்ட னுடகத்தோன்
வீரபத்தி ரண்முதலா மேவருத்தர்—பாரிடத்த
ரேவருநின் றேத்திஞ ரெம்பெருமான் பான்மிடைந்தே
யோவருமன் புற்றசிந்தை யோடு. (உங)

அப்போ தயன்ரு னரனணிவா னுன்னியே
யொப்போ சருமுடிமு ளெண்கலங்கள்—செப்போர்
கனகமணிப் பீடிகையிற்கையிற் கொடுபோந்
தனகனெதிர் வைத்தறைவா ஞய்ந்து. (உச)

அரவடியே முய்யமண் மாற்ற நினைதாய்
பரவுநின்மேற் பூண்டமணிப் பாந்தள்—விரவும்
பூணியெலா மாற்றிப் பசும்பொற் பணிக
ளணிகென் றறைந்தா னயன். (உடு)

முற்பணியெ லாமையன் முன்னுதிரு வள்ளமுன்னப்
பொற்பணியா மேவிப் பொலிந்தனவோ—ரற்புதமோ
வோலமிட் டெம்ப ருணங்குநிலை யோர்ந்துகட
லாலமமு தாக்கொள் ளரற்கு. (உசு)

போற்றே வருமற் புதமடைந்து கைதொழவே
கிற்றேய் மதிநுதல்பாற் கிட்டுவா—னேற்றினு
னுன்னித் தலைவற் குணர்த்தி யெழுகின்ரான்
மன்னிப் படா மகிழ்ந்து. (உஎ)

கணங்கள் செல்படலம் முற்றும்.

ஆ திருவெண்பா எ0நி.

திருக்கல்யாணப் படலம்.

நந்திசெல முன்னேத்தி ஈரதர்முன் னேர்பாடப்
புந்தி மகிழ்ந்தமரர் போற்றவரு—விந்தவடி
சால்புடைய குண்டோ தரன்ரோண மிசைவைத்து
மால்விடையி லேறிஞன் மன். (க)

சின்மயமா மால்விடைமேற் றேவாதி தேவனுற
மன்புடைநின் ரூரன்றி மற்றவரு—மன்பினெடு
கண்டுதுணைக் கண்களிப்பக் கார்க்கடலி ஞர்ப்புமிக
வண்டுதிக ளேத்தினர்முன் வந்து (உ)

ஐந்நூற் றெழுகோடி யாம்பூதத் தானையொடு
மன்னூற் றெழுமன்பின் வந்திறைஞ்சிக்—கொன்னேற்றின்
முன்போ யினன்மா முகத்தவுணன் சாயவன்று
வன்போர் விளைத்திட்ட மன்.

காய்கதிரோன் சோமன் கவிகையுங்கால் சீகரமும்
பாய்திரைமன் சாந்தாற்றி பண்ணவர்கோன்—றாய்மைமென்கால்
செய்வட டமுமெடுத்தே தேவன் புடைசென்ரு
ருய்வகையி னுண்மை யுணர்ந்த. (சு)

பேரி குடமுழாப் பீலிபம்பை சாடியுடைப்
பேரிய டாரிமுதற் பேசுபல—பேரிய்மே
பாரிடத்தோர் பாணிகொடு பண்போ டியம்பினர்விண்
பாரிடத்தோர் கேட்டுமருள் பாக்கு. (இ)

மூன்ரென்ற னேவலினுன் மொய்ம்பா ருருத்திரர்மா
மன்ரே டயனமரர் மாமுனிவ—ரின்ரேர்
விரிதேர் விமான்மா வீமுதலாந் தத்தம்
பரிமே லிவர்ந்தார் பரிந்து. (சு)

தின்பணிக ளாற்றுந் தலைவருமா பூதருமே
மன்பணிசெ யேனைய மன்கணமு—மன்பருளந்
தாவு கயிலை தணந்தே கினனுலக
மேவு மிமயவரை மேல். (எ)

வார்முரச மாதி வரம்பி லியமுழக்கு
மூர்படையி னுர்ப்புமண்ட ரோதைபுமே—யார்கலியின்
மன்னவர னங்கனுற மன்கிளரு ரோடெதிர்போய்
மின்னகர்க்குக் கொண்டணைந்தான் வேந்து. (அ)

மின்னகரின் வீதிதொறு மேவு விழாவயரப்
பொன்னனையா ரஞ்சலித்துப் போற்றியே—மன்னரன்ற
னற்புதமா மாவருக்கண் டன்பினிற்ருழ்ந் தாசையெனு
நற்புணரி யுட்படிந்தார் நன்கு. (க)

மின்னுர மாதி மிளிர்கலனும் பூந்தொடையும்
பொன்னுர் திருவுருவைப் பொத்தியதா—லன்னுன்
கழிநலமெல் லாமுற்றக் காண்கிலே மென்பார்
செழிநலமுற் ருரிற் சிலர். (ம)

மால்விடைமே லேறிவரும் வளவலுக்கு நீதியோ
கோல்வளையார் தானைகலன் கோடலென்பார்—சால்வளைவிற்
கோற்கண் கொலைபயின்று கூருருளின் கொள்கைகற்குஞ்
சேற்கண் மடவார் சிலர். (கக)

நிவளமதி சூடிவந்து தானைகலன் கொண்டு
முவகையின்றி நாணுடனெம் முள்ளுங்—கவர்கள்வன்
முத்தனே மூவா முதல்வனே முற்றும்வல்ல
சித்தனே வென்பார் சிலர். (கஉ)

காளையின் மேலமர்ந்த காளையிற்கக் கோலமொடு
நாளை வருவனலே நம்முனென்பார்—வாளை
மறுவிலுறை யுள்வைத்தன் மானும் வடுக்கட்
சிறுமியர்க டம்மிற் சிலர். (கந)

மஞ்சறுகு வேம்படிசின் மஞ்சள் சிறுகடுகு
பஞ்சின் விதைபுன்கொள் பாத்திரமே—கஞ்சமல
ரங்கைதனி லேந்தியே யன்போ டளவிலா
மங்கையர்கள் வந்தார் மகிழ்ந்து. (கச)

சர்வஸ்யா ரன்பி னெதிர்போற் றிறையவனே
யார்வமுற வேத்தி யவர்தொழில்செய்—தார்சிலர்பொ
னம்மணிக் கோடிகங்க ளங்கைக் கொடுவலமா
மும்முறையே சுற்றினர் மூன். (கஞ)

ஆயபோ தீச னரியமணச் சாலைகண்ணித்
தூயவிடை நின் றிழிய தோகையன்ன—ராயமொடு
மேனையன்பா லன்னவன்ரு ணேனையுளத் தோடான்பா
ரூனதி னுட்டினு டாழ்ந்து. (கக)

ஓது மிறைவனரு புய்த்திடுபொற் பாதுகைக்குட்
பாதமல ரிட்டயன்மால் பால்கைதர—வேதன்
கணக்கோ விலாத கணஞ்சூழ் தரமா
மணக்கோ விலையடைந்தான் வந்து. (கள)

சுரர்பரவப் பல்வகைய தூரியமார்ப் பச்சீ
கரவயன்மால் வேண்டக் கணஞ்சூழ்—தரமெல்
லெனப்புகுந்து பொன்னி னியற்றுமணிக் கோயில்
வனப்பனேத்துங் கண்டான் வான். (கஅ)

துன்னு மயன்வகுத்த தூயமல ரோடைகய
மன்றமணி மண்டபங்கண் மற்றுளவெவ்—வொன்றினையு
நன்றுநன்று நந்தியென நற்கையிற் காட்டவன்ஞன்
சென்றுசென்று கண்டான் சிவன். (கஙு)

இந்தரின் காட்சி யெலாநோக் கலுமிங்குப்
பொன்னகரம் வந்து பொலிந்ததென்கொ—லென்னவயர்ந்
தாவிருளங் கேணி யகன்புன னீராடியும்பர்
காவினினன் காடினரங் கண். (உ0)

மூன்னவன்ரு னென்ன மூனவிந் திரநீல
மின்னு மணித்தவிசில் வீற்றிருந்தான்—மன்னருளால்
வாழயன்மா லாதியரு மாடிவரும் பீடிகையிற்
சூழ விருந்தார் துதித்து. (உச)

விமலன் மணங்காண மேலையண்டத் தின்கண்
ணமரெப் புவனத் தருமே—நிமிரத்
துளங்குற் றதுவெந் துயரந் துதைந்து
வளங்கொ ளிமைய வரை. (உஉ)

மின்பான் மணம்வேட்டு மேலைத் தவப்பேற்றி
னன்பா லகிலமெலா மண்மியதால்—மன்பார்தான்
வன்பாற்றுழ் வாக வடபா லுயர்ந்ததே
தென்பாற் பனிமால் சிலம்பு. (உங)

தென்பா ருயரத் திகைப்புற் றனர்யாரு
மன்பா லரனேயெம் மத்தவென — முன்பா
விரங்கநகை செய்திறையோ னேற்றிறையை நோக்கித்
தரங்கமுண்டாற் றந்திடென்ரூன் ரூன். (உச)

அதுகாலே நந்தி யரன்ரு ளிறைஞ்சி
முதுமா தவற்கூவ முன்னங்—கிதமாக
வுற்ரு னவற்கொடுபோ யுத்தமன்பா லுய்ப்பவன்ஞன்
பொற்ரூள் பணிந்தான் புரிந்து. (உரி)

டணிமா தவனேயரன் பார்த்துக் குறியோ
யணியிங் கெவரு மமர்ந்து—கணிதென்பார்
சால வுபரச் சராசரமெ லாங்கலக்கந்
தாலமதிற் கொண்டயர்ந்த தாழ்ந்து. (உசு)

ஆகையான் மாமுனிகே ளன்புடனிங் கோடொரீஇ
யோகையிற்றென் ஞடுகண்ணி யொண்சிறைய—தோகை
யமர்பொதிய வெற்பி லமர்திவைய மெல்லாஞ்
சமமாகு மென்ரூன் சயம்பு. (உஎ)

கீற்று நிலாவெறிக்குங் கேழ்கிளர்செவ் வேணியன்சொன்
மாற்றமுணர்ந் தச்சமுறீ இ மாமுனிவ—ஞற்றுங்
குறையொன் நிலாத கொடியேனை யாங்கே
யுறையென் றுரைத்தி யுகந்து. (உஅ)

என்றருறு மாமுனியை யெந்தைபிரா ஞேக்கிநின்போ
லொன்றுமுனி வோருலகத் தண்டுகொலோ—மன்றனறு
மம்புயனு நின்னேடு ராகா னதனுலீ
ரும்பெவையு மேமுடித்தி நன்கு. (உக)

மான்மா மலரோன் மகபதிநிற் கத்தியேன்
ரூன்செய் திடவருள்கூர் தன்மையிதே—ஞன்செய்
தவமே தவமாந் தனிமணமே சாணத்
தவமே லியதெனுளந் தான். (ஈ0)

வெந்துயர மேவாமே வின்மலயஞ் சேறியங்கு
நந்தமணக்கோலமது நல்குதுமே—வந்துறுதி
யெம்மையுன்னி யாங்கே யிருத்திசில நாளென்றான்
மும்மைத் தமிழ்க்கு முதல். (கக)

என்னவிவை யீச னியம்ப வீசைபுலத்தான்
பொன்னங் கழல்பணிந்து போற்றிசெய்—தன்னலுற்றே
தென்றிசையிற் சென்றான் சிறுமுனீவன் றென்மலயக்
குன்றிசையின் மேவக் குறித்து. (கஉ)

தீவினைநேர் வெற்புவிந்தஞ் சிந்தவில்வ லன்றுனைவா
தாவிகெடக் காவிரிநீத் தத்தோடு—மேவியே
மூற்பகல்சென் றங்கு முனிவான்றென் கோடுபுக்கான்
பொற்புரமேற் போகுமான்போல். (கங)

மலைய மலையின்கண் மாமுனிவன் வைகத்
துலையினிரு பாலுநிகர் தோன்றி—நிலைபெறவே
யன்றுயிர்க ளாஞை ருஞொரீஇ யீசனையே
மன்றவெடுத் தேத்தினர் வாய்ந்து. (கச)

மன்னனிசை வாலெங்கண் மாதுமையை யைகாப்பக்
பன்னிக் திராணியடைப் பையேந்த—வுன்னுகங்கை
வெண்கவரி வீசமா வீரிகுடை பற்றமா
வண்கைதர வந்தாண் மகிழ்ந்து. (கஞ)

பாரதி முன்பாவப் பார்ப்பதியஞ் சாலேநண்ணி
யாரணனன் கேத்து மடிவணங்கக்—காரணன்றன்
முன்னிவர்மா பீடத்தேர் மொய்மி னிருத்தியெனப்
பன்னி யிருந்தாள் பரிந்து. (கசு)

மணங்கொளனை மண்னேல வார்குழலி யென்னு
மணங்கை யரனுக் களிக்க—வணங்குமுள
வேந்தனிசை வான்மேனை மின்பொற் காகநீர்
சாந்தமல ராதிதந்தா டாழ்ந்து. (கஎ)

தந்தவிம வான்றுழ்ந் தணைருந்து தேவிபுனல்
சிந்தவான் றுள்ளிளக்கிச் செய்யதறுஞ்—சந்தமொடு
வாச மலர்புனைந்து மற்றக் கடனற்றிப்
பூசை புரிந்தான் புரிந்து. (கஅ)

பூதரத்தின் வேந்துமைகைப் போதையான் கைமலர்வைத்
தாதரத்தி னேடே யளித்தனை—மாதரத்தி
னன்மறைகள் கூறிநன்னீர் நல்கினை னன்னவினை
மன்மருக ஞக மதித்து. (கக)

அந்தவமை யந்தன்னி லாடினர்வா ளேர்மாதர்
கந்தருவர் கானங் கனிந்திசைத்தார்—மும்மிருவ
ரேழிசையாங் கீத மியற்றினர்மற் ரேர்மறைக
ளூழினெடுத் தோதினு ருற்று. (சo)

அங்கமல மேய வரிவையரு மற்றவரு
மங்கலமாம் பாடலி மகிழ்ந்துரைத்தார்—சங்கமுதற்
பல்லியமெல் லாமியம்பிப் பாரிடமே பாரிடந்தா
னில்லெனச்சூழ்ந் தார்த்தா ரினிது. (சக)

அப்போ தரசனன்பி னுன்பா லரம்பைமுதன்
முப்பேர்க் கனிகணெய்தேன் முன்வர்க்க—மொப்பேயில்
பொற்பா சனத்தின்கட் புண்ணியன்மு னுய்த்தனனே
யெற்பா சனத்தின்க ணிட்டு. (சஉ)

விந்தன் மறையினெறி யின்னவெலா முய்த்தெவர்க்கும்
வேந்த விவைதகர்தல் வேண்டுமெனச்—சேந்தமலர்த்
தூய்யகரத் தாலவற்றைத் தொட்டுவந்தோங் கோடியென்ரூன்
செய்ய ரகத்தமரு ந்தே. (சங)

தொன்முதலென் கோனருளாற் றூய்த்தனவாக் கொண்டவணை
மன்மகிழ்வி னுலெடுத்து மாற்றியங்க—னின்மலசீ
ருற்ற மணமுலக மொப்பச் சடங்கெல்லா
முற்றவருடியென்ரூன் முன். (சச)

இன்னகைசெய் தேயெம் மிறையோ னருள்புரிய
மன்னதற்கு வேண்டுவன மல்கத்தந்—துன்னி
முனைவர் புடைசூழ முன்னரிய மன்றல்
வினையனைத்துஞ் செய்தான் விதி. (சகி)

தாய்தந்தை யென்றுலகஞ் சாற்று மிருவரைபு
மாய்தந்த மாமலரா லர்ச்சனைசெய்—தேய்மலரோன்
மான்மகவான் வானேர் வணங்கமுறை யாகவிம
வான்மகிழ்விற் ரூழ்ந்தனனே வந்து. (சசு)

மூன்பணிகின் ரேர்க்கெல்லா மூவா மூதல்வனெடு
மின்பணிபூண் மாதருள மேவியஃ—துன்பமென்
றுன்னிமலே வேந்தீண் டுறையயன்முன் னேர்க்கீசன்
றன்னவிசந் தாதிதந்தான் ரூழ்ந்து. (சஎ)

ஆனேர் கொடியா ரமலப் பொருளேற்றே
யூனேர் முடியணிந்து மூட்கொண்டு—மானு
வினைமுற் றியதென்றே வேதனெழு வாயா
முனைவரெலா முண்மகிழ்ந்தார் முன். (சஅ)

அக்காலை தன்னி லமலமா நற்பொருளே
மிக்கார் புகழிறையு மேனையுந்த—மொக்கலுமற்
றேனையரு நன்கருந்தி யெல்லையிலா வின்பமுற்றார்
சோனைமுகில் கான்மையில்போற் சூழ்ந்து. (சக)

மணக்கோலங் கண்டதன்பின் மாதிரதி யைந்து
குணக்கோல ஞந்தன் கொழுந—ணணக்கோல
மன்னு மலர்த்தாள் வணங்க வருந்தனீ
யென்னு வரைத்தா னிறை. (நிக)

மாலம் புயனுதி வானோர் மருளமலர்க்
கோலஞ் சுடைய குனிசிலேவேள்—சீல
வமைநேரந் தோளிதொழ வத்த னினைக்க
விமைநேரத் துற்ரு னெதிர். (ருக)

சூழைசிலேவேள் கௌரியொடு கோமான் நிருத்தா
டழையன்பி னேத்தித் தமியேன்—பிழைபொறுத்தி
யென்தா யெனவே யிரங்கிநிற்பப் பேதுறனீ
மைந்தா வெனநவின்ரு ன் மன். (ருஉ)

தீயிற் நிகழ்நோக்காற் நீர்ந்திநின் மெய்நீரூய்ப்
போயிற்றன் நோதிக்குப் பொற்புருவ—மாயிருதி
யுண்ணியா வர்க்கு மூருவிலியா மேலியுன்றன்
மன்னியல்செய் யென்ரு வரன். (ருஉ)

கோலமதன் நன்னுரிமை கொண்டேச விக்கிரமா
நீல மணித்தவிசி னின்றிழிந்தே—யாலமணி
கண்டனம்மை யோடருகு காற்தூத ராப்புமக்
வண்டர் தொழச்சென்ரு னங்கு. (நச)

வித்தகன்செங் கண்மால் விடையேறி மாதினையோ
ரத்தமுறக் கொண்டுதழீ இ யன்பிலுகைத்—துத்தம மா
நற்கணங்கள் சுற்ற நவிலிமய வெற்பொரீஇப்
பொற்கயிலை வந்தான் புரிந்து. (நஙி)

மாலயனை வெற்பரசை வானவரை மாதவரைச்
சீலமுறு தத்தமிடஞ் செல்லவய்த்தே—சீலகண்டன்
செந்தழலோ னுதியர்க்குச் செப்புமற்றை யோர்க்கு நவிடை
தந்தந் தளிபுக்கான் ரூன். (நசு)

வற்றின்மே னின்றிழிந்தே யெம்பெருமா னம்பிகையோ
டாற்றலரியணையா மாதனத்தில்—வீற்றிருந்தான்
தன்புற்றிருந்த தொகையிருபா லாமுயிர்க
ளின்புற் றிருந்த வினிது. (நிள)

திருக்கல்யாணப்படலம் முற்றிற்று.
ஆ திருவெண்பா எசுஉ.

திருவவதாரப் படலம்.

பலநாளிவ் வாறு படர்தலுமோர் வைகல்
வலமார்வெஞ் சூரால் வருமா—குலமேவிப்
பூமே லயன்மால் புரந்தரன்முற் றேவரெலா
மாமேரு வெற்பிலுற்றார் வந்து. (க)

உலகவுணர்க் கீந்தையன் யோகிபோ லாகி
விலக் விருந்தனும் வேண்டிச்—சொலவிரங்கி
மன்கன்னி யைமணந்தான் மைத்தனேத்தத் தின்னுமக
கின்கருணை செய்யாத தென். (உ)

ஐயன்ருள் போற்றியடியினலாங் கைகூடி
மெய்யன்பி னெண்கையிலை மேவிமழுக்—கையனுந்
தேவதே வர்க்கினைச் செப்பிடநாம் போதுமென்றார்
தூவலரோ ஞதியோர் சூழ்ந்து. (ங)

போம்போ தரன்செய்கை போத வினவியே
நாம்போ தரவேண்டு நாடுமிதற்—காம்போதத்
தூதா வொருவனேத்தான் றாண்டவே வேண்டுமென்றான்
போதா தனத்தான் புரிந்து. (ச)

வந்திறையை நோக்கியயன் மாவரையின் மூன்றுமுடி
சிந்துவிற்கொண் டெய்கருந் திறலுடையோ—யந்தயிலாக்
கோடிவரும் பொற்கயிலைக் கோமான் செயலுணர்ந்தே
மீடி வருதியென்றான் வேட்டு. (ஞ)

பூமன் னரசே புகன்றுநீ ரன்றுவிட்ட
காமன் கதிதெரிதற் கண்ணுதல்பா—ஞமுறப்
போதிநீ யென்றுற் புகலா ரெனக்கென்றான்
கோதி லுலவையெலுங் கேர. (சு)

பன்னுரைகேட் டன்னான் பவனவெங்குஞ் செல்லவல்லா
ருன்னிற் சிறந்தோ ருலகிலுண்டோ—மன்னுற்
றுழியுதவி செய்வோ ருயிர்க்கிடர்வந் தாலு
மழிவரோ நெஞ்ச மவர். (எ)

ஆதலினீ போதியென்று ரன்னு ரிடைவிடைகொண்
டோதலின்மி யேயிசைவி னுற்றனலின்—காதலனுங்
கால்வரையி லற்புதங்கள் காட்டு மெழிற்கயிலை
மால்வரையிற் சென்றான் மகிழ்ந்து. (அ)

அக்குன்றின் பால்விழுநீ ராற்றிற் படிந்துபொழி
ருக்குமலர் வாசநறுந் தூளணித்து—நற்கதியிற்
பைய வருவலியைப் பார்த்துரப்ப நந்தியன்ன
னைய விழுந்தா னடைந்து. (கூ)

விழுகா லெழுந்தச்ச மேவிநந்தி பொற்ரு
டொழுதிறைவ சம்புசெயல் சொல்வான்—வழுவிலண்டர்
நோன்வந்தே போதியென நூக்கவன்னர் சொற்கைசந்து
நான்வந்தே னென்ரு னயந்து. (கo)

என்பிழைபூண் டாடு மிறைவர் கணத்தலைவ
வென்பிழையெ லாம்பொறுத்தி யென்னத்தாழ்ந்—தன்பில்லாச்
சூரனுன் மானம்போய்த் துன்புற் றுணர்கிலன்விண்
ணாண் டருமினைய ராம். (கக)

அனிலனந்தி தாளிறைஞ்சி யன்பினுரை கூற
முனிவிகந்து கூரருளின் முன்னி—யினியநின்ற
னுவ் யளித்து மகன்றே குதியென்ரு ன்
சேவி னுருவமைந்த தே. (கஉ)

அன்ன னடிபணிந்தே யங்கயிலை வெற்பினின்று
பொன்னர் பொருப்பின்கட் போயுற்ரு ன்—முன்னு
வெதிர்நோக்கும் வானோர்க் கெடுத்தரைத்தா னந்தி
விதிர்நோக்கச் செய்செயல்கால் வேர்த்து. (கங)

அன்னதுகேட் டம்புயத்தோ னுதியாந் தேவரெலா
மென்னசெயி னின்ன லிரிபுமெனு—முன்னமுன்னி
யோதுமறைக் கெட்டா னுயர்மலைக்கே நாமெல்லாம்
போதுமெனத் தேர்ந்தார் புரிந்து. (கச)

மாலயனே யாதியும்பர் மன்வரையி னின்ரு ரீஇச்
சில முறுங்கயிலை சென்றுநந்தி—காலமலர்
தாழ்ந்தனுரெல் லாமாற்ருச் சாற்றியருள் கென்னவன்னு
னுழ்ந்தவன்பி னுட்புகுந்தா னுண்டு. (கடி)

இறைதாள் பணிந்துன் னிணைமலர்த்தாள் காண
மறைவேந் தரிமகவான் வானோ—ரறைகடைமு
ணண்ணினு ரென்னநந்தி நம்முன் றருதியென்ரு ன்
தெண்ணிலா வேணிச் சிவன். (கசு)

செம்மின் முடிநந்தி தேவர் தமைக்கூவி
யம்மின் சவுடியோ னழைக்கின்ரு ன்—வம்மினென
வன்னர் முறைவர் தான்ரு ன் பணிந்துதிநி
யுன்னு துரைப்பா ருவந்து. (கஎ)

பூதங்க ளாகிப் புலனகி யாங்கவற்றின்
பேதங்க ளாகிப் பிறவாகி—வேதங்கள்
காண்டற் கரிய கருணைத் திருவுருவாம்
வேண்டற் கெளிதோ விழைந்து. (கஅ)

மூச்சுடரு மூக்கண்ணுய் மூதண்ட கோளத்தி
னுச்சமுறுஞ் சென்னி யுருமணிப்பை—நச்சரவார்
பாதலத்தி னப்புறத்தும் பாதமலர் மேவினின்னைக்
காதலுற்றுக் காண்பவரார் காண். (கக)

உருவா யருவா யுருவுருவாய் நிற்றி
குருவாய் வருவை குலவுந்—திருவாய்ச்
செறிவைமிகை காணிற் றெறுவையெண்ண மெல்லா
மறிவைநின்செய் கையறிவா ரார். (உ0)

பற்பலவா ருகப் பணிந்தமர் சேத்திநிற்பச்
சிற்பரனு முட்களியாத் தேவர்கா—ளற்பிஞெடு
வந்தனைசெய் தீரென் வரம்வேண்டு கீர்கொண்ட
சிந்தனையென் சொன்மினென்ருன் றேர்ந்து. (உக)

உலகமெலா மீன்று மொருகன்னி யாகி
மிலகுமண மாகி னிடமா— நிலவணிந்தோய்
நின்போ லொருமகவு நீயருள வேண்டுமென்ரு
ரன்போ டமர ரணைந்து. (உஉ)

திதிக்குஞ் சுரர்நுந் துயர்கெடவோர் சேயைக்
கதிக்க வளித்துமெனுக் கங்கை—மதிக்குடில
னெல்லையில் பேரருளே யேய்ந்துமுக மாறிலங்கத்
தொல்லையுருக் கொண்டான் றொழ. (உங)

ஆருறுக் கப்புறத்து மையாறுக் குள்ளுமுளா
ஞரு ணனங்கொண் டமர்ந்தனனல்—லாருக
வாறுருளக் கண்முளரி யாறு பொறிதந்த
வாறுகைக்குச் சூர்வெம்மை யாங்கு. (உச)

அப்புலிங்க மான வரனுதற்க ணின்றுவந்த
வப்புலிங்க வெப்பினைக்கண் டஞ்சிவிண்ணே—ரிப்புவியோ
ராழித்தீ யேயாகு மல்லையே லாக்கதா
ஞழித்தீ யேயென்ரு ரோர்ந்து. (உஇ)

தீங்கிருந்த வர்க்கொழிக்குந் தீத்திரளைக் கண்டாரனூர்
பாங்கிருந்து மாதும் பெனித்தேக—வாங்கிருந்த
வும்பரெலா மோடினு ரொன்னனற்சு வாலேதா
னிம்பரெலாஞ் சூழ்தந்த தே. (உ

இன்பத்தை வேண்டிமக வீன்றருள வேண்டுமென்றேங்
துன்பத்தின் மேற்றுன்பந் துய்க்கவைத்தான்—தன்பருளங்
கோயிலாக் கொண்டருளுங்கோமான்றன் கூத்தென்றூர்
தாயிலாச் சேயனையார் தாம். (உஎ)

அன்னிறங்கொண் டஞ்ஞான் றடர்த்தவந்த வாலந்தான்
செந்நிறங்கொண் டிஞ்ஞான்று சேர்ந்ததுகொ—லென்னவயர்ந்
தாகண் டலன்முதலோ ராருலந்தீர் வானுமையோர்
பாகன் றனையடைந்தார் பற்று. (உஅ)

கண்டமட்டுங் கார்நிறங்கொள் கத்தன் றிருவுளத்திற்
கொண்ட தறிப்பிற் குறுகியே—யண்டமெலா
மீறு பெறப்பேர்ந் திலங்கும் புலிங்கமோ
சாறு மமர்ந்தனமுன் னுங்கு. (உக)

உனற்கரிய வேகத் திலவைவேற் றோடு
கனற்கிறையை நோக்கிக் கடவுட்—புனற்கங்கை
யாற்றி லவிர்பொறியோ ராறினையுஞ் சேர்க்கவென்றூன்
கூற்றி னுயிர்குடித்த கோ. (ஙஐ)

அன்ன ரதுகேட் டனலா ருருப்பத்திற்
கென்ன தரவா மெனவிறைஞ்ச—மன்ன
மொருவா தமைவென்ற யோங்கிடத்தான் வெம்மை
மருவா தமையென்றன் வந்து. (ஙக)

ஆய பொறித்திரளா யன்னர் முறையாகத்
தூய முடிமேற் சுமந்துகொடு—போயனலைச்
செந்தழையிற்கொண் டாடுஞ் சிவன்கட் டிறப்படியே
கங்கையிற்கொண் டெய்த்தார் கடிது. (ஙஉ)

ஈகைபோ நீங்கை கனற்பொறியை வெண்டிரையா
மலைகையா லேந்தி யலர்மணிமின்—றுகக
வரவணத்தி னுற்றிகழும் வாசமலர்ப் பொய்கைச்
சரவணத்திற் கொண்டுவிட்டா டான் (ஙஊ)

ஆறு திருமுகமு மாறிரண்டு செங்காலும்
வீறு பெறக்கொண்டுகக்கை வேணியனே—பேறுதரச்
செங்கமலப் போதகத்தோர் சேயாக வீற்றிருந்தா
னங்கமலப் பொய்கை யதில். (ஙஎ)

மரகதமாம் பாசடைகண் மன்கமலம் பூத்த
லரதனமாக் கம்பலமே யாகுஞ்—சரவணத்தி
லாறு முடிமிலைந்தோ னூறு சுணங்களுமே
லாறுமுக மாயமர்ந்தா னங்கு. (ஙஅ)

சூற்றுமர மேகாலாத் தூங்குகொடி யேதொடராத்
தூற்றமலர்ப் பொய்கையே தொட்டிலா—மற்றதன்கட்
செங்கேழ் நிறச்சேய் திருக்கண் வளரவளி
யங்கே யசைக்கு மமர்ந்து. (நசு)

மின்கார்த் திகையா மடவார் தமைவிளியா
கன்கார் சரணத்தி னம்பரஞ—மின்காலம்
பாலனுக்குங் கோலமூலப் பாலருத்திப் பேற்றிரென்குர்
மாலனுக்குந் தேவர் மகிழ்ந்து. (நஎ)

அன்னருரு மாங்கவர்டா லன்பின் விடைபெரூப்
பொன்னருரும் பொயகைகண்ணிப் போற்றினர்—மின்னருரு
மூவிருமா வத்திரமு முகான்கு செகுகரமு
மேவுமகற் காணு விழைந்து. (நஅ)

கிண்டலுமே யன்னன் கதுமெனச்சே யாரக
மாண்டவுடி மாதர் மனமகிழ்வற்—ரூணடகையா
மொவ்வோர் மகவீனையு மொவ்வோ மடவரலுக்
தெவ்வோர் தாவெடித்தார் தேர்ந்து. (நக)

ஓவ்வோர் மகவு முறுபகியுற் ரூரெனவவ்
வொவ்வோ ரணங்குமூலை யுண்டுவந்த—தொவ்வாமான்
செங்கைவளர் சேயைத் திருகண் வளாத்திஞ
ரங்கை மலர் மேற்கிடத்தி யாண்டு. (சஐ)

ஓருருவந் தஞ்சமற் ரூருருவந் சொற்பயில
வோருருவந் தாய்முலைப்பா லுண்ணவே—யோருருவ
முண்ணகைப்ப வோருருவ முற்றாட வோருருவ
மண்ணியிரூ கச்செய்தா ரன்று. (சக)

ஒன்று தவழுமெல்ல வொன்று கைகாகுசெல
வொன்றுவிழ வொன்றிருக்க வெம்மான் முகச—மென்றுதாய்
பாலமா வுன்னன் பலவருவ மாகாடிழுத்தான்
சிலமுறுஞ் சித்தரெனத் தோந்து. (சஉ)

ஓருருவ மாடவே யோருருவ லகையுரைய
வோருருவம் பாடவே யோருருவம்—பார்வையுற
வோருருவ மோடவே யோருருவ மேமயொளிக்க
வோருருவேள் செய்யவற்ரு னேஞ்ந்து (சங)

இன்னவா ரூரூண யாக்கையுமே யோர்கணத்தி
லுன்னு சதபத் தழுபேத—மன்னநின்ர
சிற்பான்ற ஞற்ற நிறமேனக்கி யண்டமெலா
மற்புதமே யுரூ ரகத்தி. (சஎ)

காயம் பலவெடுத்தே காண்போ ரதிசயிப்ப
மாயம் பலபுரிய வல்லாரார்—நேயம்
வருகுமர னேயென்ரு மன் செயலாற் ரூனெஞ்
சுருகுமா னேயென்ரு ருற்று. (அடு)

இளையா னுருவி லிளையான் நிற்லில்
வீளையா டலேக்கண்டி வேரித்—துளவார்
தருந்தார் முருந்தனயன் றம்மோ டிறைஞ்சி
யிருந்தா ரிமையோ ரெலாம். (அசு)

ஆலா மாத ரறுவருஞ்சே யாடறனே
நேரதா நோக்கி நிறைபன்பி—னீரதா
யுய்வகையி னம்பா லுகந்தோன் வழிபடுவான்
றெய்வமெனப் போற்றினர் தேர்ந்து. (அஎ)

திருவவதாரப்படல மூற்றிற்று.
ஆ திருவெண்பா அ0கூ.

துவிணவர்வரு படலம்.

ஆலமர்ந்தோன் பாலவிழி யார்பொறியெம் மைக்காற்ரு
தேல வறற்குழல் பொன் னேய்கிலம்புக்—கோலமென்ரு
ணடியுறு தாக்கி னவமணிகள் சிந்தவஞ்சி
யோடினரு ளுள்ளினு ளொன்று. (க)

வானேர் வணங்கியோர் மைந்தனேல் தென்னவெங்கோன்
ரூனேர் மகவளித்தான் சங்கரிமுன்—ரூனேர்செய்
தன்பாற் பெருமே தகித்தவன்னர் பன்னியர்க்கு
மன்பால னில்லென்ரண் மாது. (உ)

கன்னியிவ் வாறு கரைந்துமீண் டேகியரன்
முன்னருமொண் டாட்கமல முன்னிமகிழ்—மன்னவா
கின்க ணனற்பொறியா னீங்கினேன் மீண்டுமே
யுன்க ணடைந்தே னுகந்து. (ஊ)

மின்னேர்ந் தினைய விளம்புதலு மெம்பெருமான்
றன்னே ரிடத்தவைத்தான் றையனல்லாண்—முன்னேடச்
சிந்து சிலம்புமணி தேவன் றிருமுனரு
கந்த மிலங்கினவே கண்டு. (எ)

இலங்கு நவமணிக ளின்னூணே யாலே
கலங்கினருஞ் சத்தியுரு கண்ணி—வலங்கொளிறை
தற்பதந்தாழ்ந் தார்வமுறத் தாபதர்தம் மாதரெனக்
கற்பக மடைந்தார் கடிது. (ஏ)

உன்னுலகெ லாமீன் றுவப்புற்ற ளன்னவர்பான்
மன்னுசினங் கொண்டெனக்கு மாறுகித்—துன்னியதீ
னீர்கொள் கருப்பமொடு நீணு ளிருத்திரென
வோர்தரச்சூ ளொன்றுரைத்தா ளுற்று. (சு)

அவ்வெல்லை மாதர்தா மச்சமுறி இமெய்வியர்த்தார்
வெவ்வியர்ப்பி லீசன் வியனருளா—லெவ்வம்
விலக்கு மினத்திரள்போல் வெண்றிகொளும் வீர
நிலக்கர்வந் துற்ற நினைது. (எ)

பொற்றுகிலர் கோடையிடி போன்ற கடுஞ்சொல்லர்
வெற்றியுறு வாள்பலகை மேவுகரர்—பற்றிலக்கர்
வாட்டானே வீரர் மழுவாள னேத்துதியாத்
தாட்டாமரை தொழுதார் தாம். (அ)

திடமகார் நீரமரர் தெவ்வொழியச் செவ்வேள்
படையாகு தீரென்னப் பாருண்—விடையாள
னன்னூர் பரிசனரா யத்தன்மு னீங்காமே
துன்னு வொழுகினூர் சூழ்ந்து. (கூ)

சீற்றங்கொ ளம்மைசொலாற் கிந்தா குலமெய்தாப்
போற்றியரன் பாதம் புரிந்துபணி—யாற்றுணல்லார்
தங்கருவி னங்கிகணத் தார்மகவாய் வீற்றிருந்தார்
துங்க முறுஞ்சுகர்போல் சூழ்ந்து. (கo)

மாதர் கருவின் வருத்தம் பொறுதிருவர்
பாதம் பணிந்துகருப் பம்பரியேம்—போதற்
கருள்புரிக வென்ற ருளுதிமல முத்த
னிருள்குழலே நோக்கினு மீனய்ந்து. (கக)

நீளார் கயற்கணுமை நின்றுட் சிலம்புதித்தோர்
சூளாண் மிகமெலிந்து சூலினுல்—வாளா
வருந்துகின்ற ரன்னூர் மகப்பெறநீ யன்பிற்
றிருந்தருள்செய் கென்றரன் சிவன். (கஉ)

அத்தனுரை கேளா வனேகன் றெனவிசையா
முத்த நகையாரை மொய்ம்பினரைப்—பெற்றிடென
வன்னூர் வயின்யோகி னூர்ந்தவர்போற் போர்த்துவரற்
குன்னு முயன்ற ருகந்து. (கங)

ஹாயமணி மாதருமை சொற்கேட் டதுங்கவலை
போயவர்தா டாழ்ந்தோருவிப் புந்திமகிழ்—வேயவே
யொன்பான் மடவார்பா லொன்பான் மகாருமே
யன்பா லவதரித்தா ராங்கு. (கச)

வானமர ரோங்கிடவெவ் வல்லவுண ரேங்கிடவார்ந்
தேனமர்தார் வேந்தருளாற் செம்மணியிற்—ரூன
மருவீர வாகுவந்தான் மன்னிளவன் மேவ
வொருவீர வாகுவந்தா னுற்று. (கடு)

திங்கண் முகநோக்கித் தெய்வுறவென் றூழ்கமலச்
செங்கைகண்டு செல்லலுறச் சீர்த்தமுத்த—ங்கைபர
ரில்லவுணர் வாடவந்தா ணண்வீர கேசரிவெவ்
வல்லவுணர் வாடவந்தான் மற்று (கசு)

புட்பரா கத்திபாற் புகவர்க ளேத்தவந்தான்
றிட்பவின ஞரியர்கள் சென்ரூட்சி—நட்புச்ச
நாமகேந்தி ரப்பேர் நவிறேத் துறவீர
மாமகேந்தி ரத்தனமன் வாய்ந்து. (கள)

அகனமர்ந்து தேவரெலா மச்சமொழிந் தேத்தக்
குகன்மே விளவலாக் கோமே—தகமெனகிற்
றூமகே சத்தனேபாற் ரூன்றிஞன் றிண்வீர
மாமகே சத்தனையன் வந்து. (கஅ)

சூரியல்பெ லாநகுன்றத் தோன்றிஞன் வான்றலத்தோர்
சீரியல்பி டாவுஞ் சிறந்திட வை—ரியமா
நூபுரந்த ரக்கோதி ரேணிமணிப்பெண் பால்வீர
மாபுரந்த ரக்கோ மகிழ்ந்து (கக)

அயர்வுற் றழுங்கு மமர ரகத்தார்
தாயரந் தொலையத் தலங்கும்—யிரமின்பாற்
சூராக்க தத்தலேவன் றுன்ஞர் துதிக்கவந்தான்
வீராக்க தத்தலேவன் வேட்டு. (உ ப)

கண்டமுது தேனைக் கடுத்திடுமின் சொற்பவளத்
துண்டவிதழ்ப் பச்சைமின்பாற் ரூன்றினன் வார்—கொண்ட
பாரமார்த் தாண்ட பழலிலேந் தையைமெச்ச [மூலைப்
வீரமார்த் தாண்டன் விளைந்து. (உக)

சூவளையொடு சேதாம்பல் கோகநகம் பூத்த
பவளவல்லி பாற்சீர் பரவித்—திவளவிரும்
பாராந் தகனன் பவனனண்ட முட்கவந்தான்
வீராந் தகனன் விளக்கு. (உஉ)

சூலமணிகரத்தெஞ் சோதி களநிறத்த
நீல மணிப்பாவை நீடுதவத்—தேலவள்பாற்
சூரதீ ரன்ஞமந் தன்னித் தளங்கவந்தான்
வீரதீ ரன்ஞமன் வேட்டு. (உங)

இவ்வீர மொன்பதின்ம ரீசன் றிருவருளா
லவ்வீர வன்னேமா ரார்வணமாய்த்—தெவ்வீய
மூந்தி வளருறப்பின் முண்டகன்போற் கண்டனேயா
ருந்தியின்கண் வந்துதித்தா ருற்று. (உச)

அந்தலிறல் வீர ரரியணேயின் மேவிருவ
ரந்தணடி தாழ வுவரவர்க்கண்—டந்தரிக
மைந்தர் புதியரலர் மான வருங்கலத்தர்
நந்தி கணத்தரென்ரு னன்து (உஙி)

அன்னே யதுகேட் டனேயார்க் கருள்புரிய
மன்னு சிவனவர்க்கொள் வாளுதவிப்—பன்னிலக்க
மேவுமைந்த ரோடுநீர் வேலவனே நீங்கலின்றி
யேவுபணி செய்திரென்ரு னேய்ந்து. (உசு)

ஒன்பா னிலக்கருமற் ரேரெண் ணிலக்கருமே
யன்பா யிறைஞ்சியத்த ஞலயத்தின்—முன்பாகச்
சத்திகளோ மொன்பதின்மர் சார்ந்துமைதா னிட்டபணி
பத்தியொடு செய்யலுற்ரூர் பாகரு. (உஎ)

துணேவர்வருபடலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா ஃஅகரு.

சரவணப் படலம்.

வான்றலகன் கேத்துமந்தி வண்ண லுலகனேத்து
மீன்றவளே நேரக்கிநம தேர்வி ழிக்கட்—டோன்றி
மணிநீர்ச் சரவணத்தின் மன்னியதின் சேயை
யணிமலேக்க ணுய்த்துமென்ரு ஞகரு. (ச)

நம்பனுரை கேட்டளவி ஞடரிய பச்சிளம்பூங்
கொம்பனு ஞள்ளன்பு கொண்டெழீஇத்—தும்பி
கொழுதியா லரோய் குமரற்கொண் டேக
வெழுதியா லென்ரு னினிது. (உ)

ஆய விடைமேற் முடியிடையுங் தாலுமாய்
நேயமூட னேறினு னீளிமையோர்—மேய
விழுத்தன் னுருக்கொள் விமலர் கணத்தோர்
வழுத்திக் குழுவினுர் வந்து. (கூ)

நீந்தியெங்கோ னுய்ப்பவரி நான்முகத்தோ ஞதியர்கள்
பந்திகொடு தழ்ந்து பரிஞர்—சிந்துவெனப்
பேரிகைமுன் ஞகப் பிறவு முழங்கினவே
பாரிடங்கள் சூழப் ப்ரிந்து. (ச)

வான்மதியு மீன்குழுவும் வந்திறைஞ்சிச் சூழுவன
போன்மின் கவிகைவெய்யோர் போற்றிஞர்—மேன்மையுறு
காமருநீர்க் கங்கைதவழ் காட்சிபோன் மன்பூதர்
சாமரங்கள் வீசினர் சார்ந்து. (ஞ)

ஏறுகரி பூட்கைபுலி யெண்கிரலை முன்ஞக
வேறுமுகச் சாரதர்கள் மேவினரோர்—நூறென்னுங்
கோடியர்வெல் லேற்றுக் கொடிகள் புகழுருக்கொண்
டாடியபோ லேந்தினு ராங்கு. (ஙு)

அன்னபோ தன்னையொடு மங்கயிலை வெற்பினின்று
முன்னுஞ் சரவணத்தி லும்பரெலாந்—தன்னவே
மின்னேற்ற செஞ்சடையான் வெள்ளிமலை யன்னவோர்
மன்னேற்றி னின்றிழிந்தான் வந்து. (எ)

நீருலாம் வேணி நிமலனுந்தன் பாங்கமருங்
காருலாங் கூந்தற் கவுரியுமா—ரூருந்
திரைசூனையி லாறருக்கொள் செய்வினையாட் டெல்லாங்
கரையமர்ந்து கண்டார் களித்து. (அ)

பாங்கண் பரையைப் பரிவிற் பரனெக்கி
மீங்கணின் சேயை யெடுக்கவென—வோங்கலென
நின்ற விடையின்க ணின்றிழிந்து பேரன்பிற்
சென்றனளஞ் சேற்கட் சிவை. (கூ)

சீர்கொள் சரவணஞ்சேர் சேயா யுருத்தனையு
மேர்கொள் கரத்தினெடுத் தின்பினணைத்—தோர்மூ
விருமுகமு மோர்பன் னிருபுயமுஞ் சேர்ந்த
வுருவொன் றமைத்தா ஞமை. (கo)

அந்தமிலான் றன்னே ரறுவடிவு மொன்றுகிக்
கந்தனெனப் பேர்பெற்றுன் கொளரிமைந்த—னந்தலையை
மோந்துபுற நீவ முலைசுரந்து பால்சொரிந்த
வாந்தலையன் பார்தன்மை யாம். (கக)

அத்த னருளா யமலமாய்ப் போதமாய்ப்
புத்தமுத மென்னப் பொழிமுலைப்பால்—வித்தமணி
மாவள்ளத் தேற்றெழில்கூர் மைந்தற் கருத்தினுள்
பூவலர்க்கொம் பன்ஞன் புரிந்து. (கஉ)

தின்பா லருத்தித் தனயற் கொடுசென்றே
யின்பா ரிறைபா லிறைஞ்சுவிக்க—வன்பா
லிருகரத்தாற் சேயை யெடுத்தகல மேல்வைத்
தருகிருத்தி னானே யரன். (கஉ)

ஒப்பில் குமரவே ளோர்புடையின் மேவவே
முப்புவன முற்றுங்கு மொய்குழலேச்—செப்பரிய
வண்கரத்தாற் பண்புறவே வாங்கி யிருத்தினா
னெண்குணத்தான் றன்பா லினிது. (கச)

வளஞ்சூழ் துவர்பச்சை மாமலையி னுப்ப
னிளஞ்சூ ரியனிருந்த தேய்க்கு—முளஞ்சூழ்ந்த
தோங்குமர னோர்பா லுமையொருபா லாகநடு
வாங்குமரன் மேவு மமைவு. (கடி)

தூய விடையவற்குந் தோகை யனையவட்கு
மேயநடு வீற்றிருக்கு மெல்கோனே—நாயகனே
தோமா ரிகல்சூர் தொலையவரு ளென்றமரர்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. (கசு)

தெளிக்கமலன் கண்ட தனியண்ட மெல்லாங்
களிக்கவந்த சேய்க்குமணங் கால்பா—லளிக்கவந்த
வாரான் மடவா ரதுகாலே யெங்கோன்முன்
வாரமுறத் தாழ்ந்தனரே வந்து. (கஎ)

கந்தனீர் போற்றுங் கடலு லிவனுங்கண்
மைந்த னெனைப்பேர் வழங்குகவே—நந்தாண்
மன்னிவன்ரு ளன்பின் வழிபடுவோர் தங்குறைதீர்த்
தன்னியதந் தாள்வமென்ரு னுற்று. (கஅ)

என்றலுங்கன் மாதெதிர்சென் றோர்மைத் தனைத்தழீஇச்
குன்றென் றனத்திழிபால் கொண்டெள்ளத்—தன்றருத்த
வன்னமுலைப் பாலுக் கவைவா னதியினுறு
மன்னுஞ் சரவணத்தில் வந்து. (கக)

அன்னதடத் தார்பா லருந்திமுன்சா பத்தான்மீன்
றன்னுருவங் கொள்ளுறுவர் தாபதராய்—மன்னியரன்
முன்றரிசித் தேத்த முனிமைந்தர் நீர்பாங்குன்
றின்றவஞ்செய் மின்னென்ரு னேய்ந்து. (உ0)

சின்னட் கடந்தபின்னிச் சேய்வந் தருளுமென
மின்னுர் சடையோன் விளம்புதலு—மன்னுர்கோன்
முன்ரு ழ்ந் தகலவுடு மொய்குழலா ரோடரிமு
னின்ரார்க் கருள்புரிந்தா னேர்ந்து. (உக)

செங்கண்மா லேற்றிற் றிருமகளுங் கோமகளு
மெங்கண்மா தேவனுமே யேறிப்போ—யங்கண்
பரிசனங்கள் சூழ்ந்து பரவவெள்ளி வெற்பி
லரியணையில் வீற்றிருந்தா னங்கு. (உஉ)

சேயென்னுந் தெய்வ கிகாமணியை நூபுரத்து
மேயமணி நல்குகொன்பான் வீரருட—னியலக்க
மான வருமிறைஞ்சி மாமலர்தூ யன்னவற்சூழ்ந்
தானுயிரி னென்றிநின்ரு ருற்று (உங)

சரவணப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா அநிகூ.

திருவிளையாட்டுப் படலம்.

அமரர்க் கரிய வரியா சனத்தி
லமரிருவர் தங்நடிவி லாகுங்—குமர
னிளையா ருடனெழுந் தெண்ணருளி னீரான்
வீளையா டலேமதித்தான் வேட்டு. (க)

சேயடியி லாருஞ் சிறுகிண் கிணிசிலம்ப
வாயவரை ஞாண்மணிக ளார்ப்பமணி—மேயகுழை
தோடவிர்கே யூரமுடி சூழ்மாமதாணிமின்ன
வாடல் புரிகின்ரு னங்கு. (உ)

சூளந்தோறுங் கண்படைத்த கோமா னுயிர்க
ளாளந்தோறுஞ் சென்றருள்வோ னெஞ்சேய்—வளந்தோய்ந்த
மன்று தொறுமுலவும் வாவி தொறுமுலவுங்
குன்று தொறுமுலவுங் கூர்ந்து. (கூ)

தந்தையிடந் தோறுலவுந் தாயினிடந் தோறுலவுஞ்
சிந்தையிடந் தோறுலவுஞ் செய்கையிலங்—கந்தவேள்
பாதலங்க டோறுலவும் பார்நிலங்க டோறுலவு
மீதலங்க டோறுலவு மீண்டு. (ச)

காந்தருவர் சித்தர் கருடர் முதலோர்வாழ்
வாந்தலம்விண் ணேர்கோ னமர்தலந்தோந்—தீந்ததவர்
மன்றலம்போ தன்றலமா மன்றலங்கன் மின்றலங்கோன்
மின்றலமெங் கும்முலவும் வேள். (ஞ)

மண்ணகத்திற் ரேன்று மனுக்களெலா நோக்கவே
விண்ணகத்திற் ரேன்றும் விரைவிளிலே—கண்ணகத்தித்,
காணு திருக்குங் கதுமெனக்கீழ் பாற்ரேன்றுஞ்
சேணுர் மதிமிலர்தோன் சேய். (சு)

தேரிற் செலுங்கரியிற் செல்லுமா மேற்செலுமூர்
காரிற் செலுந்தகரின் கட்செல்லும்—பாரின்கட்
காலிற் செலும்பொற் கதிர்மான மேற்செல்லுஞ்
சேலிற் றிகழ்கணுமை சேய். (எ)

திருமுகங்க ளாறினெடுஞ் சென்று திரியு
மொருமுகத்தி னேடி முலவு—மருமறையோ
ரென்னமுனி வோரென்ன வெண்வீர ரென்னவே
ளுன்னுமிடந் தோறுலவு முற்று. (அ)

மணியார்த் திடுவீணை மல்கப் பயிலும்
பணிமென் குழலிசைக்கும் பார்வீண்—ணிணையிலார்
நாடு மியமெறியு நல்லிசையி லேபாடு
மாடுமுரு கேச னமர்ந்து. (கூ)

உருவம் பலகொண் டொருருமர னுடுக்
திருவா டலேநோக்கித் தேவி—யொருவ
னிருமா மலர்தாழ்ந் திளஞ்சேய் நிலேயெம்
பெருமா னருள்கென்ரான் பெட்டு. (க0)

நங்கை நமது நயனத்து வந்தமைந்தன்
கங்கை சரவணத்தின் கண்ணிடலாற்—றுங்கமுறு
காங்கையனப் பொய்கையினுற் காண்சரவ ணுற்பவனு
மாங்கவண்பே ரென்ரு னரன். (கக)

தி1யெனப்போற் தார ணங்கொடுத்த லாற்கார்த்தி
கேயனெனப் பேர்பெற்ரான் கேழ்ருவா—றேயவொன்ரைத்
தந்ததனுன் மாதுன் றனய னபிதானங்
கந்த னெனவயங்குங் காண். (கூ)

நன்முகமா முண்டா னமக்கவைதா மேகந்தன்
றன்முகமா வாய்ந்தவுயிர் தாரகமாய்—முன்மொழியு
மாறெழுத்து மொன்ரின் னர்மைந்த னுமத்தொன்
ரூறெழுத்தென் றேத்தவுற்ற வன்று. (கஉ)

ஆகையினுஞ் சத்தி யறுமுகனன் னுலெடி யா
மோகையினென் ரும்பேத முற்றிலேன்—தோகையன்னு
யேற்றமிகு சேய்போல்வான் யாவுமுணர்ந் தான்வீடும்
போற்றினர்க்கு கல்கவல்லான் போந்து. (கச)

இனிமே லினையசெவ்வே ளெண்கணனே வேதத்
தனிமூலத் தொண்பொருளென் சாற்று—கெனவன்ஞன்
சால மயங்கத் தளையிட் டவனேமா
ஞாலவுயிர் நல்குவண்ப்ன் ஞள். (கஇ)

தாரகனைச் சிங்கமுகன் றன்னேய்டற் சூரனைமைக்
காரவுணர் தம்மைக் கடிதுதடிந்—தாரணன்விண்
ணேய்கா வலனமா ரின்னருேலப் பான்பின்புன்
சேய்காண்டி யென்ருன் சிவன். (கசு)

இன்னகுகன் செய்கையெலா மேந்திழையாள் கேளாநன்
றென்னமகிழ் கொண்டணுக வெவ்வுலகு—முன்னவே
வள்ளற் குமரவேண் மற்றுமோ ராடறனே
யுள்ளத்தி னுன்னிஞ ஞற்று. (கள)

குலகிரியெல் லாமோர்பாற் கூட்டுமவற் றைப்பின்
தலைமயங்க வைக்குந் தரைமே—லலைகட லை
யொன்ருக்கு மாழிவெற்பை யொண்பிலத்தாக் குங்கங்கை
தின்ருற்றி னேயடைக்குஞ் சூழ்ந்து. (கஅ)

பாதலத்துள் வைகிடுமெண் பாந்தள் களைப்பற்றி
மீதலத்தண் மேருவினில் வீக்கியே—பூதலத்தி
லாராவி கட்கூறின் ருகக் குமரவே
டோரா வருட்டிச் செலும். (ககூ)

ஓண்கரிக டம்மையெடுத் தொன்றெடொன்று போர்விளக்கும்
வீண்கங்கை யால்வடவை வீறழிக்கும்—உண்கருளன்
தன்னேடு வாசுகியைத் தான்சேர்த் திகல்வீளக்கு
மின்னேடு வேணியன்சேய் வேள். (உo)

செங்கதிரோன் றன்னேமதி செல்பதத்தி லோச்சுந்த
ணங்கதிரோன் றன்னேயின ஞர்பதத்தி—றங்கவுய்க்கு
மாதிரங்காப் போர்பதங்கண் மாறுபட வேவைக்குங்
கோதில் குமரனெனுங் கோ. (உக)

இருசுடர்கோ ளேஞர்விண் ணேகுவிமா னந்தேர்
மருவியமா பாசமுற்று மன்னுந்—துருவன்கை
யாருங் கயிற்றினேயீர்ந் தண்வானி யில்விடுக்கும்
யாருந் திகைப்ப விறை. (உஉ)

சேணிற் செலும்வார் சிலைபற்றி வானவர்மீன்
கோணிற் பனகோலாக் கொண்டமர—மாணழரும்
பொற்றலேதோ ளாதி பொருந்துரு யாவெய்தே
விற்றிறமை காட்டிடுஞ்செவ் வேள். (உங)

இத்திற மா மாவுலகி லிம்பரோ டும்பரஞ்சிச்
சித்தந் தளர்ந்து சிதையாமே—வித்தகமா
வாடல் வியப்போ டமர்ந்துசெய்தான் மாமுத்தர்
நாடுவிழி யார்விமல னன்கு. (உச)

அக்காலை ஞாலத் தவுண ரதைநோக்கி
யிக்கா ரியஞ்செய்தார் யார்கொலென—மிக்காரெண்
ணுதனுருக் கண்டிலார் நண்பவத்து ளாழ்தீய
ராதலான் மாழ்குற்ற மாங்கு. (உடு)

எங்கோன் செயலவனி யின்மாக்க டாங்காணு
வெங்கோ லவுணரெலாம் வீதறிண்ண—மங்கதனுக்
கேதுவாம் விம்மிதமீ தென்ன வெருவலுற்
றேதுவார் சில்லோ ருணர்ந்து. (உசு)

இந்திரனே யாதியா வெண்டிசைகாப் பாளரினன்
சந்திரனேண் மற்றோர்சேய் தன்செய்கை—புந்தியிலோர்ந்
தன்ன னுருக்காணு ராரவுணர் செய்கையன்றும்
பின்னர் புரிந்தார் பெரிது. (உஎ)

தேதிருமண்டர் தேவர்கோன் சில்லோ ருடன்கூடி
மேருவி லுற்ற ருன்போலும் வேதனுமங்—காருமங்க
ணன்னவர்பா லேகி யறைவவென்று சூர்க்குமஞ்சித்
தன்னுதய ரோடடைந்தார் சூழ்ந்து. (உஅ)

அந்தவரை தண்ணி லமரர் செலுங்காலைக்
கந்தவேள் செய்யாடல் கண்டன்ன—சந்தவரு
வுந்துபுல னுற்காணு துள்ளத் திடருற்ற
விந்தி ரனைக் கண்டா னெதிர். (உக)

மகவான்முன் னெய்தி வணங்கியங்கண் வைகித்
தகவா ருலகுவிண்ணிற் சார்ந்த—தொகைநிலைமை
யாவுந் திரிய வெவர்செய்தார் தேர்ந்திலஞ்சூர்
மேவுதொழி லல்லென் றூர் வேர்த்து. (ஙo)

வானவர்கோ னன்னவர்த மாற்றந் தனைக்கேளா
யானுமிவ்வா றேர்ந்திருந்தே னின்னதிறை—யேனுமே
தேரே னதனைத் தெரியவே வேண்டினயன்
சாரேகிக் கேட்பமென்றூர் சார்ந்து. (ஙக)

விண்ணவர்கோ ஞதியர்தா மெய்த்தவஞ்செய் நீராற்சீ
ரண்ணுலகி லாகு மமுமுகவ—ணண்ணு
மழகுகுடி கொண்டருளு மானனந்தா னெஞ்றிற்
குழவியெனத் தோன்றினனக் குன்று. (ஙஉ)

அந்தரத்தோர் தன்பறத்த னுதுசெய்கை நாட்டவந்த
சுந்தரத்தோ ளண்ணல் சுடர்மேரு —மந்தரத்தின்
சோடு பறித்தெறிந்தான் கோகனக மாமலரி
னோடு பறித்தெறிவா ரின். (நக)

தேதான் றுகுகன் றனனைச் சுரர்முதலோர் கண்டவனி
வான்றிரிபு செய்தோனீ மருவிவனே—யான்ற
முகவென்று கொள்கிலேம் வண்மைதனை நாடி
னிகலவுண ரின்வெய்ய னே. (நச)

மற்றெவரு மெய்தாத மாய முளலிவனைக்
கொற்றவமர் செய்தாடல் கொள்வமெனு—முற்றிநின்ரு
ரன்னபோ தண்டர்கோ னோரா வதக்களிற்றை
யுன்னவே வந்ததவ ணுற்று. (நஞ)

அந்தமா மேற்போந் தடல்வச் சிரமொள்வாள்
குந்தம்வில் கொண்டிகல்செய் கோலமெய்தி—மைந்தன்
பகல்செயணி பூண்குகன்மேற் பார்த்திபனே டும்ப
ரிகல்செய்ய வுற்ரு ரெதிர்ந்து. (நசு)

அவ்வேளை யண்செவ்வே னக்தரத்தில் வாழமரர்
தெவ்வே யெனச்சூழ் திறனேகுகிச—செவ்வே
நகைத்தொன்று மெண்ணுமே நண்ணுந்த னுட
றகைத்திற் புரிந்தனனே தான். (நஎ)

மெண்படைக டம்மு ளெறிவவெலாந் தொட்டமரர்
நண்படைக ளோடு நனிதூர்க்கத்—திண்படைகள்
மட்டார்ந்த போதின் மருவவே வசிரத்தை
விட்டான் குமான்மேல் வேந்து (நஅ)

ரங்குவிழை வானதந்தா னுர்ந்து. (கஅஎ)

தெய்வதகாள் கோள்சிறந்த தேத்தமா வைதிகமுஞ்
சைவமுமெஞ் ஞான்றுந் தழைத்தோங்கப்—பைவை
கறைமிடற்ரூன் ரூய கருணையினூர் சேயைப்
பொறையுயிர்த்தாள் பூவை புரிந்து. (கஅஅ)

தாதையது கேளாத் தனிக்கங்கை நீராடி
வேதியர்முன் னேவருக்கும் வித்தநல்கப்—போதமர்வோன்
பார்க்கண் டாரணி படவருசேய்க் கோர்நாம
மார்க்கண்ட னென்றுசெய்தான் வந்து. (கஅக)

மைந்தன் மதிபோல் வளர மதிதோறு
மும்து கடன்புரிந்தாண் டொன்றிரண்டோ—டைந்தினல்லோ
ரோதியவா ரூற்றிமுன்னு லோதியுணர்ந் தெப்பொருட்கு
மாதிசிவ னென்றுணர்ந்தா னுங்கு. (ககஅ)

சங்கரனைத் தாழ்ந்தடியார் தம்மைப் பணிந்தாசான்
பங்கயத்தாள் போற்றிப்பயந்தவரை—யங்கிறைஞ்சி
மாணியியன் மாரூமே மன்பிரம மாவொழுக்கம்
பேணி யிருந்தான் பெரிது. (ககக)

இவ்வா றியலும்போ தெண்ணிரண்டா மாண்டுவரத்
தெவ்வ: மெனவிருவர் தேர்ந்தமன -- கொவ்வா
விருந்தனர்சே யாங்கதணர்ந் தென்னிமித்த நீவிர்
வருந்துவது சொல்லிரென்ரு மற்று. (கஉ)

அன்னதுதேர்ந் தங்குமர வத்த னினக்களித்த
முன்னுபதி ஞரண்டு முற்றியதா—லின்னலுற்றே
மென்ன வவரினையீ ரீசனேப்பூ சித்துவல்லே
தென்னவனே வெல்வனென்ரு சேய். (கக)

ஈங்கிருத்தி ரென்னுப்பல் லேதுவினுற் றேற்றியன்னர்
பூங்கழல்க டாழமகற் புல்லிமகிழ்ந்—தாங்கிருப்ப
வாரா லயமா மருவுமணி கன்றிகையாம்
பேரா லயம்புக்கான் பேர்ந்து. (கக)

அன்பா றெனக்கண்ணீ ராகவலம் வந்தீசன்
முன்பாகத் தாழ்ந்து முறையேயத்தித்—தென்பாற்
றிருந்தொருசா ரெய்திச் சிவவருச்செய் தர்ச்சித்
தருந்தவஞ்செய் திட்டா னவன். (கஎ)

ஈசனங்க னெய்திநினக் கென்னவரம் வேண்டுமென
நேச னடிபணிந்து நின்மலயான்—பாசதரன்
கையுரு தாள்கெனலுங் கான்முடிவைத் தஞ்சலீ
யைய வெனமறைந்தா னுங்கு. (கஅ)

பின்னரருண் மைந்தனுக்குப் பேரிடுமாண் டெண்ணிரண்டுந்
துன்னுமன் றூதுவன்முன் ரோன்றவான்—மன்னடியான்
பூசனைகண் டஞ்சியே போயினன்றன் ஞயகன்பாற்
றேசனையன் செய்கைசொலத் தேர்ந்து. (கக)

சென்றுதூ தன்றென் றிசைக்கா வலற்ரெழுது
நின்ற னுரைப்படிபோய் நேடனையான்—குன்றவில்லி
பூசனை செய்கினரான் பூசுரான்மார்க் கண்டனெழிற்
காசியிலுள் ளானென்ரு ன் காண். (கஅ)

அன்னேன் றனையணுக வஞ்சினே னஞ்சயின்ற
முன்னே னருளுடையோன் முன்னுதிநீ—மன்னே
வெனநங் காணிகரை யீங்கழைமி னென்ரு ன்
சினமன் னியமன் சிவந்து. (கக)

அஞ்சித் திரகுத்த ரஞ்சியடி தாழுமன்
வஞ்சியிடத் தாற்பரசு மார்க்கண்டன்—தஞ்சுவரை
யென்றெனநன் கேத்தி யிருவோரு மேட்டினேப்பார்த்
தென்றுமக நென்னலென்ரு ரீங்கு. (கஉ)

ஐயவ னர்ச்சனைசெய் தண்ணியம்மா புண்ணியத்தாற்
றுய்யவிரும் பெய்தலன்றிச் சொல்லரிய—வெய்யதாக்
தீநரகெய் தானிஃது திண்ணமென்ரூர் தங்குறிப்பே
டான கணக்கினையா ராய்ந்து. (கஉக)

காலனமைச்சனுவ காலன் றனைவிளித்து
ஞாலமுறு காரியின்க ணன்மறையோன்—பாலனுயிர்
கல்கெனலு மங்கவன்போய் நற்றவன்செய் பூசைகண்டு
வெல்குணமில் லென்றுணர்ந்தான் வேர்த்து. (கஉஉ)

ஏர்மைந் தனைத்தொழுதான் யாரைநீ சொல்கெனலு
கார்மெய்ந் நமற்றொழுஉம் காலன்யான்—சார்வதிங்க
னென்னினைக் கேய்ந்தவய தெண்ணிரண்டு மேகியதே
நென்னலோ டென்று னெடிது. (கஉங)

தடைசெய் பவரார் சமைப்பளிப்பு வீப்பு
விடையனருள் வேலை விதித்தான்—படைமறவி
யொன் றுமுன்னீ ரந்தகனு குற்றீரேல் வான்பதவி
கன்றுதவு மென்று னயந்து. (கஉச)

அன்னதுகேட் டீசனன்ப ரார்விண் பதம்போகார்
கொன்னமன்ற னூருங் குறுகார்சீர்—மன்னுஞ்
சிவபதஞ்சார் வார்யானுஞ் சிந்தியென் வேறு
தவறிலேன் போதியென்றான் முன். (கஉஞ)

காலனும்போய்க் கூற்றவனைக் கண்டு நிகழ்ந்தவெலா
மேலவுரைக் கக்கண் ணெரிசொரியச்—சாலவே
சீற்றங் கொடுவெங் நிறன்மேதி மேலிவர்ந்தே
யாற்றலொடு வந்தா னடுத்து. (கஉசு)

நீல நிறமு நிவரம்போ லீள்வடிவுஞ்
சூல முறுகரமுந் தோன்றவே—பாலனெதிர்
நின்ரு னமன்சீர் நினைந்திறைஞ்சி ஞன்புரத்தை
வென்ரூன் மலரடியில் வீழ்ந்து. (கஉள)

மைந்தநீ யூழின் வலியுமான் சொல்லாலுஞ்
சிந்தனைசெய் கில்லாய் சிறிதுமிஃ—தந்தவர்க்கும்
போக்கவரி தேயீசன் பூசனையென் பாசமதை
நீக்குமோ வென்று னெடிது. (கஉஅ)

அத்திமண லெண்ணினுமென் ஞானயின்மா ளிந்திரனை
யித்தனைபே ரென்றே யுணலாமோ—நத்தன்
றனக்கு மலரோன் றனக்குமெற்கு மூண்டே
யுனக்கும் பிறப்பொடிறப் புண்டு. (கஉக)

வாச மலர்தாய் வழிபட்டு மாபதியாற்
பேசிறைமைக் கேற்றபடை பெற்றனே—னீசற்றுந்
தள்ளுறிலே யேவரையுஞ் சூழ்தென் புலமுய்ப்பே
னென்பினே கென்ரு னினிது. (கஉ0)

மைந்தனது கேட்டு மறலிகே ளீசனண்ப
ரந்தமுறிற் கைலே யடைவரன்றி—நந்தமயன்
மன்பதமு மேவார்மால் வான்பதமு மேவாரே
யுன்பதமு மேவா ருவந்து. (கஉக)

அன்ஞர் தகையறிவா ராரயன்மா லாதியரை
யுண்ஞ ரானையே யுன்குவா—ரெங்காளுந்
துன்பமே யில்லார் திறந்தே தலேநிற்பா
ரின்பமே யெய்துவா ரீங்கு. (கஉஉ)

சிவநேயச் செல்வர் திறன்றெரியாய் ஞாலத்
தவர்போ னினைந்தாய் சமனே—யவமேகீ
யென்ஞ ருயிர்க்குமிட ரெண்ணிஞ யிங்கிலைதா
னுன்ஞ ருயிர்க்கொழிவென ரோர். (கஉங)

தீதாய் தருசொல் செவியேறச் செப்பினுய்ப்
பேதாய் நீ முன்னின்று பேசாமே—போதா
யெனமைந்தன் கூற வியமனிரு கண்ணுங்
கனலுகவே பார்த்தான் கறுத்து. (கஉச)

பாசந் தனையெடுத்துப் பாலகன்றன் மேலெறிய
நேசமுளான் கண்ணுதரு ணீழலுற—வீசன்ருன்
மார்க்கண்டன் முன்ரோன்றி மைந்தவுன்சே னின்றுன்பந்
தீர்க்கின்ரு மென்ரு னெரிந்து. (கஉஞ)

மைந்த னிடரு மறலியிறு மாப்புநந்தச்
சிந்தைதனி லுன்னித் திருவருள்கூர்ந்—தெந்தைபிரான்
சீற்றங் கொடுவாமச் சேவடியி லுலுதைத்தான்
கூற்றன் விழுந்தான் குலேந்து. (கஉசு)

வீழும்போ தவனி வெரின்கீண் டதுமால்
கொழும்போத ஞதியர்மால் கொண்டா—ரெழும்போத
வாழ்வேலே யார்த்திலபல் லண்ட மனேத்துமே
கீழ்மேலா யுற்ற கிளர்ந்து. (கஉஎ)

பாளின்ற தானே பகரும்பார் வீழ்ந்திறந்த
தானவுயிர் காப்பா னாளுண்டா—னீனிறங்கொள்
கூற்றனென்செய் வானென்ஞக் கோதில்வட மொழியாற்
போற்றல் புரிந்தான் புரிந்து. (கஉஅ)

பாலநீ பூசனைசெய் பான்மையினிற் காயுனெந்தக்
காலமுநந் தாதனித்தாங் காணெண்ணச்—சீலமொடு
பூசைசெய்சம் புக்கிடையிற் பொற்பிற் குறுகிஞ
னீசனென் சோமா னினிது. (கஉ.கூ)

தீந்தைதாய் தாடழுவித் தாழ்ந்தவருண் ணேய்மாற்றி
யுந்து சிலபகலங் குற்றிருந்து—நந்துமன்பி
னத்தனம ராலயங்க ளத்தனையுஞ் சூழ்ச்சேதத்தி
முத்தியெய்தி ஞன்மா முனி. (கசo)

நீற்றவஞ்செய் தாரு ணனிகல்லன் மூவுலகு
மற்றவன்மீ ரென்றும் வயங்குமல—ருற்றவுமும்
பொற்பதுமை மேல்வலுமீ மபொன்ற வவன்கண்ட
கற்பங் கணுக்கில்லை காண். (கசக)

அன்னுற் கலக்கண்செ யத்தகனு மந்தமுறப்
பன்னுக மன்சுமந்த பாரினுயிர்—மன்னு
வளர்ந்துமடி வின்றிமல்க வம்பரத்ச்சாற் பூமான்
றளர்ந்தரிதாள் வீழ்ந்தறைந்தா டான். (கசஉ)

மாலபனும் வாசவனு மன்கயிலைக் கேகியங்க
னீலகண்டன் ரூள்பணிந்து நின்றேத்த—வேலவே
மாயவனே நோக்கினீர் வந்ததென்கொ லென்னவன்ஞன்
றாயவற்குச் சொல்வான் றுதித்து. (கசங)

ஐயினி தாணையா லம்புயத்தோ ஞகியர்நஞ்
செய்யதொழில் போற்றினுர் சேவடியா—லுய்யவே
சீறு நமன்றனைநீ செற்றமையா ஞயேற்குக்
கூற வுளதோர் குறை. (கசச)

வையமகண் மன்னுயிர்கண் மாய்வின்றி யைகனனி
பையுளற்றூள் பாரம் பரிப்பதனு—லேய
செறுத்தனீ தேர்வின்றித் தென்னவன்செய் தீமை
பொறுத்தவற்பே ணென்றுன் புரிந்து (கசஎ)

செங்கண்மால் வேண்டத் திருவருள்கூர்ந் தெம்பெருமா
னிங்கந் தகநீ யெழுகென்ன—வங்கண்
வளர்ந்தவன்றுன் போன்றெழுந்து வந்தரன்ரூள் போற்றித்
தளர்ந்தனனுய்ந் தேனென்றுன் ரூழ்ந்து. (கசசு)

அம்மையப்ப னந்தகற்பார்த் தண்மணிவெண் ணீறுபுனைந்
தெம்மை நினைபவர்பா லேகலநீ—செம்மனநந்
தொண்டரையா மென்னத் தனிதியன்ஞர் சேர்பட்டாற்
கண்டவர்தாள் வீழ்தி கடிது. (கசஏ)

புந்திசொன்மெய் யாரூப் புரிபுண் ணியபவத்தா
ரந்தரமேல் கீழாக வாற்றுதியென்—றெந்தைபிரா
னின்பாடையோ டேகெனமா னேடடிதாழ்ந் தூரடைந்தான்
கொன்பாடையோ சேர்பகடுங் கொண்டு. (கசஅ)

தென்றிசைக்கோன் போய்த்தன் செயல்புரிந்தான் தேவரெலாம்
பொன்றலிலான் ரூள்பணிந்து பொற்கயிலைக்—குன்றினின்று
தத்தமிடஞ் சென்றார் சான்படரான் மார்க்கண்டன்
மொய்த்தவருட் காதைசொல்வார் முன். (கசக)

ஆதலினற் குச்சகனென் ரூரணங்கி ஞவிதந்தான்
போதகமெய் நீக்கிவிண் போக்கினன்—மாதவத்திற்
போகா மறலிவலி போக்கியே மார்க்கண்டன்
சாகா வரம்பெற்ரூன் ரூன். (கஙி)

மார்க்கண்டேயப் படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா ஒ கூ.

மாயையுபதேசப் படலம்.

ஆயதண்மை யாமறிதி ராற்றுநோன் பின்னுமுண்டென்
றேயமுனி கூற வினிதுநகு—மாயவணன்
மாமுனிவ விவ்வுறுதி மாமுனிவர்க் காகவிறல்
நாமருள்வார்க் காங்கொலோ நன்கு. (க)

மேவியலார் செல்வமின்பம் வெற்றிநிறை யாயுள்சீர்
மாவியலார் வாழ்க்கையிவை மைந்கரெய்த—நீவருத்தி
மாமுனிவ வென்னவிதன் மன்னுசருத் தேவவருக்
காமியல்பு சொற்றியென்ரு ஞங்கு. (உ)

தேதெரழியா மாயவடன் செல்வர் தமைநோக்கி
மாமுனிவன் கூறியது வாய்மையே—யாமவைதா
மூங்களியற் காவுதன்று ளொன்றிரீர் கேண்மினென
வங்கவர்க்குச் சொல்வா ளமர்ந்து. (ங)

மெயனூறு புந்தியின்கண் மன்சே தனம்பல்
லியனூறு மின்னுபிர்கட் கெல்லாம்—பயனூறு
மர்தருவண் கல்விதளி லாக்கத்தின் மேலொன்று
சீர்தருவ தில்லை சிறந்து. (சு)

இருமைத் திருவிலொன்றை யெய்சா வுயிரின்
மெய்ருமைத்த பேயின் பிறப்பே—யருமையாங்
கல்வியின்மேம் பட்டுக் கவினச் சிறந்ததே
செல்வமெனச் செப்பலாந் தேர்ந்து (நி)

பன்னரிய மாநூல் பயின்றுகேலே தேர்ந்துலகி
லின்னரைநேர் வாரில் லெனவிசைகொண்—டென்னபய
னேய்நல் லிருநிதிய மெய்தாரை யெய்தியென்றுங்
காய்நல் குரவுற்றக் கால். (க)

அளவின்மாக் கல்வி யறிவொழுக்கஞ் சீர்த்தி
பளகில் குணமாப் பயன்க—ளுளதேறு
மேலதா மாநிதிய மேவாக்கா லன்னவரை
ஞாலகனி கூறு நவை (எ)

தெருளுடைய சேணுந் திறலுடைய சேறு
மருளுடைய சேறு மவர்தாம்—பொருளுடைய
ரில்லாரே லீன்றரு மில்லாளு மேய்ந்தவரு
மெல்லாருஞ் சொல்வா ரிழுக்கு. (அ)

ஆக்க மடையநினை வாராகி லாங்கவருக்
கூக்க முறவன்ன தண்டாகு—மீக்கொள்ளு
மந்தவளம் பல்வகைத்தா மாரும் பெறுகிலர்நீர்
சிக்தைசெய்மின் மேவுந் திரு. (கூ)

நிருநலின்யா மந்தோன்று நீர்மையினுற் றுங்க
நிருதர் கதியுற்றீர் நீவீர்—கருதுமுங்கட்
கொன்னு ருயர்சுரா மோது மூவர்முயற்சி
தன்னுற் றலைமைபெற்றார் தாம். (கo)

மாவிமையோர் தம்மினீர் மாட்சி நனிபெறுவீர்
மூவிரும்யாங் கூறு முறைமுயல்வீர்—மேவுதிக்கி
லானவா லந்தீ வதனுதக்கார் பூமியது
தானவர்க ணேற்குந் தகைத்து. (கக)

ஆயிடையமீ தாற்ற வளவில் சனத்தொடுபோய்
மேயருண்ட மாதிசெய்து வேள்வியின்கட்—டீயவாக
காரிகொள்வெங் காட்டமிட்டுக் காயெரிசேர்த் தூனெய்த்தோர்
மாரியிற்பெய் தாற்றீர் மகம். (கஉ)

அம்மை வரற்குறித்தே யவ்வேள்வி யாற்றுதிரோ
விம்மையினீ ரெய்துவரு யாவுங்கள்குஞ்—செம்மையின்
மூவிருமங் கட்போய் முயலவதற் காகுவன
மேவி யருள்வனென்றுள் வேட்டு. (கங)

தீந்திரதூ லாறுந் தனிமந் திரம்யாவு
மிந்திரசெல் வங்கொ ளிடலுமுள்ளு—கந்தறைந்தான்
பொன்னவணன் மாமுனிதாள் போற்றிவிடை பெற்றுமுன்னோன்
பின்னவரோ டேகினான் பேர்ந்து. (கச)

மாயையுபதேசப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா உரு0.

மாயை நீங்கு படலம்.

ஆங்கவண ரேகவணங் கம்முனியை நோக்கியினி
யீங்கிரேன் செல்வரைப்பே ணெண்ணங்கொண்—டேங்கலெனப்
போதியோ வென்னைவிட்டுப் பூங்கொடியே நீயேக
லீதியோ வென்ரு னினைந்து. (க)

சேயிழையான் சேய்பெறநிற் சேர்ந்ததன்றிச் சேரவன்று
மாயையறி கென்ன மறைந்தகன்ரு—யேமுனி
வன்ஞள் செலவவளோ டாயபொருள் போயதணர்ந்
தன்ரு வுளைந்தா னுளத்து. (உ)

சாரோதி மாயை கலினுருவங் காணுமப்
பேரோதிக் காசிபன்ரான் பேதுறுங்கா—லாரோதி
மத்தன் மகன்றுயரான் வாடினமை நாடியே
யத்தநெறி வந்தா னணைந்து. (ங)

செந்தா மரைப்புத்தேள் சேணுறத்தன் ரூதையென்ரோர்ந்
தந்தா விறைஞ்சவன்ரு ஞசிசொலி—மைந்தா
நினதரிய நோன்பிழந்து நீமெலிவு பெய்கொ
லெனநிகழ்ந்த சொற்ரு னினைந்து. (ச)

ஆரணதூ லெல்லா மறிந்தமுனி நீபிறர்போற்
காரிகையை மேவிக் கவன்றனோ—லோரும்படத்
துண்டழிக்குங் கள்ளி னுறநோக்கி ஞவியையுங்
கொண்டழிக்குங் காமங் கொடிது. (ஙி)

ரூரகதச்செந் தீக்குக் கொடும்பகையாய்ப் பொல்லா
நரகதச்செந் தீயினுக்கு ஈட்பா—யுரகதத்தின்
சேர்ந்தாற் கொலுந்தியிற் றீயதே சேராமே
தீர்ந்தார்க் கொலுங்காமத் தீ. (சு)

காமங் களவுபொய் கள்ளுண்ணற் சேதுவாங்
காமங் கடுநரகின் கண்ணுய்க்கு—மேமனுங்
காமம் பிறவிக்குக் காரணமாய் வீற்குமதாங்
காம மெவைக்குங் கரு. (எ)

ஆதலின்வெங் காமத் தழுங்கனீ கூடணங்கு
மோதருமா மாயையென வோர்கிலாய்—மாதவமே
போற்று கெனநிபீ இப்போது ணரற்கருகி
நோற்றணன்மெய்ந் நூலோ னுனித்து. (அ)

ஆங்கதலு மாயை யருள்புதல்வர் செய்மகத்திற்
கோங்குபொருள் யாவு முதவுவான்—நீங்கினரை
வேண்டான் கழல்போற்றி வெங்குருவி னேவலாற்
பூண்டா டவமே புரிந்து. (கூ)

மாயை நீங்கு படலம் முற்றிற்று
ஆ திருவெண்பா உ நிகூ.

அசுரர்யாகப் படலம்.

அன்னயறை யாகமுறை யாற்றநினைந் தேகியசூர்
பின்னவரை நோக்கிமகம் பெட்டெளற்ற—வன்னதக்கின்
மன்னிப் படைசெலுங்கான் மல்குகடை நெறறியின்கட்
டுன்னிப் படர்திரென்னுன் சூழ்ந்து. (க)

நின்றென்று தாழ்ந்தனிக நண்கூழை நெற்றினிற்
றுன்றுமிரு வோமுமுறை சூழ்ந்துசெல்வ—மென்று
விடைகொண்டு சென்றூர் விரைந்தவர்செல் லாறை
படைவெள்ளஞ் சென்ற பரந்து. (உ)

தேர்துளங்க வீவுருந் தனியிப் படையதிர்ப்பாற்
பார்துளங்க வன்னதாற் பன்னருமுங்—நீர்துளங்க
மாமை மணிச்சேடன் மன்னு முடிதளங்க
வாமை துளங்கிற் றயர்ந்து. (ஙு)

இந்திரனே யாதியா மெண்டிசைகாப் பாளரெலாந்
தந்திறல்கொள் காவ றலீர்ந்துகொந்தா—ரந்தரமேல்
வாழ்வார்வான் காற்றெதிரின் மன்னேர் தருவினின்று
வீழ்வார்போன் மெய்வீதிர்ந்தார் வேர்த்து. (ச)

ஆழிமீப் போர்த்துப் புகலருமா வான்மறைப்ப
வாழி யுடைந்ததுபோ லார்ப்புமிக—ஆழிக்
கண்டவெள்ள மென்று கலக்க வுலகம்
படைவெள்ளம் பேர்த்த பரந்து. (இ)

செல்லுங் திறலவுணர் சேனையின்முன் சீயமுகன்
வெல்லு மிடற்கூழை வேழமுக—ஞெல்லும்
படியேகச் சூர பதமனென்போ ஞப்பட்
கடியேறச் சென்றான் களித்து. (ஈ)

மல்கவுணர் வாளெயிறும் வான்குடையுங் கூன்மதியம்
பல்கலையுஞ் சேர்மதியின் பண்பேய்ப்ப—செல்படையைப்
பண்டா ரெவருமிந்தப் பான்மையில ரென்றுபுகர்
கண்டான் வியந்தாள் களித்து. (எ)

செல்கின்ற வீரர் திறலும் பெருமிடலும்
வெல்கின்ற மாவிகலும் வேறுளவு—மல்கத்
தெரிவுற் றடர்ந்துபுகா தேவரிவர்க் காணி
னிரிவுற் றகல்வரென்று னீங்கு. (அ)

இவர்வன்மைக் கீறில்லை யேனுமுன்னோர் போற்செய்
தவம்வரமே யாதிகொளாத் தாழ்வுண்—டெவர்க்கமக்கு
மோதுகுறை வொவ்வொன் றுளதா மதற்குறுசீர்க்
காதிசே யாருங் கரி. (கு)

என்றிசைத்து நின்றவுணர்க் கேந்தலாஞ் சூரபன்மன்
முன்றகவி னேக முகமனுரை-—நன்றியம்ப
முன்னினன்போய் வெந்தருவன் முன்னுறவும் பேசிடவு
முன்னினனோர் விஞ்சை யுளத்து. (கூ)

மின்னு முயிரை வரிசரிச்சு மந்தணமான்
முன்னி விதியி னுறநோக்கித்—தன்னளிக
வாழியிடைப் புக்கவுன ரஞ்சலிக்க மூவர்முன்
னூழினவில் வானுஞி யோர்த்து. (கசு)

இந்திரன்மூற் றேவர்க்கு மேவர்க்கு மேலாதி
வெந்திறல்கொள் வாளவுணர் வேந்தவென—மூந்துலகி
லெந்தவுல கத்தையோ வெந்தையே யாரைநீ
வந்ததென்கொல் சொல்லையென்றான் மன். (கஎ)

நின்பா லெனதுள்ள நெக்குருகா நிற்குமா
லன்பா லுலக மளிக்குமன்னே—முன்பாற்
றமியே னிழைத்த தவவலிமை யன்றே
வினையே நினையெதிர்ந்தே னீங்கு. (கஅ)

னெமழைக்கோள் கேளா விருவிசும்பிற் செல்வே
னுணதுமா பிற்குருவா யுற்றே—னுனுமோர்
புகரெனுநா மம்பெற்றேன் போற்றுறுதி யொன்று
பகரவந்தே னென்னுன் பரிந்து. (கஎ)

தானவர்கோன் கேட்டுவந்தெந் தாயுய்ந் தனனென்னு
வானவெள்ளி தாள்பணிய வன்பினன்னுன்—மானவ டக்
குந்து தவக்கிடையு ரென்னுர் செயாவண்ண
மந்திரமொன் றீந்தான் மதித்து. (கஏ)

நிமன்றனெவென் மந்திரத்தை நல்கியிதை நாளு
மமர்ந்துன்னி மாதவனீ யாற்றுய்—நிமிர
வெனநவில வன்னவற்றுந் தேத்தவெள்ளி யாசி
மனநவின்று சென்றுன் மகிழ்ந்து. (கசு)

மரியவடன் மைந்தன் வடபுலத் தேகிவடத்
தூயவனச் சூழலுற்றுச் சொன்மகத்திற்—காயமதி
லாதி யுறுப்பயுத மாம்யோ சனையளவின்
மாதிகிரி கொண்டமைத்தான் மற்று. (கஐ)

சுற்று மதிலைச் சுலவத்தன் ருனேதனை
புற்றவர ணுக வுளற்றுவித் து—விற்றயங்க
நாற்புறமும் வாய்த னவிற்றியதிற் போர்மாதை
யேற்புறவே வைத்தா னினிது. (கக)

கோ வுயர்வெற் பாலமைத்த கூரெழில்கொள் வாரிமுன்சீர்
மேவவுணர் கோனியற்றும் வேள்விக்குக்—காவலா
யாளியூர் காளி யினநிறீ இப் போற்றிவைத்தான்
ஞாளியூர் வைரவரை நன்கு. (கங)

மின்னதலு ளாயிரமெண் மாயோ சனைநீள
முன்னுவதோ ராழமுள வோமகுண்டத்—துன்னதைச்சூழ்
வேதிபுரி வித்தனன்மன் மேதினிமா துண்மெலிந்தா
ளாதியரா வச்சமுற்ரு னுங்கு. (உ ०)

கூடாதலர் சோர்புறச்செய் குண்டமுற்ற நூறுடனெட்
டாரவதைச் சூழ்வேதி யாயிரத்தெட்—டோடமரச்
செய்வித் தெழிற்ருயைச் சிந்தித்தான் செய்பொருள்கள்
பெய்வித் தருள்வான் பெரிது. (உக)

மாயவளெங் கோனருளான் மன்னியம் வேங்கையெண்கு
பாய்சுவம் யாடாதி பன்மிருகந்—தூய
வவிர்புழுக்க லின்னூ னவிநேமி மெய்யி
லிவர்குருதி வாரிபெய்தா ளேய்ந்து. (உஉ)

மாசுபடு மெண்ணெய் மதலிழுது பாறையிராம்
வீசலைய நீத்தம்வெவ் வேறமைத்தாள்—பேசுகறி
யையலியோ டேன்மா வசலம் பசுயாவு
தையவொவ்வோர் பானிறைத்தாள் சூழ்ந்து. (உக)

இருகா யகவேதி யின்னடவே ணுட்ட
வொருவச் சிரக்ம்ப முய்த்தா—ளுருகெலரி
தார்மன் னரிசனந்தோய் தண்டுலநன் மான்மதஞ்சீ
ரார்தருப்பை சேர்வித்தா ளாங்கு. (உச)

சார்வெவ் விடங்கால் சமிதைபொரி யொண்முதிரைக்
கூர்திரள்கள் யாவுங் குலவிடவே—யோர்மும்மை
யாயிரமா யோசனைத்தேத் தாரவுய்த்தா ளாயினியான்
மேயிழைப்பேன் வேள்வியென்ரு ன் வேந்து. (உடு)

மன்வே தியினுப்பண் வச்சிரமா கம்பநிறீ இப்
பின்வேள்வி யாற்றிடநாற் பேர்வாயி—லுன்வீர
மாதுபேய் பூதர் வயிரவர்க்கு மர்ச்சனையிற்
போதநல்கி ஞன்பலிகள் போந்து. (உசு)

மேவா யிரத்தெட்டு வேதிதொறு நாப்பணச்சுத்
தீவாய் சமிதையிட்டுத் தீமூட்டி—மூவாத
தகமைபெறு வெஞ்சூரன் றம்பிமா ரோடு
மகமியற்ற நேர்ந்தான் மகிழ்ந்து (உஎ)

ஊனவியின்வர்க்க முதவு தொம்பான்பேர்
வானெறியிற் கூறியன்ஞன் மாட்டுறவுப்—தானலெய்
பின்ரு ரகற்பாராப் பேர்வலிடோ யிவ்வேள்வி
குன்ரு மற் போற்றுகென்ரு ன் கூர்ந்து. (உஅ)

ஓதியவாம் பன்முகனே யுங்கிருத்தி நூற்றெட்டு
வேதிதொடர் வேள்வி விழைந்தியற்றிக்—கோதிலாள்
சியமுகற் பாராத் திண்டிறலோ யிம்மகநீ
நேயமொ டாற்றென்ரு ளின்று. (உக)

அரிவெம் முகத்தானை யங்கிருத்திச் சூர
னுரியதன்மா வேதியின்க ணுற்றுப்—பரிவின்
விதியினருச் சித்து விமலனெஞ் சத்து
மதியி னினைந்தான் மகிழ்ந்து. (ஈ0)

நிச்சார் தருச்சமிதை நண்வேதி யிற்றூவி
வெச்சா ராணியிற்கொள் வெந்தழலிட்—டசசார
மந்திரத்தின் வானிழுது மாமழைபெய் தங்குழிசி
யுந்தரத்த மூனுய்த்தா னுற்று. (ஈக)

மகவெங் கழன்மேன் மடைநெயெண்ணெய் சோரி
நகுபா றதிபொரிமு னல்லித்—தகுதைபெய்
தைவணீ வாரமென் னாகி முதிரைவர்க்கம்
பெய்து வளர்த்தான் பெரிது. (கூ உ)

இன்ன வகையியல்பி னீசன் றனையுன்னி
மன்னவுணர் கோன்பேர் வளஞ்சுட்டி—யுன்னரிய
வீரமுறு வேள்வி தனை வேட்டலுந்தி விண்புவியச்
சாரவெழு கந்த தகிர்ந்து (கூ ங)

ளென்று பதவிசுட்ட நிந்துபதஞ் சுட்டதுமீ
னென்றறைவோர் தம்பதஞ்சுட் டிந்திரனூர்—துன்றுபதந்
தாயதன்மை லோர்பதமுந் தான்சுட்ட தேதமுனிவன்
சேயுரைத்து மாமகச்செந் தீ. (கூ சு)

மண்போர்த் ததுசுலவ மாதிரங்கள் போர்த்ததுமேல்
விண்போர்த் ததுமால் விரிஞ்சனமர்—கண்போர்த்த
தார்த்து வருவிடத்தி னப்புகைபோ லெப்புறமும்
போர்த்ததுத வேள்விப் புகை. (கூ நு)

சூர்வேதி யிவ்வணந்தீத் தன்னவன் பின்வந்தெதிர்
பேர்வேதி யெட்டிலக்கம் பேதஞ்செய்—தோர்வே
மனலூழித் தீயினதிர்ந்தெரிய வாவேஞர்
மனன்கேட் டுலர்ந்தான் மனன். (கூ கூ)

பார்விண் ணடுங்கப் பதினா யிரமாண்டு
சூர்தன் னிளைருதொடு ழுமக—மார்தரவே
கண்டுமவன் முன்னிறையோன் காட்சி தராமையினால்
விண்டடலமேற் சென்றான் விரைந்து. (கூ ஙு)

மானின்று சுவன்கை வாள்கொண்டே யீர்ந்துதன்மெ
யூனினைத்தீ மேலவியி ஞெய்கிலெய்த்தோ—ரானவிழு
தென்னவிட் டாற்றமெப்பு னீரமுன்போ லாகவிண்ணே
ரின்னரஞ்ச வார்த்தா னெழுந்து. (கூ அ)

உள்ள முறுமகிழ்ச்சி யுற்றிச் செயலெந்தை
வள்ளலரு ளென்ன மனத்தெண்ணிக்—கொள்ளுமக
மோரா யிரமாண் டுஞற்றியுமா தேவனங்கு
வாராமை யாற்றுணிந்தான் மாய்வு. (கூ கூ)

உன்வகையிற் றூயருளா லோங்குகுண்ட நள்வதிந்து
மின்வச் சிரகம்ப மேற்குதித்தான்—கொன்முனையி
னின்றுருவி யக்கம்ப நீளடியிற் சென்றமையாற்
ஞன்றுடரூ ளாய்முடிந்தான் சூர். (சூ ஐ)

சிங்கமுகன் காணுத் தெருமந் தளம்பதையாச்
செங்கணின்று சோரிசீர் சிந்தவா—யங்கையொரு
குண்டத் தொழின்மறந்த கூருயிர்ப்பின் மையுணர்ந்தே,
ருண்டுகொலோ வென்ரு ருயிர். (சக)

ஆர்துயர வாழியின்க ணுழ்ந்தயர்ந்து தொல்லுணர்ச்சி
சார்தரவே மாயை தருமகனே—பேர்மகநீ
பன்னுட்செய் துற்ற பயனிதுவோ வெங்கொளித்தா
யெந்ரு ணினைக்காண்பேன் யான். (சஉ)

சூரனென நின்பேர் சொலினெவர்தாஞ் சூருரூர்
வீரனினைப் போலிவ் வியனுலகில்—யாருளா
ரிந்திரனு நீயிறக்க வின்னறவிர்ந் தின்புற்ரூன்
வெந்தயர்ந்தோம் யாங்கண் மெலிந்து. (சங)

கூற்ற னுயிர்கவர்ந்த சோமானை யுட்டழீஇ
யாற்றவுநீ நோற்றிறந்தா யந்தோமுன்—சாற்று
புறந்தழீஇ யேற்ற புரமெரித்த காதை
மறந்தனையோ மன்னு மருண்டு. (சச)

இன்னபல சொல்லி யிரங்கி யரிமுகத்தோ
ளின்னருளி ளல்கா யினைக்காண்—தின்னலுறு
கன்றெனவீழ் தந்துலையக் கண்டுதிறற் ரூகனுங்
குன்றெனவீழ் தந்தான் குலைந்து. (சரி)

வீழ்ந்துயிர்த்துத் தாரகன்ரூன் வேள்விக் களமுழுதுஞ்
சூழ்ந்தாற்று மோதை துணைச்செவியுற்—ரூழ்ந்த
பொருமிக் கலைநீர்போற் போர்த்தா னவர்கள்
பொருமிப் புலம்பினுர் போந்து. (சஞ)

தாரகனுங் சிங்கத் தனிமுகனுக் காரவுண
ராரு நெடிதரற்று மார்ப்பினைக்கேட்—மேடரிகல்கொள்
வெஞ்சூர் மகத்தீயில் வீந்தகுணர்ந் தாளெற்ரூன்
மஞ்சூர் மகவான் மகிழ்ந்து. (சஎ)

வானுலக நீங்கி மதியுலக நீங்கியுயர்
பானுலக நீங்கிப் பயிறவத்தைத்—தானுளத்தி
லெண்ணு வியந்திரங்கு மோவுணர் தம்மினத்தைக்
கண்ணுரக் கண்டான் களித்து. (சஅ)

வாளா வெனதாவி வாழ்வதென்கொ லென்றெண்ணி
வாளா ரிமுகத்தோன்வானின்று—வாளற்ற
ரூரா யிரஞ்சிரமு மொவ்வொன்ரூய்க் கொய்திட்டான்
வீராவே சங்கொடுதீ மேல். (அக)

முன்போற் சிரமுலைப்ப மொய்ம்பினைசைப் பேர்ந்திடமன்
றன்போற் சிலரிட்டுத் தாவதுகண்—டன்போர்த்
தூணையிலரி மாமுகத்தோன் சூரனைப்போற் ரூஉ
மிணையிலுயிர்க் கீறெணிஞ னேய்ந்து. (இ0)

முன்மா வுயிர்நீத்த முன்னவன்போற் பின்னவனு
முன்மா விசும்பெழுவா னுட்கொளலு—மின்மா
சடையனறும் பூங்கடுக்கைத் தாமனேர் தூவெண்
விடையனது கண்டான் விசைந்து. (இக)

அசுரர் யாகப்படலம் முற்றிற்று.
ஆ. நிரு வெண்பா ஈகஎ.

வரப்பெறு படலம்.

இந்திரன்முற் புங்கவர்க ளேத்தவரன் வெண்ணையின்முன்
சுந்தரனே யாட்கொண்ட தொல்லுருக்கொண்—டந்தமக
வேதியண்மிச் சிங்கமுக வீரனேப்பார்த் தம்பரிசெ
லேது மெனகவின்ரு னேர்ந்து. (க)

சேயமுகன் றேர்ந்தரன்ரூள் சென்னி யுறத்தாழ்ந்து
மேயதந்தை காசிபனு மேவுமன்னே—மாயவளாம்
யாங்கண் மகர்மூவ ரின்னுமுளர் யாப்பணியா
லீங்குமகஞ் செய்தோ மினிது. (உ)

ஆண்டுபல வாக வரும்வேள்வி யாற்றிடலு
கீண்டசடை நீத்த நிருமலன்வந்—தாண்டிடலுன்
முன்னவனை நீ தோர்ந்துடல மொய்யு னரிந்திட்டுப்
பின்னவனும் தீப்புகுந்தான் போர்த்து. (ங)

ஓங்கனலின் முன்னேனன் வீழ்ந் தொள்ளியநீ ரூகியதை
யாங்கண் டகத்தயர்கொண் டெம்முயிரு—நீங்க
நினைந்தனமும் மைக்காண நேர்ந்தமையாற் ரூழ்த்தோ
மினைந்ததிது வென்ரு னெடித்து. (சு)

அங்கணின்ற வீச னருளாற்சூர் தன்னையின்னே
செங்கனலி னின்றுவரச் செய்கின்ரு—மிங்கதுநீர்
காண்டிரின்ன நீர்திரெனக் கங்கைதனே யுன்னவது
சேண்டலறின் றேகியது தேர்ந்து, (ஙி)

விண்ணின் றிழிந்து விரைவிற் றரையிடனு
ணண்ணறிருத் தாடாழ்ந் தவன்பணியா—ணண்ணனலேய்
குண்டத் துறவுணர் கோண்கடனஞ் சார்த்தெழல்போன்
மண்டத் துறவெழுந்தான் வாய்ந்து. (உ)

வேதியிற்சூர் தோன்றுதலு மேவுதம்பி மாரனையான்
பாதமேல் வீழ்ந்து பணிசெயலே—யோதவுண
ரேந்தல்வந் தான்வந்தா னென்றெவருங் கேட்பவின்
புந்தகைமை வாழியென்று ரார்த்து- (எ)

சூர்தனைக்காண் வாளவுணர் சூழமா ராந்திறத்தோர்
கார்தனைக்காண் மஞ்ஞை கருகுயிலே—சேர்தரவே
பின்னவருங் கண்டிடமுன் பேசுருவ நீத்திறையோன்
முன்னுருவின் விண்ணின்றுன் முன். (அ)

நாரியொரு பாகமுந்திண் ணுற்புயமு முக்கணுமாய்க்
கூரியல்கொண் மால்விடைமேற் கொண்டிறையோ—ஞர
வீனையிலெழிற் சூர னிறைஞ்சியன்பிற் போற்றித்
தூனைரொடு நின்றுன் றொழுது. (கூ)

புகல்சூர் முகநோக்கிப் பொற்பினமை யுன்னி
யிகன்மா மகமியற்றி யெய்த்தாய்—தகநினக்கு
வேண்டுவதென் கொன்னீ விளம்புதி யென்னவின்னே
ரீண்டுழலச் சொல்வா னெடித்து. (கஎ)

அண்டமெலா மாளு மாசு மதற்கற்ற
தண்டனைசெ யாழித் தனிப்படையுந்—திண்டிறல்கொ
ளூர்தியும்பே ராற்றலும்பல் லொண்படையு மெஞ்ஞான்று
மார்மெயுகல் கென்றனன்சூ ராயுரு. (கஅ)

டிண்டரும்பா ரண்டம் பலவுவற்று ளாயிரத்தெட்
டண்டமூற் றெட்டியுக மாளகல்கித்—திண்டிறல்கொ
ளிந்திரனா லத்தேரு மீந்தயன்மா லஞ்சாழி
தந்தரியி னூர்ந்ததன்றான் றுன். (கஉ)

பின்வாலே ரக்கும் பெருமுதன்மை தந்திகலே
வெண்மாண்பண் பாசுபத மின்படையே—முன்வாய்ந்த
வாளேர் படையுகல்கி வச்சிரமா யாக்கையுமே
தாளெகை யோடுதந்தான் சம்பு. (கங)

கங்கையையா னேவியந்தக் கங்கைக்கு மாவேள்விச்
செங்கனற்குந் தோற்றமெய்திச் சீர்க்குமா—பொங்குதிரைப்
பள்ளமுந்நீர் போலோர் பதினா யிரகோடி
வெள்ளவகைத் தானைதந்தான் வேட்டு. (கச)

இன்னவணஞ் சூர்க்கருள்செ யெல்லை யவர்க்கிளைஞர்
மன்னி யடிபணிய மாதேவன்—முன்னவன்பால்
வீர மொடுவிளங்கி மேவுமுணர்ந் தெட்டெழுத்
தாரநீர் வாழ்த்திரென்ற னங்கு. (கடு)

பத்தியின்வாய்ந் தண்டர் பரசுமுசிர் நுங்களைஞ்
சத்தியன்றி வெல்லுபவர் தாமிலையென்—றுத்தமமாம்
பாகினர் தேரும் படையும் பிறவுங்கி
யேகினனெங்கட் கிறை. (கசு)

வரம்பெறு படலம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் ... எ.

சுக்கிரனுபதேசப் படலம்.

அவ்வேலை முன்னோ ரரண்போற் கலவுவுணர்
வெவ்வேலை வேந்தினைச்சீர் மேவினனென்—றுவ்வேலை
யார்த்தனபோ லார்த்தவைபொன் னங்கிரிவை யுழியின்கட்
போர்த்தனபோற் போர்ததார் புகழ்ந்து. (க)

முன்னுற்றார் தம்மை முகநோக்கிச் சூரனைவு
மன்னுற்ற னின்னருள்செய் மாண்புவந்து—துன்னுற்றார்
நேயுற்றுற் றேவண்டு நீயுண் டிடரற்றோர்
தாயுற்றார்க் குண்டோ தளர்வு. (உ)

என்றவர்பா லன்பினுற வேந்தலண்ட ரித்தகுவன்
வன்றிறலார் தன்மையினவ் வண்ணமுய்ச்சோ—மென்றினையப்
பேசவுணர் பூமாரி பெய்துசூர் வாழியென
வாசிமொழி கூறினர் ராங்கு. (கூ)

ஈசனருள் கொண்டுவந்த வெண்ணில் படைக்கெல்லா
மாசிலரை நற்றலைவ ராக்கிய—வீசுதெவ்வை
மால்விக்குந் தானைகள்விண் மண்செல்லப் பின்னரொடும்
வேள்விக் களமகன்றான் வேந்து. (சு)

தாதைதா டாழ்ந்தரன்பாற் றூங்கொள் வரவின்று
போதவினி யாங்கள்புரிவதியா—தோதுகென
வீசனரு ணன்றுநன்றென் றெண்ணியவர்ப் பார்த்தடைதிர்
நேசமுறு பார்க்கவன்பா னீர். (டு)

உற்றிரே லன்னவன்ரு ஐங்கட் குலவிறிரு
பெற்றிடுநற் புந்திநனி பேசுமெனு—நற்றவர்கோ
னங்குவிடை நல்க வவுணர்கோன் ரூனையொடு
சுங்கனிடஞ் சென்ரூன் றுதைந்து (சு)

அங்கதகேட் டாசா னகமகிழ்பூத் சார்சிடர்
தங்குழுவி லேறுவரத் தான்காணுப்—பொங்குபெருந்
தானைமுன்போய்த் தம்பியர்க டம்மோடு சார்புகரின்
கானனினந் தாழ்ந்தான் கனிந்து. (ஏ)

வாழியவென் ரூசி மகிழ்ந்துரையாச் சூர்முதலேக்
கேழிருங்கை யாற்றழுவாக் கேடிலான்—சூழிருக்கை
கொண்டணையத் தாரகனைக் கூர்படைகள் போற்றுகென
மண்டிளவ லோடடைந்தான் மன். (அ)

ஆனந்தந் தாங்கிருத்தி யாசானீர் வந்ததென்கொல்
பேசுமெனச் சூரபன்மன் பேர்மகஞ்செய்—தீசன்
கரிசினலந் தந்தமையுங் காசிபன்ரூன் கூறும்
பரிசும் பகர்ந்தான் பணிந்து. (கூ)

ஐவினி யாமூக்கி யாற்றுமுறை சாற்றுதியென்
றுய்யவே சூர்நவில வோதுவான்—வெய்யபுகர்
பாசம் பசுபதியென் பார்த்தனேயா மித்தைமற்றி
லாசி லுயிர்சிவனென் ரும். (ஏ0)

தீயநல்ல வென்னவே செய்வினைக ளாயிரண்டா
லேயும் பிறவிதன்பின் பெய்துமென்பர்—மேயதன்றி
யூழ்முறைலி ராய்த்துய்சரு மூழ்வினைக ளீட்டுமே
லூழ்வருதற் கென்ப ருயிர். (கக)

மேவுவினை யான்மீட்டு மீட்டும் பிறக்குமா
ராவியியல் போர்த்தனவை யாக்குமென்பர்—தாவிலா
வாதியுபி ரொன்றலவொன் ரூனற்ரூ முண்டிறைவற்
கேதினவில் வேன்கேட்டி யிங்கு. (கஉ)

ஆதிவிந்த மற்றமல மாஞ்சோதி யாயசிவன்
கோதிலருண் மாநடத்தின் கொள்கைதனிற்—காத
லுறுமொருதன் மாயையா லொண்பூதம் யாவும்
பிறவும் புரிவான் பெரிது. (கங)

அன்மாயை யாலாக்கை யாக்கியவற் ரூடு
கடன்கொள்வா னிற்ரூன் கலந்தவ்—வுடன்மடிங்கு
மெல்லியன்முன் போலுறுவ னீசனடஞ் செய்யுமென்று
மொல்லுமுத்தி மேவு முயிர். (கச)

பொய்யாம் பொறிபுலனென் போதிலவை காண்பொருளு
மெய்யாமோ புந்திசொன்மெய் மேவுசெய—றையா
வவையுமது வாஞ்செயலன் ரூமதினுக் தன்பின்
பிவைமெய்யோ மூன்னதா மிங்கு (கடு)

மித்வதையெய் யாக்கொளினு மேவுதன்பு மின்பமுமெ
வித்தகனே யெய்துமோ மேயவிருப்—பத்தினுற்
ரூன்றுவது மாய்வதூஉஞ் சூழ்வினைகள் செய்வதூஉ
மான்றபரற் கில்லையுடற் காம். (கசு)

ரோற்றமழி வாதி தொடக்கின்றி யாவியொன்ரூய்
வேற்றுமையில் லாப்பரன்சீர் மேவொரியல்—பேற்றதுமெய்
நெஞ்சுணர்தி தீதுநல நேர்பாவம் புண்ணியமெ ன்
றஞ்ச லறிவின்மை யாம். (கஎ)

யாதுவந் தெய்தியதோ வீதுநலந் தீதென்ரு
தாதியா மாயையென்ரூய்ந் தாற்றலவை—நீதி
யறஞ்செய்க பாதகஞ்செய் யற்கவென்பர் செய்யி
னுறவருவ தில்லையிங் கொன்று. (கஅ)

சனவில் விழைந்தனவுங் கண்டவந்த யாவு
நனவுவரிற் கண்டதில்லை நாமே—யனையசெய
லிம்மையிலே செய்வினைப்பே றெய்தினுண்மை யாமதுதான்
பொய்ம்மையெனக் கோடி புரிந்து. (கக)

சிறியர் பெரியரெனக் ஙந்திக்க லாமோ
விறுதியிற்பல் லாவியுமொன் றென்ரூர்ந்—தறிதலுண்மை
யீங்கிவைமே லோர்கொள்கை யேந்தனீ கேட்டிதுங்கட்
காங்கருமஞ் சொல்வே னமர்ந்து. (உ0)

சீதானே யாதியாந் தீதவரினுங் கோவியற்கை
யோதருமாச் செல்வகின்பா லுற்ற நோ—தேதுவினி
லுன்னப் பிரமமென்றே யோதியய ரூகியரைப்
பன்ன லிறைஞ்சல் பரிந்து. (உக)

தேவர்தா மூங்கட்குத் தெவ்வ ரவர்க்கெறுஞி
மேவுமன்ஞர் தாம்பணியும் வேந்தனென்னன் —மாவவுணர்
ராரச் சழித்தா னவற்பற்றி வன்னிகளுஞ்
சேரச் சிறைபுரிந்து தேர்ந்து. (உ உ)

சிறைபுரிந்து தீயபல செய்தமுனி வோர்வா
னுறைபவர்க ளாதியரை யோர்ந்து—முறைமுறையா
யேவனீ கொண்டிடுதி யேயுந்தவர் வான்பதமு
மாவவுணர்க் கீதி மகிழ்ந்து. (உங)

காமங் களவுகொலை கட்பொய்மை யாதியெலா
நேமமெனச் செய்தியற்ரு னிற்குவருந்—தீமையொன்று
மில்லையவை செய்யாக்கா லேந்தனீ வேட்டவைதா
ஞெல்லையி லாமோ வுனக்கு. (உச)

அண்டர் பிரானளித்த வாயிரத்தெட் டண்டமுற்றுங்
திண்டிறன்மாத் சானையொடு சென்றுகண்டு—கண்டவணீ
யாற்று முறையிறைமை யாற்றி யிடணிசையின்
வீற்றிருத்தி யென்ரான் விழைந்து. (உரு)

சுக்கிரனுபதேசப்படல முற்றிற்று.

இருவெண்பா நூறு

அண்டகோசப் படலம்.

நீய வினையவுரை செப்பவிது நன்றெந்தை
யேய பணியினிற்ப னீசனரு—ளாயிரத்தெட்
டண்டங் களினிலோ யாய்ந்துரைக்க வெண்ணவெள்ளி
திண்டிறல்வாட் சூர்க்குரைப்பான் றேர்ந்து. (க)

மேலுள் பொருடம் விரோவதுதா னிற்கவிப்பான்
மூலமுறும் புந்தியதின் மூந்துமந்தை—யாலெம்
புலங்காறு மாங்கே புனிதவான் தொட்டு
நிலங்காறும் வந்த நெடிது. (உ)

அபுலா மபபுவ்கக்கா ராயிர கோடியண்ட
மொப்பிலவே யென்னவுண்டா லொன்றிலுக்கொன்—றெப்படி
சொற்றிடுநீர் மைத்தன்று சூழ்ந்திடின்மா வைப்பெனலா [மேற்
மற்றவையம் பொன்னின் வணம். (ங)

உன்னருமா ஞாலவண்ட மோரா யிரகோடி
யன்னதினீ பெற்றவண்ட மாயிரத்தெட்—டின்னவற்றே
ரண்டத் தியற்கை யறைகின்றேன் செங்கரத்திற்
கொண்டகெல்லி யின்னுளத்திற் கொள். (ச)

கதிரெழுதூ ளெண்மூன் றுகசாக் கிரக
மிதுவிருநான் கேய்ந்த திலீக்கை—நுதலிலீக்கை
யேரிருநான் காம்யூகை யீதெட் டியவையிது
கூரிருநான் காமம் குலம். (ஞ)

அங்குலமெண் மூன்றுகர மக்கரமோர் நான்குதனு
தங்கு தனுவிரண்டு தண்டமே—பொங்குதண்ட
மீரா யிரங்குரோச மீதுநான்கி யோசனையென்
றாராய்ந்தோர் சொல்லு மளபு. (சு)

பன்யோச னையம் பதிற்றிரண்டு கோடிவந்த
தன்னண்டத் திற்காழி யோர்வைப்பு—மன்னிவப்பு
மாகிலவண் டங்கட்கிவ் வாறளவைத் தென்றறிதி
யூகிலவும் வேலா யுகத்து. (எ)

ஒண்புவனிக் கேகீழாம் யோசனையம் பாண்கோடி
மண்புவிக்கு மேலாச்சேர் மானமுமஃ—தெண்புழற்கொண்
மாடியன்மா மேருவுக்கு மாதிரமோ ரெட்டிமைம்பான்
கோடிகடா கத்தினெல்லை கொள். (அ)

அண்டகட மோர்கோடி யாகுகன்மே லோர்கோடி
யொண்டிறற்சா லத்தீ யுருத்திரர்பொன்—கொண்டதளி
தாமவன லெல்லை தசகோடி யாமீக்கட்
மேமவைப்பைங் கோடித் தொகை. (கூ)

சிம்மா தனத்துயர்ச்சி சேரா யிரமளவைக்
தம்மானத் திற்கிரட்டி யாம்பரப்புச்—செம்மா
ணுருத்திரர்தீ மெய்யயுக யோசனையே யாகுந்
திருத்தகுவா ளேந்திநிற்பர் சேர்ந்து. (கஂ)

உருத்திரரைப் போல்வா ரொருபதின்மர் சூழ்வா
ருருத்ரியொடன் ஞாலேவ லாற்றிப்—பருத்தகதா
கோடிப் பரிசனங்கள் கூடுமன்றேஞர் தாள்வழுத்தி
நீடுகம டப்புலமா சேர்ந்து. (கக)

அப்புவன மீக்க ணடுக்கு நிலையவாய்ச்
செப்புநா லேழ்கோடி சேர்நிரய—வைப்புயர்வு
கோடியொன் றாகுங்கூர் பான் கூர்பன் னிரண்டிலக்கம்
பாடியலா ரண்டப் பரப்பு. (கஉ)

உன்னிரய மீதொன் றொழியிலக்க நூற்றயர்வு
தன்னிலுறு மோர்புவனந் தாழ்ந்தீழ்மண்—டென்னுமிரும்
பார்நாப்பண் மேற்பசும்பொ ஞ்சோகி மற்றதன்மேற்
கூர்மாண்டர் வாழ்வர் குறித்து (கங)

கூர்கா முகமுகத்தர் கூர்வாய்க் கணிச்சியினர்
பேர்கனலே யண்ண பிறங்குருவர்—சூர்கணற்பொற்
பீடிகைசேர் கூர்மாண்டர் பேசுதம்பாற் சூழுருத்தர்
கோடியள வாரளப்பார் கூர்ந்து. (கச)

அன்னபுவ னத்துமீ தந்சரமி லக்கமொன்பான்
பன்னுவர் தற்கும்பர் பாதலவ்க —னென்பபில
மொன்றற்கொன் பஃதாக வுன்னறுபான் மூன்றிலக்க
மென்றறைவ ரேழ்பிலத்திற் கீழ்க. (கஇ)

பார முறுங்கனிட்ட பாதலமோ ரெட்டிலக்க
மாரகவெவ் வேறயுத மாமஃ தரா—னேர்மும்மைப்
பாற்கா ரவுணர்கீழ் பாலுரகர் நள்ளரக்கர்
மேற்பா லுறைவார் விளம்பு. (கசு)

இதன்மே லிலக்கமொன்பா னேரா டகாவைப்
பிதன்மேல் வெளிகோடி லக்க—மதுவிருபா
னேரிதன்மேல் யானபணி யேந்திநிற்கு மாங்கதன்மேற்
பார திலக்கமெட்டுப் பத்.. (கஎ)

வஞர் பிலங்கட் கெலாமிறைவ ராய்க்காப்போர்
மாணு டகர்நாகர் வாளவுணர் — ணாணரக்கர்
தாடொழுவோ ரண்டகடந் தான்முற்பா ரீரைம்பான்
கோடியெனக் கோடியென்றான் கூர்ந்து. (கஅ)

பலபிலங்கட் கெல்லாம் பரமதாய்ச் சேர்பா
ருலகின் விரிவுளவு முன்னிச—செலுவன்கள்
சம்புமுற்றீ வேழுமுறை சாருமத்தீ வேழுமப்பால்
வெம்புவிசூ ழுந்திகிரி வெற்பு. (கக)

அகற்கபபால் வேலைக் காசுபுற வாழி
யதற்கப்பாற் பேரிருள்வைப் பாகு—மதற்கப்பான்
மண்டுறுமண் டத்தோடு மன்பொருள்யா வுஞ்சூழ்ந்து
கொண்டிருக்கு நாண்டிமன்னே கூர்ந்து. (உ0)

முற்றீப மோரிலக்க முற்றீரு மற்றதற்
றுற்றனதே மிக்கொன்றற் கொன்றிரட்டி—பெற்றவென்பர்
கொண்ட தொகையிரண்டு கோடியைம்பா ஞன்கிலக்கங்
கண்ட தொகையாங் கணித்து. (உக)

ஐயிரண்டு கோடிசொன்னத் தார்தலமீ தண்ணேமிச்
சைய மயுதமாஞ் சார்புறத்தி—னெய்துகடல்
கோடியிரு பானேழ் குலவிலக்க மையிருள்சேர்
பீடுலகி னெல்லைசொல்வேன் பேர்ந்து. (உஉ)

கூரிருட்பார் மும்பானெங் கோடிபதத்தொன் பாணிலக்க
மாரு மொருநான் கயுதமாம்—பேரிருளூ
ழுண்டச் சுவர்க்கணமொன் றண்கோடி பாரகலங்
கண்டவுலகிற் பாதியது காண். (உங)

தொன்னூற் படியாஞ் சொலுங்கணிதந் தன்னையே
மன்னுதிசை போன்மற்ற மாதிரத்தும்—துன்னவைக்கிற்
கூறுதிக்குங் கோணமூற்றுங் கூரிரண்டு கோடிமே
னூறுமா யோசனையா நோக்கு. (உசு)

அம்புயமாம் பீடத் தமர்வோன் றனதிவல
மொய்ம்பு நுதித்த முரண்டருசா—யம்டைத்தன்
வேலவிருங் கைங்கம்பி மேவன் புடைவிரதன்
முலமுற்று மாண்டான் றனித்து. (உஙி)

அன்னவன்றன் மைந்தரா மங்கிரீரன் மேதாதி
தன்னு வபுட்டியெடு சோதிட்டுப்—பன்னுதுதி
மாணவ் வியன்சுவனன் மன்னெழுவ ரேழ்தீவு
மாணபங்குற் ருண்டா ரரசு. (உசு)

ஆரியனு வற்றீவா ளங்கிரீ ரன்பெற்ற
பாரதன்முன் ஞெண்பதின்மர் பன்பேரா—லோரொருவர்க்
கொவ்வொன்ரு வத்தீவை யொன்பதுகண் டஞ்செய்தே
யெவ்வமறத் தந்தா னினிது. (உஎ)

மேலுயரத் தீவினடு மேருமுள நிப்பொருட்டி
னேலுமதற் கியோசனேதா ணெண்பத்து—நாலா
யிரமாரும் ஞாலமாழ்ந் திட்டதீ ரெண்ணா
யிரமாரு மெண்ப வினிது. (உஅ)

அத்தீவின் சென்னி யகலமெண்ணூண் காயிரமாம்
பைத்த பராரையதிற் பாதியா—மூற்றவண்ண
மேகலைமூன் றண்ணதுச்சி மேவும் பலகிர
நாக மளாவிநிற்கு நன்கு. (உக)

மேரு வரைக்குநடு வேதனண்ம நோவுதியாங்
காருங் குடதிசையி லச்சுதன்வாழ்—சீரியவை
குண்டம் வடகீழ்பாற் கூற்றுதைத்தோன் கைலையெண்ம
ரெண்டிசையு மேவு மிடம். (ஙo)

ஆருந்தெற் கர்திவடக் காமளவு மத்திதனி
னேரியதோர் தேசமது நேர்போகு—மாரதற்கு
நேராகச் செல்லு நெடும்பூழை யொன்றுளது
சீராகத் தோர்க தெரிந்து. (ஙக)

மேருவுக்குக் கீழ்பான் மிளிர்மந் தரம்வெண்மை
சாருந்தென் பாற்கந்த மாதனம்பொன்—ஞருமேற்
கார்விபுல நீலமுதக் காமன்சு பார்சுபமாம்
வார்மா துளம்பூ வணம். (ஙஉ)

அங்குக் கடம்புசம்போ டாரரசா லிங்கான்கும்
பொங்குருண மாதி பொலிந்துகிற்குங்—தங்குசும்புத்
தாருவிரண்டா யிரயோ சனையேனை
யாரு மதிற்பாதி யாம். (கூகூ)

அன்னகுண பான்முன் னருண மதிதோத
முன்னரிய மானதமே யொண்மடுவாம்—பன்னுந்
தருசைத் திரநந் தனம்வைப் பிரசந்
திருதாக் கியமேவுஞ் சேர்ந்து. (கூச)

நாவலொன்னூர் காரணத்தா னற்பார தன்கண்ட
நாவலந்தீ வென்னவே நாமமுறு—நாவனறுந்
தீங்கனிநீ ராறுதக்குச் சென்றுசாம் பூநதப்பே
ராங்கடையு மந்த வயம். (கூடு)

பொருந்து பொருப்பைப் புடைசூழ்ந்து போகுந்
திருந்துசெழுஞ் சாம்புநதத் தீர்த்த—மருந்திலோர்
மேயவுடன் பொன்மயந்தான் மேவி யொருபதின்மூ
வாயிரமாண் டாங்குறவ ராம். (கூஙு)

மன்னுற் றிசையில் வரைப்பரப்பு மேல்கீழ்தான்
மின்னுக மாமேரு வீற்பாதி—பொன்னுர்கீழ்
பான்மா லியவான்மேல் பாற்கந்த மாதனமதென்
பான்மா நிசதவெற் பாம். (கூஎ)

கூறுந்தென் பாலேம கூடமிம முத்தரத்தில்
வீறுநீ லஞ்சவே தஞ்சிருங்கம்—பேறெணக
நீலநிதி மாமணிபொ னீள்பனிநீ லம்வெண்மை
சாலுமதி காந்தநிறந் தாம். (கூஅ)

நிசதம்பொற் கூடமிம நீள்கிரிகீழ் மேலாத்
திசைமருவு மாக்கடலைச் சேரு—மிசைவடபா
லாரு மலையு மனையவே யெண்கிரியு
மீரா யிரமான மே. (கூக)

வார்கந்த மாதனநன் மாலியவான் வெற்பயுத
மேர்மற் றிருமூன் றிராயிரமாஞ்—சார்வித்
பொருவடமூங் கீர்முற் புகல்சிருகுகங் காறுங்
குருவருட மாகக் கொளும். (சO)

இன்னுசருங் கம்மும் சுவேத வரையளவு
மன்னு மிரணியமா மாவருடம்—பன்னருஞ்சு
வேதமுரு நீல விலங்கலுக்கு நாப்பணுல
கோது மிரமியமா மும்மு. (சக)

மேருவரை சூழ்வருட மேவு மிளாவிருதம்
வாருருவி யார்க்க மாதனமேல்—வீரூடுக்
கேதுமான் மாவருடங் கீழுதகி மாலியவா
னேதிடையிற் பத்திரமென் றுன். (சஉ)

காணிதை மூன்னேமங் காறு மரிவருடஞ்
சேணுலவு மேமமுதற் சீரியம்—பேணுடுக்
கிம்புருடங் தென்கடற்குக் கேழி மவெற் புக்குடுப்
பம்புருமா பாரதமென் பார். (சக)

கேதுமால் பத்திரமுங் கேடிலெண்ணுன் காயிரமற்
றேதொண் பதினயுத மொண்பரதம்—போதலுற
நின்றகண்ட மெட்டு ணிறைந்சோர் தமக்காயு
னென்றறைவர் மேலோ ரிசைந்து. (சச)

குருநாட் டிறைவோர் குலவாய்பா லாண்பெண்
ணுருவாகத் தோன்றியுட லொன்றுய்—மருவுவா
ராங்கவர்க்குத் தெய்வ மணிகருபூ நல்குமுணத்
தீங்கனியுங் காயுமெனத் தேர். (சடு)

அன்னூற்மெய் பச்சையா யுள்பதின்மூன் றுயிரமாம்
பன்னுங் கதற்குவட பாகத்திற்—றுன்னுவா
ராயமுனி வோர்சா ரணர்சித்தர் முன்னேயர்க்கா
மாயுள் படிகநிற மாம். (சசு)

பத்திராசு வத்தோர் பலங்காய்துய்ப் போர்பதின்மூன்
றுற்றிடு மாயிரமாண் டுற்றோர்மெய்—யத்த
ரிரமியத்தோ ரூண்கனிக ளிந்துறழ்மெய் யோர்முன்
கரையதற்கைஞ் ஞுறு கழிவு. (சள)

ஆரு மிரணியத்தி லாலின் கனிநுகர்வர்
நேருங் கவலே நிறமுடையர்—சேரு
மவர்க்குவரு டம்பன்னீ ராயிரமாச் சொற்ற
நவர்க்கிய தொண்மைமுன் ஞால். (சஅ)

இளாவிருதத் தோர்வெண்மை யேற்றோர் கரும்பூ
ணளாவுபன்னீ ராயிர மாகக்—கொளும்யுகங்
கேதுமா லோர்வண்ணங் கேழ்குவளே யூண்கைதை
யோதுபதி னுயிரமென் றுன். (சசு)

அரிகண்டத் தோர்பதி னுயிரம தெல்லே
புரிய கனிகா யுணவிர்—திரிநிறங்
கிம்புருடத் தோரிறலிக் கேழ்கனியுண் பார்நிறம்பொன்
பம்பயுத மாய்வுவென் பார். (இ0)

ஏமவரைத் தென்பா லிமயவட பாறன்னிற்
காமருசீர் மேவுங் கயிலைநிற்கு—மாமதற்கு
மீதிமையா மூக்கண் மிமல னுமையென்னு
மாதி னுடனமர்வான் வாய்ந்த. (நிக)

ஊழியிலண் டம்வரைமே லோடுகிழ் மேவுமலை
யூழினெட்டுக் கண்டத் துறைநீரார்—மீழைபிணி
யுன்னு நரைதிரைமூப் பொன்று மடைகிலா
ரென்னு மிறைநூ லிசைந்த. (நிஉ)

மூந்தையுகம் பேரலேனை மூண்டுளுமொய்ம் பாரறிவு
சந்தவுட லாயுளோர் தன்மையர்முன்—னுந்தலைசூழ்
பாரதத்தில் வந்துதித்தோர் பண்வினையின் பேறடைவர்
காரதங்கட் பெய்யா கவிந்த. (நிங)

பாரத்ததுள் ளாருலகிற் பல்கித் தொழில்புரிந்து
பேரறம்பா வம்மீட்டிப் பேசுமருள்—சேர்பௌ
திகமுதலா மூன்றினிற் றேர்பயன்கொண் டெய்வர்
யுகமதிற் கேற்ப வுளர். (நிச)

ஆற்ற லறிவுசீ ராயுருரு வுண்டிசெய்கை
யேற்றமிகு பாரதத்து ளேய்ந்தவர்கண்—மாற்றரிய
தோரைமுதற் பைங்கூழ் துதையும் விளைவாக்க
லாருவர்கந் தங்களிகா யாங்கு. (நிஙு)

எண்கண்டத் தோர்விண்ணே ரேழ்நரகோ ரங்குவைகி
நண்விளையாற் றிப்பயன்க ணன்றுதுய்ப்பர்—பண்பினைப்
பன்னுவகை யாற்பரதம் பல்வினைக்கெல் லாமூல
மென்னவடை வாரெவரு மேய்ந்த. (நிசு)

பன்னுகண்டந் தம்முட் பரதகண்டஞ் சீர்த்ததென்றுங்
குன்னு குறைபெறினே யுற்றமர்ந்து—துன்னரிய
வாசவனும் வானவரு மாதவரு மாதவமும்
பூசனையுஞ் செய்வர் புரிந்த. (நிஎ)

பாரதனிந் திரப்பேரோன் பனகேசரு கன்ரு
மிரபன்னன் மின்கபத்தி நாகன்—தருசுவமி
யன்கந் தருவ னவிர்வருண னுமகேரோ
டென்குமரி மாதுதந்தா னுற்று. (நிஅ)

மாயிருமா மண்போற்று மன்னவர்தம் பேரிலொன்றற்
காயிரமா யோசனைய தாகவே—மேயவர்க்கே
யூக்கமிகும் பாரதத்தை யொன்பதுமா கண்டங்க
ளாக்கி யளித்தா னமர்ந்த. (நிகூ)

கிங்கையமு னேகவுரி காவிரிபாள் சாலிகம்பை
துங்கபத்தி ரைபம்பை சூரிசிகி—பிங்கலே
சார்வரி வெஃகாச் சரயு பொருகைமுத
லோர்வரிய வுத்தி யுறும். (கூ೧)

உச்சவிந்தஞ் சையமுத லோசேழ் சிகரவெற்புங்
கச்சிமுத லேழாங் கடிநகரு—மீச்சை
தருமா யிரத்தெட்டுத் தானமுஞ் சேர்வ
திருங்குமரி யேனேவியப் பில். (கூக)

சாகத்து மன்கோமே தாதிமைந்தர் சாந்தவயன்
சோகச் சிரென் சுகோதயன்—வாருறுவா
னந்தசிவன் கேமக னற்பருவ னென்றெழுவ
ருந்து புகழா ருளர். (கூஉ)

மின்னவர்பே ராலேழ் வருடஞ்செய் தங்கவர்க்குத்
துன்னவளித் தான்காற் றெழுந்தெய்வ—மென்னவே
கொள்ளுவா ராரியர் கொன்விந் தகர்குக
ருள்ளுமா வாண்டுறைவ ருற்று. (கூங)

சோமகமுன் னெழ்கிரியுஞ் சொல்சிவைமுன் னேழ்நதியுங்
தாமுறவே மீமவந் தகிக்கடல்சூ—ழேழமக்
குசத்தீவி னில்வபுட்டுக் கோவவற்குச் சேயாங்
கசத்திண் ணெழுவரென்பர் காண். (கூச)

உன்சுப் பிரத னுரோகிதன்பீ ரன்முகன்சீர்
மன்சுவேத கன்சித்தி யின்வயித்தி—தன்னென்னு
மிப்புதல்வர் பேரிரு லேழ்வருட மாக்கியே
யொப்பிலவர்க் கீந்தா னுகந்து. (கூடி)

உன்னதமுன் னேழ்மலையு மோதரிய வான்சோனை
யென்னு திரைநதிமுன் னேழுமுள—முன்னுதெய்வ
வந்திறையாக் தர்ப்பகமே வான்கபில ருள்ளிட்டோர்
சந்ததமங் காருஞ் சனம். (கூசு)

ஒண்ணெய்ப் புணரிகிர வுஞ்சதீ பத்திற்கே
யண்ணலவிர் சோதிட் டவன்மைந்தர்—நண்ணரிய
வேண்சா ரணன்கபில னெண்கிருதி கீர்த்திவேணு
பேணிலம்ப கன்னுற் பிதன். (கூஎ)

மற்றவர்பே ராலேழ் வருடங்கண் டங்கவர்க்குக்
கொற்றமுறத் தந்தான் குசேசயமு—னுற்றமலி
யேழுசிவை முன்னுந்தி யேழு தபதர்முன்
வாழுஞ் சனமயன்றெய் வம். (கூஅ)

கன்னலின்னீர் சூழ்தீபங்கான்மலியுஞ் கான்மலியா
மன்னதனுக் கேந்த லவிர்துதிமா—னின்றனையர்
மன்குசலன் வெய்யன்றே வன்முனி யந்தகாரன்
றுன்மனோ தன்றுந் துபி. (உசு)

மற்றவர்க்கேழ் கூருக்கி மன்னதனே நல்கினுன்
சொற்றிமிர முன்னேழ் சுடர்வரைவே—முற்றநந்தி
போது குமுதமுன்னும் புட்கலாதர் முற்சனமாங்
காதிபதி வன்கடவு ளாம். (எ0)

மதுக்கடல்சூழ் தீபங்கோ மேதகப்பேர் மன்னு
மதற்கவ் வியனே யரசாம்— புதல்வரவி
மோகனன்மோ கன்சகலன் சோமன் சுகுமாரன்
மாகுமா ரன்மரீச கன். (எச)

கூறுமவர்க் காங்கதையேழ் கூருக்கி யெகொடுத்தா
னேறுசிங்க மத்தமுத லேழ்கிரியும்—பேறயாதி
முன்னேழ் நதியுமுள முன்னங்கர் முன்மாக்கண்
மன்னேர் கடவுண் மதி. (எடு)

போற்றுநன்னீர் சூழ்தீபம் புட்கரமன் னன்சவனன்
பேற்றுமைந்தர் தாதகிமா பீதர்க்குச்—சாற்றதிரு
கூறுசெய்து தந்தான் குலவிடப முன்வரையே
ழாறுகுடி லேமுதலே ழாம். (எ உ)

சொன்னகரர் நாகரென்பர் சூரியனே தெய்வதமா
மன்னதந்தத் தில்லேம்ப தாயிரமா—முன்னந்
தருமான சோத்தரக்கல் சக்கரம்போ லாமங்
கரும்பதவி யெண்டிசையர்க் காம். (எச)

புணரியந்தந் தோறும் புடையுறவொவ் வோர்வெற்
பணவிநிற்கு மன்சாக மாதி—நணுந்தீப
முற்று மிருக்குநர்க்கு மூப்பு நரைதிரைக
னற்றமின்ன லாதியிலை யாம். (எஞ்)

அன்னர் கலியிறுமே யார்கிம் புருடரியன்
மன்னுவா ராண்டயுதம் வாழ்வரே—பொன்னிறப்பார்
தன்னேயே சூழ்போய்த் தடம்பெருகே மிப்பொருப்புத்
தன்னியங்குச் சார்வுற்ற தி. (எசு)

நேமிவரைக் கிப்பா னிகழ்சடரே யப்பாலாஞ்
சேம நிசிப்படலஞ் செம்மணிபோற்—காம
ரியக்க ரிராக்கதரே யெய்பேய்க் கணங்க
ளியக்க முறவுமர்வ தே. (எ எ)

ஓருந் திசைக்கடவு ளுற்றதத்த மாதிரத்தின்
மேருவின்கட் டங்குதல்போன் மேவுவா—ராருமதற்
கப்பாற் புறக்கடலா மாங்கதற்கப் பாலிருளா
மப்பாற் றயங்குமண்ட மாங்கு. (எஅ)

ஊழினெறி யாற்றம் முயிர்விடுவோர் ஞானமிலா
ராழி வரைப்புறஞ்சூழ் வாரப்பாற்—சூழிருள்சே
ரெல்லை தனிலநாதி யீசர்வா ழுங்கயிலைத்
தொல்லை வரையுமுண்டே சூழ்ந்து. (எக)

அன்னவண்டத் தின்மருங்கி லாருங் கணிரைகண்
மன்ன வதிசந்து மல்குமே—பன்னரிய
வச்சம்புத் தீபமுத லண்டச் சுவர்காறு
மெச்சுபுவி யென்பர் வியந்து. (அ0)

இப்புவியின் மேற்கணச்தி னேருலக மாமிதன்மே
லப்பரிசே யார்குய் யகலோகஞ்—செப்புமிதன்
மீதுறகால் வாழுலக மேவிதன்மே லேழ்புயலு
மாதரவின் வாழுமெல்லை யாம். (அக)

மூவயுத கோடி முகிலொய்வொன் ஸைமுறைசூழ்ந்
தேவமற மேவி யிருக்குமே—மேவரிதாய்க்
காண்கிம் புருடர் கருட ரியககர்தித்தர்
மாண்வித்தி யாதரர்வாழ் வைப்பு. (அஉ)

இங்கிதண்மேல் வானகிதெல் லெல்லையப்பாற் பாதுலக
மங்கவனிக் கோரிலக்க மாகுமேர்—பொங்கதனின்
முப்பான்மூக் கோடியண்டர் முன்னு மருக்கருட
னப்பால் வழிக்கொள்வா ரங்கு. (அங)

ஓரதன்மீ திந்துலக மோரிலக்க மும்பரிற்சேர்
தாரகையின் மாணுலகந் சானிலக்க—மாரதன்மேற்
புந்தியுல கீரிலக்கம் போற்றதன்மேல் வெள்ளியுல
கந்தி லிரண்டிலக்க மாம். (அச)

எண்ணதன்மேற் சேயுலக மீரிலக்க மேலரச
ணண்ணுலக மீரிலக்க மாங்கதன்மே—னண்ணுமந்தன்
றன்னுலக மீரிலக்கஞ் சாற்றதன்மே லேழ்முனிவர்
துன்னுலகி லக்கத் தொகை. (அரி)

அப்பாற் றுருவ னமரு முலகிலக்கஞ்
செப்பார் புவர்லோகத் திண்ரைதா—னெப்பார்
பதினேந் திலக்கமாம் பன்னு மதன்மேல்
வதியுமா லேழு மருத்து. (அசு)

சொல்பதத்தின் மீதிற் சுவர்லோக மெண்பதத்தைத்
தல்லிலக்க மாங்கே யமரொடு—மல்குபிறர்
பேரீற்றப் புரந்தரன்ரூன் பொற்புறவே வீற்றிருந்த
யாற்றப் புரிவா னரசு. (அ எ)

அப்பான் மகலோக மாகு மிருகோடி
செப்பார்மார்க் கண்டாதி சீர்முனிவர்—வைப்பாமே
வண்ணிகலோ கஞ்சனலோ கத்தினள வெண்கோடி
யெண்ணுபிதிர் தேவ ரிருப்பு. (அ அ)

பன்னு தவலோகம் பன்னிரண்டு கோடியா
முன்னுசன காதியாங் குற்றுறைவா—ரன்னதன்மே
லெண்சத் தியவுலகீ ரெண்ணீகோடி யாங்கயன்றன்
மாண்பின் றலமளிக்கும் வைப்பு. (அக)

சாரும் பிரமபதந் தான்மூன்று கோடிமா
லாரும் பதவியுமெண் ணத்தொகையே—யோருஞ்
சிவலோக நாற்கோடி சேணதன்மீ மற் கோடி
யவிரண்ட கோளகையு மாங்கு. (கூ)

வேதமுத லாக விளம்பிடுதூல் வெவ்வேறு
வோதிடுமண் டத்தியற்கை யுன்னிற்பல்—பேதமுற
வவ்வவற் றின்றிரிபா ராய்ந்தவுணக் குண்மைசொற்ற
மெய்வமிலா வேந்தே யினிது. (கூக)

ஏதமிலிவ் வண்டத் திவர்புவன நூற்றெட்டா
மோதரன்சீ ரேத்து முருத்திரர்க—ளாதரவி
லின்பார் தரவே யினிதி னுறைந்தருளு
மன்பா ரிருக்கையுமாண் டாம். (கூஉ)

இவ்வண்டத் தின்னியற்கை யேமு னுணக்கிறைதல்
கவ்வண்ட மாயிரத்தெட் டாமவைக்கு—மூவ்வியல்பே
யேந்தனீ சென்றுகாண் கென்ன வகுத்துரைப்ப
வேந்த னுணர்ந்தான் விழைந்து. (கூக)

அண்டகோசப்படல முற்றிற்று.

ஆ திருவெண்பா சாஸ்

திக்குவிசயப் படலம்.

குரவனடி போற்றிவிடை கொண்டிளவ லோடும்
பரவையென மன்படைகள் பாரசூர்—ஓரவுணர்ந்து
தாரகன்முன் போயிறையைத் தாழ்ந்துமுன்னேன் றன்னேயண்மி
யாரவணங்கிநின்ரு னகுகு. (க)

சூங்கன் மகிழ்ந்துரைத்த சூழ்ச்சியெலாந் தாரகற்குச்
சிங்கமுகன் கூறச் சிரித்துகன்றென்—றங்கவனு
கற்றலெவ நள்ளாரை காமனிவெல் வான்விரைவி
லுறறிடவே வேண்டுமென்ரு னேர்ந்து. (உ)

சந்திரமா மோலியான் றன்னருளான் மைந்தருற்ற
வெந்திறலுந் தொல்வரமு மேலியன்னே—யந்தரத்தில்
வந்துநிற்கக் கண்டவளே வந்தித் தரமுகியோ
டந்தருவர் தாழ்ந்தா ரடித்து. (ங)

மாயைமிரு மாண்புணர்ந்து மைந்தரைத்தா னீன்றபொழு
தாயமகிழ் வின்மிகவுற் ரூசிசொலி—மேயமகத்
தீச னருள்வரங்கேட் டீண்டும்மைக் காணவே
நேசமொடு வந்தே னினேன்ந. (ச)

மைந்தர்கா ணீவிர் மகவான் முதலோரை
வெந்திறலான் வென்றவனி மேல்வாழ்ந்தி—ரந்தமின்றி
மாயைகள் வேண்டினனே மன்னுமுளத் துன்னுதிரங்
கேய முடித்துநிற்பேன் யான். (ரி)

என்று முமைப்பிரியேன் யானுமைக்காண் பான்பலகாற்
சென்றிடுவ னீர்ப்பேதந் தீர்ந்திருத்தீர்—கன்றெனவே
யீர்வளைசென் ரளளகைக் கேகவிறற் ரூனவர்க்கூய்
வார்முரச மெற்றுமென்ரூன் மன். (சு)

தாரமன்ன னேவலினுற் ரூனவர்கள் சாற்றுமுர
சார்முழக்கங் கேட்டனிக மத்திசையே—சார்தரவே
யூழியின்கண் மிக்கார்த் துயர்ந்து பரந்துவரு
மாழியெனச் சென்றதே யாங்கு. (எ)

வரையெனவே சென்ற மதமா வாணூர்
தரையெனவே சென்ற சடந்தேர்—திரையெனவே
சென்ற பரிமா திறனிரீஇ தானெனவே
சென்ற பதாதி திகழ்ந்து. (அ)

கூறு படைமூன்று கோடியாம் யோசனையின்
காறும் பரவிக் கடிதேக—வீறு
மனகா புரியை யடைந்தனவே தூசிப்
பளகார் தாரத படை. (கூ)

மண்ணிற் பரப்புளது வாரியின்மிக் கார்ப்புளது
விண்ணிற் புகுவதுகால் வேகத்த—தண்ணருந்தீ
பேரிற் திரவியினும் பேரொளிய தன்னிமயன்
றேரிற் திரளுலத் தேர். (கூ)

நாரி யொருபாக னல்கிந் திரளுலத்
தேரி லிவர்ந்திறைவன் செல்லவிரு—சாரி
லணித்தே ரிகலியோ ராளரிமான் பூண்ட
மணித்தேரிற் சென்றூர் மகிழ்ந்து. (கக)

கிரிமே லிவர்ந்துங் கலினத் தொடர்பூண்
பரிமே லிவர்ந்தும் பருந்தேர்க்—கிரிமே
லிவர்ந்துஞ்செல் சூர்தனைச்சூழ்ந் தெண்ணனிக வீர
ரிவர்ந்தபுடை சென்று ரினிது. (கஉ)

மன்னும் பதினெண் வகைமாப் படையேந்திச்
துன்னும் பலரிருதர் சூழ்ந்துவர—வன்னனிகத்
தார்த்தவிய மார்த்தரத மார்த்தகய மார்த்தவய
மார்த்தகழ லார்த்தபடை யாங்கு. (கங)

மண்ணின் றெழுபுழுதி மார்த்தாண் டனைமறைப்ப
விண்ணின் றமரர் வெருவிவந்தா—ரெண்ணின்று
சாரசர மெல்லாஞ் சலித்தவிறல் சூரனெனும்
போரவுணன் றூனைசெலும் போது (கச)

இத்தன்மை யாக விருஞ்சேனை யோடிறைவன்
சுத்தன்மை யின்னகரைச் சூழ்ந்தனனங்—கத்தன்மை
மேவலுறு மொற்றர் வினவி நெடிதோடிக்
காவனகர் சென்றூர் கடிது. (கஞ)

வியக்கயமாச் சூர்நகரை வந்துளோந் தானென்
றியக்கர்கோன் மூன்றுழ்ந் தியம்ப—மயக்கமுற்றுத்
தேர்ந்தனையார் பாகனருள் சீர்த்தலினும் வெல்வதிலென்
றேர்ந்தனையார்த் தாழ்ந்தலுற்று ணுற்ற. (கசு)

புட்பகமேற் சென்றியக்கர் போற்றணல் சூர்மதலை
நட்பகமேற் கொண்டாசி ரன்றியம்பித்—திட்பமிலா
யானு மமக்கடிய னென்னநீ வாழ்தியென்று
தானவர்க ளேத்தநின்றூன் றூன். (கஎ)

அதுகண் டரசுமிகை யாரு மகிழ
முதுகரி லுள்ளபொருண் முற்றுங்—கதுமெனவே
காரவுணர் மேவிக் கவர்ந்துசென்றூர் மீண்டுமக்கோ
னூரருரோ டேகினனு னுங்கு. (கஅ)

பிங்கலனேத் தொண்டுகொண்டு பேரனிகத் தோடிறைஞ்சர்
தங்களை நீங்கியா சைக்கடையாந்—துங்கநக
ரெய்தினண்மா னேந்தியுரு வெய்துபவன் வாழ்க்கையெனுச்
செய்திறனின் றெறன்றுசென்றான் சேண். (ககூ)

தானவர்கோன் பொன்னகரந் தான்புகலீ தோர்ந்தயர்ந்து
வானவர்கோன் விண்போய் மறைந்திட்டான்—மாநகரைக்
காயனற்கு நல்கிக் கடிதகன்று தானையொடு
தீயினகர் சென்றான் சினந்து. (உ ஐ)

அந்தகர்க்கே கேகலுந்தி யண்ணல் சினங்கொண்டு
வெந்திறல்கொள் பல்கோடி வீரரொடும்—வந்திடவே
சாரிருவர் தம்படையுந் தாவிச்சமர்புரிய
வாரனலின் சேனைபட்ட தாங்கு. (உசு)

வன்னிபடை தோற்றலுமே மாதயரங் கொண்டிழி
தன்னிலுல கெலலாந் தகிக்குமெழுந்—தின்னுபடை
யேந்தி யவணர்கோ னேண்படையெல் லாஞ்சிதைத்தா
னுந்திறல்கண் டானிலையோ னுங்கு. (உ ச)

சீற்றமொடு தாரகன்றன் றேரிற் கடிதேகி
யேற்றவணற் றேரை யெதிர்ந்துகையி—லாற்றலெண்விற்
வாங்கியரன் மாப்படையை வந்தித் தெடுக்கவும்ப
சேங்கியயர் வற்று ரினைந்து. (உஙு)

எடுத்தபடை தன்னேவிடி னேவரையு நாசப்
படுத்துமெனத் தீயோன் பணிவுற்—றடுத்துப்
பொறுத்திபிழை யென்றேத்திப் பொற்படையன் னுன்மே
லுறுத்திலனுள் ளுற்று னுவப்பு. (உ சு)

பற்று மிவனேப் படுத்துந் துயரென்னு
மற்றகுவர் தீயை வளைக்கவே—சுற்றவரை
நன்றகற்றித் தாரகனீ நம்மே வலினிற்றி
யென்றுவிடை தந்தா னெரிக்கு. (உஙி)

அங்கிபடை தோற்றலுமே யண்ணல் றிருநகரிற்
றங்கியசெல் வங்கவர்ந்தார் தானவருண்—மங்கியன
னூர்புகலெஞ் சூர்நடவு னுர்செலவான் றேர்விடுதி
யேர்வலவ வென்று னினிது. (உசு)

வென்றிசையார் வெந்தகுவர் வெள்ளம் விரைந்துவரத்
தென்றிசையான றேத்துழைஞன் சென்றிறைஞ்சி--நின்றுநின்றன்
றொன்னகரஞ் சூரனிகஞ் சூழ்ந்தனவென் சொற்கேளா
மன்னஞரி லாழ்ந்தனமே மன். (உஎ)

நிந்திபதியு நேர்ந்தாரை நீறுசெய்வோ னென்று
துதிபதியும் போஞமுஞ் சூரை—னதிபதிதா
டாழ்ந்தவனைச் சார்வெமெனத் தானையொடும் போய்ஞமலி
வீழ்ந்திறைஞ்சி ஞனே விசைந்து (உஅ)

தீய மறலி செயஞைக்கிச் சூரனீ
யேயசனத் தோடிருத்தி யென்றேவி—மேயபடை
வானிதியெ லாங்கவர்ந்து வாரியென வார்த்தேக
மாநிருதி பாலடைந்தான் மன். (உக)

நிருதிமற்றை யோர்த நிலைமைதெரிந் தன்ஞர்
பொருதிசைகொள் வன்பிலெனப் போதக்—கருதித்
தனது படைசுலவத் தாபவுணன் றூழ்ந்து
நினதுதமர் நாமெனன்ற னின்று. (கூ)

நிருதிகர் நீங்கி நிருதர்கோ னேக
வருணனுஞல் வாயுவுமை வாரி—யிருஞலகம்
போயதுணர்ந் தன்ஞர் பொருள்கவர்ந்து சூர்படைபோ
டேயதலம் புக்கா னினிது. (கூக)

பின்னகஞர் சேனை படரவன்ஞன் பேரரியற்றிப்
பின்னடைந்து போற்றவைகல் பேணிவைகி—முன்னமரர்
வைத்தவமு தத்தைவன்பின் வாங்கி யிளையரொடுந்
துய்த்து மகிழ்ந்தகன்ஞன் சூர். (கூஉ)

பிலங்களிற்சென் ஞங்காங்குப் பேர்விருந்து நாடி
நிலங்கடல்போய்த் தீவனைத்து நீங்கி—வலங்கொ
ளயில்வேலை யேந்தனிக மார்த்துவர மாயோன்
மயில்வேலை புக்கான்வெஞ் சூர். (கூக)

வஞ்சரிகற் ஞனை வருமோதை கேட்டவனி
கஞ்சமனை யாள கலந்தழுவி—யஞ்சமா
லஞ்சாதி ரென்ஞே தியங்கையி லொண்சங்காதி
யஞ்சா யுதமெடுத்தா ஞர்த்து. (கூச)

தென்றனிவில் வாங்கிச் சரங்க ளெறும்பொழுக்காய்
மன்றுளவித் தாம மணிமார்பன்—றுன்றுபடை
யார்போர்க் களத்தி லவுணர்மேன் மின்சோனைக்
கார்போற் பொழிந்தான் கணன்று. (கூஎ)

போர்செய் யவுணர் புரஞ்சிரங்கை காலொழிந்த
தேர்பரிமா வேழஞ் சைசந்தழிந்த—கூர்சமரி
லெண்ணிலுருக் காட்டி யெவரும் பெயராமே
விண்ணிலங்குன் பெய்தவெய்தான் வின்டு. (நகூ)

தென்ரூனை தாழ்வடையுந் தண்மைகண்டு தாரகன்மூ
னின்ரு தரவினஞ்ச னீரென்னுக்—குன்ரு
மெனவொருவில் வாங்கி யிகலரிமேற் பெய்தான்
கனமுகில்போ லார்த்துக் கடிது. (நகஎ)

உரத்திவர்க்கொப் பில்லென் றுலகேத்த வாழிக்
காத்தமைமால் பல்வடிவங் காட்டிப்—பொரத்தகையார்
தாய்சொன் மனுவோதித் தாரகனும் பல்லுருக்கொண்
டோய்வின் றமர்புரிந்தா னுற்று. (நகஅ)

மாயன் றகுவன் மணித்தேர் வலவன்மா
வீயவொரு கோடி விசிகமுய்த்தான்—நீயனது
கண்டளவிற் றண்டமொன்று கையேற் றரியெதிர்போ
யண்டமுக வார்த்தெழுந்தா னுங்கு (நகக)

ஏந்துபுகழ்த் தாரகன்மே லெண்ணில் கணைமாரி
சேந்தகண்ணன் சிந்தச் செலுமவற்றைக்—காந்திதரு
தண்டத்தி னுலே தடுப்பவெய்யோன் மாலாழி
கண்டத்தில் விட்டான் கனன்று. (நஅ0)

இமைக்குமுன்ன ரெவ்வுலகு மீறுசெய வல்ல
வமைக்கருமா வாற்றலுறு மாழி—சுமக்கருஞ்சீர்த்
தாரகன்றன் சுந்தரத்திற் ரூணுவாத் தான்மணியி
னூ மெனச்சிடந்த தாங்கு. (நசக)

அன்னதுகண் டச்சுதனு மற்புதத்த னுகியே
மன்னிளவற் ரூரகன்ரூன் மாவலிய—னென்னநினைத்
தாரவுணர் வானமர ரானவரி னிற்குநிகர்
வீரனல்லா லில்லையென்ரூன் வேறு. (நசஉ)

மன்னுழி கிற்கு மணியார மாய்க்கிடக்கி
னென்னும் வலிபிறர்க்குன் னேணிதென்ரூன்—முன்னுவா
ராகி லிகலுரைப்பா ராமெமக்கு நீர்தமரென்
ரூகிசொல்லிப் போனு னரி. (நசஙு)

ஆங்கதுகண் டாரவுண ராரத்தா ரமரரெலாந்
தாங்கரிய துன்பந் தலைக்ஙாண்டா—ரோங்கருஞ்சீர்த்
தாரகன்முன் போகத் தமய னவற்றழீஇப்
போனிகத் தோடகன்ரூன் போந்து. (நசச)

நிமிவரை காறு நிலவரைப்பு முற்றும்போய்த்
தேமில் விசும்பேகிச் சூழ்தபன—னுமுதலோர்
வாழியென் ரூசிசொல வான்றுறக்கம் புக்கான்சூர்
மாழிமையோர் மன்கேட்டான் மற்று. (சஙி)

வேந்த னடங்கி விழுமம் தலைக்கொடவட்
போந்த வவுணனெதிர் போயமரி—னோர்த்தனனே
லிந்தவுயிர்க் ரூ மிருக்கி னிடர்ப்பவ்வத்
துந்துபிழக் கானாவே னுற்று. (சசு)

ஆகையாற் போருளுற்றி யாலிவிடேன் பேதுறே
னுகைகொளன் னுர்நகையு மூட்கொள்னேன்—வாகையுறு
சூரபன்மற் காணிற் முகனார் தலையிடுமென்
ரூ நினைந்தினைந்தா னுங்கு. (சஎ)

இந்திரனிவ் வாறெண்ணி யேய்ந்தகுயின் மன்னுருவஞ்
சுந்தரியோ டெய்தித் துறக்கமுற்றான்—வெந்தகுவர்
தேடியுங்கா ணுரீது தேர்ந்தொளிகொள் பொன்னகரம்
வாடியதே தன்பொலிவு மாய்ந்து. (சஅ)

பிடித்தா ரிமையவரைப் பேரவுணர் குற்றி
யடித்தார் புயங்களெய தத்தா—லொடித்தார்பின்
கொற்றவன்றன் மூன்னர்க் கொடுவும்த் தலுமிறைஞ்சி
யுற்றவரும் போற்றுவா ரோர்ந்து. (சக)

தானவரில் வந்தாய் தவஞ்செய் தருள்பெற்ரு
யானதிசை காவலரை யாட்கொண்டா—யூனமிலா
யின்றுமுத லெங்கட் கிறையுறவும் யாவுநீ
நின்றனதே வல்புரிது நின்று. (இ0)

என்ன விவைகேட் டிமையோர் தமைநோக்கி
மன்னனகை செய்துதலை வாங்கிநீ—ருன்னுபணி
செய்குதிரென் றேவிண் டிருக்கொண் டிளைஞரொடு
மும்மகலோ கம்புக்கா னுற்று. (இக)

காலன் றனைவென்மார்க் கண்டேய ஞதியும்பர்
மேலதா மூன்றுலகு மேவியவர்—சாலப்
பரவ விவைகடந்து பங்கயன்பாற் போக
வுரவனெதிர் போதனுற்ரு னேர்ந்து. (இஉ)

மன்னவநீ வைகுமே வாழியென வாசிசொலி
யென்னதவஞ் செய்தனனே வீங்குவா—ரின்னுசடை
யத்தனடி பேணி யருந்தவஞ்செய் தன்னோப்போ
லித்தனைபே றுற்ரு ரெவர். (இஙி)

வளையாழி கைக்கொண்ட மாலா கியரை
யீளையாற் கொடுவென்ற தெண்கீர்—கிளையார்நீ
வாதையிலாக் காஞ்சன்றன் மைந்தனென்ரு ஞலுண்மூ
தாதைபி னல்லனென்ருன் ரூன். (கிச)

என்று முகம னியம்பியிளை யாரையுங்கண்
டொன்றுபடை யாதி யுதவச்சூர்—நன்றயினை
யங்க ணிருத்தி யரியுலகஞ் செல்லவந்து
செங்கண்மா லாகிசொலுன் றேர்ந்து (கிடி)

மாயனுல கண்ணி மகிழ்வுறக்கண் டன்னவனை
நேய முடனிருத்தி நித்தனுறை—தூயவுல
கேகிப் பணியநந்தி யெந்தையுய்ப்ப வீசன்முன்
போகிப் பணிந்தான் புரிந்து. (கிசு)

திண்டிறல்வெஞ் சூரன் றிருமுன் ரெழுதேத்தக்
கண்டல் கரியன் கருணைபுரிந்—தண்டமுற்றுஞ்
சென்றுநின தாணை செலுத்தி யிறைபுரிதி
யென்றுவிடை தந்தா னினிது. (கிள)

புறமடைந்து சூரன் பொருமனிகஞ் சார்ந்து
திறலண்ட கோளகையைச் சேர—மறைமலி
மேலோ ருருத்திரர்தா மேவினரான் ஞருமையோர்
பாலோ ரெனவுணர்ந்தார் பார்த்து. (கிஅ)

கார்முண்டஞ் செல்வாயில் காட்டியவ ருய்க்கமற்ற
வாழண்டஞ் சூரபன்மன் வன்படைகள்—சூழவே
யண்டங்க டோறுமே யவ்வண்ணஞ் சென்றுவென்றி
கொண்டு வளங்கவர்ந்தான் கூர்ந்து. (கிக)

இவ்வண்ணம் வெவ்வேரு மெல்லையிலண் டந்தோறு
மவ்வவுணர் தம்மையர சாகவைத்தே—தெவ்வடுசூ
ரின்றுணைவ ரோடுமீண் டேகியண்டப் பித்திகையுட்
சென்று துறக்கமுற்ருன் றேர்ந்து. (சுo)

திக்கு விசயப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா நிoசு.

எதிர்கொள் படலம்.

சொல்லருஞ்சீர்ச் சூரன் றுறக்கமுற்ற காலதனில்
வல்லவுணர் காஞ மகிழ்வுற்ரு—ரொல்லையி
லன்ஞன் வரவை யரையன்முன் போயொற்றர்
சொன்னர் களிப்புற்ருன் சூழ்ந்து. (க)

பின்றருவர் கோன்சூர் பெறுமா வுமம்பலவுங்
குன்றவில்லி யின்னருளுங் கொண்டுளத்திற்—றுன்றுபுகா
தன்னே யடைந்திறையைத் தானுறச்செல் வன்முன்போய்ப்
பன்னுதிநீ யென்றான் பரிந்து. (உ)

பாயொளிவி மானமேற் பார்க்கவன்செல் காலெவெஞ்சூர்
நேயமொடு கண்டிறைஞ்சி நேர்நிற்பத்—தூயவனும்
பன்னரிய வாசி பகர்ந்துபணி தம்பியர்க்கு
மன்ன பரிசுரைத்தா னுங்கு. (ஊ)

பார்த்திபகேள் காசிபன்றன் பன்னிருங்கை யைப்பயந்தான்
கூர்த்திமோ கேள்வியான் கூரவுணர்க்—காத்தமொய்ம்ப
னந்தரார்கோ னேற்றமர்செய் தாற்றலுற்றா னுதலான்
வெந்துயரின் மூழ்கினன் வேர்த்தது. (சு)

மன்னவநீ நோற்றவரம் வாங்கிவிறல் கொண்டடைதல்
பன்னவுணர்க் துன்வரவைப் பார்க்கின்றா—னென்னவெஞ்சூர்
மொய்யா ரகமகிழ்ந்தான் முன்னவுணர் மன்னெதிர்ந்தங்
கையாற் றொழுதான் களித்து. (எ)

அன்னபோ தொள்சூ ராசை யினிதிருத்தி
யென்னவைய நீயுளையே லேர்குலத்திற்—குன்னுங்
குறையுளதோ வென்றினிய கூறியயல் சென்று
னறைதகுவர் கோமா னடித்து. (அ)

பார்தனில்வெஞ் சூர்வந்த பான்மைதெரிந் தம்புயத்தோன்
சீர்கொள் வலாரிமுதற் றேவரின்பா—லார்கலியிற்
றுஞ்சுதிரு மாலைத் தொழுதுவெய்யோன் செய்கைபகர்ந்
துஞ்சுவகை சொற்றியென்று லேர்ந்து. (க)

சக்கிரியம் மாற்றந் தகக்கேளாப் புன்மையா
நக்கன் றனையிகழ்ந்து நாசமுறு—தக்கன்
மகத்தான் வருபாவ மன்பயனுந் துன்பை
யிகத்தான் விலக்குபவர் யார். (அ)

மூன்னெயிலோர் மூன்றின் முராணடர்ந்த முன்னவன்பாற்
பன்னுவரம் பெற்றுளான் பல்லண்டந்—துன்னிவென்று
ணுதலா னம்மா லவனெவெல்ல லாகாது
காதலாற் சென்றடைவோங் கண்டு. (கூ)

மன்றலல ரோனுதி வானோர் முனிவரிது
நன்றென் றிசைந்துநிற்ப நத்தனவர்—பின்றொடரச்
சென்றுவிறற் சூரன் றிருமுன்னின் றுரைசொலத்
துன்றுமன்பிற் போற்றினர் சூழ்ந்து. (கo)

கண்டவுணர் கோமான்முக் கட்பெருமா னென்னவருக்
கொண்ட தொகையினர்யார் கூறுகென—மண்டு
முருத்திரர்தம் மேன்மை யுரைப்பான் றுளவ
மருத்தெரியன் மார்பன் வருத்து. (கக)

எதிர்கொள்படலம் முற்றிற்று

ஆ திருவெண்பா நிகநி.

உருத்திரர் கேள்விப் படலம்.

மன்னவர்மன் னேகேண்மோ மன்னயன்முன் னோர்கற்பத்
தன்னுலகு மூன்று முயிருலகித்—தன்னும்
பரனெனவே தன்னையுன்னிப் பாழகந்தை மேற்கொண்
டரனே யயர்வுற்ற னன்று. (க)

பிரமன் விதித்த பெருகா வகையாற்
பரமன் றனைமறந்த பண்போர்ந்—தரவினினைந்
தன்ன னருள்கொண் டளிப்ப லெனத்தவஞ்செய்
தன்ன விருந்தா னுகம். (உ)

பன்னெடுநா ணோற்றும் பரன்வந் தருளாமை
யென்னவென வெண்ணியெண்ணி யேங்கியழு—முன்ன
ருலகையாக் காண்டகைதன் ணெண்கணீர் வீழ
வலகையா யீண்டிற்பே யாங்கு. (ங)

கண்டளவிற் பேய்கள் கருத்தி லிடர்விளைப்ப
விண்டனன்றன் ஞமியென வீழ்ந்தயர்ந்தான்—மண்டரிவு
தந்தன் னவன்கனவிற் சார்ந்தினிமீ யஞ்சற்க
மைந்தவெழு கென்ருன் வரன். (ச)

பரமென் றுனைமதித்த பான்மையா னீசெய்
கருமங்கை வந்தறிலே காணம்—தரவினுற
நந்தம் பதத்தினரை நன்றுநின்பா லுய்ப்பமென்ருன்
சந்தமறை தேடரிய சம்பு. (ஞ)

அன்ணன் கனவி லரன்வந்து தேற்றவுணர்ந்
தன்ன விருக்கவிறை யோங்குமரு—டன்னற்
பதிஞே ருருத்திரர்கள் பின்னத் துதித்தே
விதிஞேன்மை மேவுகின்ரூர் வேட்டு. (ரு)

ஐயநீ ரிங்க ணடைந்தென்கொ லென்னநீ
செய்யுஞ் செயன்முடிப்பான் றேவுய்ப்பத்—துய்யநின்பால்
வந்தே மெனாவின்னூர் மன்னுமான் றன்னூருப்போ
லந்தேக முற்றூ ரதித்து. (எ)

அன்னவரிவ் வாறருள வம்புயனென் பால்வந்தீர்
மன்னுயிர்க டம்மை வகுக்குதீ—ரென்ன
வருத்திரண்ட தம்வடிவி னேர்பதினேர் கோடி
யுருத்திராரைத் தந்தா ருகந்து. (அ)

அதுதேர்ந் தயனுயிர்க ளார்வினைக்கீ டல்லா
லிதுநீர் செய்கெறியன் றென்னப்—பதினேழு
ருருத்திரரு மெம்பதத்தி லொல்லையிற் போது
மிருத்திமுறை செய்தியென்னூ ரிங்கு. (கூ)

பாங்கலரோன் யாவும் படைப்பா னருள்புரிந்தே
யோங்கறிவின் மிக்க வுருத்திரர்சீர்—தேங்கரன்மு
னல்கு புவனமுற்றூர் நாகரிற்றூ நல்கினரை
மல்க விருத்தியொன்றூர் வாய்ந்து. (கo)

புவனமுன்னர் நல்கம் புயனுதலின் மேய
தவலில் விறலினர்தாந் தந்த—பவர்மூ வலாம்
பன்னுருத்தி ரேசர் பதினெரு கோடியரா
மின்னரும்ப போதிற்றூ ரிங்கு. (கக)

உருத்திரர்கேள்விப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா நிஉசு.

நகர்செய் படலம்.

என்னவவர் கூற விதுவோ நிகழ்ந்தென்னூன்
பின்னமரர் கம்மியனைப் பெட்பினிற்பார்த்—தன்னிப்
பகாருஞ்சீர் மன்னூர பன்மன்யா மேவ
நகரொன்று செய்தியென்னூ னன்கு. (க)

மயனதனைக் கேட்டிறைஞ்சி மன்னுமக்குச் செய்யும்
வியனகருக் கேற்றவிட மேவ—வியம்புகென
வன்பார் புகரோன் வளகர்கட் கெல்லைசூலத்
தென்பா லுததி யுற்றூன் றேர்ந்து. (உ)

அல்லுறுமுந் நீரு ளயுதமெட்டி யோசனையி
னெல்லைகர் முன்னேர்க் கெனக்கோலி—யெல்லை
நிலம்படுத்த நீண்மா நிவாரத்தாற் றூர்த்துத்
தலம்படுத்தி னுன்முன் றறை. (௬)

இந்திரவி நாடொறுஞ்சூழ்ந் தேகயுயர் மாமதினீண்
மந்திராற் கோபுரம்பொன் மாளிகைக—டந்திரநூ
லோ தியவா றுற்றி யொருதூறி யோசனைமா
வீதிபல செய்தான் விரைந்து. (௭)

மாளிகைசெய் சுண்ண மணிமன்ற முன்றிலம்பொற்
சூளிகையின் செய்யரங்குஞ் சூழ்நியமங்—கோள
ணெழில்வாய்ந்த மேற்றலத்தீ தெண்ணிலாத் தெற்றி
பொழில்வாவி செய்தான் புனைந்து. (௮)

அன்னதனுப் பண்ணே ரயுதவெல்லை யின்மணிசெம்
பொன்னெடுமா நாஞ்சில் புனைவனல்கி—மின்னு
மருங்கோ வியலென்னு மாயைமகன் வைகப்
பெருங்கோ வியலவகுத்தான் பேர்ந்து. (௯)

சிந்துரமா சேருமிடஞ் சேனையர்தேர் சாருமிடம்
வெந்தகுவர் தந்தலைவர் மேவுமிட—மந்தரம்வாழ்
நாரிமா ராடரங்க நல்லிசையார் பாடரங்கங்
கூரியலிற் செய்தான் குறித்து. (௧௦)

மாமறைதேர் மண்டபமும் மந்திரர்சேர் மண்டபமு
மாமகவான் வந்திருக்கு மண்டபமு— மாமகஞ்செய்
மண்டபமுந் தானவர்கோன் மன்னியல்செ யத்தாணி
மண்டபமுஞ் செய்தான் மயன். (௧௧)

பன்னிதியார் மண்டபமும் பல்படையார் மண்டபமு
மன்னமிர்தி னின்னமுதுண் மண்டபமு—நன்னறுஞ்சாந்
தந்துவர்க்காய் வெள்ளிலேமுன் னுர்ந்திருக்கு மண்டபமும்
விந்தைபெறச் செய்தான் வியந்து. (௧௨)

பன்மணியின் மேவப் பலமண் டபமாற்றிப்
பொன்மணியி னுலே புனைந்தறையுண்—மின்மருவ
மன்குலமாண் போங்க வகுத்தானஞ் சூரபன்மன்
றன்குலமா தோடமரத் தான். (௧௩)

அங்கதனைச் சூழ வகனிரைநீள் வீதியன்னு
னங்கையர்தம் மோடறைய நன்கியற்றிப்— பொங்க
ரனத்தான் மலிகமல வாவிசெய்குன் றூடி
மனத்தான் வகுத்தான் மயன். (௧௪)

புன்மையின் விண்ணுளி முதற் புங்கவரை மன்னவர்மன்
வன்மைகெட வென்றிகொடு வந்திறைமை—மன்முறையான்
வாமமுற்ற வீர மகேந்திர மாபுரமென்
ஞமமுற்ற தம்மா நகர். (கஉ)

ஏம மிமைய மிலங்கை யொடுநீலஞ்
சோமமென்சு வேதந் துலங்கவுணர்—வாமம்
பதுமநா ம்புரங்கள் பன்னகர்க்கெண் டிக்குஞ்
சதுர முறவகுத்தான் ரூன். (கங)

மன்னுமுசீர் வீர மகேந்திரமிவ் வாறுல்கி
யன்னதுதா னென்றயர்க்க வாசுரமென்—றுன்னரிய
மாநகர மொன்றுவட வாரிநடுச் சீயமுகத்
தானவற்கு நல்கினுன் ரூன். (கச)

வாரியுறு தீவுதொறு மன்னனிகஞ் சுற்றமெலா
மாருதற்குத் தொன்னகர மாங்கமைத்து—மேருவின்றென்
பாலு வலந்தீவிற் பன்னுபொற்கூ டத்தருகிற்
சாலுகர் தச்சனுற்ரூன் சார்ந்து. (கரி)

சாற்றிடுமவ் வெல்லதனிற் ரூரகற்கா வேவருமே
போற்றிடுசீர் மாயா புரமெனக—ராற்றிமன்னர்
மன்னவர்க்குக் கூற மகிழ்வினன்றென் ரூங்கனெறுழ்
றுன்னனிகத் தோடடைந்தான் சூர். (கசு)

நகர்செய் படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா நிசஉ

பட்டாபிடேகப் படலம்.

மன்னவர்மன் வீர மகேந்திர மாபுரமுற்
றுன்னருஞ்சீர்த் தன்கோயி லுட்புகுந்தா—னன்னவனுக்
கீண்டுமுடி சூட்டுதுமென் றெண்கணன்மூற் றேவிலொலாம்
வேண்டுபொருள் யாவுமுய்த்தார் வேட்டு. (க)

மாடியலோர் பீடமுற்று மன்சுரர்கன் னீராட்ட
வாடியுடையுடீஇ யாய்ந்தமலர்—சூடி
யணிபூண் டிணைஞரரு காக நிருதர்
பணிபூண் டிசைபகர்ந்தார் பாங்கு. (உ)

வெண்ணிருதர் வேந்திறைஞ்ச வெங்குருவிண் ணோர்போற்றத்
தண்ணிக் திரண்டுயரச் சூரபன்மன்—மண்ணரியின்
கான்முகத்தோர் பீடமுற்ருன் காமருசீர் மோலிகொடு
நான்முகத்தோன் சூட்டினு னன்கு. (உ)

கீண்டவுணர் மாயைமகன் கான்மலர்த்தா டாழ்ந்தெழீஇ
மண்டுபெருங் காதன் மகிழ்ச்சியுற்ரு—ரண்டரொடு
மாமுனிவர் மன்னவர்மன் மாமுடிமேற் ருமுறையே
தூமலர்கள் பெய்தார் துதித்து. (ஊ)

திருத்தவிசின் பாற்றுணைவர் சீரயன்மா றம்மை
யிருத்திரென வன்னு ரிருந்தார்—கருத்தினும்பர்
கோன்மன் களாசியக்கர் கோனடப்பை கூர்சமிரர்
வான்கவரி கொண்டார் மகிழ்ந்து. (எ)

ஆரவுணர் கோனுடைவா ளங்கைதனிற் கொள்ளக்
கூரிரவி திங்கள் குடைநிழற்ற—வாரிமன்னு
டானமகா ராலவட்ட மாங்கசைப்ப விஞ்சையர்கள்
கான மிசைத்தனரங் கண். (ஈ)

கூற்றுவனுஞ் செந்தழன்மெய்க் கோமானும் வேத்திரங்கை
யேற்றெவரு நீங்க வெரிவிழியி—னூர்த்து
நிரலுறவன் னுரை நிறுவிச்சூர் தன்னீர்
பாவியய னின்னூர் பணிந்து. (ஏ)

நிருதர்கோன் கோடிகந்தா னீள்கரத்திற் கொண்டா
னிருசுரவர் மாமுனிவர் யாருந்—தருகலச
வாசவற நூர்வையான் மாமறையோ நித்தெளீஇ
நேசமுற வாசிசொன்னர் நின்று. (அ)

கூரமரர் மாத நிசைபாடி யாடினர்
வரமரர் தத்தமுறை கொண்டாற்றச்—சூரபன்மன்
சியத் தவிசிற் றிருநிகழ மேவியிவை
நெயத் தடனவில்வா னோர். (கூ)

பட்டாபிடேகப்படலம் முற்றிற்று.
ஆ திருவெண்பா நூறுக

அரசுசெய் படலம்.

தீளிர்த்ததுழாய்த் தாமனைவெந் தானவர்கோன் ருன்பார்த்
தளித்தவன்மூ தாதைமுறை யானீ—ளிளித்திடுங்கான்
மேவுகென்றிங் கன்னவன்சேய் வேதனைப்பார்த் துன்மகரோ
டோவிலங்க மோதுகென்ரு னுற்று. (க)

வெங்கதிரை நோக்கிமன்னன் மேவுமும்மூர் காறுமினஞ்
செங்கதிர்கான் றந்தரத்திற் செல்லெனத்தண்—ணங்கதிரைப்
பார்த்துன் கலிகுறைதல் பல்கலின்றி யோர்படித்தாய்ச்
சீர்த்தினன்போற் செல்லென்றான் றேர்க்கு. (உ)

வன்னிதனே நோக்கி வளருகரில் யாரெனினு
முன்னிலவர் தம்பணிசெய் தொண்மலரின்—றண்ணியல்கொ
ளெண்றெமனைப் பார்த்துமும்மூ ரெல்லையில்வாழ் மாபரியைக்
கொன்றுகுவர்க் கொல்லலென்றான் கோ. (ஊ)

காற்றிறையைப் பாராக் கடிநகருள் ளார்தீத்த
காற்றமல மாடைபணி நற்சாந்த—மாற்றுதியென்
றூழிமன்னைக் கண்ணுறீ இ யாரநாந் தம்பனிநீர்
சூழிடத்திற் றூவென்றான் சூழ்ந்து (ச)

இந்திரனே நோக்கி யிமையோர் திசைகாப்போ
சந்தவரோ டார்ந்துபணி யாற்றுகென—வெந்திறலோ
யேவுபணி செய்குதுமென் றேவருமவ் வாறெழுக
மேவுமண மூன்னினான் வேந்து. (ரி)

பொருவிலெழில் விண்ணோர் புனைவன் றவத்தான்
வருபதும கோமளையா மாதைக்—குருவெங்
கதிரயன்மா லும்பரொடு காரவுணர் போற்ற
விதியின் வதுவைசெய்தான் வேந்து. (சு)

ஆங்கதற்பின் வானை ரசுரரொடு கந்தருவ
ரோங்குசித்த ராதியர்த முண்கணறுங்—தேங்குவளை
மானனையார் தம்மைவெஞ்சூர் மாமணஞ்செய் தின்பமலர்த்
தேனுகர்வண் டிற்றுய்த்தான் சேர்ந்து. (எ)

அரிமுகனும் பின்னவனுக் கந்தகன்ற னன்பாற்
றருவிபுதை யைக்கடியிற் றந்து—நிருதியென்பான்
றண்மகளாக் தையற் சவரிதனைத் தாரகற்கு
மன்மணஞ்செய் வித்திட்டான் மன். (அ)

வர்மணஞ்செய் பின்ன ரிளஞரைப்பார்த் துங்களுக்காற்
றூர்புக் கிருகோடி யோங்குவெள்ள—மார்படைக
ளோடிருத்தி ரென்றேவ வொண்புகழ்ச்சூ ரன்னவர்தா
நாடியவ ணேகினார் நன்கு. (கூ)

தின்வன் படையின் றலைவரிற்பல் லோரைப்பார்த்
தண்மற் றிருகோடி யோதுவெள்ள—மன்படையோ
டாழியின்கட் டீவுதொறு மாற்றிய மூதூரேகி
வாழுதிரென் றூனவரை மன். (கூ)

தெறுமவுணர் தம்மைவான் றிக்கதலம் யாவு
மறுகோடி வெள்ளமோ டாங்குக்—குறுகச்செய்
தெங்கு மனிகமுற வெண்ணிலக்கம் வெள்ளமுற்றோர்
தங்கநகர் மேவவைத்தான் சூர். (கக)

யானேபரி யேனமரை யாளிபுலி யேயமெண்ணி
ஞனனமா வீரரைத்திக் கார்கரிற்—றூணமர்த்தி
மன்னகர்காப் பான்செய்து வான்வீர ரைக்கோயின்
மின்னெயின்முன் காக்கவைத்தான் வேந்து. (கஉ)

கொன்றூர்க் குணன்றரும கோபன் முதலோரைத்
தன்மந் திரியாத் தூஉனகொண்டு—பன்மலர்தூ
யாரமார் போற்ற லரியணைமேல் வீற்றிருந்து
சூராசு செய்தான் றுதைந்து. (கங)

அரசுசெய்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா நிசுசு.

தேவரையேவல்கொள்படலம்.

மேவுமர சாளுகையில் வேந்திமையோர் மாமுனிவ
ரேவரும்வெஞ் சூர்க்கு மிளையோர்க்கும்—யாவர்க்கு
மன்னுர் பதிதொறுஞ்சென் றங்கேவல் செய்தூச
லென்னு வுழல்வா ரினைந்து. (உ)

பணிசெயுங்காற் சூர்சுரர்க்கூப்ப் பன்னவுண ராற்றும்
பணியவர்க்குத் தம்பியராம் பண்பாற்—பணியுமதே
மைத்தகடன் மீனே வலையிட் டவர்க்குவைக
லுய்த்திடிதி றென்று ணுகந்து. (ஊ)

சொன்மொழிகேட் டன்னுர் துயருற் றுளநடுங்கி
மன்சொன் மறுக்கும் வலியினமோ—வென்செய்வ
மூய்கிறன்வே றில்லமெனு வோர்ந்திறையைத் தாழ்ந்தவணஞ்
செய்துமெனச் சென்றூர் செறிந்து. (கூ)

சென்னெறியி லிந்திரனுந் தேவரும்புன் கண்ணுற்றே
யன்னெறிய தாயபழி யண்ணுதற்கு—முன்ன
ரிறப்பதுநன் றஃதுமெய்க் கெய்தாதச் தோவென்
றுறப்புலம்பி வீரைபுக்கா ருற்று. (எ)

பகரா யிரங்கண்ணன் பன்வருணத் கூவி
மகரா லயந்தனக்கு மன்னுந்—தகவோய்
திரையேய் கரத்தாற் றிமிங்கலமுன் மீனிக்
கரையேற் றுதியென்றான் கண்டு. (இ)

வானத் திறையிரங்கும் வாய்மொழிகேட் டேர்வருணன்
யானத் தொழில்புரிவே னென்றியம்பி—மீனத்
தொகையாவும் வாரித் துணைக்கரத்தாற் சேர்த்தான்
வகையர வரைபோன் மருங்கு. (ஈ)

ஊனமினீ ரேந்த லுவந்தொல்லை யிற்றந்த
மீனவெற்பை நோக்கியரி விண்ணவரைத்—தானழையா
வின்னமச்ச மெல்லா மெடுப்பதும் வேலையென்றா
ரின்னமச்ச மூற்றா ருலந்து. (உ)

மின்னுந் திமிங்கிலமா மீன்முதலா மீன்வரையை
யுன்னிரவி காய்தந் துலர்த்தவிண்ணோர்—மன்னன்
சுமையாத் ததனைச் சுமந்தநகர் சேறா
மிமையா ரெடுத்தழல்வா ரேற்று. (ஊ)

இன்னலங்கொள் சூரபன்ம னென்னுங் கொடியவனை
முன்னந் துயர்க்கடலின் மூழ்கினேம்—பின்ன
மிழிபாந் தொழிலா மிதுவும் புரிந்தே
பழிபாவ முற்றோம் பரிந்து. (எ)

மக்கட் கதியினிலும் வாளோர் கதிசிறப்பின்
மிக்கதென்பர் மேலோர் வியனுலகம்—தொக்குநகக்
காண்சுமந்த கற்பகந்தார்க் கம்மேற்ற கடல்படுபன்
மீன்சுமந்தம் வீந்திலதீர் வீழ்ந்து. (ஏ)

மறையொழிக்கிற் றீர்ந்தம் வலைஞர் தொழிலாங்
துறையொழுக்கிற் றேர்ந்தமெனத் துன்ப—நிறைய
வலம்பித் திரையு மலைபோற் றெருவிற்
புலம்பித் திரிவார் புலர்ந்து. (ஐ)

அன்ன செயல்கண் டவுணர் கடல்கலக்கி
யின்னமீ னல்கினு ரென்றுரைப்பார்—மின்னிரவி
யுண்ட வெறுங் கோதோ வும்ப ரெமக்குகந்து
கொண்டடைவ தென்றுரைப்பார் கூர்ந்து. (ஒ)

மீனந் தலைக்கொண்டு மேவு மிவர்தமக்கு
மானமில்லை யோவென்பார் மற்றவர்தாம்—ஞான
மதியின் மிகவும் வலியவரென் றுலும்
விதியின் பயனென்பார் வேறு. (ஓ)

வானவர்கோன் மண்ணிசழும் வண்புலிவந் தெய்தியுமே
யூனமென வோரா துயிர்வாழ்த்த—லீன மன்றே
வன்னவன்பெண் கொல்லோ வலிதானே பேடுருவோ
வென்ன வுரைப்பா ரிகழ்ந்து. (கச)

இவ்வணம்பல் லோரியம்ப வேந்தலும்ப போடேக
வவ்வயின்வா யில்காப்போ ரார்குப்பச்—செவ்வி
யிருங்கோதின் மீன்கொடுபோ யேரவுணர் கோமான்
பெருங்கோயி லுள்ளுய்த்தார் பேர்த்து. (கரு)

துன்னமரு ருத்தமீன் சூர்முதல்கண் டோகையுற்றே
வன்னவும்பர் வந்தளித்தீர் மான்பிதென—மன்னகல
வேதவழு வத்தில்வீழ்ந் தேலல்செய் தென்றுகொந்தும்
வேத வொழுக்கமற்றார் வேர்த்து. (கசு)

தேவரையேவல்கொள்படலம் முற்றிற்று.

ஆ தி.ருமெண்பா நி ரு.

புதல்வரைப்பெறு படலம்.

மருவியவஞ் ஞான்றவுணர் மன்றவத்தின் சீரா
லொருபதும வோமாலையென் றோதுதற்—கிருவனையா
டன்னுதரத் தோர்மன்சூன் றவன்கூற்றஞ்ச
வுன்னுமிளந் திங்கள்போ லுற்று (க)

மைந்தனைச்சூர் கண்டு மகிழ்வெய்தி மாவெறுக்கை
யந்தகுவர்க் கண்டரெலா மல்லலுறத்—தந்தனன்பின்
பொற்றொடியா ராசிசொலிப் போற்றிடவச் செல்வனைச்சீர்
நற்றொட்டி லிற்சேர்த்தார் நன்று. (உ)

மாழைமணித் தொட்டிலின்கண் மைந்தன் றுயிலுகையி
லேழை யிவளியந்தே சேந்தலென்றூழ்—தூழையிலுற்
றூரியன்மெய் யிற்பட்ட தாங்கதனை நாடியன்னுன்
சூரியனைப் பார்த்தான் சுவித்து. (கூ)

பார்த்தெழிலார் தொட்டினின்று பால னிருவிசும்பிற்
கூர்த்தெழுந்து பாய்ந்தினைக் கோளரவிற்—கார்த்தநெடுங்
கைத்தலத்திற் பற்றிவந்து கட்டியங்குக் கண்வளர்ந்தான்
மெய்த்தவத்தின் மிக்கதுண்டோ வேறு. (எ)

செங்கதிரோன் சேணகத்திற் சேறலின்றித் தீங்குறுத
லங்கயன்வா ளேர்கண் டயர்வொடுபோய்—நங்கள்
குறைநீத் தலரிதனைக் கொற்றவநின் சேய்செய்
சிறைநீத் தளித்தியென்ரூர் சேர்ந்து. (டு)

பன்ரூ பன்மன் மலரோன் றனைநோக்கி
யென்சூரி யன்றீங் கிழைத்தவை—நின்சே
யெழின்முகத்தி லாதபத்தா னெய்தவவற் பற்றி
யிழிசிறையிட் டானென்ரு னீங்கு. (கூ)

மகவுசெயல் கேட்டு மகிழ்ந்திறைநீ ரண்பின்
மிகுசொனவின் றேர்சேய் விடுப்பப்—பகலவனைக்
கொண்டே குதிரென்ரூன் கோகனகக் கோன்விடைகொண்
டொண்டேவ ரோடுசென்ரு னூங்கு. (எ)

அன்ன வமயத் தாமகளி ராடவிசை
மன்னமணித் தொட்டிலிலார் மைந்தன்பாற்—முன்னிநின்றே
யாகிசொல வன்னு னளிப்பதென்கொ லென்னவினன்
மாகிறையைத் தீர்த்தியென்ரூன் மற்று. (அ)

பிர்தந்த நான்முகனைப் பார்த்துண் படைதந்தா
லேர்தந்த வெல்லோனை யான்விடுப்ப—லோர்தியென
வுங்கடன்றன் னுயுதத்தை யாகிசொலி கல்கையைந்தன்
செங்கதிரை விட்டான் சிறை. (கூ)

படைதந் தமையும் பரசுமனை வோர்க்கும்
விடைதந் தமையும்•வினுவி—மிடைபுகழ்ச்சூர்
தாமம் புனைமதற்குத் தான்பானு கோபனென
நாமம் புனைந்தனனந் நாள். (கo)

சூருவி லெழிற்பானு கோபன் மடவா
ருருவின் மதனென் முரைப்பப்—பொருவிற்
றிருமா லொடுசமரஞ் செய்தனையான் றன்னைப்
பெருமா விறல்கொண்டான் பின். (கக)

படலோன் பகையைப் பயந்தமைபோற் பின்சூ
ரிகலோன் மயன்மகட்சேர்ந் தீர்தீ—முகவனுடு
செப்பிரணி யன்வச் சிரவாகு வைப்பெற்ரூன்
முப்புவன முந்துளங்க முன். (கஉ)

மற்றமனை யார்தோண் மருவிவெஞ்சூர் பத்துதூ
றுற்றமும்மை யார்புதல் வோர்தம்மைப்—பெற்றமர்ந்தா
னுற்றலினை யான்பா லதிசூரன் ரூன்றினன்பின்
னுற்றுவர்வந் தெய்தினர் கொய்து. (கங)

திங்கிருமுகத் தாரகன்பாற் சார்முன் றயவலியான்
மைக்கனசு சேந்திரன் வந்தனனற்—கிகைதயுளான்
பாவம் புரியான் பழிபூணு னீதியன்றி
யாவும் புரியா னிசைந்தது. (கச)

பகைமையுளார் வீரம் பகர்தெதிர்ப்பி னன்னர்
வகைமைகெட வெல்வான் மனத்தன்—நகைமையுளான்
நீயகள்ளி நல்கதில்போற் சேயைகல்கி தாரகன்ருன்
மாயாகர் வவினன்சீர் வாய்ந்து. (கடு)

(புதல்வரைப் பெறுப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா நிகூடு.

வில்வலன் வாதாவிப் படலம்.

அன்னார்க் கிளையா ளசமுகியென் ஞமத்தா
லின்னார்க் கிவளில்லா ளென்பதில்லள்—பொன்னர்
நிறையில்லா ணல்ல நினைவில்லாள் வேள்வித்
துறையில்லா தூறுசெய்வாள் சூழ்ந்து. (க)

தேசுற்ற காளையரைத் தேடிப் புணர்கிற்பாண்
மாசுற்றத் தாரையிகழ் வாரைவகைத்—தாசுற்ற
வாயிலிடு வாளொருநாண் மாதிறரு வாசனல்லே
மேயினளவ் வல்லான் விரைந்து. (உ)

மன்னிடலு மாமுனிவன் மாதே தனியே நீ
யுன்னிவந்த தென்கொ லுரைத்தி யெனை—நன்னியம
மாதவனின் பான்மேவி மைந்தர்ப் பெறவந்தே
னேதுவதீ தென்ரு னுகந்து. (ஊ)

நின்றனெடி கூடினனே னீடி தவமெல்லாங்
குன்றிடுமே யென்ன நினைக் கூடாதே—யின்றகலேன்
வாட்டமொழி கென்று லலிமையினுற் புல்லியவ
னேட்டவமிர் தண்டா னுவந்து. (எ)

மைமுகத்தாண் மாமுனியை வென்மையினுற் புல்குதலு
நொய்தினிரு மைந்தருற்ரூர் தோன்றமிசா—ரைதவரை
யண்ணைவரு கென்றுதழீ யாரவுண ரில்வந்தீர்
மன்னவலி நோற்பிரென்ரு வாய்ந்து. (ஏ)

செல்வர்தாந் தாய்தந்தை சீரு நவ மெய்திவர்போர்
வில்வலன்வா தாலியென மேவினரா பச —சொல்வுண்ண
மாசிலான் முன்பணிய வன்ன னவர்ப்பார்ப்
பேசுதிர்தும் வேட்கையென்முன் பன். (சு)

செய்தவங்கள் கென்னச் சிறுவ ரவைசாரே
னுய்பொருள்வே முண்டே லுரைத்திரென —வெய்துனைந்
கொண்டு கயவர் கொலங்னைத்தா ரன்னதனைக்
கண்டுமுனி செல்வான் கடிந்து. (எ)

சாருமைந்தர் கீவிர் தவத்தோர்க் கிடர்செய்வீ
ரோரு மலயமுனி யும்முடைய— ராருயிரைக்
கொள்க வினியென்னக் கூறிவிஞ்சை யிற்கரந்தான்
னுள்கலோ நூ றேர்ந்தமுனி யுற்று. (அ)

தீக்தை கனைக்காணர் தாய்பால் விடை கொண்டு
மைந்த ரிருவருமோர் மாவனமூற்— றந்தவரைக்
கொல்வான் மனத்துன்னிக் கோதி லயற்சூழ்ந்து
நல்வான் றவம்புரிந்தார் நண்சு. (சு)

ஆரழலி னேற்று மயன்வந் தருயையுன்னிக்
கூரயில்வாள் கொண்டிளையோற் கொன் றுடலின்—சோரிதசை
நெய்யவியாத் தீயிலன்னு னீண்மந் திரத்தினுய்த்து
வெய்யவனேர் வேள்விசெய்தான் வேட்டு. (கo)

அதுகண் டயன்வந் தரியசெயல் செய்வா
யெதுநெஞ் சுகந்தசென வொதை—பதமிறைஞ்சி
வேவென்னற் றம்பிவர வேண்டுமென வாதாவி
வாவென்ன வந்தான் மகிழ்ந்து. (கக)

வில்வலனென் பின்னுன் விளிந்தக்கால் யானெழுப்பின்
வல்விரைலி லன்னுன் வரவரமே— நல்கென்ன
வவ்வண்ண மேபலமா ளாக வெனநவின்முன்
செவ்வன்னா மேவலரோன் றேர்ந்து. (கஉ)

போதனருள் செய்திருஞ்சேண் போகமைந்தர் சூர்முன்போ
யேதமிலுன் மாமருகோர் யாமாகு—மாதலத்தி
னற்றவரைக் கொல்வலிமை நண்ணியசீதா தித்தழீஇ
மற்றவரை வைத்தான் மருகு (கங)

அன்னர் சிலவைக லங்கமர்ந்து பின்குடிஇ
னன்ன முறுகவலை நண்ணடலி—தன்னிலிக
லாவுண ராச்சிரம மாற்றியதி லெப்பொருளுங்
கூரவைத்தா ராருமெச்சக் கொண்டி.

ஆக்கா ரிடராயுற் ரூருயிர்கொன் வான்கரு,ச்
சிங்கா ரிஜோயோன் செழுத்தகரா—யூங்கார
முன்னேன் முனியாய் முனிவராய்ச் செல்வாரை,ர
தன்னே ருறையுளுய்ப்பான் ரூழ்த்து. (கரி)

முகமை லுரைத்து முனிவீர்யா னேற்ற
வகமன் றவத்திவ டைடந்தீ—ரிகமன்
பயனுற்றே னில்லிற் பரிந்தடிசி லுண்டு
கயனுற்றே செல்லிரென்ரு னன்ரு. (கசு)

வில்வலன்பின் பின்னும் வெரிதணித்தட் டீனருத்தி
மல்வலவா தாவி வருகென்ன—வல்விரைவிற்
கீழோன் றவர்வயிற்றைக் கீண்டுவர் வாண்டவரு
ஞாழோ டயில்வா ருகந்து. (கள)

மாமுனிவ ரூன்வாய் மடித்துப் பழமைபோற்
காமுறுதல் லாடாக் கவினமரு—மாமுனியா
வன்ரு நிருவோரு மாங்கமர்ந்து காடோறும்
கொன்ரூர் செயலிறுற்ரூர் கூர்ந்து. (கஅ)

வில்வலன் வரதாவிபடலம் முற்றிற்று.

அ திருவெண்பா ரூகூ

இந்திரன் கரந்துறை படலம்.

இன்னவணங் காரணை சோர்முனிவ ரைச்சுரையா
யுன்னுகரர் தம்மை யொறுப்பலிகன்—மன்னவர்ம
ஞயிரத்தெட் டண்டமெலா மாங்காங் கணித்தேர்மேற்
போயிறைமை செய்தான் புரிந்து. (க)

பாதலத்து மீதலத்தும் பன்மா நிரத்தமெழிற்
போதன் பதத்தும் புனத்துளோன்—மோதக்க
வைகுந்த மென்பதத்தும் வைகியங்கங் கோர்பகற்சூர்
வைகுந்தன் மந்திரத்துள் வந்து. (உ)

அவ்வகையா லாரு மடற்சூர் மகவானென்
றெவ்வைச் சிறைபுரிந்து தேவித்தனை—வவ்வவுண்ணித்
தானைத் தலைவன் றனைவிரியா வொல்லையுப்பர்
கோனைத் தருகென்ரு ன்கூர்ந்து. (ங)

கூற்றனைய னெனபதெனுங் கோடியரைக் கூய்கீர்மாற்
கேற்ற மனை யாட்பற்றி யீமென்னச்—சிற்றமுனார்
செல்லவொற்றர் போயிறைக்குச் செப்பமன்னோர்க் தில்லாளோ
டொல்லையிற் சென்ரு னுலகு. (ச)

போயபின்வெஞ் சூர்விட்ட பூவையரும் வீரரும்போய்க்
காயகர் நாடியெங்குங் காண்கிலார்—மேயசசி
யிந்திரனே டேகினு னென்செய்து மென்றயர்ந்து
வெந்தயின் மூழ்கினர் வேர்த்து. (ஞ)

பன்னருஞ்சீர் வேந்தன் பணிமுடித்தி லேமென்னத்
துன்னி நகரெங்குந் துருவியவண்—மன்னமரர்ப்
பற்றிமக யானைப் பகர்சசியைக் காட்டென்னக்
சூற்றினர் நெய்த் தோருகவே கூர்ந்து. (ங)

வானமர்வார் யாரு மகவானுக் தேவியுமே
போன தண ராதற்றேரும் புன்கணென—மானவரை
விட்டு மகேந்திரத்துண் மேவியிறை பாற்றுயரப்
பட்டு நிகழ்ந்தசொற்றூர் பாங்கு. (எ)

செப்புவெஞ்சொற் கேட்டிறைவன் றீயின் வெருண்டாரிய
வைப்பிழந்தான் போல மறுக்கமுற்றே—யொப்பதிலா
வொற்றரைக்கூ யொண்டொடியோ டும்பர்க்கோனுற்றுழிநீ
ருற்றறிதி யென்றனன்சூ ரோர்ந்து. (அ)

மன்னவர்மன் றுண்டவொற்றர் மாவுலகெ லாந்தேடித்
துன்னனர்காண் கில்லர் துயர்ந்துநிற்கப்—பொன்னகரம்
வானிழந்த மாமதியும் வானுடுவும் போற்பொலிவு
தானிழந்த தன்றே தளர்ந்து (கூ)

உயிரிழந்த மெய்போ லொளிபோய்த் துறக்க
மயர்வுறவு பேந்திரனு மாண்மைப்—பெயர்வுற்று
வைகுண்ட மேவுமக வானைக்காண் பான்போய்ச்சில
வைகலங்குற் றுன்சயந்தன் வாய்ந்து. (கo)

சார்ந்த முறுசயந்தன் றந்தையொடு தாய்கரந்து
போந்ததுமுன் னுகப் புலக்கேட்—டாந்தயருற்
றென்னகர மேதமற யான்புரப்ப லென்றுன்னிப்
பொன்னகரம் புக்கான் புரிந்து. (கக)

புக்க சயந்தன் புலம்பண் டரைக்கண்டான்
றக்கதந்தை யன்னே தனைக்காணுன்—மிக்கதுயர்
மன்னுதறி மூழ்கினன்யாழ் வல்லவனங் கண்ணெழீஇப்
பன்னுதவி சீர்துன்றுன் பாங்கு. (கஉ)

நின்றசயந் தன்வருத்த நித்துலுஞ்செய் சூர்க்கஞ்சி
யென்றந்தை தாய்செல் லிடந்தெரியேன்—மன்றுயர
மென்றகலு மெனைனமுனி யேர்மா மணித்தவிசி
னன்றிருத்திப் பின்னுரைப்பா னன்கு. (கக)

நிலன்றீது வந்தெய்தி ஞஞ்செய் வினையின்
பலனீ தெனைத்துய்ப்பர் பண்பார்—புலன்வென்றோர்
தன்பின்போ டாக்கமின்மை தன்னலையின் மன்னுயிர்க்கு
முன்பின் வருமுழ் முறை. (கச)

ஆதலினுந் தாழ்வு மவணருபர் வந்தரியா
வீதிண்மை யாக்கோடி யிங்கசன்றே—யோதுமி
மிருகுரவர் தந்த மெழின்மெய் சரந்தி
மருவினர்மும் நீர்மா வரைப்பு (கஙி)

அந்தினீ தோற்றுமுன்ன ரண்டர்க டிருக்கண்செப்
தந்திமுகத் தானவன்றன் சாகவந்தா—ளந்தை
மூயன்றதுபோ லின்று முயல்வான்சூர் மாளும்
வியன்றருசீர் கொள்வாய் விரைந்து (கக)

நின்றிரீ தெனைத்தேற்றி நாரதன்செல் லச்சயந்தன்
மன்னுயர்கொள் வாஞ்சூர் மனந்தேற்றி—வன்றிறல்கொள்
வெஞ்சூர் பணித்த விதஞ்செய் திடத்தூண்டி
மஞ்சூர் விசும்பிருந்தான் வாழ்ந்து (கஎ)

மூள்புவியிற் சென்மகவாள் மொய்குழலோ டீராறு
மன்பெயர்கொள் காழியுற்றிம் மாதலதிற்—றன்பதியை
யந்தமல சாற்பூசை யாற்றுதிமென் றுன்னியகோர்
நந்தவனம் வைக்கலுற்ற னன்கு. (கஅ)

எல்லையுறு வேலி யிலாங்கலிமா சந்திலா
வில்லுவமார் கொன்றைகா வீரமௌவன்—முல்லைமரு
வந்தவன மாதி யளவி றருப்புசரா
னந்தவனம் வைத்தா னயந்து. (கக)

அந்தவனத் தார்மலர்கொண் டத்தனடி யர்ச்சித்துச்
சுந்தரியுந் தோன்றலுமன் சூழலின்கண்—வெந்திறற்சூ
சொற்றர் குருவவஃ தோர்ந்திறைவி யோடமையா
யுற்றிறைவ னேற்றிருந்தா னூங்கு. (உ0)

வேவினர்கா ணரகன்சூர் வெய்யவராற் கார்மறுப்ப
மாவனந்தீப் பட்டதுபோல் வாடியது—கோவயர்ந்து
மின்செயலொன் றஞ்சடையார் வித்தகனே யுண்ணினைவா
னுன்செயலொன் றில்லா னுளத்து. (உக)

தெய்வர் திறலொழிக்குஞ் சேவகனைப் போற்றிடலு
மவ்வனம்வா டிற்றெனினு மகிகொருயா—றெவ்வமற
வெய்துமகத் தேந்தலின்னே யின்னலுறே லென்றுசொ
லெதிழுந்த தந்திரத்தி லார்த்து. (உஉ)

காயமொழி கேட்டங் கருத்தனரு ளிஃதென்ன
நேயமுறத் தாழ்ந்தே நினைத்தெழுந்து—தாயிடையார்
வன்போ டிருந்தான் வனசகியங் குற்றதா
றன்போ டறைவ லமர்ந்து. (உக)

இந்திரன் காந்துறைபடலம் முற்றிற்று.

ஆடகேசுவரம் பாடுக.

விந்தகிரிப் படலம்.

அந்த வமயத் தானருள்கூர் யாழ்முனிவன்
விந்தமுன்னுற் றருசொல வெற்பண்ணல்—வந்தனைசெய்
தெந்தை யிவண்வந்த தென்கொ லெனநவில்வான்
முந்தைமக மேருபெறு மொய்ம்பு. (க)

சிகரனுள்வில் லாகையா லீசையுறு மோகையாற்
பேசு மலைக்கிறையாம் பெற்றியா—லாசிலண்டர்
வைகையாற் கோளுள் வலம்வரலான் மேருவொளி
செய்கையாற் கொள்ளுஞ் செருக்கு (உ)

மின்னசல மேன்மை மதித்திடுமாப் பெற்றியெலா
மூன்னுமுழையா லெல்லை யுரைக்கவந்தே—னென்னமுனி
செப்புமொழி கேட்டலுந் தேவருவா யார்வையுள்
வெப்புமிக நக்கான் வெகுண்டு. (ங)

வில்லாத் தருக்குமக யாரு மிகழ்வதன்றி
வில்லாக் குனிப்பதுவும் வீரமோ—நல்லாள்
புரிதவத்தில் வந்தாள் புதல்வியோ கோளுள்
பரிதியெனைச் சூழ்ந்திலரோ பாங்கு. (ச)

தென்பா லமர்வானோர் தாமென்பால் வாழ்ந்திலரோ
மன்பா யரவ மறைத்திடுமாள்—வன்பாருஞ்
சண்ட வளிபறித்துத் தன்றலையுண் மூன்றுதலை
கொண்ட துணர்ந்திலனே கூர்ந்து. (ஞ)

ஆக்கொருமா புள்ளாமா லொளவீ ரண்டமெலா
மோங்குருக்கொள் ஞான்றே ருபரல்போ—லாக்குளப்புண்
மன்னியதுந் தன்னிறைகொள் வன்மருத்தான் மின்மினிப்பாற்
றுன்னியது மோர்ந்திலனே சூழ்ந்த. (க)

மின்ஞ விகழ்ந்துரையா யானக் ககத்தகத்தை
பன்ஞ ரதவொழிப்பல் பார்க்கவென —முன்ஞ
முருவிகந்து விஞ்சையினு லும்பர் பதம்போய்
மருவிநின்ற தம்மா வரை (எ)

மேக்குயர்ந்தான் றவ்விந்த மேவவின னிர்துடுக்கோள்
போக்குவர வின்றயர்ந்து புன்கண்ணுற்றே—யாக்கமிகல்
கூர்தருவர் வல்லரக்கர் கூறயன்மா லண்டரிவ
ராரசெயலோ வீதென்பா ராங்கு (அ)

யாதிதுவென் றெம்பெருமா னின்னருளா லுடியுணர்ந்
தீதுவிந்த மேருவிக லேய்ந்தென்றார்த்—தாதாவின்
மன்னகத்தி லேற்றிருந்த வாரியினீ ருண்டவனே
யுன்னகத்திற் கொண்டுரைப்பா ருற்று (கூ)

விந்தகிரிப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா ஈரடி.

அகத்தியப் படலம்.

அங்நாட் கராப்பற்று மாம்பல் விளிப்பவரி
மூன்ஞகிக் காத்ததுஞ்சீர் மூண்ட கனல்—கிஞ்ஞரி
மேன்மயலாய்த் தத்தைதையாய் மேவவர காத்தியென
வான்முதலோ ஞண்டதுமோர் வாய். (க)

வித்து பிருகுதன் னில்லெத் தடிந்தெல்லை
மாத்தலத்தெண் ணில்பிறவி மன்னுமென— வாத்த
வருளென் றரிநோற்க வையன்பத் தாக
வருளினது மாங்கறிவா யன்று. (உ)

கருங்கடலை நீயோர் கரத்தி லடக்கி
யொருங்கவுணன் றன்னி லகாட் டென்றன்—பெருங்குணை
யிவ்வுலகன் றெந்தா யிழையோ ருலகன்றே
யெவ்வுலகுங் கொண்ட தினிது (ங)

நாரதனுர் சூழ்ச்சியினங் ஙகமற்ற மேருவற்ற
சாதனுற் கொள்ளிகலிற் சேணிலங்கு —கூரெயக்குஞ்
சென்மா நெறிமறைத்துத் தேயம் பொழுதுணரா
தன்மாறு காண்கிலேயோ வுறறு. (சு)

அன்னதினித் தீங்ஙகல வையகரல் வேண்டுமென
வுன்னவிறை வெற்பினிலாற் ரெண்டவத்தான் —றன்னுளத்தின்
மேக்குயரும் விந்தத்தின வீறுமிமை யோர்குறையு
நீக்குவா னுக்கினு மோந்து (நி)

உள்ள முருக வுரொமம் பொடிப்பவிழி
வெள்ளம் பெருகவுகை மேற்குலியா —வள்ளறனைச்
சிந்திக்கச் சேவேறித் தேவர் பிரான்பூசர்
வந்திக்க வந்தான் மகிழ்ந்து (கூ)

ஆத்த னுறவெழீஇ யாச்சமொடு கும்பமுனி
பூத்தடங்கு சொம்போடு பூமியிற்ருழ்ந் —தீதத்த
விரும்பியதி யாது விளம்புதியா லென்ரு
னரும்பியபுன் மூர லான். (எ)

விந்தவரை மேருவரை மேன்மாறு கொண்டுவிண்ணி
னந்த மறவடைத்த தன்னதனே —ணந்தவென்கண்
வண்மை சிறிது வழங்குகென முத்தமிழ்தேர்
தன்மையுளான் சாற்றினுன் தாழ்ந்து. (அ)

அவ்வா றுனக்கே ணளித்தோ மிந்தத்தை
யிவ்வா ருலகிலிரா தேவீட்டி —யொவ்வாச்சீர்த்
தென்றிசையிற் சென்று திகழ்பொதியில் வைகென்ரான்
மன்றனறுங் கொன்றையந்தார் மன். (கூ)

என்றலுந்தாழ்ந் தேதகி யிறைவனின்றன் பூசைசெயத்
தென்றிசைக்கோர் தீம்புனலார் தீர்த்தமொன்று —நன்றுநல்க
வென்னவிறை யேர்கயிலே யில்லைகு யேழ்நதியுட்
பொன்னியையுட் கொண்டான் புரிந்து. (கூ)

அன்னதுணர்ந் தஞ்சி யணுமபொன்னி தான்வணங்க
மன்னிறைவ னேக்கியிம் மாமுனிவன் —றன்னெதிரீ
போதியா லென்ரான் புகன்முனிபின் யான்போத
னீதியா வென்ரு னினைந்து. (கக)

தூய மனத்தன் றுகளில் குணத்தனன்ப
ராயவ ருட்சிறந்தோ னன்னவன்பி —னேயமொடு
செல்கென்ரான் தீதிலன்பின் செல்வனவற் றீர்வதென்று
சொல்கென்ரான் பொன்னி தொழுது. (கஉ)

ஆயிழைதன் காரணத்தென் தம்மனிகை காட்டுவனன்
றேயவன்பா லீங்கிலத் தின்பால—தாயகன்று
வைகு கெனவதற்கு மன்னதியுந் தன்னகத்தி
லுய்குவா னேய்ந்த துவர்த்து. (கக)

கூறு குடிஞையெதின் குண்டிகையிற் கோடியெனத்
தேறுவா னவ்வாறு செய்தலுமே—பாறுபுன்
கிந்த மகத்தியதென் றேயஞ்செல் கென்னவிடை
தந்து மறைந்தகன்றான் சம்பு. (கச)

அத்த னவனெருவ வம்மா தவனீங்கிப்
புத்திரனே வேண்டிப் புகழ்ந்தோபா—மித்திரையை
மனறல் வினைமுடித்து மன்மகனைப் பெற்றமுனி
சென்றிசையாய்ச் சென்றான் செறிந்து. (கஙி)

அகத்தியப்படலம் முற்றிற்று,

ஆ கிருவெண்பா ஊகூ0

கிரவுஞ்சப் படலம்.

பொன்வரையி னின்றுதென்பாற் போதமுனி செல்லுமெல்லை
வன்மைபெற வியமுக மாவவுணன்—பின்வந்தோன்
மாயநகர் வந்துறவம் மாறுறையன் றிற்பெயரோன்
மேயதன்மை கண்டான் விரைந்து. (க)

ஒன்றுமுள யோகியர்க்கு முன்னரிய மாயையினன்
மன்றிரைநீர் வன்னிநிலன் வானனுவெற்—பென்றுமதி
யொன்றினையொன் றுக்கு முறநெடுநா ளென்னிலவன்
வன்றிறலார் சொல்வர் வகுத்து. (உ)

அன்னதிறற் றூனவர்கோ னுயகிர வுஞ்சனென்பான்
றென்னற் றமிழ்முனிவன் சென்னெறியைப்—பன்னு விந்த
மென்னமல்லி வெற்புருக்கொண் டேகும் வழிபோக்கி
முன்னமர்தல் கண்டான் முனி. (ங)

அம்மா லசலநடு வாகவோ ரத்தமுறச்
செம்மா நெறியெனவே செல்லமுனி—வெம்மா
னெறியறமுன் போந்த நெறிசெலலு மஃது
மறிவரிதாய்க் கண்டனன்வே றூறு (ச)

அந்தநெறி போம்போ தனலுருமு மாரிமழை
இந்தவிருள் சூறையுறச் செய்சனன்மால்—வந்தமுனி
யின்னவைதாம் வஞ்சமென்றோர்ந் தெண்ணரிய வூழ்வலியை
யுன்னிநக்கான் கைபுடைப்பி னுற்று. (இ)

ஈங்கவுணன் கொல்லா மிவன்வலியா னீப்பலெனு
வோங்கலுரு விற்குற்றி யோதமுண்டோன்—றூங்குதண்டாற்
பூழைசெய்து வெய்யோய் புகலுருபோய் வெற்பாகிச்
சூழெவர்க்குந் தீங்கிழைத்தி சூழ்ந்து. (ஈ)

வன்றண்டான் மன்புழைசுண் மாபைக் கிருப்பாக
வென்றிதரு வேளயிலா லீதுதீ—யென்றறைந்து
தன்காக நீர்மன் தணத்திறைத்து மாபைசீத்
தன்முனிதென் பாற்சென்று னுற்று. (எ)

கிரவுஞ்சப்படலம் முற்றிற்று.

ஆதிருவிளையாடற் சுருக்கம்.

விந்தப்பிலம்புகு படலம்.

அன்ன தகுவர்கோ னன்முழுதல் வெற்பாகி
லென்னலின்முன் னுன்வரையி னின்றனனஃ—வொன்னலலைக்
கூரருளின் மிக்க குணகருன்றே நீயன்றி
யாரடுதல் செய்கிற்பா ராகுகு. (க)

நீண்ணசல நீங்கியுப்பர் சாரசலச் சாரெய்திக
கண்ணகன்மா ஞாலஞ்சூழ் காசிபுக்கங்—கண்ணகில
நாயகன்றா டாழ்ந்தகன்று நன்முனிபா லேகிவிந்த
மேயதன்மை கண்டான் வியந்து. (உ)

மீயார் வியன்பதந்தோய் விந்தங்கேண் மோபொதியிற்
போயாங் கிருக்கமுன்னிப் போந்தனம்யா—நீயா
நினிது சிறிதளித்தி யென்றான் முனசாட்
பனிதருநீ ருண்டான் பரிந்து. (ஊ)

செங்கதிரும் வெண்கதிருஞ் செல்லுநெறி போக்கிவிண்ணின்
மங்குனிற மால்போல் வளர்ந்துநின்றே—னிங்கெனது
தோற்றமரி யாய்குறியாய் தொன்னெறிநல் கேனென்று
சாற்றியது வெம்பூ தரம். (எ)

அதுகேட் டலுஞ்சினங்கொண் டத்தனற்ரு ணுன்னிப்
பதமன் பதங்காறும் பாணி—துதைதரவே
கீட்டிவிந்த மேல்வைத்து நீளனந்த ணூர்பிலத்தில்
வீட்டினனே மாதவத்தோர் வேந்து. (இ)

புரையார் பிழையைப் பொறுத்தியெள்ள வுள்ளேல்
கரையார் முனிவரனே காவாய்—வரையா
முருவதென்று கொள்வதென வோங்கல்யா மீண்டு
வருவதென்றன் றென்ரூன் வான். (ஈ)

மாதலத்தில் விந்த மறையவெழி னீள்கரத்தை
நீதலத்தி னின்றெடுக்க விண்ணவர்பூ—தாதலர்தூய்
வந்தனைசெய் தேத்த மலையஞ் செலவுளத்திற்
சிந்தனைசெய் தான்முனிவன் றேர்ந்து. (எ)

அன்றருண ஞாயிரு மண்ட ரகத்தியன்பாற்
சென்றிறைஞ்சி யேத்தியெந்தாய் செய்தலிந்த—னன்றியெவா
செய்வார்வின் ணூறுபெற்றேர்ந் தென்மலேயி லீயாங்க
ணுய்வா னிருத்தியென்ரு ருற்று. (அ)

பின்னநல்ல தென்ன விசைந்தண் டரைவிசும்பிற்
றன்னவுயத்துத் தென்றேயஞ் சூழ்ந்துசெல—மன்னசல
நீயர்மேற் றேயமுறும் வில்வலன்வா தாவியுயிர்
மாயமுனி வற்கண்டார் வந்து. (கூ)

விந்தம்பிலம்புகு படலம் முற்றிற்று.

ஆகு திருவெண்பா ஈரைஞ்சு.

வில்வலன்வாதாவிவதைப்படலம்

வில்வலன்வா தாவிகண்டு வெந்தகுவ ராருயிரைக்
கொல்வலன்கொண் டோனிவனே கொல்லற்கு—நல்விருந்து
ணூணருத்தி யாவியொடு ணுண்குதுமென் றுன்னியே
வீணருத்தி யுற்ரூர் விழைந்து. (க)

தின்பின்வா தாவி தகரா யுலவுமுன்னே
னன்பி னருட்படிவ மாமுனியாய்—வன்பினுறு
வஞ்ச மனத்தினஞ்ய் மாமுனிவற் போற்றியெதி
ரஞ்சலிசெய் தோதுவா ஞங்கு. (உ)

அடிகளிங்குப் போத வரியதவஞ் செய்தேன்
முடியவந்தீர் யானு முனியாம்—வடிவுற்றேன்
நீய னுறையுளிதிற் செல்குதிர்தூய் தாம்வணமென்
சூயபின்னுந் தாழ்ந்தா னவன். (க)

தீாழ்தலுமா துய தமிழ்முனிவெய் யோன்காவு
சூழ்தலுண ராதுவகை தோன்றவே—வீழ்தவத்தின்
மிக்கோ யெழுதியென்றன் மேலிருக்கை கெல்லுதுமெத்
திக்கோ வருகவென்ரன் றேர்ந்து. (ச)

ஈதென் னிருக்கையாம் யாதுமெம்ம ளேருமுய்ய
மாதவரீ யின்றிருந்து வாய்ந்தபற்கை—யாதரவி
னுண்டகல்கென் ரேர்பீடத் திம்ப ரிருத்தியன்னன்
முண்டகத்தாள் வீழ்ந்தான் முறை. (ஞ)

வில்வலன்சொற் கேளா வியந்துபுரி வின்மிக்கோ
யொல்வதோ ருண்டிதின்பா லுண்டுபின்னர்ச் —செல்வமென
வாலமன்னன் ரூழ்ந்தீங் கழைக்கணீ தாழ்த்தியெனுச்
சீலமொடு செய்வனடி சில். (ட)

பூமயநீர் தோய்ந்து புனிதனு யட்டிலண்மிக்
கோமயத்தாற் பூசிவண்ணக் கோலமட்டங்—காமனேத்துந்
தேடிவேந் தண்டிலத்தைத் தேசுறமுக் காலதீ ஞ்சி
சாடிவே ரூன்றிலுய்த்தான் ரூன். (ண)

தேக்கதிலா ரங்கொளீ இத தியார் கருவிமேல்
வாக்குலேப்பெய் தேற்றியுயர் வாலரியு—ளாக்கிப்
பதங்கொண்டே ணுக்கிப் பயறடிசி லட்டு
விதங்கொள் கறியமைத்தான் வேறு. (அ)

ஆடா மிளையவனை யம்முனிமுள் ளுய்த்தீர்ந்து
கூடா தனவகற்றிக் குட்டமிட்டுப்—பீடாரு
மூனசும்பிற் பெய்துமண்ணி யுண்கறிசு வேண்டுவர்மூன்
ஞனவெலா மிட்டட்டா ஞங்கு. (க)

அரைப்புண் கறித்தூடு யாநறுநெய் பெய்து
பொரிப்பபொரித் தாவியுறப் போற்றி—விரைப்பொடியுங்
காயமொடு கூட்டிக் கமழ்தருகுய் காதமுற
வாயசில பாருசெய்தா ஞங்கு. (கo)

முன்னளிக்க நின்ற முதிரைப் புழுக்கலட்டுக்
கன்னற் புளிங்கறியுங் கர்முறச்செய்—தன்னதற்பின்
நீங்கனியின் சாரேடு தேன்விரவு மாமலர்க
ளாங்கமைத்தான் பூசனைக்கா மாறு. (கக)

வில்வலன் வாதாவிவதைப்படலம். உசாஉ

ஆஅ வகையுணவ மாற சுவைபடவே
யோரிமைப்பி லேயமைத்தார கொல்லியிற்போய்—பூரணற்றுழ்ந்
தெந்தை பசியிலெந்தை யிண்ணமு ட்டீடனயில்வான்
வந்தருள்க வென்றான் மகிழ்ந்து. (கஉ)

அடிசாலைச் கண்ணகத்தி யற்கொடுபோ யக்க
னிடபீ டிகையி லருத்தி—லெடுமுகன்
கூறிவினை நீர்மலர்கள் கூர்புகைநீ பங்கொடுணமை
மாறியலிற் பூசைமெய்தான் வாய்த்து. (கங)

செம்பொனவிர் தட்டை திருமுன்னர் வைத்தவனம்
பம்பிரை யாத்திருத்தி பன்னரிய—கும்பமுனி
புள்ள முவப்புறப்பல் லுண்டிவகை கல்லிலெடுமேல்
கொள்ளவிட்டான் வஞ்சங் குறித்து. (கச)

முறையா முதற்கண் முதிரைப் புழுக்கல்
கறையார் கறிகள் கலத்தி—னிறையா
மதுர முறுவனவு மல்கவைத்தசெப் யோன்
முதிர்கரத்து னீர்பெய்தான் முன். (கஇ)

தெண்டிரைநீ ருள்ளடங்குஞ் செங்கைநீர் தன்னிலவனா
வுண்டிவகை மேற்சுற்றி யோர்தரமுட்—கொண்டமுத
மன்னவுண வாதி யனையா னருத்தளவு
மன்னனுண்டி யுண்டான் வயன். (கசு)

கும்பனே யானீர் கொணர்ந்தய்ப்ப வுன்டெழுவா
னம்பொடிகொண் டங்கை யலர்நீவி—வம்பறலான்
மண்ணிநீர் கொண்டுமிழ்ந்து வாய்பூ சறுத்தங்கோர்
கண்ணிடத்தில் வீற்றிருந்தா னன்கு. (கள)

விதியின் வரமுன்னி விலவலன்மாய் வுன்னி
மதியின் மிகுந்தோன் வயிற்றில்—வதிபவனே
வாதாவி யெம்பிரீ வாதாவி யெண்ணவுஞ
வாதாவி மாய்பவன்சொல் வான். (கஅ)

எண்ணுதென் னூனயின்றே னேரகடு கீண்டின்னே
யண்ணு வருவலென வார்ப்ப முனி—விண்ணுரும்
விந்த மடக்குமர் விந்தவங்கை யாற்றடவ
வந்த மடைந்தா னவன். (கசு)

வெய்யவன்முன் னேன்வெகுண்டு வேறுருக்கொண் டோர்தண்டங்
கையதனி லேந்திவருங் காற்றருப்பை—யையவொன்றை
யீசன் படையாக வேவ வவனெழிந்தா
னுசின் முனியகன்ற னுங்கு. (உ0)

வில்வலன்வாதாவிவதைப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா சுசுசு.

காவிரி நீங்கு படலம்.

கரதலத்திற் றாங்குங் காகரீ தோடும்
வரமுனிவன் கொங்கின் வழிப்போ—தாவழுங்கம்
மைந்த ரிருவோரும் மாதவர்போற் றீரமுடன்
வந்தணுகி ஞர்நேர் வலிந்து. (க)

சென்று மறைந்துநின் றுஞ் சேணுற்றுஞ் சூழ்பவர்தந்
துன்றுசெய ஞெக்கிமுனி தன்னவரைக்—கொன்று
மவத்தோர் நமைக்கருதி யண்மிவந்தார் சீர்மா
தவத்தோன் மகரா தலால் (உ)

அன்னர் பிரமகத்தி யங்கடையக் கொங்குருவின்
மின்னறவோ ஞாகத்தில் வீற்றிருந்து—துன்னியநோய்
தீர்வுறவா ஞங்கோர் செவிலிங்கந் தாபித்தன்
பார்வுறவர்ச் சித்தா னமர்ந்து. (ங)

தூரியவன் றன் பூசனையாற் சூழ்ந்த பிரமகத்தி
போயதன்ன போதுதமிழ்ப் போதமுனி—மேயசெயன்
முன்னியுயர் யாழ்தேர் முனிவ னமரர்கோன்
மன்னுறையு ஜெய்தினன் வந்து. (ச)

உமையாண் மகிழ்ந ஞளிர்மலர்த்தா ஞன்னி
யமையா யிருந்ததவ மாற்று—மிமையார்தங்
காவலன்சென் ஞரதனைக் கண்டுகழ றுழவன்ஞன்
கோவெழுக வென்றனஞர் கூர்ந்து (ஞ)

மன்னன் றனையெடுத்து மார்ப முறத்தழீஇச்
துன்னுமிவட் சார்தியெனச் சுந்தரிகே—ஞன்னித்
தொழுதகையா ஞய்முனிவர் தொன்றலித காறன்
கெழுதகையா ஞய்ந்தேன் கிளர்ந்து. (ட)

மாசின் மகரயாழ் வாசிப்ப தில்வல்லோ
யீசன் றனையருசித் தேத்தவே—வாச
நறையுளதென் ஞல்வகைய நாண்மலர்க ணண்ணுக்
குறையுளதொன் றென்றனண்மின் கோ. (ண)

மன்னவநின் ஞராசு மற்றுளவு மெண்குணத்தோன்
தன்னருளாற் கிட்டுந் தளரேனீ—யுன்னவன்றன்
பூசைக்கு முள்ளதென்ரு ய் போருமதன் பொற்றிசொல்வ
ஞசைக்கோ கேட்டி யமர்ந்து. (அ)

தென்றலிலே ராகச் வெண்முனியை யேவியதூஉச்
தன்றவரை தாழ்த்ததூஉவுஞ் சூர்மருகர்க்—கொன்றதூஉம்
கொன்னூர் பழிக்கிலிங்கவ் கொங்கிற்ரு பித்ததூஉஞ்
சொன்னுண் முனிவன் றொருத்து. (கூ)

பின்னுமொரு செய்கையுண்டு பேசருஞ்சீர்க் கொங்குதனின்
முன்னவனே யர்ச்சித்து மூதறிஞன்—மன்னுகின்ரூன்
பண்டுவரி யுண்டவன்ஞன் பாலேகிக் குண்டிகைநீர்
கொண்டுவரிற் நீருங் குறை. (கூ)

நாரதன்சொற் கேளா நவின்முனிவர் கோன்கரக
நீரதிங்கெவ் வாரு நிகழ்த்ததெனைப்—பேரமுது
வேழ முகற்கருத்தி வேண்டினந்த நீர்கவிழ்க்கும்
வாழரசே யென்ரூன் வரன் (கக)

மற்றவன்றன் கூற்றுணர்ந்து மன்னரசு சூரினின்று
பெற்றதுபோ லிந்திரனும் பேருவகை—யுற்றறவோ
டய்ந்தித தனதருளா லும்பன் முகமுடைய
வந்தேவை யர்ச்சிப்பே ஞங்கு. (கஉ)

என்றலுமவ் வாறே யியற்றுதியென் நிந்திரனை
மன்றலத்தில் வையா மறைமுனிவன்—சென்றனன்ம
னீசை யளித்த விபமுகனைத் தாபித்துப்
பூசை புரிந்தான் புரிந்து. (கங)

புண்ணியமே யாய புகர்முகத்துத் தேங்களிகள்
பண்ணியமே யாதி பலவகையூ—ணுண்ணியநி
வேதித்து வேண்ட விமலன் வெளிப்பட்டா
ஞதித் திருவருவி ஞங்கு. (கச)

உன்னத் திருவுருக்கண் டும்பர்கோ மான்வெருவ
மன்னனீ யஞ்சேன் மனத்துற்ற—தென்னவெண
வுய்ந்தனனென் நெங்கோ னுகளமலர்த் தாளிறைஞ்சி
யிந்திரன்ரூன் சொல்வா னெடுத்து. (கடு)

நிந்தவன நம்பனுக்கு நண்குவைத்தே ஞரமின்றிச்
செந்தழலூன் பட்டதுபோற் நீர்ந்ததெனைத்—தந்திமுகன்
முந்நீரோ கங்கையோ மூவுலகத் தொண்ணீரோ
வெந்நீர்நீ வேட்டதென்ரு னீங்கு. (கசு)

மூன்தைமறை தேர்ந்தறியா மூலாதா ரப்பொருளே
சிந்தைதனக் கெட்டாச் சிவன்மதலா—யெந்தையே
கொங்கிலமர் கும்பமுனி குண்டிகைநீர் சீகவிழ்க்கி
னிக்குவரு மென்ரு னினிது. (கஎ)

வெண்டிகையா ரேத்துகொங்கி லீசனேயர்ச் சித்தொழுகுங்
கண்டிகையார் கண்டக் கலயமுனி—குண்டிகைமேற்
காக்கையைந்து பெற்றவன்வான் காக்கையிறை வேண்டவொரு
காக்கையுரு வாயமர்ந்தான் காண். (சஅ)

கொங்கமரு மாமுனிபாற் குண்டிகைமேற் பொன்னியரன்
றங்கருளின் வந்ததன்மை சார்புணர்ப்போர்க்—தைங்கரனேர்
வாயசமாய் மேவமுனி மன்னவனென் றேராமே
யேயொருபுள் ளென்றுகண்டா னேய்ந்து. (கூ)

பமண்டலத்தின் மீதெழுகும் பன்கரமோக சப்புள்
கமண்டலத்தி னீரைக் கவிழ்த்த—தமண்டலத்தில்
வாஞ நிழிந்தவான் மானவத ஹுட் பொன்னி
வாஞ நெழுகியது வந்து. (உ ஈ)

பேருதலுஞ் சத்திமைந்தன் பின்னோ புருவத்தனத்து
தேருமறைப் பாலகன்போற் செல்லமுனி—கூருமுனி
வெய்தியிவன் யாரோ விவன்வலிமை காண்பமெனு
வைதிர்பின் சென்று னடித்து. (உக)

சூட்டுவான் பின்படருங் கும்பமுனிக் கண்மையஞ்சுக்
கிட்டுவா ஞசையெட்டுங் கேசமொடு—முட்டுவா
னன்னவன்செய் மாய மறிந்தினைய வீ துணர்ந்து
தன் னுருவங் காட்டினான் ரூன். (உ உ)

ஆனேமுக னேவிங் கடைந்தனனக் தோகெட்டே
னேனையரென் றெண்ணி யிதுபுரிந்தேன்—யானினியென்
செய்வலென நெற்றியிற்றன் செங்கரத்தாற் ரூக்கினான்
னுய்வ தணர்முனிவ னேர்ந்து. (உ ங)

ஐங்கரனப் போதருளி னம்முனியை நோக்கியன்ப
விங்குன் செயலெ னியம்பென்ன—தங்கமறைச்
சேயென் நிதுசெய்யச் சிந்தைசெய்தென் நீர்வதற்கு
மேயமுன்செய் கின்றனனு னிங்கு. (உ ச)

என்னகைத் தின்னறவி ரென்னமுனி யன்னவன்றன்
பொன்னடியிற் ரூழ்ந்தவன்சீர் போற்றியே—மன்னுள்
நிறமுணரேன் செய்தபிழை சிந்தைகொளே நீமை
யறவருடி யென்ரு னடித்து. (உ இ)

அந்தரத்தர் கோனெந்தை யர்ச்சனைக்கோர் நந்தவனஞ்
சந்தமுற வைத்தான் சலிலமின்றி—வெந்தவனம்
போற்கிடப்ப நீர்வேண்டிப் போற்றவெழு யாங்கரக
மேற்கொடிபோ லாய்க்கவிழ்த்தோம் வேட்டு. (உ உ)

சங்கதனையேக வியம்பினீ செய்தவருக்
சிங்கதனே யெட்டுணையுஞ் சிந்தைகொளே—மூங்கறியா
தாற்று செயலெமக்கோ ராடலெனக் காண்டுமுனக்
கேற்றவரங் கேளென்ரு னீண்டு. (உ எ)

நீன்பாலு மின்பாலார் நின்மலன்பா லுத்தமிய
னன்பார் தாவளித்தே யையநின்றன்—முன்பாக
வென்போ னுதலி விருகையாற் ருக்குகூர்க்குக்
தண்போவச செய்தியென்ரு ன் சூழ்ந்து. (உ அ)

அன்ன பரிசே யருளிரு மின்னமுனக்
கென்னவரம் வேண்டு மிசைசு,யெனத்---தென்னசலன்
வள்ளனீ சாயத்தீர் மா லருந்தி லோடியே
யெள்ளளவுந் தங்கியில தீங்கு. (உ கூ)

ஐயவர்தீர் போல்வேற் றறலுளதோ காமியற்குத்
துய்யதண்ணீர் நல்கென்னத் தும்பிமுகன்---கையதனற்
போகும் புதிய புனலிற் சிறிதுள்ளி
மாகுண் டிகையிலுய்த்தான் மற்று (உ ஏ)

லகம்மா முகத்தோன் கமண்டலத்தி லுய்த்திடலும்
பைம்மா வறனிரம்பிப் பார்மேய—தம்மாலி
தென்னற் புதமஃதி யார்க்கமையு மென்ரு னினனுன்
முன்னற் பொதியார் முனி (உ ஐ)

என்ரு நினைத்தோரம்ப னேரடிக டாழ்ந்துகுறை
யொன்ரு மிலை ஞறு மொழுகியது—ன்றருளா
லுய்ந்தனனு னின்னெருக்கா லுன்னையன்பினு ன் ஐழிநீ
வந்தருள்கூ ரென்ரு ன் வரன். (உ ஒ)

அன்னவா ருகவென வாரருள்செய் தானேமுகன்
றன்னவாந் தானேயொடுங் தான்மறைந்தான்—மின்னவாஞ்
செஞ்சடையான் சித்தரனேச சிந்தித்துச் சிந்தைமகிழ்ந்
தஞ்சடையான் கொங்ககன்ரு ஞங்கு. (உ ஓ)

காவிரிநீங்குபடலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா எ உ கூ.

திருக்குற்றாலப் படலம்.

சிற்றால வித்திற் சிறுத்தோங்கு மெய்த்தவத்தோன்
பற்றால முண்ட பரற்போற்றி—மூற்றால
நற்றால முண்டளந்த நாரணனால் வைகுமெழிற்
குற்றால மேவினனன் கு. (க)

அந்தப் பதியின்க ணச்சுதற்கோர் மூற்றமுள
வந்தப் பதியினுமஃ தேற்றமென்பர்—கந்தமுறு
செம்மறைநூன் மெய்ப்பொருளைத் தேர்ந்துமகத் தீவினையார்
அம்மதமேற் கொண்டுள்ளார் தாம். (உ)

அன்னவரெங் கோமா னடியார் தமைக்காணின்
முன்னலர்போ லெள்ளி முகநோக்கார்—தன்னெறிய
ரந்தனரென் பேர்க்கியைந்த வங்கமிலா ரங்கிருந்தார்
செந்தமிழ்வேங் தஃதுணர்ந்தான் றேர்ந்து. (ங)

மூத்தமிழோன் குற்றால மூதூர் மறுகாக
ஈத்தனமா ராலயமுன் னண்ணுகையி—லத்தலமன்
வைணவர்கள் கண்டழுங்கி மாற்றலரைப் போற்கருதி
வெய்துயிர்த்துச் சொல்வார் வெகுண்டு. (ச)

வெய்யதா நீறுமணி மெய்யணிந்தா யாருமெள்ள
வைய மெடித்தாற் கடியவனீ—கையதிலோர்
சீகாலாய் தரங்கொண்டோய் கோமா னகரணுகற்
கேலா தகல்கென்ற நீங்கு. (ஞ)

என்னநகை செயதுமறை யின்னு நிகழ்ந்துநின்றார்
தன்னியிங்கு மேவுந் தொடர்புணரே—னன்னெறியென்
றுன்னிவந்தே னும்பான்மை யோர்வேனே ஞானிவ்வூர்
தன்னிலுறேன் செல்வனென்றான் ருன். (சு)

பொதியமுனி யீது புகலப் போற்றிப்
பதியில் வருவ தூஉம் பாவ—மிதியனீ
மீண்டே குதியென்றார் மேலோர் முறையமிதென்
றுண்டே யகன்றுசெல்வா னுங்கு. (எ)

நிந்தியெங்கோன் மாமலரோ வற்றாருவா சன்பிருகு
கந்தமுறு கௌதமன்சீர்க் கண்ணுவனே—டந்தீசி
யின்னே ரிடுசாப மெல்லாம்பொய் யாமோவென்
றன்னே னினைந்துசெல்வா னுங்கு. (அ)

வேதமுனிவ னிறையோன் றனையிகழ்வார்
மோகமுறு மந்தை முதலோமெம்—போகமுன்னிப்
பன்னரிய மாயையினும் பாகவத மாகுவதோர்
கன்னருக்கொண்டா னையத்து. (க)

நாயகன்பா லன்புடையா னத்தனடிய வன்பான்
மாயமுறு மேனிகொடு மண்ணவங்கு—நேயமொடு
வைணவர்க ணேர்போய் வழுத்தியத்தாள் வீழ்ந்திடலு
மைவணத்தாற் காகவென்றான் மற்று. (கூ)

தோளாரத் தாழந் தணர்தம்மை நோக்கியன்பு
கோளாழி யான்கணனி கொண்டிரைனக்—கேளா
வதுகாண்பா ஹுள்ளிவந்தா மாருமக்கு நேர்வார்
கதுவறிவுற் றூதும்மைக் கண்டு. (கக)

மூத்தருவ பேரழகர் பொய்வரையி லுற்றிறமு
னத்தி கிரியுறச்செல் லாநின்றெ—மித்தலத்தார்
நம்பெருமான் கோயிறொழ நச்சிவந்தோ மென்னவண்ணு
ரம்பகவன் வாழ்வதென்று ராங்கு. (கஉ)

கார்வணன்வாழ் வஃதென்னக் காட்டிடலுங் கைதொழுது
சார்வலஞ்செய் தச்சுதன்று டாழ்ந்தேத்தி—யோர்வி
லுணர்வினரை நோக்கி யுவலையருச் சிப்பான்
கொணர்மினென்றான் வேண்டிவன கூர்ந்து. (கங)

தூய திருமஞ்சனமுந் தூமலருஞ் செஞ்சாந்து
மேயு மணித்துகிலு மேனையவு—மேயகிலர்
கொண்டுமுனி முன்னுய்ப்பக் கூர்ந்திவரை யர்ச்சிப்பேன்
கண்டிருமி னென்றான் களித்து (கச)

அறுகு மதிபுனையு மண்ணலேபுட் கொண்டே
புறுகும்பன் மான்முடிகை யொச்சிக்—குறுகுறுமு
கென்றிருத்தித் தீயரக்கி னெய்த திறங்ழைவித்
தொன்றுசிவ மாக்கினு னேர்ந்து. (கஙி)

பங்கயன்மால் காணரிய பண்ணவனைத் தாபித்துத்
திங்கமலுக் கொண்டோதிச் சூழ்முனிதொல்—லங்கமுற்றுச்
சந்தமலர் தூய்தாக்கிச் சம்புவையர்ச் சிப்பக்கண்
டந்தணர்கள் சேந்துரைப்பா ராங்கு (கசு)

தேதக மிகச்சிறியன் றீவணற்கன் பன்னிவன்முன்
னுகவந்தா னுமிகழ்ந்தோ மாயத்தான்—பாகவத
மாவிப்படிவமுற்றான் மான்மத்தைத் தானெழித்தான்
மேவிப் பிடிமினென்றார் வீழ்ந்து. (கஎ)

பற்றகன்ற றன்னவளே பாதகரை நோக்கிவிட
முற்றதெனச் சிற்றத்தீ யுய்த்திடலு—மற்றவர்தாம்
வெந்தமன நொந்தயர்ந்து மேவப் பதியகந்து
சிந்தினர்பார் மேலெங்குந் தேர்ந்து. (கஅ)

இன்றமுத லீசனிட மீதாயிற் றென்றுமணி
மன்றகலே யர்ச்சித்து மன்னிடைகொண்—டொன்றருளி
தாய்வீழ் மலயத் தனிவரையின் மாமுனிவன்
போய்வீற் றிருந்தான் புரிந்து (கக)

இருக்குற்ரூலப்படலம் முற்றிற்று.

ஆ திருவெண்பா ல ச ச.

இந்திரனருச்சவினப் படலம்.

மன்னிந் திரன்வேண்ட மாமுகவ னேர்கொடியாய்த்
தன்னிகர்கும் பன்காகஞ் சாய்த்தலுமப்—பொன்னிதான்
மாதவன்முன் வேண்டலிடு மந்தா கினியெனப்பேர்க்
தோதவனி மேற்படர்ந்த தற்று. (க)

மன்கலையத் தற்றவந்து மாவரையா டாழ்த்திருங்கித்
தென்கலையு மோதியலே தேக்குண்டு—நன்குற்
றிகத்தியனுன் மாநிலம்வா னேத்தவரு நீரா
லகத்தியனுர் போன்றெழுகு மாறு. (உ)

பன்னுட் சிறையிருந்தான் பல்வகையுண் வேட்பதுபோற்
பொன்னுர் கடத்துவந்த பொன்னிமலே—நன்னுரி
பாறயிர்நெய் கன்னல் பருகிமணி பூமிலந்து
வீறுகொடி சென்றதுமண் மேல். (ங)

மேல்கடன்மாக் கீழ்கடலே வேவிடச்சென் றுங்குமுனி
சால்கடனீ ரோடித் தரணியின்கண்—மால்கடன்மா
வீர்த்துத் தருக்க ளிறமுரித்து வேரோடும்
பேர்த்துக் கொடுபோம் பெரிது. (ச)

வேந்தனருச் சிப்பான்கா வேரிமலர் மான்மதஞ்செஞ்
சாந்தகிலா னேந்துகனி தண்ணறவம்—தீந்தடிமுன்
னனவெலாங் கொண்டுவந்துய்த் தார்த்தத் திரைக்கையினங்
கோனழைப்பச் செல்லுமன்பு கூர்ந்து. (ஞ)

மன்கயிலா யத்திருந்து மாபதிகட் கல்கமுனி
மின்கடத்துற் றைங்கரன்மால் வேண்டவந்தித்—தென்கண்
வருங்கா லிரியின் மகிமையெவர் சொல்வார்
சருங்கா லிரியுஞ் சொலின். (க)

மன்னன் மனமும் வனமுங் குளிர்தருவான்
பன்னங் குடகீர்போய்ப் பாய்தலும்வேக்—தின்னேர்
தருவுற் றதுபோற் றளிர்ப்பவனம் பூங்காத்
தருவுற் றனைபைந் தளிர். (ங)

பல்வான் றருமேவாடு பைங்கொடிமா தீர்கிலப்பூ
நல்வாசத் தின்னி நவமணியின்—வில்வீச
வாங்கா மகவா னகத்தின்மகிழ்ரும்பப்
பூங்கா வரும்பிணமென் போது. (ச)

காதனின முஞ்சுரப்போக் காரணமு மெமாந்தபல
காத மருவீசிக் கற்பமுற்றுக—காதன்
மரபுன்னே ராணிமகிழ் மன்னுர மென்னச்
சுரபுன்னே பூத்த துதைந்து. (ஞ)

தன்னெயெத்தத் தெய்வதமுக் தாரகமென் றேர்ந்தருவா
னென்னே மிலேந்தா னிறப்பவரை—முன்னி
யடுக்கைபல வில்லெனவ்போ வாங்கதில்வண் டார்ப்பக்
கடுக்கை மலர்த்திடுங்கொள் கை. (ஙo)

ஆலங் கனிந்து ணரனூர் களதமரால்
போலங் கறையுட் பொலிந்திலங்கிப்—பாலங்கொ
ணேத்திரனே நித்தியனெ னிர்மை தெரிப்பதுபோ
லாத்தி மலர்ந்த வவண். (கக)

வான்பார்ப்பா ரிக்காக மாமுனிகல் கம்பகத்தாற்
றேன்பார்ப்பார்ப் போவாச் செழுவனத்தைத்—தான்பார்ப்பான்
சந்தாரம் பூத்த தடம்புயத்தோ னிற்பதொக்கு
மந்தாரம் பூத்த வனப்பு. (கஉ)

எல்லாத்தெய் வத்தினுமெம் மீசனுயர்த் தாங்குமண
மெல்லாத் தருவினுந்தா னேற்றமுற்றே—செல்லாம்
பெறுஞ்சண் பகவனமென் பேர்கொடில கேத்த
நறுஞ்சண் பகமலர்ந்த நன்கு. (கங)

சேணுறமே லோங்கித் திகழ்மரனும் வல்லிபும்பல்
சாணுறமே லோங்கித் தளிர்பூ—மாணுறவே
தாரினல்குஞ் சில்ல தவிரினல்குஞ் சில்லவுறு
வேரினல்குஞ் சில்ல விரை. (கச)

எக்கினேயாங் தாரு மெமக்கினேயா மோவெனவின்
புக்கினேயா துற்றதருப் பொற்பிழித்த—மூக்கினோயாய்ச்
சொல்வந் தனைக்கருளுஞ் சோதிசத்தி மாவடிவாம்
வில்வந் தளிர்த்த மிளிர்ந்து. (கடி)

வேந்தன் கரந்தகன்ரு மேதினியி னுமமறைந்
தேந்த லிருக்குமிட மெய்துவமென்—ரோர்ந்தங்கண்
வான்பொழிலும் பூந்தடமும் வந்தமைந்த வென்னிலவை
நான்புகழற் பாலதோ நன்கு. (கசு)

நிந்தவன மெல்லா நறுமா மலர்பூப்ப
வந்தமல ரிந்திரன்வண் டாருதற்கு—மூங்கிலிடி
வைகறையிற் கொய்துவந்து மன்னிதியி னீசனெளி
செய்கழலி லர்ச்சித்தான் றேர்ந்து. (கஎ)

அன்றுமுத லாக வரனேயிவ்வா றர்ச்சித்து
மன்றனறுங் கற்பகத்தார் மன்னவனுற்—றென்று
மனத்தினன்பு மல்க மருச்சண் பகமா
வனத்தில் வதிந்தான் மகிழ்ந்து. (கஅ)

இந்திரனருச்சனைப்படலம் முற்றிற்று

ஆறு திருவெண்பா எட்டு.

தேவர்புலம்புறு படலம்.

அங்நாளிற் சூரேவ லாற்றிச் சிலதேவ
ரெங்நா ளெமைமீங்கு மின்னலெனப்—பொன்னுடு
விட்டவனி போந்துகொச்சை மேவிமண்ணைக் கண்டடிதாழ்ந்
துட்டளர்ந்து சொல்வா ருகந்து. (க)

எங்நா யகனே யிடருஞற்றுஞ் சூரபன்மன்
றன்னன் மெலியுந் தமியேமை—யுன்னு
தகல்வானி னின்றகன்ரு யையகினே யன்றிப்
புகல்வே றுளதோ புகல். (உ)

கீய கனிறங் கிறலரியுஞ் சூர்வரியு
மேயகிறை யிற்பசுவா மேவுமெமை—நீயடைத்தா
யூனமுற்று மான்பகித்த வூன்பிடித்த மீனெடுத்தே
மானமுற்று மற்ரே மனத்து. (ங)

முன்னுளின் மாமுகனுன் மொய்ம்பிழந்தோ மாயவனுன்
பின்னுளிற் சூளுறுத் பீடழிந்தோ—மெய்ஞாளு
நின்னு தரவதனி னிற்குமெமைக் கைவிடுதன்
மன்னு நினைகே வசை. (அ)

வெஞ்சூ ளுரை வினைப்புல வெவ்வவணர்
தஞ்சூ மேன்மை தனிவலிவு—நஞ்சூர்
மயலொன்று நெஞ்சத்தை மன்றுயருந் தீர்வான்
செயலொன்று செய்வாய் தெரிந்து (இ)

என்று பலவா றிரங்குமொழி கேட்டிறைவன்
தன்றமரர் தன்புகண்டு சோர்ந்துயிரா—வொன்றறிவான்
மாயை மகன் சூரன் மகஞ்செயன்மே நம்வாழ்வு
போயதென்மே சொற்கிறன் புலர்ந்து. (உ)

அன்மே மகஞ்செய் தரன்பால் வரம்பெற்ற
கன்மே நமதுபதங் கைக்கொள்ளா—நின்மே
நமை யெயல் கொண்டா னலிந்தனந்தி தொன்று
கமையேய வீலன்குறித்சான் காண். (எ)

மற்றதியா தென்னிற்பு மானோர் புலோமிசையைப்
பற்றியேனை யுஞ்சிறைவைப் பானினைந்தான்—கொற்றவெஞ்சூர்
யானுளத்தி லோர்ந்ததனை யாளியிடை யாளொடுமே
மானிலத்தில் வந்தீதன் மறைந்து. (அ)

உள்ள முலர்ந்தே யுழலு முமைவிட்டுக்
கள்ளவருக் கொண்டுபுலிக் கண்ணேற்று—வள்ளற்
றிருச்சித் துருவாஞ் சிவபெருமா னற்ரு
னருச்சித் திருந்தே னமர்ந்து. (கு)

இன்ன லுளற்றவுண ரேவல் புரிந்துழன்று
தொன்னிலைய மேன்மைமுற்றுஞ் சோற்றனமா—லின்னினியா
மெல்லவருங் கைலைமலைக் கேகியரற் கோதிநம
தல்ல றவிர்ப்பமென்று னுங்கு. (கூ)

மேவுமொழி கேளா விபுதர் மகிழ்ந்தெங்கள்
கோவுநீ கூறுங் குருவுநீ—தேவுநீ
யெல்லாநீ யென்னி லெமக்கோர் குறையுளதோ
சொல்லாய் புரவலனே சூழ்ந்து. (கூ)

பித்தல் கடனெமக்கே யேத்தறியர் தீர்த்தெம்மைக்
காத்தல் கடனினக்கே காணையா—மாத்தகுவர்
தீரந் தடிந்தாய்சூர் தீங்கொழிப்பா னீயன்றிச்
சோரந் தரார்க்கார் துணை. (கூ)

ஆகையாற் றண்பகல்வா னங்கயிலைக் கெங்கனேக்கொண்
டோகையாப் போதுநீ யுற்றென்ன—மாகபதி
நன்றென்றுட் கொண்டொன்றை காகரையங் கண்ணிநீ இக்
குன்றுசெ பாலடைந்தான் கூர்ந்து. (கஉ)

தேவர்புலம்புறுபடல முற்றிற்று.

ஆ நிருவெண்பா எஎகூ.

அயிராணிசோகப் படலம்.

அங்கமலே யன்ஞ ளரிவாலு முன்னெதிராப்
பங்கயத்தாள் பல்காற் பணிந்தெழீஇ—யிங்கடைந்த
தென்னெனவெஞ் சூர்பணியா லேய்சிலண்டர் காம்வருந்தி
முன்னரிடர் சொன்னார் முறை. (க)

சேரர்விபுதர் தந்தையருஞ் சூர்வலியுந் தீர்தரத்தால்
சீர்தரவீ சற்குரைப்யான் றேவசொடு—மோமலக்குப்
போகின்றே னீது புகலவந்தே னின்பாற்சொற்
பாகின்றே னன்ஞய் பரிந்து. (உ)

என்றளவி லேவெய் திரங்குமயி லென்னநங்கை
மன்றிருமுன் வீழ்ந்தாண் மயங்கியறி—வின்றியென்றுந்
தற்பிரியா மாதின் றனர்வுகண்டு சோர்வொடேங்
தற்பிரியா வாறெடுத்தா ளுங்கு. (ங)

சோருமா மாதைத் துடைமே லிருத்தியுணர்
வாருமா தேற்றி யறிவுவரக்—கூருமா
சிந்தா குலமுற்றுந் தேவி நவில்கின்ரு
னந்தா வரன்பா னையந்து. (ச)

பொன்னு டிகந்து புலியின்க ணுர்வனத்தி
னின்னு தரவி னெடிதிருந்தேன்—மன்னு
வெனைப்பிரிய நீனினைந்தால் யாந்தாங் தனையா
முனைப்பிரிய முற்றேற் குரை. (ஞ)

கூருந்து வைரவேற் கொற்றவனே நீபிரிந்தே
யாருந் துணையின்றி யானிருந்தாற்—குருந்து
தொண்டா ரவுணர் தருவிரிற்பா ரிற்கெண்ணெய்
கண்டால் விடுவரோ காண். (ட)

வன்புறவெவ் வாளவுணர் மாயம் பலபுரிவா
ருன்புதல்வ னில்லில்லை யும்பரிலை—மண்புழைக்கை
மாவிலையா மாதரிலை மாதொருத்தி யான்றனித்தே
மேவிலையா வஞ்சேலு வோர்த்து. (எ)

அன்னே ரவுணர்வந் தல்லா ரனபுரிந்தான்
ன்னே பழியார்க்கு வந்தெய்து—மின்னே
ருயர்வாங் கயிலைவரைக் குன்றே டடைவேன்
பெயர்வா யெனநவின்றாள் பேடு. (அ)

ஓரா யணங்கே வனத்தினைக் கோர்துணையா
யாரா யினுமின்றி யேகுவனே—வோராய்நீ
கையனமற் காய்க்கவனு நத்தனுமே சேர்ந்தளித்த
வையனமக் கோராண மாம். (கூ)

சனருண் மைந்தனவா வென்றுளத்தி லுன்னினிங்கு
நேசமுற மேவுவா னீகெயி—லாசவரை
யையடையா மீளளவு மாங்களிப்பா னின்னையன்னுன்
கையடையா நல்குவேன் காண். (கூ)

சாற்றிமெவ் வையன் றனிவனத்தி லன்பினினைப்
போற்றிவ னஞ்சலெனப் புந்திதனைத் தேற்றிடலு
மன்னுன் சிறப்பென் னைறகென்ன நங்காய்கே
ளென்னு வியம்பு மிறை. (கக)

அயிராணிசோகப்படல முற்றிற்று.

ஆ திருவெண்பா எகூ0.

மகாசாத்தாப் படலம்.

முன்னஞ்ச ஞ்சியர்கண் முன்னே னருளின்றி
மின்னஞ் சலகிடை வேலையெழு—மன்னஞ்சம்
பற்ரு வரவிரியாப் பன்கயிலைக் கேகியர
னற்ரு ரெதித்தார் கயந்து. (க)

அன்னவனுண் டண்டரைப்பார்த் தஞ்சலிர்நீ சார்கலியை
யின்னமொரு சாத்தைடையி னெய்துவீர்—மன்னமிர்த
மென்ரு னதுகேட் டிமையோ ரெனங்களித்துச்
சென்ரூர் பயோதியிற் றோர்ந்து. (உ)

திங்கிமுகத் தானையுன்னுத் தன்மையினுன் மததம்வீழ்ந்
துந்துமணி நாக ருறைவெய்த—வந்தரத்த
ரன்ன துணர்ந் தர்ச்சிக்க வன்னவன்ற ஞரருளான்
முன்ன துபோ னின்றதுவே முன். (உ)

கருமான் முதலோர் கடலகடையும் போது
வருமா வமிர்தை யகிழா—லிருமாத்
தரத்தாருந் தத்தந் தகையினுற்ற தென்னுப்
பொரத்தா நினைந்தா புகன்று. (ச)

தாமோ தரனுரன்வாழ் சாக்ரணங்கும் வெஃகவோர்
மாமோ கினிவடிவம் வாய்ந்துநின்ரு—ஞமோ
கிருகிறத்த மாண்பினரு மின்னமுதை விட்டே
யொருகிறத்த ராய்ச்சூழ்ந்தா ரூங்கு. (டு)

மாலாக மோகினியா வானவருந் தானவரு
மாலாக மன்மதன்பூ வாளியைத்தின்—மாலாக
மெய்த்தார் கருக விரகத்தீ மூளுறவு
முய்த்தான் கணைநான் கொருகுகு. (சு)

எண்ணுசை மூன்று ளிழைதகிலான் மால்புரியும்
பெண்ணுசை போலிரண்டும் பித்திழையா—விண்ணுட
ருண்மயன்மே லுற்றணங்கை யுன்னியுன்னி மாழ்குவரேற்
பெண்மயநீர் வாரோ பிறர். (எ)

மோகினியாம் புத்தேண் முனநிற் பவர்ப்பாரா
வாகினியாம் போர்விடுபின் மன்னினனுன் —பாகினியா
வின்னமுத முள்ள தெதுநீர் வேண்டியது
முன்னமுறக் கொண்மினென்ரு முன் (அ)

பொன்னிறத்தன் கூறவது புந்தி நனிதிரிந்தே
யன்னிறத்தர் நோக்கியெம்பா லாவதுநீ—யென்னமுன்மன்
றன்மையினு லின்னமுதந் தானை மக்கென் றுப்பாதை
நன்மையுறக் கொண்டகன்ரூர் நன்கு. (கூ)

மின்னவுணர் மோகினியா மாலையொரு சார்கொடுபோய்த்
தன்னினர்கு ழாதோச்சிக் சூழ்மனி—சன்னிலனே
மாண்கிளரு மோர்வீரன் வக்ணவா னின்ன முமே
காண்கிலனு னென்ரூன் களித்து (கஂ)

அன்னு னுரைகேட். டகமகிழ்ந்தி மூவுலகி
லென்னும் றலுக்குறழ்வா ரில்லையெனப்—பன்னுத்தத்
தம்மின் மொழியாச் சமர்புரியா மாய்ந்தனரே
வெம்மின் படையவுணர் வேட்டு. (கக)

தேயவுணர் தங்கொகையிற் சென்றிருவர் மாயவன்றன்
மாயமுனி முன்னுருவ மாற்றியும்.—ராயவருக்
கொண்டமர சோடிருந்தார் கோதையெனப் போந்தகள்வ
ரண்டர்க் களிப்பா னமுது. (கஉ)

நந்தலிலா வானவர்த நாப்பணிரு கள்வருஞ்சீர்
வந்தவெழின் மால்பகிரு மாவமிர்தை—மந்திரத்தாற்
கொண்டில ருண்டார் குறிப்பா லிருசுடரும்
விண்டறியப் பார்த்தார் விரைந்து. (கங)

விட்டுணுவு மக்கள்வர் விண்ணவரோ டெண்பரெனச்
சட்டுவங்கொண் டன்னர் தலைதமித்து—மட்டிப்
பொருந்தின னமுதம் புலவர் களிப்ப
விருந்தி னளித்தான் விழைந்து. (கச)

இன்னமுத முண்டா ரிருவிசும்பி னிற்பரெனச்
சென்னியற்று மாயாத தீயவர்க்கு—மன்னுமைதன்
கேளா மிறையோன் இளரூளைக் கொண்டுவிண்டு
கோளா நிலையளித்தான் கூர்ந்து. (கஎ)

அன்ன ரரனு ரடிபோற்றி யார்சவத்தாற்
சென்காக மைங்காகச் செய்கைபெற்றே—யுன்னு
மறைப்பார் தமைக்காட்டு வான்சுடரை விண்மேன்
மறைப்பார் வெருவ மகிழ்ந்து. (கஅ)

கேடிலவ ராகு கேதுவெனு முன்னமத்
தோடியைந்தோர் பானு வொளிர்திங்க—ணீடுறுசேய்
மின்புதன்பொன் வெள்ளிசனி மேவெழுவ ரோடமர்ந்தே
யொன்பதின்ம ராயினு ருற்று. (கக)

இன்னு ரமுதுண்டோ ரேத்தவரி யாங்கிருந்தான்
மன்னுகு சத்திகளுண் மாலொருவ—னென்னு
முனக்கோல மாய்க்காண் முன்னிறையோன் காண
வனக்கோல மாய்நின்ரு னவ்வி. (கஆ)

கார்வணங்கு காத்தானைக் கண்டுவெரீஇக் காமாரி
யார்வ மெமக்குமுள தண்புறுகிற் — சீர்வுறநீ
கொண்டவரு நன்றெனமால் கூடியுமை பாலுறமைக்
கண்டவெனை வேட்பதென்கொல் காண். (கஇ)

வேதன் செயன்முற்ற வேண்டினமுன் மாதைவெரீஇக்
காதலினு லோநீ கலந்ததுசா—னேதினைக்கி
யார்வயினும் பற்றிகலே யில்லெனினு கந்தமுவு
மார்வமுற்ற தண்மையதே யன்று. (உ0)

என்னினேவி னேனினேயோ வெம்பெருமான் யானறியே
னின்னினேவை யாரறிவார் நீயன்றி—மன்னின்ப
மாடமைத்தோ னல்லாரோ டார்வாத விட்டெனவன்
போடமையப் புல்வதுபொற் போ. (உக)

மாயன் விளம்புதலு மாதேவ னீயுமகம்
காயசத்தி தாருவணத் தாயிழையா—யாயிஞ்ஞ்
கந்தியபோ தஞ்சனினே காந்தழுவ நீயவனே
யந்தியிற்றந் தாயலையோ வுற்று. (உஉ)

ஆதலினின் னின்னலமன் பார்ந்துதுய்ப்பன் செல்கென்னக்
காதலிற்கைப் பற்றவரக் கண்டோடிப்—போதலுமே
செங்கையா ஞரணனேச் சேணிலையன் போற்றிடவே
செங்கையாற் பற்றினுன் சென்று. (உங)

பற்றிப்போய்ப் பாரிற் பகர்நா வலந்தீவி
லெற்றுகடற் சார்பினே ரேய்வடைவைப்—புற்றவோர்
சாலநண்ணி யங்கன் சயம்புமான் மால்கொடின்பஞ்
சாலவெய்தக் கூடினுன் ரூன். (உச)

மூக்கண்ண னக்கண்ணன் முன்னிருவர் கூடுமெல்லை
யுக்கபுனல் கண்டகியென் றோர்ந்தியா—யக்கவினீர்
சாராழி தந் தவச்ச தன்தியென்பேர்க் கோமுறை
யோராகத் தோன்றினபொன் னேய்ந்து. (உரி)

மல் கூங்குப் பஞ்சரம்போல் வாய்ந்துதில காளுயிர்போய்த்
தொல்கூடு நேமியுருத் தோன்றவே—பல்கூடு
கண்டகியாங் தீர்த்தங் கடிதீர்த்து வந்திமா
மண்டலத்தர் கொள்ள மகிழ்ந்து. (உசு)

அக்குடம்பை யைநிலத்தா சங்கெடுத்துட் பொன்வாங்கி
மெய்க்குறியை நோக்கியரி மெய்ம்மூர்த்தங்—தொக்கதென
நாளார்ச் சனேபுரிவார் நண்குதில நங்தன்பேர்
சாளக் கிராமமென்பர் தாம் (உஎ)

தீர்துவனக் கொன்றையர்சேர் சால முறுகலா
மேதுவினு லங்நாம மேய்ந்தனலே—தோதரியாய்க்
கந்துதித்தான் காம்புதித்தான் காமுறவக் கம்முயக்கில்
வந்துதித்தான் வல்லையையன் வாய்த்து. (உஅ)

கார்முருவஞ் செஞ்சடையுங் காமருசெண் டார்சுமு
மேருருவ முக்கிரமு மேய்ந்தொருதிசெய்—சேருதலு
மத்தனந்தச் செல்வங் களிசை புத்திசெணெண்
முத்தமகற் பேர்புனைந்தா னேர்ந்து. (உக)

உன்னு முருத்திரரோ டெரப்பவைத்து நல்லவரைத்
தன்னு புவனநல்கிச் சூழ்தற்கு—மன்னிறைமை
தங்கிமையோ சொண்மா தவரெவரும் போற்றுயர்வு
மங்கிவண னீந்தா னவற்கு. (கூ0)

அன்னவர்க்கு மற்றவர்க்கு மன்பின் விடைநல்கி
முன்னவனங் கேக முராரியுந்தன்—ரெண்ணகரம்
புக்கனன்பின் னேயன் புவனமுற்றுந் தன்னியலிற்
ரெக்கவுல கேத்தநின்ரான் சூழ்ந்து. (கூக)

மண்ணவரும் விண்ணவரு நற்றவரு மற்றவரு
வெண்ணவரும் பூசனைசெய் சேத்தற்பற்ற—மண்ணலிவன்
றெவ்வின் றிறலொழிப்பான் சீர்த்தியிரு னன்பினினை
யெவ்வமின்றிக் காப்பா னிவண். (கூஉ)

வானவர்கோன் மங்கை மனவிசைவோர்ந் தையனையே
ஞானகத்தி லேத்தவுன்னிக் தந்தியூர்ந்—தானதிறற்
பூதர் புடைசூழப் பூசனையும் புட்கலையுங
காதலுற வந்தான் களித்து. (கூங)

மன்னவனு மையுண் மலர்த்தாள் பணிந்தேத்த
வென்னவிவண் வேண்டு மியற்புகென—வின்னலங்கொள்
சூர்செய் கொடுமைமுற்றுஞ் சொல்லியயான் கைலைசெல்வே
னீர்வளையைக் காக்கவெண்ரு னீண்டு. (கூச)

மாதலமோர் மூன்றளிக்கு மன்னவனே நின்னருமைக்
காதலியைத் தீதின்றிக் காத்திவ—னீதனியென்
றெண்ண லிவண்வைத் திருங்கயிலைக் கேகுதியென்
றண்ண லருள்புரிந்தா னங்கு. (கூடு)

வெற்றிபெறு காளனெனு மீளிசேனை நோக்கியையன்
கற்றவருள் கத்தன் கயிலைசென்று—பற்றமர்
கோமான் வருமளவுங் கோதைதனைத் தீதின்றி
காவெண்ரு னின்ரு. (கூசு)

மகாசாத்தாப்படல முற்றிற்று.

ஆடூ திருவெண்பா அடஅ.

இந்திரன் கயிலை செல்படலம்.

அத்தினேதா ணண்டர்கோ னேரா ணியைநோக்கி
யெய்த்திடனீ யைய னினிதரிப்பன்—சித்தம்
வருந்தலெனத் தேற்றியவண் வைத்தமர ரோடுங்
கிருந்து கயிலைசென்ரு ன்தோர்ந்து. (க)

அங்க ணடைந்துதங்கி யந்தாள் பராய்நிற்ப
விங்களீ வந்ததி யாதென்ன—வுங்கதனைச்
சொற்றனனஃ தோர்ந்தெங்கோன் ரெறன்மையி ஞடியே
யிற்றிலகொ லின்னலென்ரு ளீண்டு. (உ)

யோகநிலை நால்வர்க் குணர்த்தியுற்ரு ன்கோனைவரு
மேக வமையமிதன் றென்றுரைக்கா—ஞகமநா
றேர்ந்தகந்தி யஃது செவியுற்று மாகபதி
சோர்ந்து விழுந்தான் றுயர்ந்து. (ங)

கலந்தான் கடலிற் கவிழக் கலங்கி
புலந்தா னெமன்ரே மெம்பர்—புலர்ந்தார்தீர்
கந்தியெங்கோன் பொன்னர் களினமலர்த் தாள்போற்றி
யிந்திரன் சொல்வா னெடுத்து. (ச)

தியவஞ் சூரபன்மன் செய்தவமோர்ந் தீசனவற்
காயுவட ஞற்ற லவிர்கிருவ—மீயகின்ரு ள்
றுய்யநெறி நீங்கியன்ரு ன் ரெறண்டுசெய்தெய்த் தோமிதுவு
மையன் செயலென்ரு னுங்கு. (ஞ)

சூனர் தொழில்புரிந்து சூராற் றுயர்ந்தழறன்
பான தணர்த்தியடைந் தாமெனிலு—மானதுபோ
தாண்டகற்றல் வேண்டுஞ்சூ ராவியட ஞற்றல்கீர்
மாண்டளித்தல் வேண்டுமென்ரு ன் மன். (ட)

அதுபுரியிற் சூர்மு னருந்தவஞ்செய் காலை
யுதவுவரம் பொய்த்தனனென் ரேறர்ந்து—நுதல்வரல்ல
தெம்மல்ல நீர்த்திலனே லோருளுக் கோர்குறைவு
மம்ம வருமே யடுத்து (எ)

ஆகையினு லின்னவகை யாய்த்துவர வோர்ந்துபரன்
யோகியனுல் வர்க்குணர்த்தி யற்றனன்கொ—லேகனிவ
ணன்றியிடர் தீர்ப்பரெவ ரன்னவரோ டேற்றரியும்
வென்றிதரு மாழியற்ரு ன் வேர்த்து. (அ)

தூயோன் செயலி தெனிற் றொல்பு யிற்போக்கிடினத்
தீயோர் கிறபுரித நிண்ணமது — நீயோர்ந்தி
புங்கவர்தம் மோடியான் பாகிவெனீ சற்காண்பா
னுங்கமய மோர்வனென்ரு னுற்று. (க)

அந்தத்தி சேவ னதுகேளா வாய்க்கபொரு
மின்ன லிகந்தே யிவணீ வீர்—கன்னுமென
வாங்கா ருள்செய்ய வண்டரொடி மன்னவனேர்
பாங்கார்த் திருந்தான் பரிந்து. (கா)

இந்திரன் கயிலைசெல்படலம் முற்றிற்று.

அடி திருவாய்மொழி ஒருக

அசமுகிப் படலம்.

ஆழிவனத் தாரரிமுன் ணண்டரெலாம் போற்றிடவோ
ரூழிவனத் தோர்கலனு வோங்குபுகழ்க்—காழிவனத்
தெண்ணமுற்றிக் கேள்வருவா னீர்வேபன் னுணேற்பா
ணண்ணிலெனுக் துண்மெலிந்தா னேந்து. (க)

மன்னன் பிரிவுன்னி மாகிரங்கி கோற்குமெல்லே
வுன்னரும்வெம பாவமுரு வுற்றதொரசு—மன்னிறத்தள்
சொற்கிளாயாள் சூழலின்சட் சூர்க்கிளாயா ணின்னலர் செய்
மற்கிளாயாள் வக்காண் மகிழ்ந்து. (உ)

காய்கின்ற காமக் கனறணிப்பான் காளையர்வெற்
பேய்கின்ற தோளணைவா ளேர்முகிலின்—வாய்குரலாள்
பொற்பில்லாள் பூணும் புகழில்லா ஞாணில்லாள்
கற்பில்லா ளற்பில்லாள் காண். (ங)

உலக மனைத்து மொருநா ழிகையி
லுலவிவரு மொய்ப்புரா ணன்னு—ளுலமுள்ளா
ணன்மையுளா மமையுளா ணூற்றமுளாள் சீற்றமுளாள்
வன்மையுளா மயவுண மாது. (ச)

சீயமுகன் ரூரகனேர் திண்டிறலாண் மால்வரையொப்
பாயமெய்யாள் பொய்யுடையா ளாடகன்முன்—மேயவொரு
சிங்கமன்னுள் கூற்றடக்குந் திண்மையுளாள் பெண்மையுளாண்
மங்கு லெனவுலவு வாள். (ஞ)

கூடு மவுணர் குலத்திறுக்குத் தீயினேயே
நாடு மசமுகியா நாமத்தா—ணீடுகான்
பொங்கெழி லேக்கியிகப் பொற்புளதவ் வான்பொழிலே
யிங்குளதன் றென்ற ளினிது. (சு)

